அன்பளிப்பு
GIFTED BY

தொகுதி 11

தமிழாய்வு

"திட்பமும் நுட்பமும்"

பொதுப்பதிப்பாசிரியர்
பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர்
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

TNSDA
10967

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1980

TAMIḺĀYVU

(Annals of Tamil Research)

"CLARITY AND PRECISION"

General Editor

Dr. C. BALASUBRAMANIAN, M. A., M. Litt., Ph. D.

Professor and Head of the Department of Tamil

University of Madras

Editor

Dr. E. SUNDARAMOORTHY

DEPARTMENT OF TAMIL

UNIVERSITY OF MADRAS

1980

தொகுதி 11

தமிழாய்வு

"திட்டமும் நுட்பமும்"

GIFTED BY
MALAI I.A.S. (Late)
TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY

பொதுப்பதிப்பாசிரியர்
பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர்
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1980

முதற் பதிப்பு : 1980
© சென்னைப் பல்கலைக் கழகம்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS
LIBRARY,
Acc. No.
Date
49811

தமிழாய்வு கிடைக்குமிடம் :

பதிவாளர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005

நூல்களை மதிப்பீடு செய்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் (Exchange) அனுப்ப வேண்டிய இடம் :

பொதுப்பதிப்பாசிரியர்
'தமிழாய்வு'
சென்னைப் பல்கலைக் கழக இணைவகம்
சென்னை - 600 005

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்
சென்னை 600 013

பதிப்புரை

தமிழ்த்துறையின் சார்பில் வெளியாகும் *இத் தமிழாய்வு*—தொகுதி 11, 1980 ஆம் ஆண்டு முதல் பருவத்திற்கு உரியதாகும். தமிழாய்வின் முன்வெளியீடுகளான பத்துத் தொகுதிகளும் தமிழாராய்ச்சி உலகிற்கு அரிய கருத்துகளையும் செய்திகளையும் வழங்கின.

இத் தொகுதி ஐந்துபெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. ஆய்வுக்கட்டுரைகள், நூல் அடைவு, அச்சில் வாரா அருந்தமிழ், மதிப்புரைமாலை, தமிழ்த்துறைச் செய்திகள் என்பன அவை.

முதல் பகுதியில், நான்கு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. குறிஞ்சிக் கலிப்பாடலில் உரையாடல் விளங்கும் பான்மையை முதற்கட்டுரை ஆராய்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கில இலக்கியம் பற்றி நிகழ்ந்த ஆய்வுப்போக்குகளை ஆராயும் வகையில் இலக்கியத்திறனாய்வில் ஐவகைப் பார்வைகள்—அணுகு முறைகள் என்னும் இரண்டாம் கட்டுரை அமைந்துள்ளது. திருமுறைகளில் காணப்படும் இலக்கிய வளத்தை மூன்றாம் கட்டுரை ஆராய்கின்றது. கந்தகமும் சந்தனமும் என்னும் நான்காம் கட்டுரை தந்தை பெரியார் அறிஞர் அண்ணாவைப் பற்றியதாகும்.

இரண்டாம் பகுதி, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதிய, பதிப்பித்த நூல்கள், கட்டுரைகள் பற்றிய நூல் அடைவாக விளங்குகின்றது. தமிழாய்வு-பத்தாம் தொகுதியில் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தொகுத்த ஓலைச் சுவடிகள் பற்றிய விவரங்கள் வெளிவந்துள்ளன. அதனைத் தொடர்ந்து இவ்விதழில் அவர் எழுதிய நூல்கள், கட்டுரைகள், பதிப்புகள் பற்றிய விவரங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதியில். அச்சில் வாரா அருந்தமிழ் நூலான திருவேங்கடபாரதி இயற்றிய பாரதி தீபம் அமைந்துள்ளது. திவாகரத்திற்குப் பின்னர், அதனை அடியொற்றிவந்த, தனிச்சிறப்புடைய நிகண்டான இந்நூல் தமிழாய்வில் முதல்முதலாக நூலுருவில் வெளிவருவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும். இதனைப் பதிப்பித்துதவிய புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை அவர்கட்குத் தமிழ்த்துறையின் சார்பில் நன்றி.

நான்காம் ஐந்தாம் பகுதிகளில் மதிப்புரை மாலையும் தமிழ்த் துறைச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

தமிழாய்வு தொடர்ந்து வெளிவருவதற்கு உறுதுணைபுரியும் சென்னைப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பதிவாளர் ஆகியோருக்குத் தமிழ்த்துறையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழாய்வு 11 ஆம் தொகுதியினை உருவாக்கும் பொறுப்பேற்றுச் சீரிய முறையில் பதிப்பித்துதவிய டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்கட்கும் துறையின் சார்பில் நன்றி.

தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

சி. பாலசுப்பிரமணியன்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
Acc. No. 10967
Date
MADRAS

பொருளடக்கம்

1. ஆய்வுக் கட்டுரைப் பகுதி 1-48

1. குறிஞ்சிக்கலியில் ஓர் உரையாடல் 1
—டாக்டர் வ. ஜெயதேவன்

2. இலக்கியத் திறனாய்வில் ஐவகைப் பார்வைகள்—அணுகு முறைகள் 12
—அ. அ. மணவாளன்

3. திருமுறைகளில் இலக்கியவளம் 27
—டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

4. கந்தகமும் சந்தனமும் 42
—டாக்டர் மா. செல்வராசன்

2. நூல் அடைவு 1-24

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூல்—கட்டுரை—பதிப்பு அடைவு
—மு. சண்முகம் பிள்ளை
—வை. சரோஜினி

3. அச்சில் வாரா அருந்தமிழ் i-xvi-1-130

திருவேங்கட பாரதி இயற்றிய பாரதிதீபம்
—மு. சண்முகம் பிள்ளை

4. மதிப்புரை மாலை 1-20

5. தமிழ்த்துறைச் செய்திகள் 1-4

1

ஆய்வுக் கட்டுரைப் பகுதி

பொருளடக்கம்

1. குறிஞ்சிக்கலியில் ஓர் உரையாடல் 1
—டாக்டர் வ. ஜெயதேவன்

2. இலக்கியத் திறனாய்வில் ஐவகைப் பார்வைகள்—அணுகு முறைகள் 12
—அ. அ. மணவாளன்

3. திருமுறைகளில் இலக்கியவளம் 27
—டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

4. கந்தகமும் சந்தனமும் 42
—டாக்டர் மா. செல்வராசன்

1. குறிஞ்சிக் கலியில் ஓர் உரையாடல்

டாக்டர் வ. ஜெயதேவன்
விரிவுரையாளர்
தமிழ்த்துறை சென்னைப் பல்கலைக்கழகம்

சங்கத் தொகையுள் 'கற்றறிந்தார் ஏத்தும்'[1] நீர்மையது கலித்தொகை. பாடு பொருளாலும்,[2] பாடு முறையாலும்,[3] பாட்டு வகையாலும்,[4] பாட்டின் உரையாலும்,[5] 'கல்விவலார் கண்ட கலி',[6] அகப் பாடல் உலகில் உடுக்களிடை மதியமாய் இன்றளவும் ஒளிர்கிறது எனலாம். இக்கலியுள்ளும் குறிஞ்சிக் கலி பெரிதும் பயிலப்பெறும் பாங்கினதாகும். இக்குறிஞ்சிக்கலியில் ஒரு பாடலில் அமைந்துள்ள உரையாடலை இக்கட்டுரை விளக்க முனைகிறது.

கலைகளின் அரசியாம் கவிதை[7]யை மூவகையாகப் பகுக்கலாம்: 1. வருணனைக் கவிதை (Descriptive Poetry), 2. விவரணக் கவிதை (Narrative Poetry), 3. நாடகக் கவிதை (Dramatic Poetry). சிற்பக் கலை, ஓவியக்கலை போன்று பொருள்களின் நிலைச்சித்திரங்களைத் தீட்டுவதோடு நின்றுவிடும் கவிதை முதல் வகையாகும். நிலைத்திருக்கும் ஒரு பொருளின் உண்மைத் தோற்றத்தையோ, அல்லது அசையும் பொருள் ஒன்றின் இயக்கத்தில் குறிப்பிட்ட ஒரு நிலையையோ இவை தமக்குப் பொருளாகக் கொள்ளும். இத்தகைய கவிதை, பொருள்களின் இருப்புக்கு நிலைக்களனாய் அமையும் இடம் (Space) என்னும் மூலப்பொருளையே தமக்கு ஆதாரமாக அமைத்துக் கொள்ளும். நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு போன்றவை இத்தகு வருணனைக் கவிதையின் வகையைச் சார்ந்தவை.

வருணனைக் கவிதைகளுக்கு நிலைக்களனாய் விளங்கும் இடம் எல்லாக் கவிதைகளுக்கும் ஆதாரமாக அமையும் பொதுவான மூலப் பொருள். இதனோடு காலம் (Time) என்னும் மூலப்பொருளையும் ஆதாரமாகக் கொண்டு இவ்விரண்டின் சேர்க்கை காரணமாக நிகழும் நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் கவிதை விவரணக் கவிதை ஆகும். இன்ன இடத்தில் இவை இவை நிகழ்ந்தன என விவரிக்கும் முறையில் இக்கவிதைகள் அமையும். சங்கச் செய்யுள்களுள் புறப் பாடல்கள் அனைத்தும் இவ்வகையின.

உலகத்தையும் அதன்கண் நிகழும் நிகழ்ச்சிகளையும் அலசி ஆராய்ந்து, 'இவை அனைத்திற்கும் நிலைக்களன் எது? இவை இவ்வாறு

நிகழக் காரணம் என்ன ?' எனச் சிந்திப்பதன் பயனுய் இடம், **காலம்** என்னும் இரு மூலப்பொருள்களின் இருப்பைக் கண்டு கொள்ளலாம். இவற்றைக் கண்டுகொள்ள உதவிய ஆராய்ச்சியைத் தூண்டுவது எது? பொருள்களை இருக்கும் முறையில் ஏற்றுக் கொள்ளாமல் 'இவை எப்படித் தோன்றின? இவற்றின் மூலம் யாது?' என்று சிந்திக்கத் தூண்டும் மனத்தின் பண்பே அது. எப்பொருளுக்கும் காரணம் காணும் பண்பு மனித மனத்தின் இயற்கை. இதனையே *ஏது* (Causation) எனலாம். பௌதிக நிலையில் உள்ள — மக்கள் இல்லாத—உலகுக்கு இரு மூலப்பொருள்கள் போதும். மக்களும் தோன்றி, அவர்கள் சிந்தனை ஆற்றலைப் பெற்றிருப்பதால் *ஏது* என்னும் மூன்ருும் மூலப்பொருளும் இன்றியமையாததாகிறது. இதனை உணர்ந்தே, கவிஞர் தாம் கண்ட பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் மனஉலகத் தோற்றங்களாக மாற்றிச் சித்திரிக்கின்றனர். காலக்கழிவால் நிகழும் பல நிகழ்ச்சிகளிடையே உள்ள தொடர்பைப் புலப்படுத்தி, இவையனைத்தும் ஒரு பிண்டத்தின் பகுதிகளே என உணர வைக்கும் கவிதைகளை—தொடர்புள்ள பல நிகழ்ச்சிகளையும், அவற்றின் விளைவையும் சித்திரிக்கும் கவிதைகளை—நாடகக்கவிதை எனக் கூறலாம். சங்க அகப்பாடல்கள் இப்பிரிவில் அடங்கும்.[8]

நாடகக் கவிதையில் பல்வேறு வகைகள் உள்ளன: 1. ஒரு முடிவை வற்புறுத்தச் சில நிகழ்ச்சிகளை விவரிப்பவை, 2. பல நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்தி ஒரு கதையாகக் கூறுபவை. 3. கற்பனை நிகழ்ச்சிகளைப் படைத்துக் கூறுபவை. இவை ஒவ்வொன்றும் தனித்தனி அமைப்பிலக்கணத்தைத் தழுவி நடக்கும் இவையனைத்திற்கும் இலக்கியங்கள் குறிஞ்சிக்கலியில் உள்ளன.[9]

அகப்பாடல்கள் பெரும்பாலும் நிகழ்ந்த ஒன்றை ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவதுபோல அமைந்துள்ளன. இவற்றுள் சில, நிகழ்ச்சிகளைப் படிப்போர்க்குத் தெரிவிக்கும் முறையைக் கையாளாமல், அவற்றின் நிகழ்வைப் படிப்போரையே நேரில் காணச் செய்கின்றன. இதனுல் இவை நாடகங்களின் அமைப்புமுறையைத் தழுவி இயன்ற சின்னஞ்சிறு நாடகங்களாகவே ஆகிவிடுகின்றன. இவ்வமைப்பில் எட்டு சிறு நாடகங்கள் குறிஞ்சிக் கலியில் உள்ளன.[10] அவற்றுள் ஒன்றை ஈண்டுக் காண்போம்.

'சுடர்த்தொடீஇ கேளாய்' எனத் தொடங்கும் குறிஞ்சிக் கலிப் பாடல் (15) இங்கு ஆய்வுக்குக் கொள்ளப் பெறுகிறது. பாடல் வருமாறு:

" சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே

'உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
'உண்ணுநீ ரூட்டிவா' என்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னா 'யிவனொருவன் செய்ததுகாண்' என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா அன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்''

இப்பாடல் முழுமையும் உரையாடலாக அமைந்துள்ளது. தலைவி தோழியிடத்துக் கூறும் உரையே இப்பாடல். இவ்வுரையாடலுக்குள் உரையாடல்கள் பல அமைந்துள்ளன. ஓர் உரையாடலுக்குப் பின் வரும் உறுப்புகள் இன்றியமையாதவை: 1. கூறுநர் (Speaker), 2. கேட்குநர் (Hearer), 3. பொருள் (Topic), 4. சூழல் (Situation).



மேற்குறித்த நான்கு உறுப்புகளின் அடிப்படையில் உரையாடல் அமையும். இவ்வுறுப்புகளுள் ஒன்றோ பலவோ மாறுகையில், இம் மாற்றத்திற்கேற்ப உரையாடலும் மாறும்.

ஈண்டு ஆய்வுக்குப் கொள்ளப் பெற்ற கலியில் கீழ்க்கண்ட உரையாடல் உறுப்புகள் இடம்பெற்றுள்ளன.

1. கூறுநர் : தலைவி
2. கேட்குநர் : தோழி
3. பொருள் : 'தலைவனை உள்ளத்தால் புணர்ந்துள்ளேன்' எனத் தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்றல்
4. சூழல் : உண்டிக் காலத்துத் தலைவியின் வீட்டில் தலைவன் எதிர்ப்படுகையில் நீக்காமல்

விருந்தேற்றுக் கொள்ளும் நிலையில்[11]
தலைவி தோழிக்குக் கூறல்

இக்கலியில் தோழியை விளித்துத் தலைவி உரை நிகழ்த்துகிறாள். தோழி, இவ்வுரையைக் கேட்கிறாள். உள்ளத்தால் தலைவனைப் புணர்ந்துள்ள நிலையைத் தோழிக்குத் தலைவி புலப்படுத்தல் பொருளாக உரை அமைகிறது. தான் புகுதற்குத் தகுதியல்லாத காலத்து அகம்புக்கெதிர்ப்பட்டுழி அவரால் நீக்கப்படாத விருந்தின் பகுதியாகிய வழி உரை நிகழ்கிறது.

இந்த உரையாடலில் தலைவியும் தோழியும் பங்குபெறினும் தலைவி மட்டுமே பேசுகிறாள்; தோழி பேசவில்லை; தலைவி தெரிவிப்பதை அவள் கேட்பதோடு அமைகிறாள். இவ்வுரையாடலை முதன்மை உரையாடல் எனலாம். இவ்வுரையாடலுள் நான்கு உரையாடல்கள் அமைந்துள்ளன. இவற்றைத் துணை உரையாடல்கள் எனலாம். அவை:

1. தலைவன் வீட்டின்கண் உள்ளோரிடம் கூறுவது (அடி எண் 6);
2. இத்தலைவன் கூற்றுக்கு விடையாமாறு அன்னை தலைவியிடம் கூறுவது (அடி எண் 8);
3. தலைவன் செயல் குறித்துத் தலைவி அன்னையிடம் கூறுவது (அடி எண் 11);
4. தலைவன் பற்றித் தலைவி அன்னையிடம் கூறுவது (அடி எண்13).

இனி, உரையாடலைக் காணலாம்[12]:

1. **தலைவி (தோழியிடம்)**

சுடர்த்தொடீஇ! கேளாய்; தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலில் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டுஓடி
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா—

(ஒளி பொருந்தின வளையலை உடையவளே! இதனைக் கேட்பாயாக! தெருவில் நாம் மணலால் செய்த சிறுவீட்டைக் காலால் அழித்தும், கூந்தலிலே சூடியிருந்த மலர்மாலையை அறுத்தும், வரியுடைய பந்தைக் கவர்ந்து சென்று ஓடியும் இவ்வாறாக நாம் நோவத்தக்க செயல்களைச் செய்யும் சிறிய வணகிய காவல் இல்லாதவன் முன்பு ஒ நாளில் அன்னையும் நானும் சேர்ந்து இருந்தபொழுது—)

2. **தலைவன் (எம்மிடம்):**

இல்லிரே! உண்ணுநீர் வேட்டேன்
(வீட்டில் உள்ளவர்களே! உண்ணுதற்கு நீர் வேண்டும்)

3. *தலைவி (தோழியிடம்):*

என வந்தாற்கு—
(என்று கூறி வந்தவனுக்கு)

4. *அன்னை (என்னிடம்):*

அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டி வா

(விளங்குகின்ற பூணினை உடையவளே! உண்ணு நீரைத் தகட்டுப் பொன்னால் செய்த கலயத்திலே வார்த்து உண்ணச்செய்து வா)

5. *தலைவி (தோழியிடம்):*

என்றாள்; என, யானும்
தன்னை யறியாது சென்றேன்; மற்றுஎன்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு—

(என்று கூறினாள். எனவே, நானும் சிறுபட்டியாய் இருக்கின்ற அவனை அறியாதே சென்றேன். சென்றபின் அவன் என்னுடைய வளை அணிந்த முன்கையைப் பிடித்து என்னை நலிகையினாலே அலமந்து—)

6. *தலைவி (அன்னையிடம்):*

அன்னாய்! இவன் ஒருவன் செய்ததுகாண்!
(அன்னையே! இவன் செய்த செயலைப்பார்)

7. *தலைவி (தோழியிடம்):*

என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்—
(என்று கூறினேன், அன்னையும் என்குரல் கேட்டு ஓடிவர, நான்—)

8. *தலைவி (அன்னையிடம்):*

உண்ணுநீர் விக்கினான்
(நீர் குடிக்கையில் விக்கி வருந்தினான்)

9. *தலைவி (தோழியிடம்):*

என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்

(என்று ஒரு பொய்யைக் கூறினேன். அன்னையும் அவன் முதுகைப் பலகால் அழித்தழித்துத் தடவப் பின் அவன் என்னைத் தன் கடைக்கண்ணாலே கொல்வான்போலப்

பார்த்துத் தன் மனமகிழ்ச்சியைத் தரும் நகைக்கூட்டத்தை அக்கள்வனுகிய மகன் செய்தான்!)

மேற்காட்டியவாறு பாடல், முதன்மை (ஒற்றைப்படை எண்களால் குறிக்கப்பட்டவை), துணை (இரட்டைப்படை எண்களால் குறிக்கப்பட்டவை) உரையாடல்களைக் கொண்டுள்ளது. கவியின் விளக்கமே சிறிதும் இல்லாமல் முழுக்க முழுக்க உரையாடலாலேயே நாடகப்பாங்கில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது. திரைக்காட்சியிடையே முன்நிகழ்ச்சியின் இடைப்பதிவு (Flash-back) போல் இப்பாடல் காட்சியை அமைக்கலாம்.

மேடை; திரை விலகுகிறது; குறிஞ்சி நிலப் பின்னணி; தலைவி தோழியிடம் பேசுகிருள்:

'ஒளிமிக்க வளையல்களை அணிந்தவளே! கேள்!'

காட்சி மாறுகிறது. முன் நிகழ்ச்சியின் இடைப்பதிவுக் காட்சி.

சிறுவன் ஒருவன் தோன்றுகிருன். தலைவியும் தோழியும் சிறுமியராக இருந்தக் காலத்துச் சிற்றில்கட்டி விளையாடுகிருர்கள். சிறுவன் அவற்றைக் காலால் சிதைக்கிருன்; அவர்களுடைய கூந்தலிலே காணப்பெறும் மலர் மாலையை உருவி எறிகிருன்; அவர்கள் விளையாடுவதற்கு வைத்துள்ள பந்தை எடுத்துக்கொண்டு ஓடுகிருன். இத்தகு குறும்புகளைச் செய்யும் சிறுபட்டி அறிமுகமாகிருன். காட்சி மாறுகிறது. தோழி தலைவிக்குக் கூறுகிருள் :

'இப்படிப்பட்டவன் ஒரு நாள் வீட்டிற்கு வருகிருன்'.

பின்னணியில் தலைவியின் வீடு. தலைவியும் அன்னையும் அவ்வீட்டின் உள்ளே இருக்கின்றனர். தலைவன் அங்கு வருகிருன். அவன் குரல்:

'வீட்டில் உள்ளவர்களே! குடிப்பதற்கு நீர் வேண்டும்'.

அன்னை, தலைவியிடம் கூறுகிருள்:

'பொற்கலத்திலே நீரை எடுத்துச் சென்று பருகச்செய்'.

அவன் குறும்பு செய்யும் இயல்பினன் என்பதை நினையாமல் அவள் நீர்க் கலத்தோடு அவன் அருகே செல்கிருள். அவன் அவளது வளையணிந்த முன்கையைப் பிடித்துக் கொள்கிருன். அவளுக்கு அதிர்ச்சி. அவள் குரல் வெடிக்கிறது.

'அம்மா ! இவன் செயலைப் பார்'.

குரலைச் செவிமடுத்த அன்னை வீட்டினுள்ளிருந்து பதறியவாறு வெளியே வருகிருள். உடனே தலைவி தன் நிலையை உணர்கிருள். அவனைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. எனவே, ஒரு பொய்யைக் கூறுகிருள்.

'அம்மா ! உண்ணுநீர் விக்கி வருந்தினன்காண்!'

அவனது விக்கலை அகற்ற விரும்பியவளாய் அன்னை அவனது முதுகைப் பலமுறை நீவித் தடவுகிருள். அப்பொழுது அவனோ

கடைக்கண்ணுல் கொல்வான்போல் தலைவியை நோக்கி நகைக் கூட்டம் செய்கிருன்.

காட்சி மாறுகிறது. மீண்டும் தலைவியும் தோழியும் தோன்று கின்றனர். தலைவன் தோழிக்குத் தெரிவிக்க நினைத்தவை அவளுக்குத் தெளிவாகின்றன. திரை விழுகிறது. இவ்வாறு இப்பாடல் ஓர் அரிய நாடகக் கவிதையாக அமைகிறது.

இவ்வுரையாடல்பாடலின் நயங்கள் குறிப்பிடத் தகுந்தவை. இனி, அவற்றை நோக்கலாம்.

இரவு, பகல் ஆகிய இருவகைக் குறியும் பிழைத்தலின் தலைவன் தலைவியைக் காணுஞய்க் காட்சியாசையில் கலங்கி வேட்கையின் மயங்கினுன். எனவே தலைவியின் மனைக்கண்ணே உண்டிக் காலத்தைக் கருதி வந்து தன் ஆற்ருமை மிகுதி காரணமாக அவன் அவளை முன்கை பற்றி நலிந்தான். அவளும் அதனை மறைத்து விட்டாள். இனி அவளுக்கும் அவனைக் கூடுதல் கருத்தாய் இருந்தது; இனி, அவனைக் கூடுவாள் எனத் தோழி கருதுவளாதலின் வேறுமொரு பொருள் புலப்படுத்தியது.[13]

'நோதக்க செய்யும் சிறுபட்டி' என்றதனுல் ஒரு நிலமாயிற்று. 'கடைக்கண்ணுல் கொல்வான் போல் நோக்கி' என்றதனுல் வினையுவமத்தின் வகையாகக் கண்ணிற்குக் கொலைத்தொழில் கூறிற்று.[14]

அன்னையின் எதிரில் பட்டப்பகலில் விழித்திருக்கும்போதே தன் மனத்தைப் பறி கொண்டவன், தொழிலைக் கற்றுக் கொண்ட வனல்லன், பிறப்பிலேயே இக்குணம் பெற்றவனுய் இருக்க வேண்டும் என்று தலைவி தான் வியந்ததைக் 'கள்வன் மகன்' என்று குறித்தாள்.[15]

அன்னையிடம் பொய்கூறி அவனைத் தலைவி தப்புவித்ததும், அவளைத் தன் வலைக்குள் அகப்படுத்திக் கொண்ட செருக்கினுல், அவன் சினந்து நோக்கினுன். இனி, அவன் அளிசெய்யாவிடின், தான் இறக்க நேரிடும் எனத் தோழியை உணர வைக்க, தலைவி தன் மனநிலையை அவன் பார்வைமேல் ஏற்றிக் 'கொல்வான் போல்' நோக்கியதாகக் குறிப்பிட்டாள். 'கொல்வான் போல்' நோக்கினுன் ஆனுலும் தனக்கு உறுதியாக அளிசெய்வான் எனத் தோழிக்கு உணர்த்த 'நகைக்கூட்டம்' செய்தான் என்று தலைவி கூறினுள்.[16]

அன்னையின் சினத்திற்குத் தன்னை ஆளாக்காததற்கு நன்றி தோன்றித் தலைவன் முதலில் நகைத்தான்; பின், அவள் பொய் சொல்லித் தன்னைக் காத்தது காதல் மிகுதியால் என்று எண்ணிப் பெருமிதத்துடன் நகைத்தான்; தன்னைத் துன்பத்தினின்றும் காத்த மகிழ்ச்சிக் குறியைத் தலைவியின் முகத்தில் கண்டவன், அது தன் காதலை ஏற்றுக் கொண்டதை அறிவிக்கும் குறி எனக் கொண்டு வெற்றியுவகையால் மேலும் நகைத்தான். தலைவனின் இம்மன

நிலையை வெளிக்காட்டப் பலமுறை நகைத்ததனை 'நகைக்கூட்டம் செய்தான்' என்னும் தொடரால் தலைவி தோழிக்குப் புலப் படுத்தினள்.[17]

தலைவியின் விளையாட்டுக் காலத்தில், தலைவன் அவள் கட்டிய சிறு மணல்வீடுகளை அழித்ததும், தலைப்பூவை அறுத்து எறிந்ததும் பந்தை எடுத்துக் கொண்டு ஓடியதும், முறையே அவன் பின்னர் அவளது மன அமைதியைக் கலைத்ததையும், விளையாட்டு விருப்பத்தைப் போக்கியதையும், மனத்தைப் பறிகொண்டதையும் பாடல் நயம்படக் குறிப்பிடுகிறது.[18]

காமஞ்சாலா இளமையோளாக இருக்கையில் நிகழ்ந்தவற்றைக் காமஞ்சான்றபின் தலைவி தோழிக்கு உரைத்தாள். மறைபுலப் படுத்தல் இதன் பயன்; தோழியைக் கையுறை ஏற்கத் தூண்டுவது இதன் நோக்கம். நொதுமலர் வரைவின்கண் தலைவி அறத்தொடு நின்றது எனவும் கொள்ளலாம்.[19]

மேற்குறித்த நயம் தவிரவும் பின்வரும் சமுதாயக் குறிப்புகளும் இப்பாடல்வழி தெரிய வருகின்றன.

1. சிற்றில் இழைத்தல், வரிப்பந்தாடல் முதலிய சிறுமியர் விளையாட்டுகள்.
2. விருந்தோம்பும் பண்பு.
3. அடர் பொற் சிரகத்தால் நீர் வழங்குதல்.
4. விக்கலைப் போக்கப் புறம்பழித்து நீவுதல்.

மேலும் தலைவன், தலைவி, அன்னை, ஆகியோரின் பண்புநலன் களும் புலனாகின்றன.

மேற்போக்காகக் காணுமிடத்து உரையாடல்கள் எளிமை யானவையாகத் தோன்றினும், ஆழ்ந்து நோக்குமிடத்து அவை மேற் மேற்காட்டிய பொருள் நலங்களெல்லாம் செறிந்தவை என்பது தெளிவு.


கவிஞர்
பொருள் (Topic)
சூழல் (Situation)
உரையாடல்
கூறுநர் (Speaker)
கேட்குநர் (Hearer)
சொல் அளவில் புறத்தே இன்பம் பயத்தல்
கருத்து அளவில் அகத்தே இன்பம் பயத்தல்
படிப்போர்

சொல் அளவில் புறத்தே இன்பம் பயப்பதோடு, கருத்து அளவில் அகத்தே இன்பம் பயப்பன இவ்வுரையாடல்கள். அகப் பாடல்களின் சுவைக்கும், அவற்றின் நாடகப் பாங்கிற்கும், கருத்து நயத்திற்கும், சொல்லோவியத்திற்கும் உயிர் நிலையாக உரை யாடல்கள் விளங்குகின்றன என இதனுல் அறிகிறேம்.

குறிப்புகள்

1. 'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
   றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
   கற்றறிந்தா ரேத்தும் கலியோ டகம்புறமென்
   றித்திறத்த வெட்டுத் தொகை'

   — பழைய வெண்பா

2. அன்பின் அகன் ஐந்திணையையும் பாடும் தகுதி பெற்றது கலிப் பாவும் பரிபாடலும் என்பது தொல்காப்பியம்.

   'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
   பாடல் சான்ற புலனெறி வழக்கம்
   கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
   உரிய தாகும் என்மனுர் புலவர்' —அகத்திணை. 53

3. 'ஆங்கிலத்தில் Dialogue என்பது போன்றே இலக்கிய வடிவம் கலிப்பாடல்களில் மிகுந்திருப்பதைக் காண்கிறேம்'.

   —புது. ச. சோமசுந்தரம்&வே. தா. கோபாலகிருஷ்ணன், தமிழ் இலக்கிய வரலாறு, வாணி பதிப்பகம், சென்னை, 3ஆம் பதி., 1968, பக். 68.

4. பாவகையால் பெயர் பெற்ற நூல் கலித்தொகை. தமிழ்ப் பரப்பில் கலிப்பா வேறு எந்நூலிலும் இடம் பெறவில்லை.

5. 'உச்சிமேற்புலவர்கொள் நச்சினுர்க்கினியர்' கலித்தொகைக்கு உரை வகுத்துள்ளார்.

6. 'பெருங் கடுங்கோன் பாலை; கபிலன் குறிஞ்சி;
   மருதன் இளநாகன் மருதம் — அருஞ்சோழன்
   நல்லுருத் திரன்முல்லை; நல்லந் துவன் நெய்தல்
   கல்விவலார் கண்ட கலி'.

   — பழம்பாடல்

7. 'Poerty, the queen of Arts.' — Thomas Sprat.

   மேற்கோள் ஆதாரம்: *தமிழ் இலக்கிய வரலாறு*, மு. நூ., பக். 341.

8. S. R. மார்க்கபந்து சர்மா, *குறிஞ்சிக்கலி வழித்துணை விளக்கம்*, ஆசிரியர், 1951, பக். xvi - xix.

9. ஷை., xix.

10. ஷை., xix - xx.

11. தொல். கள. 17 இலக்கணத்தை நச்சினார்க்கினியர் கொள்கிறார். இது பொருந்தாது எனவும், 'உயிரினும் சிறந்தன்று... பொருளே' (தொல். கள. 22) எனவரும் விதியினால் அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையது எனவும் பெருமழைப் புலவர் பொ. வே. சோமசு கருதுகிறார். காண்க: கலித் தொகை: குறிஞ்சிக்கலி, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு, 1973, பக். 68.

12. பாடல் உரையாடல் நெறியில் அமைக்கப்பட்டுள்ளது.

13. குறிஞ்சிக்கலி, 15, நச்சி. உரை,

14. ஷை.

15. S. R. மார்க்கபந்து சர்மா, மு. நூ., பக். 68.

16. ஷை.

17. ஷை., 69.

18. ஷை.

19. ஷை.

2. இலக்கியத் திறனாய்வில் ஐவகைப் பார்வைகள்- அணுகுமுறைகள்

அ. அ. மணவாளன்

[தோற்றுவாய்—படைப்புப்பொருள்—கூறுகள்—அகக்கூறுகள் புறக்கூறுகள் — திறனாய்வுப்பார்வைகள் — இப்பார்வைகள் கொள்ளும் கூறுகள்—*நீதிப்பார்வை*—தோற்றமும் தொன்மையும் — பயன் — *உளவியற்பார்வை* — இப்பார்வையின் மூவகை நோக்குகள்— இப்பார்வையின் நொய்ம்மைப்பகுதி — சமூகவியற் பார்வை பரப்பும் பிடிப்பும் — *உயிரியப் பார்வை*—தோற்றம் — இதன் வேறு பல கோணங்கள்— இக்காலத் திறனாய்வில் இதன் ஆட்சி—*தொல் படிமப் பார்வை*—உளவியலும் தொல்படிமமும்—இப்பார்வையின் பரப்பும் பயனும்]

இவ் இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஆங்கில இலக்கிய உலகம் பற்றி நிகழ்ந்த ஆய்வுகளின் போக்கில் பெருவாரியாகக் காணப்பட்ட ஆய்வுப் பார்வைகளை மனத்திற்கொண்டு அவற்றின் பொதுத் தன்மைகளை விளக்குவதே இவ்வெழுத்துரையின் நோக்கம். இங்குக் குறிப்பிடப்படும் ஐந்து வகைப் பார்வைகள் ஒவ்வொன்றும் தனித்தே இயங்கும் தன்மை உடையது என்று கூற இயலாது. பொதுவான பார்வையாகக் கொள்ளலாம் எனினும், ஒன்றன் கூறு இன்னொன்றில் கலந்திருப்பதை எளிதிற் காண இயலும். ஒன்றை யொன்று அவாவி நிற்கும் தன்மை உடையன அல்லவாயினும், ஒன்றையொன்று எதிர்த்து நிற்பன அல்ல; மேலும் ஒன்றில் பிறி தொன்று விராவி நிற்பதையும் எளிதிற் காணலாம். தெளிவு கருதியும் மிகுதி கருதியும் இவை தனித்தனிப் பார்வைகளாகக் கொள்ளப்பட்டு ஆராயப்படுகின்றன.

இவ்வாறே திறனாய்வாளர்களையும் இவர் இன்ன பார்வையுடையவர்; இவர் இன்ன பார்வை அற்றவர் எனப் பிரித்துக் கூறவும் இயலாது. ஒருவரே பல்வேறு பார்வைகளை உடையவராகக் காணப் படலாம். அதாவது, பல்வேறு பார்வைகளைப் பயன்படுத்திப் பல்வேறு தனி நூல்களை ஆய்பவராகவோ, ஒரே நூலில் பல்வேறு பார்வைகளைப் புகுத்தி ஆய்பவராகவோ இருக்கக் காணலாம் என்பதே கருத்து. ஒவ்வொரு திறனாய்வாளரும் ஏதேனும் ஒருவகைப் பார்வையில் அதிகமான ஊற்றமும் ஆர்வமும் உடையவராய்க் காணப்படுதலின், அவ்வப் பார்வைக்கு உரியவராகக் கூறப்படுகின்றனர். அவ்வப்

பார்வைக்கு ஆக்கம் தந்து வளம்பெறச் செய்யும் தன்மையால் அவரவர் பெயரால் அப் பார்வைகள் அழைக்கப்படுதலும் உண்டு. இக் கட்டுரையில் இலக்கியத் திறனாய்வுப் பார்வைகள் ஓரளவு ஆராயப் படுகின்றனவேயன்றி அவற்றைப் பயன்படுத்தும் திறனாய்வாளர்களின் தன்மையைப் பற்றிய ஆராய்ச்சி நடைபெறவில்லை.

திறனாய்வுக்கு உட்படுவது கலைஞரின் படைப்பு; இலக்கியத் திறனாய்வுக்கு உட்படுவது கவிஞரின்/படைப்பாளியின் படைப்புப் பொருள். இப்படைப்புப் பொருள் அகக் கூறுகள், புறக் கூறுகள் எனத் தனித்தறியும் வண்ணம் பாகுபடும் உறுப்புக்களைத் கொண்டிருக்கும். ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் பாடுபொருள், நுதற் பொருள், வடிவம் என்னும் அகக்கூறுகளை உடையது. கவிஞன்/படைப்போன், அவனுடைய அகப்புற வாழ்க்கைகள், அவன் வாழ்ந்த சமுதாயம், அவனை உருவாக்கிய இலக்கிய மரபு போன்ற புறக்கூறுகளை உடையது.

ஒரு படைப்பை ஆராய முற்படும் திறனாய்வாளன் இவ்விரு திறக் கூறுகளுள் ஏதேனும் ஒன்றை அடியாகக் கொண்டும் ஆய்வு செய்வதுண்டு; அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல கூறுகளைத் தன் ஆய்வுக்கு உட்படுத்துதலும் உண்டு. இவ்வகை ஆய்வுக்களக் கூறுபாட்டின் தன்மைக்கு ஏற்ப அவனுடைய பார்வை/அணுகுமுறை அமைகிறது. இந்த நூற்றுண்டில் கால்கொண்டு, புலம்பற்றியெழுந்த திறனாய்வுப் பார்வைகளைக் கீழ்வருமாறு ஐந்து வகைகளாகப் பாகு படுத்தி ஆராய்ந்தது மேலையுலக மரபு. பார்வைகளின் எண்ணிக்கை இன்னும் பலவாக உள்ளனவாயினும் அவையெல்லாம் இவ் ஐந்தனுள் அடங்குவனவாகக் காணப்படுகின்றன.

1. நீதிப்பார்வை *(Moral approach)*

இலக்கியங்களை நீதியும் அறமும் கற்பிக்க எழுந்தனவாகக் கருதி நோக்குகின்ற பார்வையை-அணுகுகின்ற முறையை *நீதிப்பார்வை* எனக் கூறலாம். *அறவியல் பார்வை* எனினும் பொருந்தும். அறம் என்னும் சொல் சில இடங்களில் சமயச் சார்புடையதாகவும் கருதப் படுதலின் 'நீதிப்பார்வை' சற்று மிகுதியான பொருத்தம் உடையதாய்த் தோன்றுகிறது. இங்கு நீதிப்பார்வை என்பது சட்டவியல் தொடர்பான நீதியைக் குறிக்காமல் இலக்கியம் உரைக்கும் நீதியை /உண்மையைக் குறிப்பதாகக் கொள்ளலாம்/கொள்ள வேண்டும்.

செய்யுள் வடிவில் எழுந்து நீதிகளை அவற்றின் தன்மைக்காகவே முறைப்படுத்திக் கூறும் நூல்கள் வெறும் *நீதி* நூல்களாதலின் இப் பார்வை அவற்றை உள்ளடக்கியதன்று; காரணம் அவை இலக்கியங்கள் அல்ல என்பதே. அதாவது *என்ன* சொல்லப்பட்டுள்ளது என்பதோடு **எப்படிச்** சொல்லப்பட்டுள்ளது என்பதும் இணைந்தே இலக்கியம் உருப்பெறுகின்றது.

இவ் இலக்கியப் பார்வை அல்லது அணுகுமுறையின் அடிப் படை இலக்கியம் என்பதன் வரையறையிலே அமைந்து விடுகிறது.

கற்போர்க்கு இன்பம் பயப்பதோடு இலக்கியம் அறிவுறுத்தவும் வேண்டும்; அவர்க்குப் பயன்படவும் வேண்டும் என்ற வரையறை தான் இப்பார்வைக்கு அடிப்படை. உலக இலக்கியத் திறனாய்வு வரலாற்றை நோக்குமிடத்து இந்நோக்கு அல்லது அணுகுமுறை தான் மிகவும் தொன்மையானது. அது மட்டுமன்று; இடையிடையே தொய்வுறினும் இன்றுவரை தொடர்ந்து வருவதும் இப் பார்வைதான். சாக்ரடீசின் '*உரையாடல்க*'ளும் பிளேட்டோவின் 'குடியரசும்' இப் பார்வையைத் தோற்றுவித்த முதனூல்களாகக் கருதத்தக்கன. அவரைத் தொடர்ந்து அரிஸ்டாட்டில், ஆரசு, லாஞ்சைனஸ் டெமெட்ரியஸ், லெசிங், மில்டன், ஜான்சன், மேத்யூ அர்னல்டு போன்ற அறிஞர்கள் தத்தம் காலத்தே இக் கருத்தை வலியுறுத்தி வந்துள்ளனர்.

ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கம் இலக்கிய உலகிற்கு அளித்த கொடைகளுள் இவ் அணுகுமுறையும் ஒன்று. *மானுடம்* அல்லது *மனிதம்* (Humanism) என்ற தத்துவத்தின் அடிப்படையில் மனிதனுக் காகவே இலக்கியம் படைக்கப்படுகிறது என்னும் கொள்கை அருட் சிக் கவிஞர்கள் காலத்தே மங்கியிருந்தது. பின்னர் 19-ஆம் நூற் ருண்டின் பிற்பகுதியில் சற்று ஒளி பெற்றது. எனினும் அந்நூற் ருண்டின் இறுதியில் ஐரோப்பாவில் 'கலை கலைக்காகவே' என்ற இயக்கம் வலுப்பெற்றபோது மீண்டும் மங்கியது. இந்த நூற்ருண் டின் தொடக்கத்தே (1904, 1908) அமெரிக்க நாட்டு அறிஞர்களான பால் எல்மர் மோர் (Paul Elmer More), இர்விங் பேபிட் (Irving Babbitt) போன்ற திறனாய்வாளர்கள் இவ் அணுகு முறையின் இன்றி யமையாமையை வற்புறுத்தி எழுதத் தொடங்கினர். 'Neo Humanists' என்றழைக்கப்பட்ட இப்புது மானுட வாதிகள், இலக்கியம் எப்படிச் சொல்கிறது என்பதிலும் என்ன சொல்கிறது என்பதில் அதிகநாட்டம் கொண்டனர். இலக்கியம் ஒரு வாயிலே தவிர அதுவே முடிவன்று (only a means not an end) என்ற கொள்கையைப் பரப்பினர். மானுட வாதத்தின் ஒரு கூருகிய, "மனிதன் விலங்கினும் உயர்ந்தவன், பகுத் தறிவை உடையவன், தனக்கென வரையறுத்த ஒழுக்க முறைகளைக் கொண்டொழுகும் இயல்பினன்" என்ற கருத்தை இவர்கள் வலியுறுத் தினர். இயற்கைவாதிகள் (Naturalists), மீவியற்கை வாதிகள் (Surrealists) அல்லது அருட்சிக் கோட்பாட்டாளர்கள் (Romanticists) என் னும் இரு சாராரை இவர்கள் எதிர்க்க நேர்ந்தது. இயற்கைவாதிகள் "மனிதன் விலங்கொடு ஒத்தவன்; சில நேரங்களில் விலங்கினும் கொடியவன், தாழ்ந்தவன்" எனக்கொண்டு அவ்வாறே படைத்தலை யும் மேற்கொண்டவர்கள். அருட்சிக் கோட்பாட்டாளர்கள் சமுதாய உணர்வின்றித் தன்முனைப்பை (Ego) மிகுதியும் போற்றிக் கட்டற்ற இலக்கிய வெளிப்பாட்டை வற்புறுத்தியும் ஆதரித்தும் வந்தவர்கள். இந் நூற்ருண்டின் 20, 30களில் முகிழ்த்த மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சி (Ontology) போன்ற அறிவியல் வெளிப்பாடுகள் இவ் அணுகுமுறையைச் சற்றுப் பாதித்தன. எனினும் முதல் இரண்டு போர் களின் விளைவுகள்—மனிதன் தன் அறிவினல் தன்னையே அழித்துக் கொள்ள இயலும் என்ற உணர்வு— மீண்டும் மனித மனத்தின்

சிந்தனையைக் கிளறின. விளைவு '30களில் மோரும் (More) பேபிட்டும் (Babbitt) மறைந்த பின்னர் அவர்களுடைய கருத்துகள் சமயஞ் சார்ந்த மானுடவாதம் (Religious Humanism) என்னும் பெயரில் புத்துயிர் பெற்றன. டி. எஸ். எலியட் போன்ற சிலர் மிக்க சமய உணர்வுடையராய்க் கிறித்துவ மானுடம் (Christian Humanism) என்னும் கொள்கையினராய் இவ் அணுகுமுறையை மிகுதியாக ஆதரித்து வந்தனர். அமெரிக்காவில் Edmund Fuller, Yvor Winters போன்றோரும், இங்கிலாந்தில் F. R. Leavis போன்றோரும் இதனை ஆதரித்தனர். லீவிசுடன் பிறவற்றில் வேறுபாடுடைய C. S. Lewis என்பவர் கூட இவ் இலக்கியப் பார்வையை மிகுதியாக ஆதரித்தார்.

இவ்வாறு இந்நூற்றுண்டின் முதல் 70 ஆண்டுகளில் இவ் அணுகுமுறை தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. திறனாய்வுலகில் Paul Elmer More, Babbitt, T. S. Eliot, F. R. Leavis, Yvor Winters, C. S. Lewis போன்ற பெயர்கள் வெறும் பெயர்களல்ல; வலுவான கொள்கைகளின் பிறப்பிடம், காப்பிடம், வாழ்விடங்களாகத் திகழ்ந்தவர்கள் இவர்கள். இப்பகுதியில் மேலே குறிப்பிட்டவர்களுடன் தொடரும் பாரம்பரியமாக இவர்கள் விளங்கினர். இப் பார்வையும் இன்றும் தொடர்ந்து வழக்கில் உள்ளது. இந் நீதிப் பார்வை படைப்போனும் திறனாய்வாளனும் ஒரே தன்மையர் என்னும் கருத்தை உட்கொண்டது. அதாவது இருவரும் படைப்பாளர்களாகக் கருதத்தக்கவர் என்ற கருத்தை உடையது. படைப்பாளி தன் படைப்பின் மூலம் இலக்கிய உண்மையை அதாவது தன் இலக்கியக் கனவை வெளிப்படுத்துகிறான் — படைக்கிறான். திறனாய்வாளன் இப்படைப்பின் தன்மையை / இதன் உட்கோளை / இது நுவலும் செய்தியை உணர்ந்து கொள்ளத்தக்க தகுதியைப் படிப்பவர்கள் மனத்தே உண்டாக்குகிறான். இங்குத் தகுதி எனக் குறிக்கப்படுவது ஒவ்வொரு மொழிக்கும் சிறப்பாக உரிய இலக்கிய மனப்பாங்கு (Literary Conscience) எனலாம். இதனை வளர்க்கும் பொறுப்பு திறனாய்வாளர்க்குரியது; ஆக்கும் பொறுப்பு படைப்பாளனுக்கு உரியது. எனவே இருவரும் இலக்கிய உலகில் ஒரே தன்மையர் என்பது கருத்து.[1]

இத்தகைய நீதிப் பார்வையால் விளையும் பயன் என்ன? இலக்கியங்களை நீதி புகட்டுவனவாகக் கொண்டால் எத்தகைய நீதியைப் புகட்டுகின்றன என எண்ணத் தோன்றும். மேலே கூறிய 'இலக்கிய மனப்பாங்கு' இருவகைத் தன்மையது. ஒன்று அவ்வம் மொழிக்குரிய பண்பாட்டின் அடிப்படையில் உண்டாக்கப்படுவது. மற்றொன்று அதனைக் கடந்து ஆனால் அதனையும் உள்ளடக்கி மானுடப் பொதுமைக்குரிய இலக்கியக் கனவுகளை, ஆழ்ந்த உண்மைகளை இலக்கிய வடிவில் வெளிப்படுத்துவது. இர்விங் பேபிட் கருத்தின்படி, எல்லா மனிதராலும் பொதுவாக அறிய முடியாத உண்மையை, மெய்ப்பொருளை நாடித் திரியும் கற்பனையின் துணைகொண்டு வெளிப்படுத்தும் இலக்கியமே "அடிப்படை நனவின் ஆழ்ந்த கனவு" எனலாம். (illusion of a higher reality)[2]

சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களாயினும் பெரும்பாலான வற்றுள் இவ் அடிப்படை நனவின் இலக்கியக் கனவுகளைக் காணலாம். அகப்பொருள் அடியாகத் தோன்றும் உரிப்பொருள் எல்லாம் இத்தன்மையின. புறத்தே காணும் பொருள் மொழிக் காஞ்சி போன்ற துறைகள் எல்லாம் இத்தன்மையின. கணியன் பூங்குன்றன் பாட்டில் (சமயங் கலவாத) இத்தகைய நனவின் கனவைக் காணலாம். சிலம்பும், கம்பனது காவியமும் இவ்வாறே அமைந்துள்ளமையை நோக்கி இன்புறலாம்.

நம்முடைய உரையாசிரியர்கள் எல்லாம் பெரும்பாலும் இத்தகைய நீதிப் பார்வையினைக் கொண்ட திறனாய்வாளர்களாகக் காணப்படுகின்றனர். நூலாசிரியர்க்கும் இத்தகைய உரையாசிரியர் கட்கும் இடையே உள்ள 'இலக்கிய மனப்பாங்கு' ஒன்றென்பதே அவ்விரு திறத்தாரும் ஒரே திறத்தார், தரத்தார் என்பதைக் காட்டும்

மேலைநாட்டு அளவுகோலால் நம்முடைய இலக்கியங்கள் அளக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு ஒருபுறமும், நம்முடைய இலக்கியங்களோடு பிற உலக இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பயனடைய வேண்டுமேயன்றிக் குறுகிய அளவில் நம்மையே நாம் கண்டு மகிழலாகாது என்ற எச்சரிக்கை ஒருபுறமும் காதில் விழுந்து கொண்டிருக்கின்ற காலம் இது. இரண்டு விதமான இக்கருத்துக்கள் முற்றிலும் தவறானவையல்லஎனினும் முற்றிலும் சரியானவை எனவும் கொள்ளலாகாது. இவை இரண்டும் ஆய்வின் அணுகு முறைகள்; பார்வைகள்; எனவே வேறொரு பயனை நோக்கிய வாயில்களே தவிர இவையே முடிபுகளல்ல. முடிபுகள் நம்முடைய மொழியாக்கத்திற்கு பல்வகைப்பட்ட - பரந்தும் ஆழ்ந்தும் அமையும் - வளர்ச்சிக்குப் பயன்படுமானால் இருவகை அணுகு முறைகளும் ஆய்வுக்குத் தொண்டு செய்வனவாகவே கருதத்தக்கன. முடிபுகள் தூய்மையற்ற தருக்குதலுக்கும் குறுகிய பொய்யின்பத்திற்கும் துணைபோகுமானால் இம்முறைகள் ஒதுக்கத்தக்கனவாகவே கொள்ளப்படும்.

2. *உளவியற் பார்வை* (Psychological approach)

நீதிப்பார்வை இலக்கியப் பயன்பாட்டில் மிக்க ஆர்வம் காட்டுவது; இலக்கிய நுதற்பொருளைக் கருத்திற்கொண்டு ஆய்வது. 'அவை' (audience) அதாவது நுகர்வோர் இப்பார்வையில் பங்கு பெறுபவர், எனினும் அவரை நோக்கிய ஆய்வன்று.

'உளவியற் பார்வை' முழுக்க முழுக்க 20ஆம் நூற்றாண்டின் புதுப் பார்வை எனக் கருதத் தக்கது. சிக்மண்ட் ப்ராய்டின் 'மனம்' பற்றிய கோட்பாடுகள் இலக்கியப் படைப்பையும் திறனாய்வையும் பெரிதும் பாதித்தன. அறிவியல் அடிப்படையில் அவர் துணிந்த கொள்கைகளை ஒருவகையில் சாமுவேல் டெய்லர் கோல்ரிட்ஜ் உணர்ந்திருந்தனரேனும் அவருடைய விளக்கம் தத்துவத்தின்பாற் பட்டமையின் அறிவியல் முத்திரை பெறவில்லை. ப்ராய்டின்

''அடி மனம்'', கனவுகள் பற்றிய ஆய்வு முடிபுகள் படைப்போரைப் பற்றிய ஆராய்ச்சிக்கும் மனிதனைப் பற்றிய பொதுவான ஆராய்ச்சிக்கும் வித்திட்டன.

புலன்களையும், அவற்றின்வழி வெளிப்படும் ஆசைகளையும் அடக்குதலே மனிதன் விலங்கினும் உயர்ந்து சிறப்பெய்தும் நெறி என்ற பழைய கோட்பாடு ப்ராய்டின் ஆய்வால் ஐயரவுக்கோளுக்கு இலக்காயிற்று. பழைய நீதி போதனைகள், அறக்கருத்துகள் மனிதனைத் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் ஒருவகை உயிராக மாற்றிவிட்டன. மனித மனத்தின் (id) இயல்புகளை, ஆசையழுத்தங்களை, புலக்குமுறல்களைப் புறத்தே வெளிப்படாது அடக்கிய கொடுங்கோல் விதிகள் என அவை இகழப்படும் நிலை தோன்றலாயிற்று. எனவே ஓர் இலக்கியப் படைப்பு அவ்வாசிரியரின் ''அடிமனத்''தே தோன்றிய ஆசைப் படிமங்களில் கூட்டுத் தொகுப்பு — சமுதாயக் கட்டுப்பாடுகளின் அரக்கத் தன்மையால் வெளிப்படாது நிற்கும் மனோ விகாரங்கள் — அல்லது புலன் கூட்டுண்ணும் மனத்தின் உள்வெளித் 'திருவிளையாடல்க'ளின் சொற்குப்பாயம் எனக் கருதப்பட்டது. இயற்கைவாதிகளையும், அருட்சிக் கொள்கையாளர்களையும் ப்ராய்டின் வெளியீடுகள் உற்சாகமூட்டின. அவர்களுடைய இயல்பிறந்த சில படைப்புகளுக்கு இவை நியாயங்கூறும் மனவிதிகளாகக் கருதப்பட்டன. இத்தகைய படைப்பாளர்கள் சிலர் புதியதாகத் தோன்றவும் செய்தனர். இவ்வாறு படைப்பாளர்களைப் ப்ராய்டின் கொள்கைகள் பாதித்தன.

திறனாய்வாளர்களையும் இவை நன்கு பாதித்தன. இப் பாதிப்பு மூவகையில் வெளிப்பட்டது. முதலாவதாகப் படைப்பாளர்களுடைய வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அவற்றின் உதவியால் படைப்புகள் ஆராயப்பட்டன. படைப்பாளியின் மன உறுத்தல்களே படைப்பு என்று எண்ணியமையால் அவர்களைப் பற்றிய ஆய்வுகள் மலிந்தன; படைப்பாளரின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் எழுந்தன; அவர்களுடைய சமுதாய, தனிப்பட்ட வாழ்க்கைக் குறிப்புகள் திரட்டப்பட்டன. தனி மனிதனின் மனோ விகாரங்களாகக் கேள்விப்பட்ட செய்திகள் எல்லாம் — கடிதங்கள் எல்லாம் — ஏன் சலவைச் சீட்டுகள் கூட ஆய்வுக் குறிப்புகளாகப் பதவி உயர்வு பெற்றன. இவற்றை அடியாகக் கொண்டு திறனாய்வுகள் பெருகின. இம்முறையால் நன்மை ஏற்பட்டது என்பது உண்மை. பல புலவர்களுடைய நூல்களின் பல புதிர்கள் விடுவிக்கப்பட்டன; சில அரிய செய்திகளும் வெளியாயின. எனினும் இதையே தலைசிறந்த முறையெனக் கருதிக் கொண்டு செய்யப்பட்ட திறனாய்வுகள் எல்லாம் வெறும் வரலாற்றுக் குறிப்புகளாகவே முடிந்தன என்பதையும் மறத்தலாகாது.

இரண்டாவது, படைப்பு என்பது படைப்பாளியையும் படிப்போரையும் ஒருங்கிணைக்கும் — இரு திறத்தாரையும் ஒருவகைப்

புலத்துறைச் சமநிலைக்கு (Synaesthetic equilibirium) வரவழைக்கும் சிறந்த கருவி என்ற கருத்து உருவாயிற்று I. A. Richards என்பார் இத்துறையில் முதன் முறையில் ஈடுபட்டவர்[3]. இவருடைய 'Principles' (1924) என்ற நூல் இத்துறைக்கு வித்திட்டது. இதனை மறுத்துப் பல நூல்கள் தோன்றின. எனினும் 'படைப்புப் பொருளை'ப் பற்றிய ரிச்சர்ட்சின் இக் கருத்தில் இருக்கும் உண்மையை — அதாவது படைப்பாளியின் இலக்கிய உண்மையை — அடிப்படை நனவின் ஆழ்ந்த கனவை — படிப்போர்க்குக் கொண்டு செலுத்தும் சிறந்த கருவி அவனுடைய படைப்புதான் என்பதில் யாருக்கும் ஐயமெழ வழியில்லை. ஆய்வுலகு இவ்வகையில் அவர்க்குக் கடப்பாடுடையது. ஆயின் இக்கருவி படிப்போரின் தூண்டல் - துலங்கல் என்னும் புலக்கூட்டின் வழியேதான் நடைபெறுகிறது என்பதைப் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

மூன்றுவது வகைப் பார்வை படைப்பின்கண் காணப்படும் பாத்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் நுழைந்தது. பாத்திரங்கள் படைப்போனின் கற்பனை மக்களாதலின் அவனுடைய மன ஊசல்கள் ஆடியவாறு அவையும் அசைந்தன. அல்லது அவ்வூசலாட்டங்களின் எதிர்மறைப் பிழம்பாகவும் பாத்திரங்கள் எழுந்தன என்பன போன்ற சிந்தனைகள் இப்பார்வையின் பயன்களாகக் குறிப்பிடலாம். பாத்திரங்களின் பண்புகட்கும், நடத்தைக்கும் படைப்பாளியின் பண்புகளும் நடத்தைகளும் மாட்டேற்றப்பட்டன; அல்லது மனித மனத்தின் பொதுப் பண்புகளால் அளந்தறியப்பட்டன. இவ்வகை ஆய்வாலும் இத்துறையில் பயன்கள்விளைந்தன என்பதை மறத்தலாகாது. Dr.Jones என்பவரின் 'Hamlet' ஆய்வுக்கு இப் பார்வையே காரணமாயிற்று.

இவ்வாறெழுந்த மூவகை உளவியற் பார்வைகளுக்கும் எதிர்ப்புகள் தோன்றின. இவையும் பயன் தருவனவேயாயினும் அவற்றின் உதவியை, பயன்பாட்டை மிகுதிப்படுத்தலாகாது என்பதை அறிஞர் பலர் உணரத் தொடங்கினர். அவர்கள் கருத்தின்படி, ப்ராய்டின் மனம் பற்றிய ஆராய்ச்சிகள் மறுக்கப்படவில்லை; மனம் பற்றிய கோட்பாடுகள் தவறென யாரும் காட்டவில்லை. ஆனல், கனவுகளாகவும், குமுறல்களாகவும், மனித மனத்துள் மண்டிக் கிடக்கும் புலப்பற்றுகள் இலக்கியத்தில் அவ்வாறே புலப்படும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் கனவும், மனக்குமுறல்களும் தாமே இயங்குவன, கட்டுப்பாட்டிற்குட்படாதன. கனவுகாண்போன் தன் விருப்பிற்கேற்ப அதனை மாற்ற இயலாது. படைப்போன் இதிலிருந்து வேறுபடுகிருன். படைப்புத் தொழிலிலும் ஓரளவு இத்தகைய கட்டுப்பாடற்ற நிலை நிலவுகிற தெனினும்பெரும்பான்மையும் கலைஞனின் கட்டுப்பாட்டிற்குள் படைப்பு அடங்குகிறது. மேலும் மனப் படிமங்கள் தோன்றியவாறே படைக்கப்படுவதில்லை; கலை நுணுக்கம் தோன்றக் கலைஞனல் மாற்றியும், சுருக்கியும், பெருக்கியும் வகைப்படுத்தப்பட்டே வெளிப்படுகின்றன. மொழியின் தன்மையும் ஓரளவுக்கு இக் கட்டுப்

பாட்டிற்கு வழி வகுக்கிறது. எனவே அளவு கடந்த தனித்தன்மை யுடைய மனப்படிமங்களை அப்படியே காட்டுவது படைப்பு எனக் கருதுவது பொருந்தாது. உளவியற் கொள்கைகள் இலக்கிய ஆய்வுக்குப் பயன்படுவனவாயினும் அதனை மிகுத்துரைப்பது தகாது என்பது இவ்வறிஞர்களின் உட்கிடக்கை; லையனல் ட்ரில்லிங், கென்னத் பர்க் போன்றோர் இவ்வகையில் இப்பார்வையினை மிதப்படுத்தியவர்கள் எனக் கூறலாம்.

3. *சமூகவியற் பார்வை* (Sociological approach)

ஒரு படைப்பு தனிமனிதனால் இயற்றப்படினும் அத் தனி மனிதனே ஒரு சமுதாயத்தின் படைப்பாதலின் அதன் எதிரொலிகள் அவன் படைப்பில் காணப்படுவது இயல்பு. சமுதாயம் என்பது கால ஓட்டத்தின் ஒரு கட்டத்தையும் மானிட வாழ்க்கையின் ஒரு படிநிலையையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுக் கூறு. எனவே அவ்வக் காலத்தின் பிரதிபலிப்பும், அவ்வவ் வாழ்க்கையின் எதிரொலியும் படைப்புகளில் காணப்படுவதும் இயல்பு. கலை ஞனின் தனிக் கூறும் அதில் கலந்து இருப்பதால் அப்படைப்பின் தனித்தன்மை வெளிப்படினும் பொதுவான சூழல் அச்சமுதாயத்தின் சாயலாக இருப்பதும் இயல்புதான். ஆகையால் இலக்கியத்தை ஒரு சமுதாயச் சாசனமாகக் கருதி ஆராய்தலும் பொருந்துவதாகிறது. இத் திறனாய்வுப் பார்வையின் நாட்டம் ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழலை அதில் விளைந்த இலக்கியம் எந்த அளவுக்கு வெளிப்படுத்து கிறது, அல்லது அச் சூழலின் உள்ளார்வத்தை எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறது என்பதை ஆராய்வதாக; அமைகிறது.

இனி, ஒரு சில படைப்பாளிகள் தம் காலச் சூழலைக் கடந்து சிந்திக்கும் ஆற்றலும் அச் சிந்தனையைக் கருவாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் திறனும் உடையவர்களாக விளங்குதலும் உண்டு. பிளேட்டோவின் 'குடியரசும்', மூரின் 'யுதோப்பி' யாவும் இவ்வகையில் எழுந்த சில படைப்புகள். இத்தகைய படைப்புக் களையும் இத் திறனாய்வுப் பார்வை ஆராய முற்படலாம். இவ்வாறான ஆய்வில், அவ்வக் காலச் சமுதாயத்தின் கண்ணாடியாக அவற்றைக் கருதாமல், அவ்வச் சமுதாயத்தின் ஏக்கங்களையும், கனவுகளையும் நனவாகக் காணும் பாங்கு வெளிப்படும். இவ் வெளிப்பாட்டி னூடே மறைந்து நிற்கும் தற்காலக் (contemporary) குறைபாடு களும் குறிக்கோள்களும் வெளிப்படுமாதலின் அவையும் இவ்ஆய் வுக்குட்பட்டனவாகவே கருதலாம்.

எனவே இருவகைப் படைப்புகளும் இச் சமுதாயவியற் பார்வைக்கு இடந்தருவன என அறிகிறோம். காலமும், களமும் கடந்த கற்பனைப் படைப்புக்களிலும் கூட இவ்வகை ஆய்வுக்குச் சில வாய்ப்புகள் உண்டு. இச் சமூகவியற் பார்வை அல்லது சமுதாயவியற் பார்வையின் செயற்பாட்டில் வேறுபாடுகள் நிகழ் வதுண்டு. காட்டாக, ஒரு குறிப்பிட்ட படைப்பில் அச்சமுதாயத்தில்

விளங்கிய அரசியல் நிலைமை, சமயத்தின்/சமயங்களின் நிலை, மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, தொழில்கள், கலைகள் போன்றன எவ்வாறு இருந்தன என்றெல்லாம் ஆய்ந்தறிவது ஒரு வகை. இத்தகைய நோக்கு குறிப்பிட்ட சமுதாயத்தைக் கால எல்லையின் ஒரு கோட்டிலிருந்து பின்னேக்கிப் பார்க்கும் வரலாற்றுப் பார்வையாகக் கருதலாம். எனினும் அச்சமுதாயம் பற்றிய அறிவாக இது முடியுமே தவிரத் திறனாய்வாகாது. அன்றியும் இம்முறையை வரலாற்றுத் திறனாய்வு எனவும் கொள்ளவியலாது. காரணம் வரலாற்றுமுறைத் திறனாய்வு காலப் பயணத்தின் நெடுகிலும் சென்று ஒரு குறிப்பிட்ட காலத்தின் சிறப்பைக் கணித்துக் கூறுவதாகும். இதனல் கால இடையீட்டால் தோன்றும் மாற்றங்களின் வன்மை மென்மைகளையும் நன்மை தீமைகளையும் மதிப்பிடுகின்ற பணியும் சேரவேண்டும். மேலும் இலக்கியம் சமுதாயத்தே குறிப்பிட்ட காலத்தே தோன்றியதெனினும் அது ஒரு வரலாற்று நூலன்று. கலைஞன் ஒருவனது தனி ஆளுமையில் முகிழ்ப்பது இலக்கியம் என்பதையும் மறத்தலாகாது. எனவே சமூகவியற் பார்வைத் திறனாய்வையும் வரலாற்றுமுறைத் திறனாய்வையும் ஒன்றெனக் கருதலாகாது. மேலும் வரலாற்றுமுறைத் திறனாய்வு என்ற ஒரு தொடரே தெளிவான வரையறையும் நோக்கும் அற்றது. மேத்யூ அர்னல்டின் 'வரலாற்று மதிப்பீடு' (historical estimate) என்பதைப் பிறழ உணர்ந்ததாலும், அதன் தன்மையை மிகவும் உயர்த்தி மதிப்பிட்டதாலும் விளைந்த குழப்பமாகவே இதனைக் கொள்ளவேண்டும். "Literature is not a social document, but a social monument" என்ற தொடரையும் "Mt. Helicon must be preferred to Everest" என்ற தொடரையும் இவ்விடத்தில் நினைவு கூர்வது இச் செய்தியை நன்கு விளக்கும்.[4]

நீதிப்பார்வையைப் போன்றே இச் சமூகவியற் பார்வையும் ஓரளவு தொன்மையானது. எனினும் ஐரோப்பாவில் முறையான திறனாய்வுப் பார்வையாக இதனைப் புகுத்தியவர் டெய்ன் (Taine) என்னும் பிரஞ்சு அறிஞர்தான். இவர் கருத்துப்படி, இப்பார்வையால் வெறும் செய்திகள் மட்டும் அறியப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அதாவது ஒரு இலக்கியம் காட்டும் சமுதாயம் எவ்வாறு தொழிற்படுகிறது; அரசு, தனிமனிதன், சமுதாயம் என்னும் முத்திற அமைப்புகள் என்ன அடிப்படையில் இயங்கின; அவ்வடிப்படையால் மனிதனுக்கு நன்மை விளைந்ததா, தீமை விளைந்ததா என்பன போன்ற அரசியல் சமுதாயத் தத்துவங்களை உட்புகுத்தி ஆராயும் ஆழமான பார்வையாதலின் பிறவகைப் பார்வையில் வெளிப்படாத செய்திகள் இதில் வெளிப்படும் வாய்ப்புண்டு. எவ்வளவு உயர்ந்தவனயினும் தனிமனிதன் அச்சமுதாயத்தின் அரசியல், சமய, பொருளாதாரத் துறைகளில் எவ்வாறு தொடர்புற்றிருந்தான் என்ற செய்திகளும் இவ்வாய்வில் வெளிப்பட வழியுண்டு.

டெயினுக்குப் பின்னர்ப் போந்த மார்க்ஸ், எஞ்சல்ஸ் போன்ருேர் இப்பார்வைக்கு மேலும் ஊட்டமளித்ததோடன்றி

இப்பார்வையைக் குறுக்குச் சாலாகப் பயன்படுத்திப் பல உண்மைகள் — அதுவரை திறனாய்வுக் கொழுவுக்கு அகப்படாத பல உண்மைகளைக் கண்டனர். அதாவது மேலே கண்ட அரசியல், சமய, பொருளாதாரத் துறைகளில் மக்கள் பகுபட்டு நிற்குமிடத்து உழைப்பின் அடிப்படையில் பயன்பெற்றனரா அன்றி ஒரு வகை மாயப் பொய்மையின் அடிப்படையில் பகுபட்டு நின்று உழுவார் ஒருவராகவும் உண்பார் பிறராகவும் இருந்தனரா? பொருளாதாரக் குவியலுக்குக் காரணம் என்ன? உழைப்பின் விளைச்சல் உழைப்புக்குச் சென்றதா அல்லது வெறும் உபதேசத்திற்குச் சென்றதா என்றெல்லாம் வினவித் 'தர்க்க ரீதியான பொருள்முதல் வாதத்தை' (dialectic materialism) இத் திறனாய்வுப் பார்வையின் தனிக் கண்ணாக்கினர். இவ் வகைப் பார்வையால் திறனாய்வாளர்கள் மட்டுமின்றிப் படைப்பாளர்களும் பாதிக்கப்பட்டனர். பல சிறந்த புலவர்கள் இப்பார்வையில் இலக்கியங்கள் படைத்தனர்; பல சிறந்த திறனாய்வாளர்கள் தோன்றினர்; பல நல்ல இலக்கியங்கள் இப்பார்வையால் பயன் பெற்றன.

இரண்டாம் உலகப்போர்வரை ஐரோப்பாவில் மளமளவென உரம் பெற்றுவளர்ந்த இப் பார்வை, அதன் பின்னர் வலுவிழந்தது. மனித அறிவாலும் உழைப்பாலும் மனிதன் பெறும் அளவிறந்த ஆற்றலை வழிப்படுத்தும் நெறியில் மனிதன் வெறும் பொருளாதார வளர்ச்சியோடு பிற மனவளர்ச்சிகளும் பெறவேண்டும். இல்லையேல் இவ்வளர்ச்சியைப் பிறழப் பயன்படுத்தி அழிய நேரும் என்பதை இப்போரின் விளைவுகளும், அதன் பின்னர் நாடுகள் இச் சித்தாந்தத்தின் அடிப்படையில் பிளவுண்டதும் இப்பார்வை மங்குவதிற்குக் காரணங்களாகத் தோன்றுகின்றன. எவ்வளவு சிறந்த பார்வையாயினும் எல்லை கடந்து அளவு கடந்து, ஒன்றையே, மனித வாழ்க்கையின் ஒரு கூறையே வற்புறுத்தும் போதும், பிற கூறுகள் தக்க அளவு கவனிக்கப்படாதபோதும் ஒருபுடை பருத்து வீங்கி உரமழிதல் இயல்பு. இதற்கேற்ப இப் பார்வையும் கருத்து வேறுபாட்டிற்கு இடமளிப்பதாக அமைந்துவிட்டது. எனினும் நீதிப் பார்வைக்கு அடுத்த நிலையில் வளமான திறனாய்வுக்கு இச் சமூகவியற் பார்வை உதவியுள்ளதை மறுப்பதற்கில்லை. இப்பார்வையால் வளம் பெற்ற படைப்பாளிகளாகக் கார்ல் மார்க்ஸ், எஞ்சல்ஸ் ஆடன், ஸ்டீபன் ஸ்பெண்டர் போன்றோரைக் குறிப்பிடலாம்.[5]

4. *உயிரியப் பார்வை/கலைப்பார்வை* (Formalistic approach)

20 ஆம் நூற்றாண்டு திறனாய்வுப் பார்வைகளில் இவ் உயிரிய அமைப்புப் பார்வைதான் பெருவாரியாகப் பயிலப்படுவது. முன்னர்க் கண்ட நீதிப்பார்வையுடன் இதற்கு மோதல் இல்லை. ஆனால் பிற பார்வைகளாகிய உளவியற்பார்வை, சமூகவியற் பார்வை என்பனவற்றுடன் இது மாறுபடுகிறது. அவ்விரண்டின் செல்வாக்கை இது மிகுதியாகக் குறைத்து விட்டது எனலாம்.

இப் பார்வையின்படி, படைப்புப் பொருள்தான் இன்றியமை யாதது. அதனைச் சுவைக்க முற்படும்போது அது மட்டுமே நம் கவனத்துக்கு உட்படவேண்டும். படைப்பு முடிந்த பிறகு படைப் பாளிக்கும் அதற்கும் தொடர்பில்லை. அதாவது அப்படைப்பினை உணர்ந்து கொள்ள அவனுடைய வரலாறு தேவையில்லை. அவனுடைய உளவியற் குறிப்புகள் வேண்டப்படுவதில்லை. அவ னுடைய சுற்றுச் சூழல்கள் கவனிக்கப்படுவதில்லை; அவன் வாழ்ந்த சமுதாய அமைப்பும், பிற கூறுகளும் இதில் தலையிட வேண்டிய இன்றியமையாமை இல்லை என்பது இப்பார்வையின் இலக்கணங்கள். எனவே, உளவியற் பார்வையும், சமூகவியற் பார்வையும் இலக்கி யத்தைச் சுவைத்தலுக்குத் தேவைப்படாதன என்பது கருத்து. "A poem should not mean / but be" என்ற Mac Leish என்னும் கவிஞனின் தொடர் இப்பார்வையின் உட்கோளைத் தெளிவாக விளக்குகிறது.

இப்பார்வைக்கு அடிக்கல் நாட்டியவராகப் 19ஆம் நூற்றுண்டின் கவிஞரும் திறனாய்வாளருமாகிய கோல்ரிட்ஜைக் கூறலாம். படைக்கப்பட்ட பொருளாய கவிதை 'ஒரு உயிருள்ள பொருள்; அதன் உறுப்புகள் எல்லாம் அதன் முழுமையை உணர்த்தப் போதுமானவை,' என்ற கருத்தை முதன்முதலில் வெளியிட்டவர் அவரே. இந்த நூற்றுண்டில் T. S. எலியட் இக்கருத்தை ஆதரித்து இவ்வகைப் பார்வையை நிலைபெறச் செய்த திறனாய்வாளர்களில் சிறந்தவராகக் கருதப்படுகிறார். I. A. ரிச்சர்ட்சும் இதற்குத் துணை நின்று வளர்த்தவர்களுள் ஒருவர்.

இப் பார்வையின்படி, ஒரு படைப்பு வடிவம், கருதுபொருள், மொழிநடை என்னும் முத்திறத்தால் இயன்றது. அதன் முழுப் பொருள் இம்மூவகை அமைப்புக்களின் கூட்டுறவால் தோன்றும் உயிர்ப்பொருள். இவற்றைத் தனித்தனியே ஆராயலாம். ஆயினும் தன் முழுப் பொருண்மை விளங்குதற்கு இக் கூறுகளின் கூட்டுப் பொருளாகவே படைப்பு அமையும். அமைப்பும், கருதுபொருளும், மொழிநடையும் ஒன்றையொன்று சார்ந்து நின்றே பாட்டின் பொருளை உணர்த்தும். பொருளை உணர்த்துதலாவது உயிர்த்தன்மை வெளிப் பட நிற்றல். ஓர் உயிர்ப் பொருளின் உயிர்த்தன்மை கை, கால், தலை போன்ற உறுப்புகளுள் எங்கு அடங்கியிருக்கிறது என்று கூற முடியாதது போலவே கவிதையிலும் உயிர்த்தன்மை அதாவது அத னுடைய உயிரியப்பண்பு எல்லாப் பகுதிகளின் கூட்டுறவால் மட் டுமே வெளிப்படுவது; மேலும் இக் கூட்டுறவால் வெளிப்படும் பொருண்மை தவிரப் பிறிதொன்றை அவாவி நில்லாதது. எனவே கவிதையை உணர்ந்து கொள்ளக் கவிதைதான் வேண்டப்படுவது; வேறெப்பொருளும் அன்று. புறப்பொருள்கள் எல்லாம் அதனை யுணரத் தேவையற்றன என்பது இப் பார்வையின் உயிர்நாடி.

அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இரு பகுதிகளிலும் இப் பார்வை மிகுதியான செல்வாக்கைப் பெற்றுள்ளது. எனினும் இப் பார்வை

யின்கண் உள்ள சிறு குறைபாடுகள் சிலவற்றை இக்குழுவினரே எடுத்துக்காட்டியும் உள்ளனர். சிகாகோ திறனாய்வுச் சங்கம் ("Chicago School of Critics") என்ற குழு இப்பார்வையை ஆதரித்தது எனினும் இதன் குறைகளையும் வெளிப்படுத்தியது. காட்டாக, ஒரு படைப்பின் வகையைப் பற்றிய கருத்தை அறியாது அல்லது அக்கருத்தை அடிப்படையாகக் கொள்ளாது அதனை ஆராய்வது பொருந்தாது என்பது அவர்களுடைய வாதம். கிரேன் (R. S. Crane) போன்ற வல்லுநர்கள் இவ்வாறு குறை கூறினர். இதன்படிக் காப்பிய மரபில் தோன்றிய ஒரு நூலை அம்மரபின்படி நோக்காது தன்னுணர்ச்சிப் பாடலாகவோ, தனிப் பாடலாகவோ, வெறும் நகைச்சுவை நாடகமாகவோ கருதி ஆராய்ந்தால் அதன் பொருள் தெற்றென விளங்காதல்லவா என்பது தடை. மேலும் இப்பார்வையினாலேயே ஒரு படைப்பின் முழுப்பொருளும் விளங்கி விடாது என்பதும் அவர்கள் கூறும் தடை. இவர்கள் கூறும் தடைகள் மேற்போக்கானவை என்று தள்ளிவிட இயலாதன. விம்சத் என்பவர் இவ்வெதிர்ப்பை எதிர்த்து வாதிட்டனர் என்றாலும் இதிலுள்ள உண்மையை நாம் உணர முடிகிறது. அதே நேரத்தில் பிற பார்வைகளைவிட இப்பார்வைதான் மூல நூலைச் சிதைக்காமல் உணர்ந்து கொள்ளப் பெரிதும் உதவுகிறது என்பதையும் மறந்து விடுவதற்கில்லை. இதனால்தான் இன்றைய திறனாய்வாளர்களில் பெரும்பான்மையோர் இப் பார்வையின் ஆதரவாளர்களாக உள்ளனர். சாதாரணமாகக் கேள்விப்படும் சிறந்த திறனாய்வாளர்கள் எல்லாம் இக் குழுவில் இருப்பதைக் காணலாம்[6]. மேலும் இப்பார்வை வேறு பல பெயர்களாலும் வழங்கப்படுகிறது. முருகியல் பார்வை, மூலபாடத் திறனாய்வு, மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சிப் பார்வை, புதுமுறைத் திறனாய்வு என்பன அவற்றுள் சிறந்தனவும் பெருவழக்காவனவுமாம்.

5 *தொல்படிமப் பார்வை* (Archetypal approach)

இப் பார்வையும் முன்னது போலவே பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. Totemic, mythological, ritualistic, primordial mythopoeic என்னும் அடைமொழிகள் இப் பார்வையின் பல்வேறு கோணங்களைக் குறிப்பன.

இத் தொல்படிமப் பார்வைதான் இலக்கியத் திறனாய்வுப் பார்வைகளுள் மிகவும் இளையது. இதன் தொடக்க வேதமாகக் கருதக் கூடிய "The Golden Bough" என்னும்நூல் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே (*1890-1915*, 12 Vols.) வெளிவந்ததாயினும், திறனாய்வாளர்கள் ஏறக்குறைய இந் நூற்றாண்டின் இடைப்பகுதியில்தான் இப்பார்வையைச் செலுத்தத் தொடங்கினர்.

அடிப்படையில் இப்பார்வை உளவியற் பார்வையுடன் தொடர்புடையது. ப்ராய்டின் கோட்பாட்டிற்குப் பின்னர் அவர் மாணவராகிய சார்ல்யங் (Charl Jung) எனபவர் தம் ஆசிரியரின் கருத்துக்களை மாற்றக்கூடிய வகையில் தம்முடைய 'இனமனக்' கொள்கையை

(Collective Unconsciousness) வெளியிட்டார். உள்ளக் குமுறல்களும் அடக்கப்பட்ட ஆசைகளும் வெளிப்படும் சாதனம் எனக் கனவைக் கருதினுர் ப்ராய்டு. அவ்வாறு அடக்குவதையே அவர் மனிதனின் 'மூலநோய்' என்றுர். யங்கின் கருத்துப்படி அவை அடக்கப்பட்டவை யல்ல; நோய் நாடும் புறக்குறிகளும் அல்ல; மனித இனத்தின் கூட்டுப் படிமங்களின் எதிரொலியே ஆகும். *அறிமனம்* செயலிழந்து *அடிமனம்* விழித்துக் கொள்கையில் இவ் இனமனப் படிமங்கள் (archetypal images) மனத்திரையில் ஓடுகின்றன. இவை மனித இனத் துக்குப் பொதுவானவை. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே மனித மனத்தில் பதிந்தவை. கலைஞன் ஆழ்ந்த தியானத்தில் அல்லது அறிமனத் தூக்கத்தில் ஈடுபடுங்கால் அடிமனத்தோடு தொடர்பு கொள்கிருன். அப்போது அவனுக்குப் புலப்படும் பொதுப் படிமங்களைத்தான் பல்வேறு புராணக்கோள்களாகவும் (Myths—தொன்மம்) சடங்குப் படிவங்களாகவும் (ritual forms) புனைந்து கொண்டு தன் கலைப்படைப்பைச் செய்கிருன் என்பது இப் பார்வையின் அடிப்படை. எனவே உளவியற் பார்வையோடும் இது தொடர்புடையதாக உள்ளது.

இப் பார்வை வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனைப்பற்றிய ஆராய்ச்சி ஆதலின் வரலாற்ருேடும் தொடர்புடையது. எனி னும், இவ் இனமனக் கொள்கை, காலம், இடம், சமயம், மொழி முத லான வரலாற்றுக் குறிப்புகளைக் கடந்து ஒரு பொதுநிலையை நாடு தலின் வரலாற்றையும் விலக்கி விடுகிறது.

உயிரியப் பார்வையோடும் இது தொடர்புடையதாகத் தோன்று கிறது. ஏனெனில் இப்பார்வையும் மூலபாடத்தையே தனக்கு ஆதார மாகக் கொள்கிறது. எனினும் பாடத்தோடும் அது மனிதனுக்கு அளிக்கும் முருகியல் இன்பத்தோடும் பொதுமனிதனின் இனமனக் கோட்பாட்டை இணைத்தே ஆராய்வதால், இவ் உயிரியப் பார்வை யினும் இது வேருகிறது.

மனிதனின் மிகப்பழைய சமுதாயப் பழக்க வழக்கங்களைப் பற்றிய ஆராய்ச்சி இப் பார்வையில் இருத்தலின் சமுகவியற் பார்வையுடனும் தொடர்புடையதாகத் தோன்றுகிறது. எனினும் சமுதாயப் புறக்கூறு களை விடுத்து அகக்கூருகிய மனப்படிமங்களை ஆராய்தலின் அத னின்றும் வேறுபட்டதாகவும் காண்கிருேம்.

இதனோடு தொடர்புற்று, இப் பார்வைக்குத் துணைபோவதாக அமைவது 'மானிடவியல்' என்னும் அண்மைக்கால அறிவியல் ஆய்வு. எனினும் இது துணையாகுமேயன்றி இப் பார்வையைப் பாதிப்பதில்லை. ஏனெனில் மானிடவியலின் ஆர்வம் மனித இனத்தின் புறப்பொருளைப் பற்றி மட்டுமே அமைகிறது.

இப் பார்வையின்படி, மனிதனின் ஆதிகாலப் பட்டறிவின் காரணமாகவும் பழக்கங்கள் காரணமாகவும், அவன் உள்ளத்தே

முகிழ்த்த ஐயம், அச்சம், காதல் போன்ற உணர்வுகளின் காரணமாகவும், பல்வேறு படிமங்களைக் கண்டு/படைத்து வெளிப்படுத்தினுன். மொழி செம்மையுருத காலம் அது. ஏறக்குறைய மனித இனம் ஒரு குறிப்பிட்ட அறிமுக எல்லைக்குள் வாழ்ந்த காலம். தான் கொண்டாடிய சடங்குகள், விழாக்கள் போன்றவற்றை எல்லாம் ஒரு குறிப்பிட்ட கருத்தின் அல்லது சிந்தனையின் புறவெளிப்பாடாகவே கருதிச் செய்து வந்தான். இவை அப்படியே மனித இனத்தின் பொது மனத்தே ஆழப் பதிந்து உள்ளன. பின்வந்த தலைமுறையினர்க்கும் பொதுவாக இவை அறியக் கூடியவாறு ஆழ்மனத்தே படிந்து உள்ளன. கலைஞர்கள் இவற்றைப் பயன்படுத்துகின்றனர். தம் சிந்தனையை/கருத்தை இத்தகைய பண்பாட்டுப் படிமங்களின் மூலம் வெளிப்படுத்துகின்றனர் என்பது இப் பார்வையின் முடிபு. இம் முறையால் ஆராயுமிடத்துக் கவிஞனின் அல்லது அவன் படைப்பின் உண்மையை உணரலாம் என்பதை அவர்கள் வலியுறுத்துகின்றனர். இப் பார்வை வேறு பல துறை அறிவையும் உள்ளிட்டது என்பது இதனுல் விளங்குகிறது. இத்துறையில் சிறந்த திறனுய்வாளர்களாகப் பலரைக் கூறலாம்.[7]

இவ்வாறு ஐவகைப் பார்வைகளாகத் திறனுய்வு அணுகுமுறைகளைப் பகுத்துக் கூறினும், எந்த ஒரு பார்வையும் இலக்கியச் செவ்வியை நுகர்வதற்கு முழு அளவில் போதுமானது என்றே குறைபாடு இல்லாதது என்றே கூறுவதற்கில்லை. ஒவ்வொரு பார்வையும் தனக்கென உரிய நன்மையுடையது; ஒருசில குறைபாடுகளையும் உடையது. அவ்வப்போது வெளிப்படும் அறிவியல், சமுதாயக் கோட்பாடுகளின் தாக்கத்தால் வெவ்வேறு கோணங்களில் நோக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இத்துணை வேறுபட்ட பல பார்வைகள் தோன்றியும், இலக்கியப் படைப்பு பயனற்றது, மனித இனத்திற்குத் தேவையில்லாதது என்று எப் பார்வையும்—எவ்வளவு அறிவியற்பாற்படினும் — கூருதது நினைவு கொள்ளத் தக்கது. இப் பார்வைகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட படைப்பை ஆராயும்போது கிடைக்கும் ஒட்டு மொத்தமான மதிப்பீடும் பயனும் இக்கலையை மேலும் வளர்க்கத் துணை செய்கின்றன; துணை செய்யும் என்பதே இலக்கிய நெஞ்சங்கட்கு ஆறுதல் தரும் செய்தியாகக் காண்கிறோம்.

குறிப்புகள்

1. (a) "The identity of genius and taste is the final achievement of modern thought on the subject of art; and it means that fundamentally the creative and critical instincts are one and the same." Spingarn quoted by Irving Babbit, "Genius and Taste," *Five Approaches of Literary Criticism*, W. S. Scott (1962, rpt. London: Collier-Macmillan Ltd, 1967), p. 31.

(b) "These two things (i.e., genius and taste) are indivisibly one." A.W. Schlegel (Berlin lectures, 1803), quoted by Irving Babbit, *op. cit.*, p. 32.

(c) "The best type of critic may therefore be said to be creative in the sense that he creates standards. It is in their common allegiance to standards that critic and creator really come together."
Irving Babbit, *op. cit.*, p. 38.

2. "Genius and Taste," *Five Approaches of Literary Criticism*, W.S. Scott, p. 40.

3. *op. cit.*, p. 71.

4. (i) இலக்கியம் என்பது ஒரு சமுதாயச் சாசனமன்று; அது ஒரு சமுதாயத்தின் வசந்த ஓவியம்.
   (ii) இலக்கிய உலகில் இமயமலையினும் மேருமலையே விழையற்பாலது.

5. இப் பார்வையின் சிறந்த திறனாய்வாளர்களுள் சிலர் :
   John Macy, L.C. Knights, Stephen Spender, W. H. Auden, V.W. Brooks, T.K. Whipple and Christopher caudwell.

6. I. A. Richards, T. S. Eliot, W. K. Wimsatt, Richard P. Blackmur, Allen Tate, Clanth Brooks, J.C. Ransom and others.

7. James Frazer, Jesse Weston, Jane Harrison. Maud Bodkin, Northrop Frye, Leslie Fiedler, Joseph Campbell and others.

3. திருமுறைகளில் இலக்கிய வளம்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைப் பேராசிரியர் — தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்,

தோற்றுவாய்

ஓவியம், சிற்பம், இலக்கியம், இசை, நாட்டியம், நாடகம் என்பன மக்களுக்கு இனிமையைப் பயக்கும் கலைகளாகும். இவற்றுள் இலக்கியம் என்பது மக்களின் பல்வேறு குறிக்கோள் களாகிய இலக்கினைக் கருத்திற்கொண்டு அறிஞரால் இயற்றப்படுவது ஆதலால் இலக்கியம் என்று பெயர் பெற்றுள்ளது. இலக்கினை உடையது இலக்கியமாகும்.

இலக்கிய வகை

அறிஞர் இலக்கியத்தை உரைநடையாகவும் செய்யுள் நடையாகவும் இயற்றி வருகின்றனர். ஆனால் உரைநடை இலக்கியத்தைக் காட்டிலும் செய்யுள் நடையாக இயற்றப்படும் இலக்கியமே சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.

இலக்கியங்கள் நாடக வழக்கென்னும் புனைந்துரை, உலகியல் வழக்கென்னும் இயல்புரை என்னும் இவற்றை, இரண்டு கால்களாகக் கொண்டு இயங்குகின்றன. நாடக வழக்கென்னும் புனைந்துரைக்குக் கற்பனை என்றும் பெயர் உண்டு.

இலக்கியங்கட்கு இன்றியமையாததாய் வேண்டப்படுவது பொருட்பொலிவாகும். எடுத்துக் கொண்ட பொருளை ஆற்றல் வாய்ந்த நால்வகைச் சொல்லுள் அமைத்து, மோனை முதலான தொடையும் சீனை முதலான தொடைவிகற்பங்களும் சிறப்பாய் அமைய, தன்மை உருவகம் உவமை முதலான அணிகள் அமைந்து அழகு செய்ய, பல்வேறு ஓசைப் பொலிவு தோன்ற, உணர்பவர் கட்கு அமிழ்தம் போல் இனிய சுவையைத் தருவது இனிய செய்யுளாகும்.

'பொருளின் பொலிவும் சொல்லின் திறனும்
தொடையும் தொடையின் விகற்பமும் துன்ன
உருவகம் முதலாம் அலங்கா ரங்களை
உட்கொண் டோசைப் பொலிவுடைத் தாகி

உய்த்துணர் வோர்தம் உள்ளங் கட்கு
மாக்கடல் அமிழ்தெனப் பாடுவது மதுரகவி''[1]

என்று கூறுகிறது *பிங்கல நிகண்டு*.

இலக்கியம் ஒவ்வொரு நாட்டிலும் அங்கு வாழும் மக்களின் தன்மைக்குத் தகுந்தாற் போல் பலவகைத் தன்மையுடையனவாக அமைந்து விடுகின்றன. அதுபோல் காலத்திற்குக் காலம் இலக்கியம் பல்வேறு மாற்றம் பெற்று வளர்ந்து வருகின்றது. வரலாற்றறிஞர் இடத்தாலும் காலத்தாலும் இலக்கியத்தைப் பாகுபடுத்தி வழங்கு கின்றனர். எடுத்துக்காட்டாக மேலைநாட்டு இலக்கியங்களின் தன்மை வேறு. அதுபோல முற்கால இலக்கியத்தின் தன்மை வேறு; இக்கால இலக்கியத்தின் தன்மை வேறு.

தமிழ்நாட்டிலே மிகப் பழைய காலத்தில் தோன்றியவை வாய் மொழி இலக்கியமாகும். அவை அகப்பொருள் பற்றியும் புறப் பொருள் பற்றியும் தோன்றியிருக்கலாம். அவற்றுள் வேலன் முதலியோர் வெறியாடும்பொழுது கடவுள் மேல் பாடிய இலக்கியம் முதலாயின பழைய காலத்துத் தெய்வ இலக்கியமாகும். சங்க இலக்கிய காலத்தில் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் சில தெய்வ இலக்கியங்கள் தோன்றின. சங்க காலத்திற்குப் பின் மிகுதியான தெய்வ இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் தலை சிறந்தன சைவ வைணவத் தெய்வ இலக்கியமாகும்.

திருமுறைகள்

சைவத் தெய்வ இலக்கியங்களில் மிகப் பழமையானது காரைக்கால் அம்மையார் பாடிய பாடல்களும், திருமூலர் பாடிய திருமந்திரமாலையும், சமயக் குரவர்கள் பாடிய பாடல்களும் ஆகும். இவற்றையெல்லாம் 'திருமுறை' என்ற பெயரால் சைவப் பெருமக்கள் பகுத்து முறைப்படுத்தி வழங்கி வந்தனர்.

திருமுறை என்ற பெயர்

'திருமுறை' என்ற பெயர் திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பிக்கும் பல நூற்றுண்டுக் காலம் முன்பிருந்து *திருமூலர் திருமந்திரத்தில்* வந்துள்ளது.

“ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடும் *திருமுறை* பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே''[2]

மேற்கூறிய பாடல் திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் 'சத்தி பேதம் — திரிபுரைச் சக்கரம்' என்ற தலைப்பில் வந்துள்ளது.

திரிபுரை என்னும் சத்தி, சுந்தரி, நாரணி, பரிவர்ணி, ஈசி, மனோன்மணி என்னும் பல பெயருடையவள் என்றும்[3] அவள்

10967
DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY MADRAS

பொன்னிறம் செந்நிறம் வெண்ணிறம் என்றும், மூன்று நிறமுடையவளாயிருந்து கல்வியையும் போகத்தையும் முக்தியையும் தருகிருள் என்றும்[4] கூறுவர். அவள் அங்கையில் ஏட்டினை உடையவளாய் மூன்று விழியையுடையவளாய் விளங்குகிருள். படிகம் போன்ற வெண்ணிறம் உடையவள்; அவள் விரும்பி அமர்வது வெண்டாமரை மலர், அவள் பார்ப்பதி என்னும் பெயருடையவளாயிருந்து திருமுறையைப் பாடிக் கொண்டுள்ளாள். அத்தகைய திரிபுரையின் திருவடியைச் சென்னியிலே சூடுமின்; அவளைத் தோத்திரம் செய்யுங்கள் என்று திருமூலர் உலக மக்களைத் திரிபுரையிடம் ஆற்றுப்படுத்துகிருர். இங்கே திரிபுரையால் பாடப்படும் திருமுறை உயர்ந்த அறிவு நூலாக இருத்தல் வேண்டும்.

திருமுறை என்ற சொல்லின் பொருள்

இனித் திருமுறை என்ற சொல்லின் பொருளை ஆராய்வோம். ''திருவென்ப கமலை செல்வம் சிறப்பொடு முப்பேர் செப்பும்'' என்ற சூடாமணி நிகண்டின்படித்[6] 'திரு' என்னும் சொல் 'இலக்குமி' 'செல்வம்' என்னும் பெயர்ப் பொருளிலும், 'சிறப்பு' என்னும் பண்புப் பொருளிலும் வரும். திருமுறை என்ற சொல்லில் வந்துள்ள திரு என்னும் சொல் இலக்குமி என்னும் பொருளில் வரவில்லை. செல்வம், சிறப்பு என்ற இரண்டு பொருளில் வந்ததாகவே அதனைக் கொள்ள வேண்டும். எனவே செல்வத்தைத் தரும் முறை, சிறந்த தன்மையையுடைய முறை என்ற இரண்டு பொருளில் திருமுறை என்னும் சொல் வந்துள்ளதாகக் கருத வேண்டும்.

'முறை' என்ற சொற்கள் ''முறையென்ப கோசமே ஊழ் முறைமை இம் முப்பேர் என்ப'' என்ற சூடாமணி நிகண்டின்படி[7] கோசம் (புத்தகம்) என்றும், ஊழ் என்றும் முறைமை என்றும் மூன்று பொருள்கள் உள்ளன. இவற்றையெல்லாம் கருத்தில் வைத்துக் கொண்டு 'திருமுறை' என்ற சொற்குப் பொருள் உணர முற்படுவோம்.

முறை என்பது இங்கே கோசம் அல்லது புத்தகம், நூல் என்ற பொருளில் வந்துள்ளது. திரு என்பதைச் சிறப்பு என்று பொருள் கொள்ளின் சிறந்த கோசம் சிறந்த புத்தகம், சிறந்த நூல் என்று பொருள்படும்,

திரு என்ற சொல்லிற்குச் செல்வம் என்று பொருள் கொள்ளின் செல்வத்தை உணர்த்தும் நூல் என்று பொருள் கொள்ளலாம்.

சைவ சமயத்தார் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளைக் கூறுவர். அம் முப்பொருளில் சிவமாகிய பொருள் சிறந்ததாகலின் சிவமாகிய திருவை உணர்த்தும் நூலினைத் திருமுறை என்று சைவப் பெருமக்கள் வழங்கலாயினர்.

மாணிக்கவாசகர் சிவமே பெருந்திரு எய்திற்றிலேன் என்று கூறுதலைக் காண்க. தொண்டர் பெற்றுள்ள சிவமாகிய செல்வத்தைக்

கேடும் ஆக்கமும் கெட்ட 'திரு' என்று சேக்கிழார் கூறுவர். இறுதியும் தோற்றமும் இல்லாதவன் இறைவன் ஆதலின் அவனைக் 'கேடும் ஆக்கமும் கெட்ட திரு' என்று கூறுதல் பொருந்துமாறுணரலாம். எனவே சிவமாகிய செம்பொருளைப் பற்றிப் பேசும் இலக்கியம் திருமுறையாயிற்று.

திருமுறை என்ற இலக்கியத்தின் பாடுபொருள் திரு என்னும் சிவமே

பழைய திருமுறையாசிரியரெல்லாம் சிவபெருமான் ஒருவரைப் பாடுதலாகிய ஒரு நெறியிலேயே இயங்கியுள்ளனர். தேவாரம், திருவாசகம் என்னும் பழைய திருமுறைகளில் சிவபெருமானைத் தவிர்த்து வேறு எந்தத் தெய்வத்தையும் பாடிய பாடல்களைப் பார்க்க முடியாது. எனவே சிவம் என்னும் திருவைப் பாடுபொருளாக உடையது திருமுறையாயிற்று. 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' என்ற திருமுறைப் பாடலின்படி இறைவன் திருவடியை வணங்கும் நெறியாகிய செல்வத்தைக் கூறுவதும் திருமுறையின் உட்கிடையாகும்.

எனவே *திருமுறையிலக்கியத்தின் இலக்கு சிவம் என்னும் செம்பொருளைக் கூறுதலும்* வழிபாட்டு நெறியைக் கூறுதலும் ஆகும். எனவே நாம் திருமுறையில் பதியாகிய சிவத்தைப் பற்றியும் அச்சிவத்தை அடையும் நெறிகளைப் பற்றியும் அந்நெறி நின்ற அடியவர் தம் சிறப்புப் பற்றியும் பிறபொருளைப் பற்றியும் உணர்ந்து கொள்ளலாம்.

பதி இயல்பு

மேற்கூறிய நான்கு பகுப்பினைப் பொருளாகக் கொண்டு திருமுறைகளில் உள்ள கருத்துகளைத் திரட்டினுல் ஒவ்வொன்றும் மிகப் பெரிதாக விரியும் ஆதலால் அவற்றுள் சிலவற்றை மட்டும் குறிப்பிடுவோம். இறைவன் ஒருவனே; அவன் அருவடிவினன்; உயிர்கள் உய்யும் பொருட்டு அவற்றிற்கு அருள் செய்ய அவன் பல்வடிவையுடையவனுகின்றுன் என்பது சைவ சமய உண்மைக் கருத்து. இக்கருத்தினை உடைய திருமுறை பாடற் கருத்தினைக் கீழே காண்க:

1. இறைவனை 'ஞானத்திரளாய் நின்ற பெருமான்' என்பர் *ஞான சம்பந்தர்.*
2. *அப்பர்* "மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கெல்லாம் எல்லையான விரானுர்" என்பர்.
3. *ஞானசம்பந்தர்,*

   ஈருய்முதல் ஒன்ருய்இரு பெண்ஆண் குணம் மூன்ருய்
   மாருமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
   ஆருர்சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானுய்
   வேருய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழ லையே"[8]

என்னும் பாட்டில், உலகிற்கு அழிவும் தோற்றமும் செய்யும் ஒருவனுய், ஆண் பெண் என்னும் இரு வடிவினனுய், சாத்துவிகம் முதலிய மூன்று குணத்தனுய், நான்மறையால் ஐம்பூதமாய், ஆறு சுவையாய், ஏழோசையாய் (ஏழ் பண்), எட்டு திசைதான் ஆய் இவற்றின் வேருய் இவற்றின் உடனுகி நிற்பான் இறைவன் என்று அவனுடைய முவகை நிலையினைக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகரும்,

"பெண்ணுகி ஆணுய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி இத்தனையும் வேருகிக்
கண்ணு ரமுதமுமாய் நின்ருன்"[9]

என்பர்.

பதியை அடையும் நெறி

பதியாகிய இறைவனை அடைவதற்கு நான்கு நெறிகள் கூறப் பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன வாம்.

(1) ***திருநாவுக்கரசர்***[10]

'தொண்ட ராகித் தொழுது பணிமினே
பண்டை வல்வினைப் பற்றற வேண்டுவீர்'

"தொண்டு பாடியும் தூமலர் தூவியும்
சிண்டை கட்டி இணையடி ஏந்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்களாக்
கண்டு கொண்டடி யேனுய்ந்து போமினே"

"அல்ல லாகனும் பூதங்கள் ஆட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை விடுமோ"

"பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவன் ஏகம்பம்
குறிப்பி னுற்சென்று கூடித் தொழுதுமே"

"அற்றுப் பற்றின்றி யாரையும் இல்லவர்க்
குற்ற நற்றுணை யாவான்".

அந்நெறி நின்ற அடியவர்தம் சிறப்பு

திருநாவுக்கரசர்

"அங்கமெல்லாம் குறைந்தொழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே".[11]

சேக்கிழார்

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றூர்
ஒருமையால் இலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலேயில் நின்ஓர் அன்பிஞல் இன்பம் ஆள்வார்
இருமையும் கடந்து நின்றூர் இவரை நீ அடைவாய் என்று.[12]

பிற பொருள்

திருமுறையுள் முதல் மூன்று திருமுறை திருஞானசம்பந்தர் பாடியனவாகும். அம்மூன்றில் முதல் திருமுறையுள் முதல் பதிகத்தில் முதற்பாட்டாய்ச் சிறந்து விளங்குவது ''தோடுடைய செவியன்'' என்ற பாடலாகும். இப்பாடல் சீர்காழிப்பதியில் பிரம தீர்த்தக் கரையில் இறைவன் திருவருளால் ஞானப்பால் உண்ட ஞான சம்பந்தர் இறைவனேச் சுட்டிப் பாடிய முதற் பாட்டாகும். தோடுடைய செவியனுய் விடையை ஊர்ந்து தூய வெண்மதியைச் சூடிக்கொண்டு காடுடைய சுடலேப் பொடியைப் பூசினவனுய் இறைவன் என் முன் வந்து அருள் செய்தான். அக்காட்சி என் உள்ளத்தினேக் கவர்ந்து விட்டது என்று அவர் கூறுகிருர். முதன் முதல் ஞானசம்பந்தப் பெருமான் கண்ட இறைக்காட்சியில் முதலில் தோன்றியது கோடாகும். சிவம் என்னும் ஆண்கூறும், சத்தி என்னும் பெண் கூறும் கலந்து ஒன்ருன இறைவன் திருவுருவில் அருட்சத்தியின் பகுதியாகிய இடப்பாகில் விளங்குவது தோடாகும். முதற்கண் தோட்டினேயும், அதனே அணிந்த சக்தியையும் இறை வனுக்கு உடைமைப் பொருளாக்கி இரண்டாவது விடையாகிய ஊர்தியையும் மூன்ருவது தூய வெண்மதியையும் நான்காவது சுடலேப்பொடியையும் உடைமையாக்கி, உடையவனுய் இறை வனேச் சிறப்பித்து அவ்வுடையவஞகிய இவன் உள்ளங்கவர் கள்வனுயுள்ளான் என்று கூறியுள்ளார்.

வடமொழியில் உள்ள ஸ்ரீருத்திரம் என்னும் சாமவேதப் பகுதி யானது சிவபெருமானேப் பல வடிவினனுக்க் கூறி வணங்குகின்றது. அவ்வணக்கத்தில் ஒன்று ''தங்கராய நம: தங்கராணம் பதயே நம:'' என்னும் பகுதியாகும். ''கள்வனுக்கு வணக்கம் கள்வர் தலேவனுக்கு வணக்கம்'' என்பது அப்பகுதியின் பொருள். இறைவன் கள்வனுகவும் கள்வர் தம் தலேவனுகவும் விளங்குகின்ருன் என்பது அப்பகுதியின் கருத்தாகும். அவ்வேதப் பகுதிக்கு விளக்க வுரையாக ஞானசம்பந்தர் ''என் உள்ளத்தைக் கவரும் கள்வனுக இறைவன் உள்ளான்'' என்று கூறுகிருர்.

உள்ளத்தைக் கவர்ந்த பொருளில்

ஞானசம்பந்தர் சிறு குழந்தை. அவருக்கு இறைவன் திருமேனி யில் விளங்கி, அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்த பொருள் தோடும் பிறையும் திருநீற்றுப் பூச்சும் ஆகும். அவற்றுள் நடுநாயகமாக இருப்பது பிறை. இப்பிறையாகிய திங்களே முதல் திருமுறை தொடக்

கத்தே 'தூவெண் மதிசூடி' என்று குறிப்பிட்டார். இவர் பாடிய இரண்டாம் திருமுறை முதற்பாட்டிலும் இறைவனை நோக்கி, "நீ இளைய இனிய பிறையினைக் கொடிய பாம்புடன் சடையில் வைத்திருக்கின்றாயே ! அதற்குக் காரணம் என்ன?" என்று வினவுகிறார்.

> "......... .... பூந்தராய்
> துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
> மின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே"

என்பது அப்பாட்டு. இன்னும் அவர் பாடிய மூன்றாந்திருமுறை முதற்பாட்டிலும் "திங்கள் சூடிய இறைவனே எம் தொல்வினை சுருங்குமாறு அருள் செய்க" என்று கூறுகிறார். "பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள் சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல் வினையே" என்பது அப்பாட்டு.

எனவே, அவர் முதல் திருமுறைத் தொடக்கத்தில் தூய வெண் மதியைச் சூடி உள்ளங் கவர் கள்வன் என்று கூறுதலையும், இரண்டாந் திருமுறைத் தொடக்கத்தே, "பூந்தராய் ஈசனே ! இனிய பிறையை இன்னாமை செய்யும் பாம்புடன் வைத்த கருத்தென்ன?" என்று வினாவுவதும், மூன்றாந் திருமுறைத் தொடக்கத்தே, "வெண் திங்கள் சூடினாய்! எம் தொல்வினை சுருங்க அருளாய்" என்று வேண்டுவதும் ஒப்பு நோக்கிப் படித்து இன்புறத்தக்கதாகும்.

இறைவனை வடமொழிவாணர் சந்திரசேகரன், சோமசேகரன் என்று கூறுவர். தமிழறிஞர் பிறை சூடி முதலான பெயரால் கூறுவர். இறைவனை வழிபடுகின்ற தொண்டர்கட்கெல்லாம் அவன் திங்களைச் சூடியிருப்பது பற்றிப் பல்வேறு புனைந்துரை (கற்பனை) நினைவு தோன்றுகின்றன. அவர்தம் நினைவுகளிற் சில கூறுவோம்.

அருங்கலம்

அருங்கலம் என்பது பொன்னும் மணியும் கொண்டு இயற்றப் படுவதாகும். "அருங்கலம் உலகின் மிக்க அரசர்க்கே உரிய"[13] என்று சூளாமணி கூறுகின்றது. இதனால் அருங்கலத்தின் சிறப்பினை உணர்ந்து கொள்ளலாம். இறைவன் திங்களைத் தலையிற் சூடியுள்ளான். அதனால், உலகத்தவர் இறைவன் தலைக்குத் திங்கள் அணிகலனாக அமைந்துள்ளது என்று கருதுவர். ஆனால், அப்பர் சுவாமிகள் திங்கள் இறைவன் முடிக்கு அணிகலனாக இல்லை; திங்களுக்கு இறைவன் முடியே அருங்கலன் என்னும் அணியாக உள்ளது என்று கூறுகிறார். "திங்களுக்கு அருங்கலம் திகழும் நீண்முடி" என்பது அவர் பாட்டு.

திங்கள் மின்னல்

இறைவன் மார்பில் அரவினை அணிந்துள்ளான்; அந்த அரவு இறைவன் தலையில் அணிந்துள்ள திங்களை மின்னல் என்று கருதி அடங்கியிருக்கிறதாம்.

"பாகத்தின் நிமிர்தல் செய்யாத் திங்களைப் பிறையென்றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும்ஆரே ரூர்க்கே."

என்பது அவர் பாடல்.

மதியிலா அரவின் ஐயம்

இறைவன் வெண்மை நிறமுடைய திங்களைச் சூடியுள்ளான். மார்பிடத்தே திருமாலாகிய பன்றியின் வெண்மை நிறமுடைய பல்லினையும் அணிந்துள்ளான்; இறைவன் அணிந்துள்ள மதியில்லாத அரவு திங்களையும் எயிற்றினையும் பார்த்து அது திங்கள் என்று துணியாமல் ஐய உணர்வுடன் உள்ளது. *காரைக்கால் அம்மையார்* தாம் பாடியுள்ள *அற்புதத் திருவந்தாதியில்,*

"திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் — ஒருநாள்
இளமதியென் றென்றுக இன்றளவும் தேரா
அதுமதியொன் றில்லா அரவு"[14]

என்று பாடியுள்ளார்.

அரவும் மதியும் விளையாடுதல்

ஞானசம்பந்தர் ஒரு பாடலில் இறைவன் திருமுடியில் அரவும் மதியும் விளையாடுவதாகப் பாடுகின்றார்.

"துன்னார் புரமும் பிரமன் சிரமும் துணிசெய்ப
மின்னார் சடைமேல் அரவும் மதியும் விளையாட"

என்பது அப்பாடல்.[15]

திருஞானசம்பந்தரும் இயற்கைப் புனைவும்

திருமுறையில் வந்துள்ள பல புலவர்களின் பாடல்களெல்லாம் ஒரே தன்மை உடையனவல்ல. ஒவ்வொருவருடைய பாட்டும் ஒவ்வொரு தன்மை உடையனவாக இருக்கின்றது. திருஞான சம்பந்தருடைய பாடல்களில் அரிய பெரிய சமயக் கருத்துக்கள் ஆங்காங்கே காணப்பட்டாலும் அவருடைய பாடல்களில் சிறப்பாகக் கருதத்தக்கது இயற்கைப் புனைந்துரை ஆகும். எடுத்துக் காட்டாகச் சிலவற்றை நோக்குவோம்.

முதல் திருமுறையில் கீழைத்திருக்காட்டுப்பள்ளியைப் பற்றி அவர் பாடும் பதிகத்தில் "வயல் அருகே புனல் பாய்கின்றது; அப்புனலிலிருந்து செங்கயல் பாய்கின்றது; அவ் வயலிடத்தே சில மலர்கள் கைபோல் தேனுடன் மலர்ந்துள்ளது; அம் மலர்த்தேன் கையருகே வாழைகள் கனி ஈன்றுள்ளன; அந்த மலர்மணமும் கனிமணமும் கமழ்கின்ற காட்டுப்பள்ளி" என்று பாடுகிறார்.

“செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச் சில மலர்த்தேன் கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளி” என்பது அப் பாடலாகும்.

அவர் முதல் திருமுறையில் திருநள்ளாற்றையும் திருவால வாயையும் சேர்த்துப்பாடும் பதிகத்தில் ''நள்ளாற்றுப் பெருமானைப் பூசிப்பவர் பூசிக்கின்றார். அவர் பூசிக்கும் பூவில் நறுமணம் கமழ்கின்றது; அபிடேகம் செய்யும் புனலில் தூய்மையாகிய பொலிவு விளங்குகின்றது; திருமேனியிற் சாத்தும் சந்தனம் புதுவிரைச் சாந்தாய் இனிய மணத்தை வீசுகின்றது; பூசிப்பவர் தம் நாவில் இனிய பாடல்கள் எழுகின்றன.'' இவ்வாறு நள்ளாற்றுப்பெருமான் பூசைக்காட்சியை ஞானசம்பந்தர் பாடுகிறார்.

''பூவினில் வாசம் புனலில் பொற்பு புதுவிரைச் சாந்தின் இந் நாற்றத்தோடு நாவினிற் பாடல் நள்ளாறுடைய நம்பெருமான்” என்பது அவர்தம் பாடலாகும்.

அவர் முதல் திருமுறையில் சீகாழியைப் பற்றிப் பாடிய பதி கத்தில் “கடல் அலைகள் சங்கினைக் கொண்டுவந்து கடலுக்கு வெளியே எறிகின்றன; எறியப்பட்ட அச்சங்கம் பக்கத்திலே மருத நில வயலில் செந்நெற் காட்டுக்குள் புகுந்து முத்தினை ஈனுகின்றது” என்று பாடுகிறார்.

''மாடே ஓதம் எறிய வயற்செந்நெல்
காடே றிச்சங் கீனும் காழியார்''

என்பது அப் பாடலாகும்.

அவர் சண்பை நகரைப் பற்றிய மற்றொரு பாடலில் “மீனை உண்பவரும் கப்பலில் ஏறிச் செல்பவருமாகிய பரதவர் வாழும் மனையின்கண் நுனிமுக்குச் சங்கம் சென்று முத்தினை ஈனுதற்கு இடமாகிய சண்பை நகரார்” என்று பாடுகிறார்.

“…………… …………… …………… மீனும்
வங்கம் மேவு கடல்வாழ் பரதர் மனைக்கே நுனிமுக்கின்
சங்கம் ஏறி முத்தம் ஈனும் சண்பை நகராரே”

என்பது அப் பாடலாகும்.[16]

கோவில்களில் இசை

மக்களிடத்தில் கடவுள் பத்தியை இசை நாட்டியங்களால் முற்காலத்து மக்கள் உண்டாக்கி வந்தனர். திருக்கோவில்களில் இறைவனைப் பூசிக்கும் பொழுது மந்திர இசை, வீணை இசை, வேத அத்தியயனம், சாஸ்திர பாடம் முதலியன செய்வித்தல் வேண்டும் என்றும், இவற்றின் பின் கௌடமொழி முதலானவற்றில் இசையைத் தூபம் காட்டும்வரையிலும் அதற்கு மேல் தமிழ் மொழிக்கு

உறுப்பாகிய இசையை நடனத்தோடு செய்வித்தல் வேண்டும் என்றும், அதன்பின் பிழையில்லாமல் சமஸ்கிருத மொழியிற் பாடப் படும் இசையையாவது அல்லது பதினெண் மொழிகளுடைய இசையையாவது பாட வேண்டும் என்றும் *காமிகாகமம் அர்ச்சன விதிப்படலம்* கூறுகின்றது. இதனைப்போலத் திருக்கோவில்களில் தமிழ்ப் பாடல்களும் வெவ்வேறு திசைமொழிப் பாடல்களும் பாடப் படுவதை *ஞானசம்பந்தர்* கூறுகிறார்.

''ஊறுபொரு ளின்றமிழ் இயற்கிளவி தேருமட மாதருடனார்
வேறுதிசை யாடவர்கள் கூறஇசை தேருமெழில்
வேதவனமே''[17]

''தென்சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி
நரம்பெடுத்து, துஞ்சு நெஞ்சினுள் நீங்கத்
தொழுதெழு தொல்புகலூ ரில்''[18]

என்பவை அப்பாடலாகும்.

இறைவன் பாடும் இடத்தில் நீங்காது எழுந்தருளி இருப்பார் என்று *ஞானசம்பந்தர்* கூறுகிறார்.

''தமிழின்நீர்மை பேசித்தாளம் வீணைபண்ணி நல்ல
முழுவம்மொந்தை மல்குபாடல் செய்கையிட மோவார்''

என்பது அப் பாடலாகும்.[19]

பாடும் தொண்டின் சிறப்பு

திருக்கோவில்களில் செய்யப்படும் திருவலகிடுதல் (விளக்குதல்), மெழுகுதல், மலர் தொடுத்தல், திருவிளக்கிடுதல் என்னும் இத் தொண்டுகள் ஒன்றுக்கொன்று உயர்ந்தவை என்றும் எல்லா வற்றிற்கும் உயர்ந்தது இறைவனைக் குறித்துப் பாடுதலாகும் என்றும் *அப்பர் சுவாமிகள்* கூறுகின்றார்.

''விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர்தொ டுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க் கடிகள்தாம் அருளுமாறே''[20]

என்பது அப்பாடலாகும்.

பதினோராம் திருமுறையில் கபிலதேவ நாயனார் தாம் பாடிய சிவபெருமான் திருவந்தாதியுள் ''நூறு ஆவின் பாலை இறைவன் திருமுடிக்கு ஆட்டி நூறு மலரைக் கொண்டு இறைவன் திருப் பெயர்களைக் கூறிக்கொண்டு அருச்சனை செய்தலைக் காட்டிலும் சிறந்ததாகும் அச்சிவன்மேல் ஒரு பாடல் பாடி வணங்குவது'' என்பர்.

''நூறுன் பயன்ஆட்டி நூறுமலர் சொறிந்து
நூறு நொடிவதனின் மிக்கதே நூறு

உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளேறு
உடையானைப் பாடலால் ஒன்று"[21]

என்பது அப்பாடலாகும்.

சம்பந்தர் இசையால் தமிழ் வளர்த்தல்

திருஞானசம்பந்தர் தாம் வாழ்ந்திருந்த ஒவ்வொரு நாளும் இனிய இசைத்தமிழ்ப் பாடல்களைப் பாடி அச் செயலாலேயே தமிழ் மொழியினை வளர்த்து வந்தார் எனவும் அம்முயற்சிக்கு இறைவனும் உறுதுணையாகவிருந்து தாளம் என்னும் இசைக் கருவியைத் தந்து உதவி அவர் பாடிய பாடல்கட்கு இரங்கி அருள் புரிந்தார் என்றும் *சுந்தரர்* பாடுகிறார்.

"நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பும் ஞான சம்பந்த னுக்குலகவர்முன், தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும் தன்மை யாளனை"[22]

என்பது அப்பாடலாகும்.

சமணர், பௌத்தர்

ஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் பத்தாவது பாட்டில் சமண சமயத்தவரையும் பௌத்த சமயத்தவரையும் பழித்துப் பேசும் செய்தி இடம் பெற்றுள்ளது. திருநாவுக்கரசரும் தாம் பாடிய பதிகத்தில் பலவிடத்தில் அவர்களைப் பழித்துப் பேசுகின்றனர். இவர்கள் இவ்வாறு பழித்துப் பேசுதற்குரிய காரணத்தைச் *சேக்கிழார்* கீழ்வருமாறு கூறுகிறார்:

"வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதனெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே யெனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்"[23]

"அறிவு நூலுக்குக் காரணமாய் விளங்கும் தலைவனுடைய நெறியை அறிந்து உய்யாராய் உயிர்களாகிய தமக்கு மேல் ஒரு தலைவன் உண்டென்பது இல்லை; உயிர்களாகிய தாமே உள்பொருள்; தம்முடைய நலம் தீங்கிற்குத் தாமே காரணம் என்றுரைத்த பௌத்தர் தம் சமய நெறி பழியாக்கும் ஏதமுடையதே எனக் கூறினர் எங்கள் பிரான் ஞானசம்பந்தர்" என்பது அவர்தம் கருத்துரையாகும்.

சேக்கிழார் கூறுவதை நன்கு கருதினல் உயிர்களாகிய தாமும் தமக்கு மேல் தலைவனுகிய ஒருவனும் உண்டென்றுணர்வது சைவ சமய உண்மை நெறி என்றும், தாம் என்னும் உயிரே உண்டு; தமக்குமேல் தலைவனுகிய ஒருவன் உண்டு என்பது இல்லை; உயிர் களாகிய தாமே தமக்கு நலத்தைச்செய்து கொள்ளும் என்பது சமண

பௌத்த சமயநெறி என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும். ''பேராற்றலும் பேரறிவும் வாய்ந்த பதிப்பொருளாகிய ஒன்று இவ்வுலகிற்கு முதலாக உள்ளது; அதன்வழி உயிர்களாகிய நாம் இயங்கி உலக இன்பத்தையும் வீடு பேற்றையும் அடைகிறோம்'' என்னும் உண்மை நெறியைக் கருதி உணராமையால் ''போதமிலாச் சமண்கையர் புத்தர் வழி'' என்று சேக்கிழார் கூறுவாராயினர்.

அகப்பொருள்

சங்ககாலச் செய்யுட்களில் அகத்துறைப் பாடல்களே மிகுதி யாக உள்ளன. திருமுறைக் காலத்திலே அத்துறைப் பாடல்கள் கருங்கி வந்துள்ளன. அந்த அகத்துறைப் பாடல்களும் இறைவனைத் தலைவனாகவும் உயிர்களாகிய தம்மைத் தலைவியாகவும் கற்பனை செய்துகொண்டு பாடும் முறையாக மாறிவிட்டது. தலைவனின் பிரிவாற்றாத தலைவி தன் துயரத்தினைத் தலைவனிடம் கூறுமாறு வண்டு முதலானவற்றை விளித்துக் கூறுவது போல் அமைந்த அகத்துறைப் பாடல்களைத் திருமுறைகளிற் காணலாம்.

யாப்பு

திருமுறையில் ஆசிரியம் வெண்பா என்னும் இயற்றமிழ்ப் பாக்களே இடம் பெற்றுள்ளன; கலிப்பா, வஞ்சிப்பா இடம்பெற வில்லை. தரவு கொச்சகம் வந்துள்ளதாக நச்சினார்க்கினியர் கூறுகிறார். ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்புபவர்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்ட ஞானசம்பந்தர் பாடல்களெல்லாம் இசைத்தமிழ்ப் பாடல்களாகவே கருதப்படுகின்றன. இப்பாடல்கள் பண்முறையில் பாடப்படுவதால் இவற்றைப் பண்ணத்தி என்று வழங்கலாம்.

''பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே''

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் உரையுள் **இளம்பூரணர்** பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார்.[24] அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன என்று கூறி,

''அடிநிமிர் கிளவி ஈரா றாகும்
அடியிகந்து வரினும் கடிவரை யின்றே''[25]

என்னும் நூற்பாவுரையில் ''பன்னிரண்டாவன ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடும் தாழிசை துறை விருத்தம் என்னும் மூன்றினையும் வைத்து உறழப் பன்னிரண்டாம். அவை ஆசிரியத் தாழிசை வஞ்சித்தாழிசை வெண்டாழிசை கலித்தாழிசை எனவும், ஆசிரியத்துறை வஞ்சித் துறை வெண்துறை கலித்துறை எனவும், ஆசிரிய விருத்தம் வஞ்சி விருத்தம் வெளிவிருத்தம் கலிவிருத்தம் எனவும் வரும் என்பார்.

இவையெல்லாம் திருமுறைப் பாடல்களில் வந்துள்ளன. பிற்காலத்தார் இவற்றைப் பாவினம் என்பர். ஞானசம்பந்தர் பாடலில் வந்துள்ள இருக்குக் குறள் என்னும் பாடல் வகையைப் பிற்காலத்தார் வஞ்சித்துறை என்பர்.

சித்திரகவி

திருஞானசம்பந்தர் பாடலில் மிறைக்கவி என்னும் சித்திரகவி கொஞ்சம் மிகுதியாகவே உள்ளன. மொழிமாற்று, மாலைமாற்று வழிமொழி, மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக் குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடிமேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு முடுகியலாகிய திருவிராகம் (அராகம் என்றும் வழங்கும்) சக்கரமாற்று, கோமுத்திரி என்ற பாடல் வகைகளைப் பாடியுள்ளார். பதினோராந் திருமுறையில் எழுகூற்றிருக்கை வந்துள்ளது. அவர் தாண்டகம் என்னும் பாடலைப் பாடவில்லை. ஆனால் அவர் காலத்தில் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் தாண்டகத்தை மிகுதியாகப் பாடித் தாண்டக வேந்து என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

திருவாசக யாப்பு

திருவாசகத்தின் தொடக்கத்தில் கலிவெண்பா இடம் பெற்றுள்ளது. ஆசிரியப்பா ஆசிரிய விருத்த வகை கலித்தாழிசை கலித்துறை கலிவிருத்தம் கட்டளைக் கலித்துறை கொச்சகக் கலி நேரிசை வெண்பா முதலியன இடம்பெற்றுள்ளன. திருச்சாழல் திருவுந்தி முதலிய நாடகப் பாடல்களும் திருப்பொன்னூசல் முதலிய இசைப் பாடல்களும் திருவாசகத்தில் உள்ளன.

திருமூலர் யாப்பு

திருமூலர் யாப்பு ஒரே வகையானது. ஈரசைச்சீர் மிக்கு வரச் சிறுபான்மை முச்சீரும் வர நாற்சீர் கொண்ட அடி நான்கினைப் பெற்று நடக்கும். ஒவ்வொரு அடியிலும் பன்னிரெண்டெழுத்தும், பதினேரெழுத்தும் வரும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அவர் பாட்டில் வரும் தளைகளாம்.

சிறப்புத் தன்மைகள்

திருமுறைப் பாடல்கள் மூன்றும் நூற்றுண்டிலிருந்து சேக்கிழார் காலம் வரையில் வாழ்ந்த பல அறிஞரால் பாடப் பெற்றுள்ளன. அவர்தம் தன்மை இடத்தாலும் காலத்தாலும் வேறுபடுமாதலால் ஒவ்வொருவருடைய பாட்டு ஒவ்வொரு விதமாக அமைந்துள்ளது. ஞானசம்பந்தர் பாடல்களில் வேதம், ஆறங்கம், வேத வேள்வி முதலானவற்றின் சிறப்பைக் காண முடிகிறது.

திருநாவுக்கரசர்

"கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
நோலும் பூண்டு துயரமுற் றென்பயன்"

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமும் குலமுங்கொண் டென்பயன்"

என்று வைதிகர் நெறியைப் பயனில்லை என்று கூறுகிறுர்.

திருமந்திரத்தில் ஆகமக் கூறுகளாகிய சரியை கிரியை யோகம், ஞானம் என்னும் பகுதிகளும் பலவகை மந்திரங்களும் இடம் பெற்றுள்ளன.

திருவாசகத்தில் பத்திச்சுவையொன்றே சிறப்பாய் விளங்கு கின்றது.

முடிப்புரை

திருமுறையைப் பலநிலைகளில் நின்று சிறிது சிறிது சிந்தித்தோம். திருமுறை என்பது சைவப் பெருமக்களின் அறிவுக் கருவூலமாய் விளங்குகின்றது. அக் கருவூலத்தில் அடங்கியவை விலையற்ற அழி வற்ற உண்மைப் பொருளாகும். அவை நமக்கு அறிவினையும் பேரின்பத்தையும் தருகின்றன.

குறிப்புகள்

1. பிங்கல நிகண்டு, 367
2. திருமந்திரம், 1067
3. திருமந்திரம், 1046
4. திருமந்திரம், 1047
5. திருமந்திரம், 1067
6. சூடாமணி நிகண்டு, நகரவெதுகை, 36
7. ,, , நகர வெதுகை, 4
8. ஞானசம்பந்தர், திருவீழிமிழலை, பதிகம் எண் 11, 2
9. திருவெம்பாவை, 18
10. திருநாவுக்கரசர், 5, 221; 5, 304; 5, 431; 5, 481
11. ,, , 6, 938
12. பெரியபுராணம், தடுத்தாட். 196
13. சூளாமணி, கல்யாண. 184
14. காரைக்கால் அம்மையார், அற்புதத் திருவந்தாதி, 48
15. ஞானசம்பந்தர், திருப்புறவம், பதிகம் எண் 97, 4
16. ,, , திருச்சண்பை நகரி, பதிகம் எண் 66, 1

17. ஞானசம்பந்தர், 3, 78.4.
18. ,, 3, 71, 4.
19. ,, 1, 73, 8.
20. திருநாவுக்கரசர், 4, 748
21. கபில தேவநாயனுர், பதினேராம் திருமுறை, 100
22. சுந்தரர் 7, 62, 8
23. பெரியபுராணம், 28 திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், 79
24. தொல்காப்பியம், செய்யுளியல், இளம், 482
25. தொல்காப்பியம், செய்யுளியல் இளம், 484
26. திருநாவுக்கரசர் 5, 393; 5, 604.

4. கந்தகமும் சந்தனமும்

டாக்டர் மா. செல்வராசன்
தமிழ் விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600 005

பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் யார்? பேசுகிருர் அவரே, கேளுங்கள் :

> "ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்றச் சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். அத்தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினுல் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.
>
> இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதினுல் நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன், சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இதுபோதும் என்றே கருதுகிறேன்".

எனவே பெரியார் ஒரு சமுதாயப் புரட்சியாளர் என்றும் தமிழ்ச் சமுதாயத்தில் இந்தப் புரட்சியைச் செய்ய யாரும் இதுவரை முன் வரவில்லை என்றும் பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு அவர் பணியாற்றியவர் என்றும் நாம் அறியலாம்.

தந்தை பெரியார் இதுவரை தமிழ்ச் சமுதாயம் காணுத தனித் தலைவர். அதிகார வேட்கைக்கு அலையாதவர், அவருக்கு அரசியலை விடச் சமுதாயத்திலே அக்கறை மிகுதி. காரிருள் சமுதாயத்தில் நல்ல கதிரவன். மடமையிருள் கிழித்த மாபெரும் பகுத்தறிவாளர். மனிதனை மனிதனுக்கிய பெரும் பேராளர்.

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இந்தச் சமுதாயத்தில் இருந்த இழிவுகள் ஒன்ரு இரண்டா? சாதிக் கொடுமை; சமய மடமை; தீண்டாமைப் பேய்; கடவுள் பேரால் கயமை; கண்மூடித் தனம்; பெண்ணடிமை, முட நம்பிக்கை, ஏற்றத்தாழ்வு எனப் பெரு கிக் கிடந்தன.

கண்டும் காணுக் கண்ணினராய், கேட்டும் கேளாக் காதின ராய்க் காலத்தை ஓட்டி ஞாலத்தைக் களித்த தந்நலத் தலைவர்கள் எத்தனையோ பேர். ஆனுல் ஈரோடு வெ. இராமசாமி வேரோடு அதிலே விழுந்தார். அந்த இதயக் குமுறலிலே உதயமான எண்ணங்கள்; எழுந்த போராட்டங்கள் இன்று தமிழ்ச் சமுதாயத்தை எவ்வளவோ உயர்த்தியிருக்கின்றன.

சமுதாயத் தொண்டு செய்வோர் சந்திக்க வேண்டியவை சந்தனமும் தென்றலும் அல்ல. புயல், பூகம்பம், நெருப் பாறு, நீர்க்குமுறல், காடு, மேடு, கண் மயக்கும் பள்ளம். இவற்றை யெல்லாம் பூவாய்ப் புதுமணமாய்ப் பொதிகைமலைத் தென்றலாய்ப் பூரித்து மகிழ்வோரே பொது வாழ்விற்குப் பொருத்தமானேர். இருபத்தொரு முறை சிறையேகினுர் ஈ.வெ.ரா. ஏன்? இந்த நாட்டை ஆளலாம் என்ரு? இல்லை, மக்களை மாற்றலாம் என்றன்ரே!

ஆயிரம் உண்டிங்குச் சாதி என்ருர் பாரதியார். ஆனுல் சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்ருனே என்ருர் பாரதிதாசன். அந்தச் சாதியின் ஆர்ப்பாட்டத்தை அடக்கியவர் தந்தை பெரியார். இந்தியா முழுமையும் பெயருக்குப் பின்னுல் சாதிப் பட்டத்தைப் போடாத ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்! இந்தத் தகுதி எப்படி வந்தது? பெரியாரின் பணியால் நாம் பெற்ற பெருமை இது!

பெரியார் ஒரு சமநெறியாளரே தவிர சமரசர் அல்லர். சமுதாயத்தில் அடிப்படை மாற்றத்திற்கே சங்கொலி முழங்கினுர். எனவே சமய ஒழிப்பு, கடவுள் ஒழிப்பு, சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு எனச் சமுதாய நோய்களை அடியோடு அகற்றப் பாடு பட்டார். அவர் நோகாமல் மருந்து கொடுத்தவர் அல்லர்; நோயாளி பிழைக்க வேண்டும்; நோய் தீர வேண்டும் என்ற நோக்கோடு அறுவை மருத்துவம் செய்தவர்; நோக்காட்டைப் பற்றிக் கவலையுரு தவர்.

தன்மான இயக்கம் கண்டார். ‘எந்தக் காரியமானுலும் காரண காரியமறிந்து செய்; சரியா, தப்பா என்பதை அந்தக் காரண காரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டுவிடு; எந்த நெருக்கடி யிலும் அதன் முடிவுக்கு மரியாதை கொடு’ எனப் பெரியார் தன்மான இயக்கத்தின் கோட்பாட்டை விளக்கினுர்.

மக்கள் மடமையிலே கனிகொய்ய விரும்புவோர் தலைவர்களாக உலா வரும் தரணி இது. பெரியாரோ மக்களுக்கு அறிவையும் ஆராய்ச்சியையும் ஊட்டினுர். சிந்தனை ஊற்றைத் திறந்து விடுவதே

சிறந்த தொண்டு. அந்தத் தொண்டைத் தம் வாழ்நாள் முழுதும் செய்து வந்தார்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒரு மரம் இருந்தது. அந்த மரக்கிளையிலிருந்து ஒரு மந்தி கீழே விழுந்து இறந்து விட்டது. அனுமாரை ஆண்டவனாகக் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் கோயில் கட்டத் தொடங்கி விட்டார். ஆனால் நீதிமன்றத்தின் மூலம் தடையெழுப்பி அதனை நிறுத்தியவர் பெரியார். கோவில் குளம் திருவிழா தெருவுலா எல்லாம் மடமை இழிவு என்பார். எனவே பெரியாரின் கடவுள் மறுப்பு மிகக் கடுமையாகத் தெரிந்தது. 'நம் இழிவு மடமை முட்டாள்தனம் இவை நீங்கி நாமும் மற்ற உலக மக்களைப் போன்று இழிவற்று அறிவு பெற்றுச் சமத்துவ மாக வாழ வேண்டாமா?' என்றே அவர் கேட்டு வந்தார்.

எண்ணியதைச் சொன்னார்; சொன்னதைச் செய்தார் என்பதே அவர் இயல்பு. கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார் காந்தியத்தால்! உடனே தமக்குச் சொந்தமான ஐநூறு தென்னை மரங்களை வெட்டி எறிந்தார். எல்லோரும் சமம் என்றார். கேரளத்தில் வைக்கம் என்னும் ஊரில் கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்த்தப் பட்டோர் நடக்கத் தடை இருந்தது. அதைத் தகர்ப்பதற்காக அங்கே சென்று போராடினார்; சிறை சென்றார்; பிறகு வென்றார் என்பது வரலாறு.

பொதுவுடைமையே நமக்கு ஏற்ற பொருத்தமான மருந்து என அந்நாளில் அதைத் தீவிரமாகப் பரப்பினர். பெண்ணடிமை தீரப் பெரும்பணி ஆற்றினர். ஒன்பது வயதில் விதவையாகிவிட்ட தம் தங்கை மகளுக்கு மறுமணம் செய்து வழிகாட்டினர். குழந்தை மணம், தேவதாசி முறை, ஆணுக்குப் பெண் தாழ்வு முதலிய கொடுமைகளை எதிர்த்துப் பெண்ணுரிமைக்குப் போராடினர்.

காலங்காலமாகக் கடைசியில் தள்ளப்பட்ட தமிழனுக்குச் சமுதாயத்தில் தனி ஒரு மரியாதை தந்தை பெரியாரால்தான் கிடைத்தது. வருணசிரமத்தில் வடித்தெடுத்த சாதி காரணமாக மேலோர் கீழோர் என்ற வகுப்பு வேற்றுமைக்கு இப்போது இடமில்லை.

இருநூறு ஆண்டுகளில் செய்ய வேண்டிய செயல்களை இருபதே ஆண்டுகளில் பெரியார் செய்து முடித்திருக்கிறார் எனப் பாராட்டும் அறிஞர் அண்ணா மேலும் மதிப்பிடுகிறார்.

> "தங்கள் பணி மகத்தான விழிப்புணர்ச்சியைச் சமுதாயத்தில் கொடுத்திருக்கிறது. புதியதோர் பாதை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. நான் அறிந்தவரையில் இத்தனை மகத்தான வெற்றி வேறு எந்தச் சமூகச் சீர்திருத்தவாதிக்கும் கிடைத்த தில்லை."

சாதி, சமயம், கடவுள், ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நெறி தழைக்கும் பகுத்தறிவுச் சமுதாயத்தைக் காணப் பெரியார் பாடு பட்டார். அறிஞர் அண்ணு குறிப்பிட்டதுபோல் அது மகத்தான பணிதான்! அந்தப் பணியில் பெரியார் ஒரு பெரும் புரட்சியாள ராகவே விளங்குகிருர்.

பேரறிஞர் அண்ணு

நாடகப் படைப்பாளர், புதின ஆசிரியர், சிறுகதைச் செல்வர், கட்டுரையாளர், கடித இலக்கியர், திரைப்பட முன்னேடி, இத ழாளர், சொற்பொழிவாளர், சமூகச் சிந்தனையாளர், பகுத்தறிவாளர், இயக்க ஆக்கர், சட்டமன்ற வல்லார், அரசியல் சான்ருேர், மாநில முதல்வர், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மக்கள் தலைவர் நெஞ்சுடைய மனிதர். இவ்வளவு ஆற்றலும் பண்பும் அணிசெய்யப் பல துறைகளிலும் முகடு எய்தி முத்திரை பதித்த இவர் அண்ணு என்று மக்களால் அன்பொழுக அழைக்கப்பெற்ருர். அறிஞர் அண்ணு, பின்னர், பேரறிஞர் அண்ணு என்றும் போற்றப் பெற்ருர். ''எங்கெல்லாம் தமிழ் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் அண்ணு இருப் பார்'' என்று ஓர் ஆங்கில ஏடு எதிர்காலத்தையும் இருந்தகாலத்தே அறிந்துரைத்தது.

சென்னையை அடுத்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த காஞ்சிபுரத்தில் 1909, செப்டம்பர் 15ஆம் நாள் பிறந்தார். தந்தை நடராசன்; தாய் பங்காரு அம்மாள். நெசவுத் தொழில் புரிந்த நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த இவர், சிற்றன்னை இராசாமணி அம்மையாரால் போற்றி வளர்க்கப் பெற்ருர். காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்ருர். பொருளியலில் எம்.ஏ., பட்டம் பெற்ருர் (1934). இவர் ஆற்றிய சமுதாய, தமிழ்த்தொண்டுக்காகவும், கலைத்திறன், எழுத்தாற்றல் முதலான உயர்வுக்காகவும் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் மதிப்புறு டாக்டர் பட்டம் (டி. லட்.) வழங்கி மகிழ்ந்தது (1968). இவருடைய இலக்கியப் புலமைக்காக அமெரிக்க நாட்டு யேல் பல்கலைக் கழகம் சிறப்பு விருந்தினராக அழைத்து மாண்புமிகு அறிஞராக ஏற்றுக் கொண்டது (1968). படிக்கும் போதே (1930) திருமணம் செய்து கொண்டார். மனைவி இராணி அம்மையார். இவருக்கு நான்கு ஆண்மக்கள் உண்டு.

சமுதாயச் சீர்திருத்தத்தில் பேரார்வம் கொண்ட அண்ணு, தந்தை பெரியார் ஈ. வெ. ரா. வைத் தலைவராக ஏற்றுப் பொது வாழ்க்கையில் ஈடுபட்டார். நீதிக்கட்சி, திராவிடர் கழகம் ஆகிய வற்றில் நெடும் பணியாற்றியபின், 1949 செப்டம்பர் 17ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல், சமுதாய, கலை இயக்கத்தைக் கண்டு கடும்பணி கொண்டார். ஏழையரின் இதய

நாதமாய் விளங்கியது அவ்வியக்கம். புறக்கணிக்கப்பட்ட மக்களின் போர்க்குரல் ஆயிற்று. எனவே அதன்பின் அணி திரண்டது. குறுகிய காலத்தில் (1967) தமிழக ஆட்சியைக் கைப் பற்றிய ஒரே எதிர்க்கட்சியாக இந்தியாவில் திகழ்ந்தது. தமிழக மக்களின் நெஞ்சிலே தவழ்ந்த இவர் தமது வாழ்க்கையில் இறுதி வரை மிக எளிமையோடும், பண்போடும், இளகிய இதயத்தோடும் வாழ்ந்தார். இந்த மக்கள் தலைவர் இளமையில் சிறிதுகாலம் நகராட்சி ஒன்றில் எழுத்தராகவும், பள்ளியில் ஆசிரியராகவும் இருந்தவர் என்பது குறிக்கத் தக்கது. இந்தி எதிர்ப்பு, மும்முனைப் போராட்டம், கறுப்புக்கொடிப் போராட்டம், சட்ட எரிப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு மறியல் முதலான அரசியல், சமுதாயப் போராட்டங்களை நடத்திப் பலமுறை சிறை சென்றார்.

கலை, வாழ்க்கைக்காக என்னும் கருத்தினர் அண்ணா. மாலை நேர நிலாவுக்கும் மையல் பொங்கும் தென்றலுக்கும் கலையை மகுடியாக்க மறுத்தவர். கலை, அவருக்கு அழகுக் கலன் அன்று; ஓர் ஆக்கக் கலன். அறியாமையால் சீரழிந்து குருட்டு நம்பிக்கைகளைக் கொள் கைகளாகக் கொண்டு அடிமைப் பட்டிருந்த சமுதாயத்தை அடியோடு மாற்றிப் பொதுவாழ்க்கையில் புகுந்த அண்ணா தமது இலக்கியப் பண்ணினை அதற்காகவே எழுப்பினார். கொள்கையை மக்களிடம் கொண்டு சென்ற தூதனாக இலக்கியம் இவருக்குத் தொண்டாற்றியது. தாழ்ந்து கிடந்த சமுதாயத்தில் வீழ்ந்து கிடந் தோர்க்கு விழிப்பூட்டி, எழுச்சி கொள்ளச் செய்த அறிவுக்கனல் இவருடைய எழுத்து. Moscow Mob Parade என்ற ஆங்கிலக் கட்டுரையைக் கல்லூரி மாணவனாக இருந்தபோது எழுதிய இவர், உண்மையில் ஒரு பொதுவுடைமையாளர். தென்னாட்டின் பொது வுடைமை இயக்கம் தி. மு. க. எனத் தீர்ப்புரை தந்தார்.

இதுவரை நூற்றைம்பது தலைப்புகளில் இவ்வருடைய எழுத்துகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. அவை நாடகம், புதினம், சிறுகதை, கட்டுரை, கடிதம், சொற்பொழிவு, வரலாறு எனப் பலதிறத்தன. இன்னும் நூல் வடிவம் பெறா எழுத்தோவியங்கள் பல. இவர் கவிதைகளும் எழுதியுள்ளார் என்பது குறிக்கத் தக்கது. நாடகங்கள் எழுதியதோடு மேடையேறி நடிக்கவும் செய்தார். அழகும் இனிமை யும் அணியாகிச் செறிவும் தெளிவும் இயல்பாகி இவரது நடை படிப்பாரை மயங்க வைத்தது. இந்த நூற்றாண்டுத் தமிழ் இலக் கியத்தில் இவரது நடை பலராலும் பின்பற்றத் தகுந்த தனிப் பாங்குடன் மிளிர்ந்தது எளிய மக்களும் (வீதியோரத்திலும் குடிசையிலும் விழுந்து கிடந்தோர்) இலக்கிய ஆர்வம் பெறுவதற்கு இவரது எழுத்துகள் காரணமாயின. உவமையும் உருவகமும் புதிது புதிதாக இவரது எழுத்தில் உருவாகிப் பொலிந்தன. இவரால் தமிழ் மொழி பெற்ற வளம் மிகப் பெரிது. 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்', 'எங்கிருந்தாலும் வாழ்க', 'கடமை, கண்ணியம் கட்டுப்பாடு', 'கனிவு, தெளிவு, துணிவு', 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு', 'மறப்போம் மன்னிப்போம்', '**சாலை**

யோரத்தில் வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள், வேந்தே அதுதான் காலக்குறி' முதலான இவரது மொழிகள் மூப்பற்றவை; மக்கள் நெஞ்சில் மணப்பவை. இலக்கியத்தில் இவ்வாறு அமர முத்திரை பொறித்துப் பேனுவாலும் மக்களிடம் பேசியவர் இந்தப் பேரறிஞர். இவர் எழுதிய ***'ஆரிய மாயை'*** காங்கிரசு ஆட்சியாளரால் தடை செய்யப் பெற்றது. அபராதம் விதிக்கப் பெற்ருர்; சிறைத்தண்டனையும் ஏற்ருர். இவரது புரட்சி எண்ணத்துக்கும் எழுத்துக்கும், இதுவே சான்று. உலகெல்லாம் அரங்கேறி உலா வரவேண்டும் இன்பத்தமிழ் என உள்ளங் கொண்டார். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழகத்தில் உலகோர் கண்டு வியக்கும் வண்ணம் நடத்திஞர். அப்போது திருக்குறள் ஆராய்ச்சிக்கெனத் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மூன்றிலும், 9 இலட்சம் உரூபா நிதி அளித்துத் துறைகள் நிறுவிஞர் ஆங்கிலத்தில் அறிஞராக இருந்தும் தமிழுக்கே அரியணை தந்தார். தமிழ் உலாவும் தமிழர் மண்ணுக்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டியதும், சீர்திருத்தத் திருமணத்துக்குச் சட்ட இசைவு தந்ததும், இந்தி மொழியால் தமிழுக்கு நேரவிருந்த இருளை மாற்றியதும் வாழ்நாள் வெற்றியாகக் கருதி மகிழ்ந்தார்.

சொற்பொழிவில் இந்நூற்ருண்டில் எவர்க்கும் இல்லாத தனித்த இடம் இவருக்கே சொந்தம். அது ஒரு கலையாக இவரிடம் அழகுற்றது. பேச்சிலும் எழுத்திலும் தமக்குரிய பாணி ஒன்றைப் பேணி வளர்த்தார். எனவே பேச்சிலும் எழுத்திலும் இவரைப் பின்பற்றும் பேரணி ஒன்றே உருவாயிற்று. இவரது பேச்சினைக் கேட்பதற்கு மக்கள் திரண்ட காட்சி மறத்தற்கு இயலாது. இவர் ஒருவர் பேச்சையே இந்நாட்டில் காசு கொடுத்தும் காத்துக்கிடந்தும் கேட்டுக் களித்தனர் மக்கள். நாத இசை கொட்டுகின்ற நா என நயந்துரைத்தார் கலைஞர். இவர் இன்குரல் ஒலிக்காத சிற்றூரே இத்தமிழ்நாட்டில் இல்லை எனலாம். உரையாற்றும் திறனேடு உரையாடும் வளமும் பெற்றவர். வார்த்தைகள் அருவியாகக் கொட்டிஞலும் வாதத்திறன் பொங்கி வழியும். சொற்கள் துளைத் தெடுக்கும் வேல்கள்.

ஓயாது படிக்கும் இயல்புள்ள இவரை வால்டேர், ரூசோ, பெர்னுட்சா, இங்கர்சால், இப்சன், பர்க், காரல்மார்க்சு, எம்.என். இராய் ஆகிய பிறநாட்டு அறிஞர்களின் எழுத்துகள் கவர்ந்தன. இவர் பத்திரிகைத் தமிழுக்குச் செய்துள்ள தொண்டும் பெரிது. நல்ல தமிழில் மட்டுமல்ல. அழகிய தமிழிலும் ஏடுகளில் எழுதுவதற்கு இவரது வரவே காரணம். இவர் எழுத்தைப் பின்பற்றிய ஏடுகள் பல. மக்களை (இளைஞர்களை)த் தட்டி எழுப்பித் தம் பின் நடக்க வைக்கும் வலிமை வாய்ந்த ஆற்றலாகத் தமிழ்மொழி இவருக்குப் பயன் பட்டது. இவர் ஆசிரியராக இருந்து நடத்திய திராவிடநாடு (*1942*), காஞ்சி (*1964*), இரண்டும் வார இதழ். மாலைமணி (*1949*), நம்நாடு இரண்டும் நாளிதழ். குடியரசு, விடுதலை இரண்டு இதழ்களிலும் துணையாசிரியராக இருந்தார். ஆங்கிலத்தில்

திறம்படப் பேசவும் எழுதவும் வல்லவர். இவரது ஆங்கிலப் பேச்சுகள் ஆறு நூல்களாக வந்துள்ளன. Justice என்ற ஆங்கில இதழின் துணையாசிரியராக இருந்தார். The National Call (1951), Home Land (1957), Home Rule (1966), என்ற ஆங்கில வார இதழ்களைத் தாமே ஆசிரியராக இருந்து நடாத்தினர். இவரது புனைபெயர்கள் பரதன், சௌமியன், வீரன், ஒற்றன், சி.என்.ஏ., ஆசிய ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

தமிழில் அறுபது ஆண்டுகளே உள்ளன. அறுபது ஆண்டுகள் வாழ்ந்தவர் ஆயுள் முழுமையுற்றது என்பது மரபு. அண்ணு அறுபது கண்டார்.

தமிழரின் அரசியல் சமுதாயக் கண்களைத் திறந்து வைத்துப் பார்வையூட்டிய இந்த உதயசூரியன், எண்ணற்றோர் இதயங் கலங்க 1969 பிப்பிரவரி 3ஆம் நாள் நள்ளிரவில் மறைந்தது.

2

நூல் அடைவு

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை

அவர்களின்

நூல் - கட்டுரை - பதிப்பு

அடைவு

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை
அவர்களின்
நூல் – கட்டுரை - பதிப்பு

தொகுப்பாசிரியர் :
மு. சண்முகம் பிள்ளை
வை. சரோஜினி

முன்னுரை

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தொடக்கமாகத் தமிழ் ஆராய்ச்சிக்குக் கால்கோள்செய்து வித்திட்டவர் பற்பலர். அவர்கள் எல்லாரும் சிற்சில பொருள்களைக்குறித்து அந்நாளில் தமக்குக் கிட்டிய ஒருசில ஆதாரங்களை வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்தார்கள். அவ்வாறன்றித் தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம், வரலாறு முதலிய பல்வேறு துறைகளிலும் நுழைந்து, மிக நுணுக்கமாய் ஆராய்ந்து ஆராய்ச்சி நெறிமுறைகளை வழிவகுத்துக் காட்டியவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை. அவர்களுடைய ஆராய்ச்சியின் முதிர்ந்த சிந்தனைகளைத் 'திராவிட மொழிகளில் ஆராய்ச்சி' என்னும் நூலில் காணலாம்.

ஆங்கிலம் கற்றுப் பட்டம் பெற்றுத் தமிழன்னைக்கு அருங் கலன்கள் செய்து பூட்டிய அறிஞர் பெருந்தகையர் பலராவர். அவர்களுள் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், இராஜமய்யர் என்று பெயர் வழங்கிய சுப்பிரமணிய ஐயர், பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை, எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை. தஞ்சைச் சீநிவாசப்பிள்ளை, பி. டி. சீநிவாஸஐயங்கார், கே. என். சிவராஜ பிள்ளை, முதலியோர் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்கள் எல்லாரும் ஆங்கிலம் கற்று மேனாட்டுக் கலைப்பண்பில் திளைத்துத் தம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு ஒவ்வொரு வகையில் தொண்டு புரிந்தவர் ஆவர். இவர்கள் எல்லாரும் தமிழாராய்ச்சிக்குக் கால்கோள் செய்து வித்திட்டு நீர்பாய்ச்சி வளர்த்தவர்கள் ஆவர்.

தமிழிலுள்ள பல்வேறு துறைகளும் விளக்கமுற விஞ்ஞான நெறிமுறையில் தக்க அகச்சான்று புறச்சான்றுகளைக் கொண்டு நன்குவரையறுத்து ஆராய்ச்சி வழிமுறை இது எனத் துலங்கச் செய்த பெருமை பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுக்கு உண்டு. பல்வேறு நூல்களின் காலங்கள் அவர்களால் வரையறுக்கப்பட்டுள்ளன. தமிழ் நூல்கள் பல சுவடிகளிலிருந்து எடுத்து அவர்களால் அச்சிடப்பெற்றன. எல்லாவற்றினும் மேலாகச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியின் (Tamil Lexicon) பதிப்பாசிரியராய் விளங்கி அதனை அச்சிட்டு முற்றுவித்துத் தமிழுலகுக்கு வழங்கிய அருமைப்பாடு வியந்து போற்றத்தக்க ஒன்றாகும். சென்னைப் பல்கலைக் கழகம், கேரளப்

பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கிய நாளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை அவர்கள் அவ்வப் போது வெளிப்படுத்தியும் வந்துள்ளார்கள்.

ஆங்கிலம் கற்றுப் பட்டதாரியான பேராசிரியர் பிள்ளையவர்கள் சட்டமும் கற்று வழக்கறிஞர் விருதும் பெற்றவர். தமிழின்பால் ஈடுபாடு கொண்டு தன் முயற்சியினாலேயே பெரும்புலமை எய்திய வர். வடமொழி, மலையாளம், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய மொழி களிலும் பயிற்சி பெற்றவர்.

பிள்ளையவர்களின் குடும்பம் வழிவழித்தமிழைப் போற்றிக் கற்ற பெருங்குடும்பமாகும். இவர்களுடைய பாட்டனார் சங்கரலிங்கம் பிள்ளை கவிஞராயிருந்தார். இவர் பாம்பன் குமரகுருதாச சுவாமி களின் நண்பர். குறுக்குத்துறையில் வீற்றிருந்தருளும் திருவுரு மாமலை முருகப்பெருமான் மீது பற்பல துதிகவிகளையும் தோத்திர மாலைகளையும் பாடியுள்ளார். 'தாம்பிரவருணிப் புராணம் என்னும் பொருநை மாதாவின் புராணம்' இவர் பாடியதாகும். இவர்க ளுடைய தந்தையார் சரவணப் பெருமாள் பிள்ளையும் சிவபூசைச் செல்வராய்ச் சைவ சாத்திர தோத்திரங்களில் ஈடுபட்டுப் பயின்ற வராவர். இத்தகு தமிழ்க்குடும்பத்தில் வந்த பேராசிரியர் பிள்ளை யவர்கள் தமிழில் ஈடுபாடு கொண்டு கற்றமை இயல்பேயாகும். பேராசிரியர் பிள்ளையவர்கள் தாம் தமிழ்க் கல்வி கற்ற முறையும் பத்திரிகைகளுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுத முற்பட்டதும் குறித்து 'அகராதி நினைவுகள்' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள செய்திகள் பின்வருமாறு :

"1926 நவம்பர் இறுதியில் நான் பதிப்பாசிரியர் நியமனம் பெற்றேன். நான் அப்பதவி பெறுவதற்குமுன் திருநெல்வேலியில் வக்கீல் தொழிலில் அமர்ந்திருந்தேன். எனது பொழுதெல்லாம் பெரும்பாலும் தமிழ் நூல்களைக் கற்பதிலும், ஆராய்ச்சி செய் வதிலும், கம்பராமாயண பரிசோதனையிலும் கழிந்தது. எனது தந்தையாரவர்களுடைய வற்புறுத்துதலின்பேரில் சைவசித்தாந்த நூற்பயிற்சி சிறிது பெற்றேன். வீரராகவபுரத்தில் என்னோடு வக்கீல் தொழிலில் இருந்த எம். எஸ். சுப்பையா முதலியார், சக்கரபாணி நம்பியார், ஆதிமூர்த்தியாபிள்ளை, வண்ணார் பேட்டையில் திரு. வேத நாயகம் பிள்ளை, டி. கே. சிதம்பரநாதமுதலியார், எனது பழைய நண்பர் கே. அனந்தராமையங்கார், ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், தமிழ்ப்பாண்டியத்திலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் வல்ல வராய்ப் பிற்காலத்தே திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்வானாக விளங்கிய சிதம்பரராமலிங்கம் பிள்ளை, சி. வீரபாகு பிள்ளை முதலி யோர் என்னோடு தமிழ் பயின்ற நண்பர்கள். எனது கம்பராமா யணப் பயிற்சி ஸ்ரீ வ. வெ. சு. ஐயரவர்களைக் கவர்ந்தது. அவர் களது ஆயுள் இறுதிவரை எனக்கு மிக நெருங்கிய நண்பராய் விட்டார்கள்.

"எனது நட்பு பிராமணர், அல்லாதார் என்ற ஜாதி வேறுபாடு களைக் கடந்தது; வடமொழி தமிழ் என்ற மொழி வேறுபாடுகளைக் கருதாதது. பண்டிதர்கள், ஆங்கிலங்கற்ற தமிழர்கள் என்ற சிறு வரம்புகளை மதியாதது. சைவம், வைஷ்ணவம் முதலிய மதவேறு பாடுகளைக் கனவிலும் நினையாதது. சங்ககாலத் தமிழ், இடைக் காலத்தமிழ், தற்காலத்தமிழ் என்றவற்றில் ஏதேனும் ஒன்றில் அபிமானம் வைத்து அதனையே கற்பது என்ற நியதியைக் கொள்ளா தது. அறிவு வளர்ச்சியும் தமிழுணர்வுப் பெருக்கமும் உண்மை நாட்டமும், நடுநிலையுமே என்னை ஊக்கிவந்தன.

"எனது சொந்த ஊராகிய திருநெல்வேலியில் நான் வக்கீல் தொழிலில் இறங்குவதற்குமுன், எனது மனைவியின் ஊராகிய திருவனந்தபுரத்தில் 1915-ல் அட்வொக்கேட் ஆக இருந்தேன். அப்போது உற்ற நண்பர்களாயிருந்தவர்கள் திரு. கே. என். சிவ ராஜபிள்ளை, தி. இலட்சுமணபிள்ளை, சி. தேசிகவிநாயகம் பிள்ளை, நீதிபதி ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்களது மாப்பிள்ளை கே. ஜி. சங்கர ஐயர் முதலினோர். இங்கிருந்துதான் நான் முதலில் பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கியது.

"திருவனந்தபுரத்திலிருக்கும்பொழுது மலையாளம் சிறிது கற்றுக் கொண்டேன். நானும் திரு. தேசிகவிநாயகம் பிள்ளையும் அதிகாலை யில் எழுந்து வட மொழியிலுள்ள ஸப்த ரூபாவலியை மனப்பாடம் செய்துவந்தோம். லகுசித்தாந்த கௌமுதியை, கோவெல் (Cowell) என்பவர் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பின் உதவிகொண்டு, தமிழில் முழுவதும் மொழி பெயர்த்தேன். இம் மொழி பெயர்ப்பு இன்றும் எனது நூல் நிலையத்தில் உள்ளது. கம்பராமாயணத்தை இங்குள்ள அரண்மனை நூல் நிலையத்திலிருந்து (Palace Library) கிடைத்த மிகப் பழைய ஏட்டுப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்து, பாடபேதங்களைக் குறித்துக் கொண்டு வாசித்து முடித்தேன்.

"இவ்வாறு அச்சுப்பிரதிகளை ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிடுதல் நான் முதன்முறையாகச் செய்யத் தொடங்கியதல்ல. எப். ஏ. (F.A.) வகுப்பு மாணவனாக இருக்கும் காலத்திலேயே கலித்தொகை முழு வதையும் அங்ஙனம் ஒப்பிட்டுப் படித்துள்ளேன். பி. ஏ. (B.A.) யில் தேர்ச்சி பெற்றவுடன் தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம் பூரணர் உரைச் சுவடியைத் திரு. த. கனகசுந்தரம் பிள்ளையிட மிருந்து பெற்று உரை முழுவதும் பிரதிசெய்து வைத்துள்ளேன். 1922-ல் மனோன்மணீயத்தை உரை, அரும்பத அகராதி, அனுபந் தங்களுடன் வெளியிட்டேன். இதில் உதவியவர் திரு. தேசிக விநாயகம் பிள்ளை."

இவ்வாறாக 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் தேதியில் சென்னைக்குச் சென்று பதிப்பாசிரியர் பதவியைப் பிள்ளையவர்கள் ஒப்புக்கொள்ளுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழை எவ்வெவ்வகையில் போற்றி வந்தார் என்பதும், ஆய்வுரை எழுதுத

லிலும் பதிப்புத்துறையிலும் ஈடுபட்டார் என்பதும் நன்கு தெரிய வரும். அகராதித்துறையில் பிள்ளையவர்கள் இடைவிடாது பணி யாற்றிப் பத்தாண்டுகளில் தமிழ்ப்பேரகராதியை (Tamil Lexicon) அச்சிட்டு முற்றுவித்தார். அதன்பின் *1936* முதல் *1946* வரை பத்தாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராய்ச் சிறந்து விளங்கினர். அப்பொழுதும் அகராதியில் விடு பட்டுப்போன சொற்பொருள்களைத் தொகுத்து அனுபந்த அகராதி யினை மூன்று பகுதிகளாக வெளியிட்டார். தமிழ்த்துறையிலிருந்த காலத்தில்தான் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அவர்களால் மிகுதியாய் எழுதப்பட்டன. பதிப்புப் பணிகளும் எப்பொழுதும் நடைபெற்று வந்தன.

தொடக்கநாளில் தாம் எழுதிய கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து 'ஆராய்ச்சியுரைத் தொகுதி' என்னும் பெயரால் ஒரு நூலை அவர்கள் வெளியிட்டார்கள் (*1930*). இந்த நூல் ஒன்றுதவிரத் தாம் எழுதிய கட்டுரைகளை நூல் வடிவமாக்க அவர்கள் பணிபுரிந்த காலத்தில் முயன்றிலர். தமிழ்த்துறைத் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின்னரே *1947* முதற்கொண்டு அவர்கள் எழுதிய ஆய்வுரைகள் பல்வேறு தலைப்புகளில் நூல் - தொகுதிகளாக அமைத்து வெளியிடப்பட்டன.

பிள்ளையவர்களிடம் பேரன்பு கொண்டிருந்த திரு. ப. ராமசாமி என்பார் முதல் தூண்டுகோலிட்டவராவார். இவருடைய முயற்சி யால், 'இலக்கியச் சிந்தனைகள்,' 'தமிழின் மறுமலர்ச்சி' என்னும் இருநூல்கள் வெளியாயின.

பாரிநிலைய அதிபர் திரு. க.அ. செல்லப்பன் அவர்கள் தமிழ்ச்சுடர் மணிகள், இலக்கிய தீபம், சொற்கலை விருந்து, சொற்களின் சரிதம் என்னும் நூல்களை வெளியிட்டுள்ளார். தமிழ்ப்புத்தகாலயம் திரு. கண.முத்தையா அவர்களும் இலக்கிய உதயம், இலக்கியமணிமாலை, கம்பன் காவியம், திராவிட மொழிகளில் ஆராய்ச்சி போன்ற நூல்களை வெளியிட முன்வந்தார். இவர்கள் வழித்தொகுத்து வெளி யிட்டதுபோக நூல் - தொகுப்புக்கள் வாராது எஞ்சியுள்ள கட்டுரை களும் பலவாகும். அவற்றுள் சில 'இலக்கிய விளக்கம்' என்னும் பெயரால் அவர்கள் மறைந்தபின் ஒரு சிறு தொகுதியாய் வெளி வந்தன.

இத் தொகுதிகளில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பெரும் பாலும் அந்தந்த நூற்பெயருக்கு ஏற்புடையனவே எனினும், அவற்றில் இடம்பெற்ற கட்டுரைகளின் சார்பாகப் பின்னர் எழுதப் பெற்றவையும் பலவாயுள்ளன. இவையெல்லாம் உரிய தொகுதி களோடு உரிய இடத்தில் சேர்க்கப்படுவது பொருத்தமாகும்.

சிறுசிறு தொகுதிகளாயிருப்பதால் அவற்றின் உட்பொருள் விளக்கமான அகராதிகள் முதலியன சேர்க்க இடமில்லாமல் போகின்றது. இவற்றைப் பொருள் அடிப்படையில் நான்கைந்து

பெருந்தொகுதிகளாக மாற்றி அமைத்து ஏற்ற பொருட்குறிப்பு அகராதி முதலியவற்றுடன் வெளியிட்டால் கற்பார்க்குப் பய னுடையதாய் அமையும். பேராசிரியர் அவர்களின் கட்டுரைகள் முதலியவற்றை வகைப்படுத்தி அமைத்தால் ஆய்வாளருக்குப் பெரிதும் பயன்படும் என்னும் கருத்தால் இவ்வகை அட்டவணைத் தொகுப்பை ஆக்குதல் நன்று என்று கருதினேம். பேராசிரியரின் திருமகளார் வை. சரோஜினி அவர்களும் இக் கருத்தினை வரவேற்று அட்டவணை ஆக்கத்திற்கு உறுதுணையாயுதவியுள்ளார். எங்கள் இருவருடைய கூட்டு முயற்சியால் இந்த நூல் - கட்டுரை - பதிப்பு நூல் உருவாக்கப் பெற்றுள்ளது.

நூல் வடிவில் தொகுப்பாய் வெளியிடப்பெற்ற ஆய்வுக் கோவைகள் 20. இவ்விருபது தொகுதிகளின் பதிப்பு விவரம் இவ்வட்டவணைத் தொகுப்பில் முதன்முதலில் தரப்பட்டிருக்கிறது. அடுத்துவரும் பெரும்பகுதி ஆராய்ச்சிக் கட்டுரைகள் பற்றியது. எல்லா நூல்களிலும் இடம் பெற்ற கட்டுரைகள் அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் எந்த நூல் தொகுப்பில் எந்தெந்தப் பக்கங்களில் இடம் பெற்றுள்ளது என்னும் விபரங் களும் சுட்டப்பட்டுள்ளன. இவ்வாறு விபரம் குறிக்கப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை 246.

நவீன இலக்கிய வகைகளாகிய சிறுகதை, நாவல் ஆக்கவும் இவர்கள் வல்லவர் என்பதைச் சிறுகதை மஞ்சரி, ராஜி ஆகிய நூல்கள் காட்டவல்லன. சிறுகதை மஞ்சரியில் எட்டுக் கதைகள் உள்ளன.

அவ்வப்போது பிள்ளையவர்கள் பாடிய கவிதைகளும் பல உள. அவையெல்லாம் தனிநூல் வடிவம் பெறவில்லை. கிட்டியவரையில் அவர்கள் பாடிய கவிதைகளின் தலைப்புகள் அகராதியடைவில் தரப்பட்டுள்ளன. 'இலக்கிய உதயம்' என்னும் ஆய்வுத்தொகுதி யில் மேற்கோளாகக் காட்டப் பெற்ற பிறமொழிச் செய்யுட்களின் கருத்தை அழகிய தமிழில் பல்வகைப் பாக்களாயியற்றிச் சேர்த் துள்ளார்கள். இவையெல்லாம் அவர்களுடைய யாப்பியல் புலமை யையும் கவிபாடும் ஆற்றலையும் நமக்கு உணர்த்தவல்லன.

இதுவரையிலும் நூல்வடிவம் பெறாத கட்டுரைகளின் விவரமும் தனிப்படத் தரப்பட்டுள்ளன. கிட்டியவரையில் அவர்கள் எழுதிய மதிப்புரைகள் பதிப்புரைகள் விவரமும், பிறநூல்களுக்கு அளித்த பதிப்புரை, முன்னுரைகளின் விவரமும் தனி அட்டவணையாய்க் குறிக்கப்பட்டுள்ளன. ஆங்கிலக் கட்டுரைகளின் விவரம் தனியாகத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்களின் விபரம் ஒரு தனிச்சேர்க்கையாய் நூல் இறுதியில் காணலாகும்.

இறுதியாகப் பேராசிரியர் நூல்கள்பற்றித் திறனாய்வு செய்த ஆய்வாளர் ஒருவரின் கருத்தைத்தருவது தமிழாராய்ச்சிக்குப் பெரிதும் நலம் விளைக்கும் என நம்புகிறோம். அவர்தம் கூற்று வருமாறு :

''...இளந் தலைமுறையினராவது அவரது நூல்களைச் சரிவரப் படித்து அவரைப் புரிந்து கொள்வது தமிழியல் ஆராய்ச்சிக்கு மேலும் உதவும். அதற்காக நாம் இப்போது சிலவற்றைச் செய்ய வேண்டும். (1) பேராசிரியரின் நூல்களை மீண்டும் பதிப்பிக்க வேண்டும். பலநூல்கள் இப்போது கிடைக்கவில்லை. (2) அவர் பதிப்பித்த நூல்களை மீண்டும் பதிப்பித்து வெளியிட வேண்டும். (3) அவரது கட்டுரைகள் அனைத்தையும் பொருள் வாரியாகத் தலைப்பிட்டு ஒன்று அல்லது இரண்டு தொகுதிகளாக வெளியிட வேண்டும். இத் தொகுதியில் அவரது கட்டுரையில் காணப்படும் கருத்துகளுக்கு விளக்கம், மறுப்பு ஆகியவற்றையும் தேவைப்படும் இடங்களில் பின்னிணைப்பாகத் தரவேண்டும். இவ்வாறு தருவது, 'தமிழில் ஆராய்ச்சியின் வரலாருகவும்' இருந்து செயல்படும். (4) பேராசிரியர் சுட்டிக் காட்டியுள்ள துறைகளில் (பார்க்க : திராவிட மொழிகளில் ஆராய்ச்சி பின்னிணைப்பு) எதிலேனும் இதுவரை ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை என்ருல், அதில் கவனம் செலுத்த வேண்டும். இதைச் செய்யும்போது தமிழின் சிறப்பு மென்மேலும் உயர்வதோடு, பேராசிரியரின் கனவுகளும் நிறைவேறும்'' *

சென்னை
30—6—80

மு. சண்முகம் பிள்ளை
வை. சரோஜினி

---

*டாக்டர் இராம. சுந்தரம், சொல் புதிது சுவைபுதிது, 'வையாபுரிப்பிள்ளையின் ஆய்வுமுறையும் திறனும்', பக், 72, தமிழ் நூலகம், சென்னை, 1978.

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூல் கட்டுரை - பதிப்பு: அடைவு

தொகுதி நூல்கள்

வ. எண்.	நூல் பெயர்	முதற் பதிப்பு	தொகுப்பிற் குப் பயன் படுத்திய பதிப்பு	நூல் - குறியீடு	வெளியீடு
1.	அகராதி நினைவுகள்	1959	1959	அக. நினை	தமிழ்ப் புத்தகாலயம்
2.	ஆராய்ச்சி உரைத்தொகுதி	1930	1930	ஆ. உரை	எஸ். வி. பி.
3.	இலக்கணச் சிந்தனைகள்	1956	1956	இலக்க. சிந்.	பாரி நிலையம்
4.	இலக்கிய உதயம் 1	1950	1954	இ. உத. 1	தமிழ்ப் புத்தகாலயம்
5.	இலக்கிய உதயம் 2	1952	1956	இ. உத. 2	,,
6.	இலக்கியச் சிந்தனை	1956	1956	இ. சிந்.	பாரி நிலையம்
7.	இலக்கிய தீபம்	1952	1952	இ. தீப.	,,
8.	இலக்கிய மணிமாலை	1954	1957	இ. மணி.	தமிழ்ப் புத்தகாலயம்
9.	இலக்கிய விளக்கம்	1958	1965	இ. விள.	,,
10.	கம்பன் காவியம்	1955	1962	க. காவி.	,,
11.	காவிய காலம்	1957	1962	கா. கால.	,,
12.	சொற்கலை விருந்து	1956	1956	சொ. விரு.	பாரி நிலையம்

வ. எண்.	நூல் பெயர்	முதற் பதிப்பு	தொகுப்பிற் குப் பயன் படுத்திய பதிப்பு	நூல் - குறியீடு	வெளியீடு
13.	சொற்களின் சரிதம்	1956	1956	சொ. சரி.	பாரி நிலையம்
14.	தமிழ்ச் சுடர்மணிகள்	1949	1959	த. சுடர்.	,,
15.	தமிழர் பண்பாடு	1949	1963	த. பண்.	தமிழ்ப் புத்தகாலயம்
16.	தமிழின் மறுமலர்ச்சி	1947	1953	த. மறு.	பாரி நிலையம்
17.	திராவிட மொழிகளின் ஆராய்ச்சி (தனி நூல்)	1956	1956	தி. ஆரா.	தமிழ்ப் புத்தகாலயம்
18.	சிறுகதை மஞ்சரி (கதைகள்) - 8	1949	1958	—	தினமணி வெளியீடு
19.	உரைமணி மாலை மாணவர்களுக்கு	1951	1951	உ. மணி	எஸ். வி. பி.
20.	History of Tamil Language and Literature	1956	1956	—	N. C. B. H.

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல்	பக்கம் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
1.	அகநானூறும் காதலும்	71	76	த. பண்.
2.	அகராதி அனுபவங்கள்	12	22	அக. நினை.
3.	அகராதி நினைவுகள்	1	11	அக. நினை.
4.	அண்மை விளி	81	93	இலக்க. சிந்.
5.	அதர்வண வேதம்	21	28	இ. உத. 2
6.	அதியமான் அஞ்சி	125	130	இ. தீப.
7.	அபிதம்ம பிடகம்	252	257	இ. உத. 2.
8.	அவதாரங்களும் தென்னாட்டுத் தொடர்பும்	87	91	அக. நினை.
9.	அழகுத் தெய்வம்	151	160	த. பண்.
10.	ஆசிரியர் நூற்பெயரகராதி	362	368	கா. கால.
11.	ஆதாரமொழித் திட்டம்	51	59	சொ. விரு.
12.	ஆரண்யகங்கள்	49	50	இ. உத. 2.
13.	இரவிக்குட்டிப்பிள்ளை போர்	15	27	இ. விள.
14.	இராகவையங்கார், மு.	390	398	த. சுடர்.
15.	இராம காதை (பால காண்டப் பதிப்பு விழாத் தலைமை உரை)	80	103	க. காவி.
16.	இராம சரிதமும் தமிழ்நாடும்	77	83	த. பண்.
17.	இராமலிங்க சுவாமிகள்	214	222	த. சுடர்.
18.	இராமாயணப் பதிப்பு முயற்சிகள்	104	111	க. காவி.
19.	இராமாயணம்	135	141	இ. உத. 2.
20.	இருவகை இலக்கியம்	1	3	இ. தீப.
21.	இலக்கிய ஆராய்ச்சி அனுபந்தம் 2	——		தி. ஆரா.
22.	இலக்கியத்தில் மொழிவழக்கு	161	169	சொ. விரு.
23.	இலக்கியத்தின் பயன்	18	21	இ. சிந்.
24.	இலக்கியத்தின் முதல் தோற்றம்	21	33	இ. சிந்.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
25.	இலக்கிய மரபுகள்	95 - 106	த. பண்.
26.	இலக்கியமாவது யாது	1 - 18	இ. சிந்.
27.	இலக்கியமும் சமூகமும்	70 - 76	இ. சிந்.
28.	இலக்குமணபிள்ளை இசைத் தமிழ்ச் செல்வர்	384 - 389	த. சுடர்.
29.	இலக்குமணன்	115 - 125	த. பண்.
30.	உத்தம சகோதரன்	107 - 114	த. பண்.
31.	உபநிஷதங்கள்	50 - 60	இ. உத. 2.
32.	உபபுராணங்கள்	168 - 170	இ. உத. 2.
33.	உறுப்புச் செய்யுள்	94 - 99	இலக்க. சிந்.
34.	எகிப்து	9 - 27	இ. உத. 1.
35.	எஜுர் வேதம்	37 - 45	இ. உத, 2.
36.	கண்வட்டம்	18 - 19	சொ. சரி.
37,	கதைப்பாட்டு	90 - 94	த. பண்.
38.	கந்தருவர்	66 - 75	சொ. சரி.
39.	கபிலர்	55 - 58	த. சுடர்.
40.	கம்பர், 1. காலம்	127 - 149	த. சுடர்.
41.	கம்பர், 2. திருநாள்	150 - 170	த. சுடர்.
42.	கம்பராமாயணப் பதிப்பு விவரம்	170 - 175	க. காவி.
43.	கம்பராமாயணமும் ஜைன ராமாயணமும்	28 - 35	க. காவி.
44.	கம்பன், ஆராய்ச்சிப் பதிப்பு	45 - 79	க. காவி.
45.	கம்பன், கவிச்சக்கரவர்த்தி	136 - 149	க. காவி.
46.	கம்பன் காவியம்	11 - 27	க. காவி.
47.	கம்பனும் தமிழும்	112 - 135	க. காவி.
48.	கம்பனைக் கற்கும் நெறிகள்	36 - 44	க. காவி.
49.	கலிங்கத்துப் பரணியில் நகைச்சுவை	35 - 57	இ. விள.
50.	கலியுகப் பெருங்காவியம்	1 - 14	இ. விள.
51.	கலையும் பண்பாடும்	30 - 36	த. பண்.
52.	கவிதை	84 - 89	த. பண்.
53.	கவிமணி கடிதம்	168 - 169	க. காவி.
54.	கழகம்	1 - 6	சொ. சரி.
55.	களம்	7 - 17	சொ. சரி.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல்	பக்கம் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
56.	கற்புத் தெய்வம்	161	168	த. பண்.
57.	கற்றதனுல் ஆயபயன்	23	47	அக. நினை.
58.	கனகசபைப் பிள்ளை, வி.	273	281	த. சுடர்.
59.	காப்பிய உவமை	352	360	கா. கால.
60.	காலமுறைப்படி காவியங்களின் அட்டவணை	361	362	கா. கால.
61.	காவிய காலம்	26	58	கா. கால.
62.	காவியங்களின் ஒடுங்குதசை	314	322	கா. கால.
63.	காவியங்களின் பொது இயல்பு	260	313	கா. கால.
64.	காவியங்களின் வரலாறு	59	259	கா. கால.
65.	காவியம்	9	25	கா. கால.
66.	காவிரிப்பூம்பட்டினம்	145	163	இ. தீப.
67.	கும்பகர்ணன்	126	150	த. பண்.
68.	குமரகுருபரர்	202	206	த. சுடர்.
69.	குறுந்தொகை	84	107	இ. தீப.
70.	குறுந்தொகைச் செய்யுளில் ஒரு சரித்திரக் குறிப்பு	108	116	இ. தீப.
71.	கூத்தும் இசையும்	149	161	இ. சிந்.
72.	சங்க இலக்கியங்கள் 1	76	82	இ. சிந்.
73.	சங்க இலக்கியங்கள் 2	83	93	இ. சிந்.
74.	சடையப்ப வள்ளல்	171	180	த. சுடர்.
75.	சமயமும் லட்சியங்களும்	179	187	த. பண்.
76.	சாதுகை மாந்தர்	78	84	சொ. சரி.
77.	சாமவேதம்	28	39	இ. உத. 2.
78.	சாமிநாதையர், உ. வே. 1. தொண்டின் பெருமை	282	285	த. சுடர்.
79.	சாமிநாதையர், உ. வே. 2. வாழ்க்கையும் மதிப்பும்	286	306	த. சுடர்.
80.	சாமிநாதையர், உ. வே. 3. நினைவு நாள்	307	319	த. சுடர்.
81.	சிதம்பரநாத முதலியார், டி. கே.	424	431	த. சுடர்.
82.	சிதம்பரனுர் வ. உ. — நான் கண்ட வ. உ. சி.	376	383	த. சுடர்.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
83.	சிலப்பதிகாரத்தில் சில இலக்கண வழக்குகள்	72 - 80	இலக்க. சிந்.
84.	சிலப்பதிகாரம் 1	125 - 145	இ. மணி.
85.	சிலப்பதிகாரம் 2	145 - 154	இ. மணி.
86.	சிவப்பிரகாச சுவாமிகள் துறையூர்	207 - 213	த. சுடர்.
87.	சிறப்புப் பெயரகராதி	176 - 185	க. காவி.
88.	சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள்	48 - 54	அக. நினை.
89.	சீனம்	118 - 160	இ. உத. 1
90.	சுந்தரம் பிள்ளை, ஆசிரியர் 1. வாழ்க்கை	239 - 252	த. சுடர்.
91.	சுந்தரம் பிள்ளை, ஆசிரியர் 2 தமிழ்த் தொண்டு	253 - 264	த. சுடர்.
92.	சுந்தரம் பிள்ளை, ஆசிரியர் 3 நாடகக் கவிஞர்	265 - 272	த. சுடர்.
93.	சுப்ரமண்ய பாரதி 1. வாழ்க்கை	326 - 330	த. சுடர்.
94.	சுப்ரமண்ய பாரதி 2. நான்கண்ட பாரதி	331 - 335	த. சுடர்.
95.	சுப்ரமண்ய பாரதி 3. உள்ளமும் கவிதையும்	336 - 375	த. சுடர்.
96.	சூத்திரங்கள்	60 - 72	இ. உத. 2
97.	சொல்லாக்கம்	174 - 183	சொ. விரு.
98.	சொல்லின் ஒலிவடிவும் வரி வடிவும்	125 - 128	இ. விள.
99.	சொல்லின் வளர்ச்சி	21 - 30	சொ. விரு.
100.	சொல்லும் பொருளும்	31 - 40	சொ. விரு.
101.	சொல்லும் மொழியும்	14 - 20	சொ. விரு.
102.	சொல் வரலாற்று நியதி	60 - 75	சொ. விரு.
103.	சொல் வரலாற்று விநோதங்கள்	76 - 80	சொ. விரு.
104.	தத்துவ சாஸ்திரமும் இலக்கணமும்	126 - 132	இலக்க. சிந்.
105.	தம்மபதம்	99 - 104	இ. விள.
106.	தமிழகராதி	127 - 136	இ. சிந்.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
107.	தமிழ் இலக்கியத்தின் தொன்மை 1	34 - 45	இ. சிந்.
103.	தமிழ் இலக்கியத்தின் தொன்மை 2	46 - 58	இ. சிந்.
109.	தமிழ் இலக்கியத்தின் தொன்மை 3	59 - 70	இ. சிந்.
110.	தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி	54 - 65	த. மறு.
111.	தமிழ்ப் பாட்டும் இசையும்	109 - 116	த. மறு.
112.	தமிழ்மொழிப் பற்றும் பிறமொழி வெறுப்பும்	98 - 106	அக. நினை.
113.	தமிழகத்தில் திருமணம்	325 - 331	கா. கால.
114.	தமிழர் பண்பாடும் இலக்கியமும்	13 - 29	த. பண்.
115.	தமிழில் சொல் வளர்ச்சி	66 - 80	த. மறு.
116.	தமிழில் நாட்டிய நூல்கள்	171 - 177	இ. சிந்.
117.	தமிழில் வசன நடை	81 - 97	த. மறு.
118.	தமிழின் மறுமலர்ச்சி	1 - 15	த. மறு.
119.	தமிழும் அகராதியும்	137 - 148	இ. சிந்.
120.	தமிழும் எதிர்காலமும்	151 - 158	த. மறு.
121.	தமிழும் சுதந்திரமும்	22 - 32	த. மறு.
122.	தமிழும் பிராகிருதமும்	89 - 93	சொ. விரு.
123.	தமிழும் மலையாளமும்	138 - 160	சொ. விரு.
124.	தமிழும் வைதிக வார்த்தைகளும்	94 - 125	சொ. விரு.
125.	தலைமையுரை - நாகபுரி மாநாடு	1 - 48	தி. ஆரா.
126.	தலைமையுரை - லட்சுமணபுரி மாநாடு	49 - 67	தி. ஆரா.
127.	தாந்திரிக இலக்கியங்கள்	170 - 181	இ. உத. 2
128.	தாமோதரம் பிள்ளை, சி. வை.	229 - 238	த. சுடர்.
129.	தாய்மொழி	41 - 50	சொ. விரு.
130.	திருக்குற்றுலப் பள்ளு	122 - 124	இ. விள.
131.	திருமுருகாற்றுப்படை	13 - 42	இ. தீப.
132.	திருமுறைகளைச் சாராத பாலி இலக்கியங்கள்	257 - 286	இ. உத. 2

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
133.	திருவள்ளுவர் 1 வாழ்க்கை வரலாறு	59 - 64	த. சுடர்.
134.	திருவள்ளுவர் 2 திருநாள்	65 - 76	த. சுடர்.
135.	திருவள்ளுவர் 3 காலம்	77 - 96	த. சுடர்.
136.	திருவள்ளுவர் 4 நூற்பெயர்	97 - 102	த. சுடர்.
137.	திருவள்ளுவர் 5 நூல் அமைப்பு	103 - 114	த. சுடர்.
138.	தேசிக விநாயகம் பிள்ளை கவிமணி	399 - 420	த. சுடர்
139.	தைந்நீராடல்	83 - 93	இ. விள.
140.	தொகை நூல்கள் 1	1 - 17	இ. மணி.
141.	தொகை நூல்கள் 2	17 - 36	இ. மணி.
142.	தொகை நூல்கள் 3	36 - 56	இ. மணி.
143.	தொகை நூல்கள் 4	57 - 68	இ. மணி.
144.	தொகை நூல்கள் 5	68 - 74	இ. மணி.
145.	தொகை நூல்களின் கால முறை	70 - 83	இ. தீப.
146.	தொண்டி நகரம்	164 - 174	இ. தீப.
147.	தொல்காப்பியர் 1 பிறப்பகம்	17 - 22	த. சுடர்.
148.	தொல்காப்பியர் 2 சமயம்	23 - 41	த. சுடர்.
149.	தொல்காப்பியர் 3 காலம்	42 - 54	த. சுடர்.
150.	தொல்காப்பியரும் மொழி வளர்ச்சியும் 1, 2, 3, 4, 5	37 - 71	இலக்க. சிந்.
151.	தோடு	47 - 54	சொ. சரி.
152.	நகைச்சுவை	169 - 178	த. பண்.
153.	நவீன கீதை	50 - 53	த. மறு.
154.	நாடகக் கலையின் வரலாறு	162 - 170	இ. சிந்.
155.	நான்மணிக்கடிகை	79 - 82	இ. விள.
156.	நிகண்டுகள் 1 அரும்பொருள் விளக்கம்	155 - 194	இ. மணி.
157.	நிகண்டுகள் 2 கயாதரம்	194 - 209	இ. மணி.
158.	நிகண்டுகள் 3 நாம தீபம்	209 - 218	இ. மணி.
159.	நிகண்டுகள் 4 பொதிகை	218 - 220	இ. மணி.
160.	நிகண்டுகள் 5 நிகண்டு சூடாமணி	221 - 224	இ. மணி.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
161.	நூதன ஆங்கிலப் பேரகராதி	120 - 126	இ. சிந்.
162.	நூல் நிலையப் பிரசாரம்	68 - 78	உ. மணி.
163.	நூற்பொருட்குறிப்பு அகராதி	ix - xv	இ. மணி.
164.	நெடுநல்வாடையும் நக்கீரரும்	43 - 46	இ. தீப.
165.	பக்திக் கனியின் தீஞ்சாறு	77 - 81	அக. நினை.
166.	பக்திப் பெருவெள்ளம்	67 - 71	அக. நினை.
167.	பக்தியும் தெய்வ வரலாறுகளும்	60 - 66	அக. நினை.
168.	பக்தி வெள்ளத்தின் விளைவு	72 - 76	அக. நினை.
169.	பஞ்சதந்திர மொழிபெயர்ப்பு	105 - 109	இ. விள.
170.	பஞ்சம்	76 - 77	சொ. சரி.
171.	பண்டைத் தமிழ்நாடும் சமயமும்	55 - 59	அக. நினை.
172.	பண்டைத் தமிழக வாழ்க்கை	37 - 55	த. பண்.
173.	பத்துப்பாட்டும் அவற்றின் காலமுறையும்	4 - 12	இ. தீப.
174.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் இலக்கியம்	108 - 119	இ. சிந்.
175.	பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்து	122 - 124	இ. தீப.
176.	பதின்மூன்றும் புறப்பாட்டும் உரையும்	1 - 66	ஆ. உரை.
177.	பதினும் நூற்றுண்டில் இலக்கியம்	100 - 107	இ. சிந்.
178.	பதினெண் கீழ்க்கணக்கு 1	75 - 83	இ. மணி.
179.	பதினெண் கீழ்க் கணக்கு 2	83 - 82	இ. மணி.
180.	பதிணெண் கீழ்க்கணக்கு 2	86 - 92	இ. மணி.
181.	பதினெண் கீழ்க்கணக்கு 4	92 - 114	இ. மணி.
182.	பதினெண் கீழ்க்கணக்கு 5	114 - 119	இ. மணி.
183.	பதினெண் கீழ்க்கணக்கு 6	119 - 124	இ. மணி.
184.	பரிபாடலும் நகைச்சுவையும்	58 - 69	இ. விள.
185.	பரிமேலழகர்	190 - 201	த. சுடர்
186.	பலவகை இலக்கணங்களின் அவசியம்	115 - 120	இ. சிந்.
187.	பவணந்தி முனிவர்	181 - 185	த. சுடர்.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல்	எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
188.	பாணினீயம்	1	18	இலக்க. சிந்.
189.	பாபிலோனியா	28	43	இ. உத. 1.
190.	பாரத தேசம்	9	342	இ. உத. 2
191.	பாரத வெண்பா	28	34	இ. விள.
192.	பாரதியுகம்	33	36	த. மறு.
193.	பாரதியும் தமிழும்	37	49	த. மறு.
194.	பாரஸீகம்	72	117	இ. உத. 1.
195.	பாலஸ்தீனம்	44	71	இ. உத. 1.
196.	பாலிமொழியும் தமிழும்	126	137	சொ. விரு.
197.	பாலேயின் அரங்கேற்று மண்டபம்	67	69	இ. தீப.
198.	பிராம்மணங்கள்	45	49	இ. உத. 2
199.	புகழேந்தியார்	186	189	த. சுடர்.
200.	புத்தாண்டில் புது முயற்சி	117	121	இ. விள.
201.	புதிய இலக்கணம்	141	150	த. மறு.
202.	புதிய இலக்கிய முறை	129	140	த. மறு.
203.	புராணங்கள்	141	168	இ. உத. 2
204.	புறநானூறும் தமிழரும்	56	70	த. பண்.
205.	பேச்சும் மொழியும்	8	13	சொ. விரு.
206.	பொழுது	20	28	சொ. சரி.
207.	பௌத்த வடமொழி இலக்கியங்கள்	286	324	இ. உத. 2.
208.	மகாபாரதம்	82	135	இ. உத. 2.
209.	மதனநூல் வரலாறு	178	192	இ. சிந்.
210.	மதுரையும் தமிழ் இலக்கியமும்	201	224	இ. சிந்.
211.	மறுமலர்ச்சியும் கவிமணியும்	117	128	த. மறு.
212.	மறைந்து போன ஒரு காவியம்	332	343	கா. கா.
213.	மஹாயானப் பெரியோர் களும் கவிஞர்களும்	324	336	இ. உத. 2.
214.	மாகாத்மியங்கள், தோத் திரங்கள், தாரணிகள், தந்திரங்கள்	336	342	இ. உத. 2.
215.	மாணிக்கவாசகர் 1. கர்ண பரம்பரை வரலாறு	115	119	த. சுடர்.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல்	பக்கம் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
216.	மாணிக்கவாசகரும் மலை நாடும்	120	126	த. சுடர்.
217.	மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாவித்துவான்	223	228	த. சுடர்.
218.	முகவுரை	iii	vi	இ. சிந்.
219.	முகவுரை	v	viii	இ. மணி.
220.	முத்தொள்ளாயிரத்தின் காலம்	183	188	இ. தீப.
221.	முத்தொள்ளாயிரம்	175	182	இ. தீப.
222.	முன்னிலைப் பெயர்	29		சொ. சரி.
223.	முன்னுரை: ஆராய்ச்சி உரைத் தொகுதி (Critical Essays in Tamil)			
224.	முன்னுரை: உரைமணி மாலை			
225.	முன்னுரை: இலக்கிய உதயம் 1			
226.	முன்னுரை: இலக்கிய உதயம் 2			
227.	முன்னுரை: இலக்கிய தீபம்			
228.	முன்னுரை: கம்பன் காவியம்			
229.	முன்னுரை: காவிய காலம்			
230.	முன்னுரை: தமிழ்ச்சுடர் மணிகள் 1ம் பதிப்பு			
231.	முன்னுரை: தமிழ்ச்சுடர் மணிகள் 2ம் பதிப்பு			
232.	முன்னுரை: தமிழர் பண்பாடு 1ம் பதிப்பு			
233.	முன்னுரை: தமிழர் பண்பாடு 3ம் பதிப்பு			
234.	முன்னுரை: தமிழின் மறு மலர்ச்சி 1ம் பதிப்பு			
235.	முன்னுரை: தமிழின் மறு மலர்ச்சி 2ம் பதிப்பு			
236.	மொழியாராய்ச்சி (சுதேசமித்திரன்)			
237.	மொழிநூல் விநோதங்கள்	81	88	சொ. விரு.
238.	மொழி பற்றிய ஆராய்ச்சி (அனுபந்தம் 1)	——		தி. ஆரா.
239.	மொழியின் அதியற்புத இயல்பு	1	7	சொ. விரு.

வ. எண்	கட்டுரைத் தலைப்பு	பக்கம் எண் முதல்	பக்கம் எண் வரை	தொகுப்பு நூல் குறியீடு
240.	ராதாவும் கிருஷ்ணனும்	92	97	அக. நினை.
241.	ரிக்வேதம்	13	21	இ. உத. 2.
242.	வடநாட்டில் கண்ணன்	82	86	அக. நினை.
243.	வடமொழியும் தமிழும்	19	36	இ. சிந்.
244.	வர்ணனை மரபுகள்	344	351	கா. கால.
245.	வரலாற்று இலக்கணம்	121	125	இலக்க. சிந்.
246.	வள்ளுவரும் மனுவும்	94	98	இ. விள.

சிறுகதை மஞ்சரி—கதைகள்

1. உதிர்ந்த மலர் 55 - 68
2. ஓர் இரவு 83 - 89
3. சந்திரா பழி வாங்கியது 90 - 115
4. சுசீலை 18 - 35
5. பாலகோபாலன் வழக்கு 127 - 132
6. பேசா மடந்தை 69 - 82
7. மத்தளக்காரன் 116 - 126
8. ராமுவின் சுயசரிதம் 36 - 54

ராஜி (முழு நவீனம்)

கவிதைகள்

1. ஆசிச் செய்யுட்கள் (பாரி நிலையம், பழனியப்பன் புதல்வன் காசிநாதனின் புதுமை விழா)
2. இரங்கற்பாக்கள் (ஸ்ரீ. ரா. இராகவையங்கார் மறைவு குறித்து)
3. இரங்கற்பாக்கள் (மதுரை ஸ்ரீ டி.சி. ஸ்ரீனிவாசையங்கார் மீது)
4. என் அன்னை
5. என் செய்கேன்
6. என் செல்வங்கள்
7. என்ன உறவு
8. என்ன வாழ்க்கை (Leisure—William Henry Davis)
9. காந்தித் தாத்தா

10. கையறுநிலைச் செய்யுள் (திரு சி.ஆர். கோவிந்தராஜ முதலியாரைப் பற்றியது)
11. சாற்றுக்கவி (வடவரங்கராற்றுப்படை)
12. சிறப்புப் பாயிரம் (அண்ணாமலையார் காவியம்)
13. தமிழ்ப்பணி
14. திருமண வாழ்த்து
15. திருமண வாழ்த்து (தீபன் மகள் தங்கம்)
16. திருமண வாழ்த்து (ஜோசப் சகாயம்—மேபல் அம்மை)
17. முத்தம் (Love's Philosophy—Shelly)
18. முத்தம் (Absence - Francis Thompson)
19. முத்தம் (Some times with one I love—Walt Whitman)
20. முத்தம் விளையுமிடம்
21. வாழ்த்து (நித்தியானந்தர்—சித்த வைத்தியச் செல்வர்)
22. வாழ்த்து (பரமேஸ்வரப் பணிக்கர்—பல்கலைக்கழகத்தின் பிரதி உப தலைவர் பதவி பெற்றபோது)
23. வள்ளுவர் திருப்பெயர்கள்
24. விளையுமிடம்
25. வாழ்த்துக்கவி (Sri K.V. Krishnaswamy Iyer)
26. வாழ்த்து (தேனருவி)

நூல் வடிவம் பெறாத கட்டுரைகள்

தமிழ்

1. அச்சு வித்தையின் வரலாறு
2. அழகுத் தெய்வத்தின் திருவுலா (சிந்தனை)
3. ஆயிரத்து ஓர் இரவுகள்
4. இரண்டு குயவர்கள் (கலைமகள்—குழந்தை இலக்கியம்)
5. இலக்கணம் 1, 2, 3 (இலக்கிய மண்டபம்)
6. இலக்கணம் கி.பி. 1555ல் அச்சியற்றியது (சிறுகுறிப்பு)
7. ஊராண்மை
8. எள்ளுத் திருடியின் கதை (கலைமகள்) திலமுட்டி ஜாதகம்
9. கனவைப் பற்றிய ஓர் கனவு (பாரத தேவி)
10. காதற்கனல் (பிரசண்ட விகடன்)
11, கீதையும் நாமும் (,,)
12. சிவசுவாமி ஐயர், ஸர். பி. எஸ். (சதாபிஷேக விழா)

13. சூரியன் (ஓர் ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதியது) (கலைமகள்)
14. தளவாய் அரியநாயக முதலியார் (ரேடியோ பேச்சு)
15. பட்டினப்பாலை பற்றிய ஓர் சாஸனச் செய்யுள்
16. பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்து
17. பல்லவர் மீது சாசனப் பாடல்கள்
18. புக்கக வாழ்வு (கலைமகள்)
19. மகுடம் இழந்த மகாராணி
20. மாயா சனகப் படலம் (விவேக போதினி)
21. வண்டொன்று வந்தது (கல்கி தீபாவளி மலர்)
22. வளரும் தமிழ் (சிந்தனை)
23. விருந்து (லோகோபகாரி)

மதிப்புரை, பதிப்புரைகள்

1. தென்னிந்திய கோயில் சாசனங்கள் (பதிப்பாளர் ஸ்ரீ டி.என். சுப்ரமணியம்)
2. திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை (பதிப்பாளர் சாம்பசிவ சர்மாவும் பிறரும்)
3. நாலயிர திவ்யப் பிரபந்தம் (பதிப்புரை)

பிறர் நூல்களுக்குப் பதிப்புரைகள், முன்னுரைகள்

1. முன்னுரை—இனியவை நாற்பது
2. முன்னுரை—நவநீதப் பட்டியல்
3. முன்னுரை—நான்மணிக் கடிகை
4. முன்னுரை—உமார்கய்யாம் பாடல்கள் (தே.வி.)
5. முன்னுரை—கவிமணியின் உரைமணிகள் (தே.வி.)
6. முன்னுரை—தேவியின் கீர்த்தனைகள் (தே.வி.)
7. முன்னுரை—பார்த்திபன் கனவு (கல்கி)
8. முன்னுரை—மருமக்கள் வழி மான்மியம் (தே.வி.)
9. பதிப்புரை—நாலாயிர திவ்விய பிரபந்தம்
10. அணிந்துரை—இராமாயணப் பதிப்பு (சொ. முருகப்பா)
11. முன்னுரை—கங்கைகொண்ட சோழன் (டி. என். சுப்பிரமணியன்)

ஆங்கிலக் கட்டுரைகள்

1. A note on Jeevasambodanai
2. Book review: Ramayanam with commentary by K. Srinivasa Iyangar and S. Krishnaswami Iyangar.
3. Date of Manikkavasagar
4. Foreword: Namadeepa Nighandu
5. Foreword: On the research work Sri Puranam by Sri V. Venkatarajulu Reddiyar
6. History of Tamil Language and Literature (Published Book)
7. History of Tamil Lexicography
8. Kamban
9. Kamban as edited by T.K.C.
10. Life in Ancient city of Kaviripoompattinam
11. Pataliputra in a Tamil classic
12. Presidential address: Lucknow-Oriental Conference
13. Ramappaiyan Ammanai—A Historical Ballad
14. Review: The early history of the Vellar Basin by Dr. Arokiyaswamy
15. Research in Dravidian Languages (Nagpore) Presidential address
16. Side lights on Tamil Authors
16. Silapppathikaram
18. The Age of Kamban
19. The Saiva Mutts
20. Tolkappiyar and Patanjali
21. Tolkappiyar's Religion
22. Word study and chronology in Tamil Literature
23. Poetry (incomplete)

பதிப்பித்தவை

அரும்பொருள் விளக்க நிகண்டு	...	1931
அருள் முருகாற்றுப்படை	...	
இராஜராஜ தேவர் உலா	...	1934
இன்னு நாற்பது	...	1944
இனியவை நாற்பது	...	1949
கம்பராமாயணம்		
பால காண்டம் 1 – 7 படலம்	...	1933
உயுத்த காண்டம் 1 – 3 படலம்	...	1932
கயாதர நிகண்டு	...	1939
களவியற் காரிகை	...	1931
குருகூர்ப் பள்ளு	...	1932
கைலாச நிகண்டு (முற்றுப் பெருதது)		
கொண்டல் விடு தூது		
சங்க இலக்கியம்		
பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் (சமாஜ வெளியீடு)	...	1940
சாத்தூர் நொண்டி நாடகம்		
சீவக சிந்தாமணி (சமாஜ வெளியீடு)	...	1941
திரிகடுகமும் சிறுபஞ்ச மூலமும்	...	1944
திருக்குறுங்குடி அழகிய நம்பி உலா	....	1932, 1945
திருப்பணி மாலைகள் (தென் திருப்பேரை, திருக்கோளூர்)		
திருமந்திரம் (சேர்ந்து பதிப்பித்தது) (சமாஜ வெளியீடு)	....	1933
திருமுருகாற்றுப்படை (சேர்ந்து பதிப்பித்தது) புதிய உரையுடன்	...	1933
திருமுருகாற்றுப்படை (பழைய உரை)	...	1943
திவ்வியப் பிரபந்தம், முதலாயிரம்	...	1955
தினகர வெண்பா	...	1932
துகில் விடு தூது	...	1929
தெய்வச்சிலையார் விறலி விடு தூது	...	1936
தொல்காப்பியம்: பொருளதிகாரம் இளம்பூரணம்	...	1933–1935
தொல்காப்பியம் – பொருளதிகாரம் நச்சினுர்க்கினியம்	...	1934

நவநீதப் பாட்டியல் - உரையுடன்	...	1943
நாமதீப நிகண்டு	...	1930
நான்மணிக்கடிகை	...	1944
நெல்விடு தூது	...	1933
பணவிடு தூது (இராமலிங்கேசர் மீது)	...	1934
புறத்திரட்டு	...	1938-1939
பூகோள விலாசம்	...	1933
பொதிகை நிகண்டு	...	1934
மதுரைக் கோவை	...	1934
மனோன்மணியம்	...	1922
முப்பந் தொட்டியுலா	...	1933
ராமப்பய்யன் அம்மானை	....	1950
ஜீவ ஸம்போதனை (முற்றுப் பெருதது)		

3

அச்சில் வாரா அருந்தமிழ்

திருவேங்கட பாரதி

இயற்றிய

பாரதி தீபம்

அச்சில் வாரா அருந்தமிழ் — 10

திருவேங்கட பாரதி

இயற்றிய

பாரதிதீபம்

பதிப்பாசிரியர்

மு. சண்முகம்பிள்ளை

தமிழ் விரிவுரையாளர்

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1980

முதற் பதிப்பு : 1980

விலை : ரூ. 5-50

இதுவரை வெளிவந்துள்ள

அருந்தமிழ் நூல்கள்

1. அப்பாண்டை நாதர் உலா
   —தமிழாய்வு I, 1972
2. நாக குமார காவியம்
   —தமிழாய்வு II, 1973
3. திருமேற்றிசை யந்தாதி
   —அப்பாண்டை நாதர் உலாவின்
   தனி வெளியீட்டுப் பிற்சேர்க்கை - III, 1974
4. ஈனமுத்துப் பாண்டியன் கதை
   — தமிழாய்வு IV, 1974
5. அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ்
   — தமிழாய்வு V, 1975
6. மெய்ம்மொழிச் சரிதை
   —தமிழாய்வு VI, 1977
7. சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி
   — தமிழாய்வு VII, 1978
8. மேருமந்தர மாலை
   — தமிழாய்வு VIII, 1978
9. கம்பராமாயணக் கௌஸ்துபம்
   — தமிழாய்வு IX, 1979

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம், சென்னை-13.

முகவுரை

'பாரதி தீபம்' என்பது திருவேங்கட பாரதியாரால் ஆக்கப் பெற்ற நிகண்டு நூல். ஆசிரியர் தம் பெயரைத் திருவேங்கட பாரதி, பாரதி என்று நூலுள் ஒவ்வொரு தொகுதியின் இறுதியாக அமையும் வரலாற்றுப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

'திருவேங் கடவன் ஏன்ருசு கூறுங் கவிவேந்தன்...
செப்பிய பாரதிதீபம்'. *(200)*

'திருவேங் கடபாரதி வண்டமிழின்
செழுமைய தாகு மிலக்கிய பாரதிதீபம்'. *(243)*

'முந்துதமிழ்ப் பன்னிய பாரதி பாரதிதீபம்'. *(293)*

'பாரதி வாதுகவிக் கேருனவன் சொன்ன
பாரதிதீபம்'. *(319)*

இவற்ருல் பாரதி இயற்றிய நூல் பாரதி தீபம் என்பது தெரியவரும். இஃது ஆக்கியோன் பெயரால் அமைந்த பெயராகும்.

தீபம், தீபிகை என்னும் பெயர்களால் தமிழில் சில நூல்களின் பெயர்கள் அமைந்துள்ளன.* தீபம், தீபிகை என்ருல், 'விளக்கு' என்பது பொருளாம். இங்கே பொருள்களின் பெயர்கள், சொற் பொருள்கள் ஆகியவற்றைத் தெளிவுறத் தொகுத்து விளக்குவது என்னும் பொருளில் 'தீபம்' என்பதை ஆசிரியர் பயன்படுத்தி யுள்ளார். அகராதி நிகண்டு, நாமதீப நிகண்டு முதலிய நூற் பெயர்களில் இணைந்துள்ள நிகண்டு என்பது போல இங்குத் 'தீபம்' என்பது வந்துள்ளது. ஆகவே, நிகண்டு என்னும் பொருளில் 'தீபம்' என்பது இவ்வாசிரியரால் ஆளப்பட்டுள்ளது என்று கருதவும் இடமுண்டு.

தமிழிலே காலத்தால் முந்திய நிகண்டுகளாகிய திவாகரமும் பிங்கலந்தையும் நூற்பாவினுல் இயன்றன. பின்னர் வந்த நிகண்டுகள் நூற்பாவினுல் மட்டுமன்றி வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் என்னும் யாப்பு வகைகளிலும்

---

* அரிசமய தீபம், இலக்கிய தீபம், ஞானதீபம், தத்துவ தீப சங்கிரகம், ஆனந்த தீபிகை, கோளதீபிகை, சின்மய தீபிகை, நானுர்த்த தீபிகை, பதார்த்த தீபிகை முதலியன.

அமைந்துள்ளன. கட்டளைக் கலித்துறைப் பாவினுல் ஆகிய நிகண்டுகள் கயாதரமும் பாரதிதீபமும் ஆகும்.

கட்டளைக் கலித்துறை வகையான பாவினம் தமிழுலகில் முற்காலத்தில் பெருவழக்காயிருந்தது. யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், நவநீதப் பாட்டியல் முதலிய இலக்கண நூல்களும் எண்ணிறந்த கோவைகளும் இதற்குச் சான்ருக அமைகின்றன. இனிய ஓசையும், எண்ணினுல் வரையறைப்பட்ட எழுத்தமைதியும், எதுகை மோனை முதலியவற்றின் நயமும் இவ்வகைச் செய்யுள்கள் கற்போர்க்குப் பெருவிருந்தாயின. இத்தகு நயங்களால் நினைவில் வைத்தற்கு ஏற்றதொரு பாவினமாக இது கருதப்பட்டது எனலாம்.

கயாதரமும் பாரதிதீபமும் கட்டளைக் கலித்துறைப் பாவால் அமைந்திருப்பதோடு இரண்டும் முதல் நிகண்டு எனப் போற்றப் பெறும் திவாகரத்தை அடியொற்றியுள்ளன. திவாகரத்தில் ஒவ்வொரு தொகுதி இறுதியிலும் ஆசிரியர் தம்மைப்பற்றி வெளிப் படுத்தும் வரலாற்றுப் பாடல்கள் அமைந்துள்ளது போலவே இந் நிகண்டுகளிலும் உள்ளன. அன்றியும் பொருள்களின் அமைப்பு முறையிலும் பெரிதும் ஒற்றுமை காணப்படுகிறது. எனினும் கயாதரம் சற்று வேறுபட்டுள்ளது. கயாதரம் 11 தொகுதியுடையதாய் அமையப் பாரதிதீபமோ திவாகரத்தைப் போல 12 தொகுதிகள் கொண்டுள்ளது. கயாதரத்தில் திவாகர நிகண்டில் ஐந்தாவதாக உள்ள இடப்பெயர் இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது. அதோடு கயாதரர் தொகுதிகளைத் தெய்வப் பெயரியல், இடப்பெயரியல் என்ருற் போல 'இயல்' என்று பெயரிடுகின்ருர்.

பாரதி தீபமோ தொகுதிகளின் பெயரிலும் சரி, தொகுதிப் பொருளடைவிலும் சரி, சற்றும் மாருமல் திவாகரத்தை அடியொற்றிச் செல்லுகிறது. மேலும், பொருள்களை விளக்கும் முறையிலும் திவாகரர் நூலின் அடைவையே பாரதிதீபம் எங்கும் தழுவிச்செல்லு கிறது. திவாகரத்தில் பல நூற்பாக்களில் காணும் பொருட் கூறுகள் இதன்கண் ஒரு பாடலில் சேர்ந்து காணப்படும். கயாதரம் திவாகரத்தைப் பெரும்பாலும் பின்பற்றி அமையினும் முற்றிலும் அதன் வழித்தாய் அம் முதல் நூலின் பொருளடைவு முறையிலேயே செல்லுவது பாரதிதீபம்.

திவாகரர் பதினெராந் தொகுதியில் அமைத்திருந்த நூற்பா அடைவுமுறை தொல்காப்பிய உரியியலிற் போல எதுகை முறை தழுவிய ஓர் அமைப்பாகும். இத் தொகுதி நூற்பாக்களை ஆதியிற் பொருள், அந்தத்துப் பொருள் என்று பாகுபடுத்திப் பிரித்து அகராதியடைவு படுத்தியதும், முற்றிலும் அகராதி முறை கொண்டு அமைத்ததும் பிற்காலத்தார் செய்த மாறுபாடுகள். திவாகரர் அமைத்த பழைய முறையோ இவற்றிற்கு முற்றிலும் வேறுபட்ட அமைப்பாகும்.

'சேமங் காவ லின்ப மிரவுபொன்
ஏமாப்பு மயக்க மேமமாகும்'.

'செழுமை வளனுங் கொழுப்பு மாகும்'.

'சிறப்புச் சீர்மை யிடும்பையிம் மூன்றும்
விரிக்கின் மேலோர் விழும மென்ப'.

என்பவை திவாகரம் பதினொராந் தொகுதியின் முதல் மூன்று நூற்பாக்கள்.

'சேமமே காவல்பொன் னின்ப
மேபாப் பிரவு செறி மயக்க
மேமம தாகுஞ் சிறப்பொடு
சீர்மை யிடும்பையிவை
தாமுரை செய்யில் விழுமம
தாகத் தருஞ்செழுமை
நாமம தென்னில் வளனே
கொழுப்பெனு நானிலமே'

என்பது பாரதி தீபத்தின் பதினொராந்தொகுதி முதற்பாடல். மேலே காட்டிய திவாகர நூற்பாக்கள் மூன்றன் செய்திகளையும் இப்பாடல் கொண்டிருத்தல் காணலாம். இந்த அளவு மிக நெருங்கிய ஒற்றுமை திவாகரத்தோடு இந் நிகண்டிற்கு உண்டு. இதனல் திவாகரத்தில் பின்னுளில் வந்து சேர்ந்த இடைச் செருகல்களான நூற்பாக்கள் எவையெவை என்பதைக் கண்டுகொள்ளவும் இப் பாரதி தீபம் துணைசெய்கிறது.

கயாதர நிகண்டின் காலத்தைக் குறித்து அந்நூலின் முன்னுரையில் (பக் xi, xii) பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் மிக நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார்கள். கயாதரம், யாப்பருங்கலக் காரிகை தோன்றிய கி. பி. 11 ஆம் நூற்ருண்டுக்குப் பிற்பட்டுத் தோன்றியது என்றும், கி. பி. 1575-ல் அந்நூலைக் கல்வியாளர் அங்கீகரித்து எடுத்தாண்டிருப்பதால் இதற்கு முற்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். உத்தேசம் கி. பி. 1450-ல் கயாதரம் இயற்றப்பட்டிருக்கலாம் என வரையறுத்தல் தக்கது என்னும் முடிவுக்கு வந்துள்ளார்கள்.

கயாதரம் யாப்பு வகையாலும் திவாகரத்தைப் பின்பற்றிச் செல்வதிலும் பாரதி தீபத்தை ஒத்துக் காணப்படினும் அந்நூல் முற்றும் அந்தாதித் தொடையில் அமைந்திருக்கிறது. அந்தாதி முறை நினைவில் வைத்துப் பாடல்களை மனப்பாடம் செய்வதற்கு ஏற்றமுறை. இத்தகு வளர்ச்சி நிலையை நோக்கப் பாரதி தீபம் அதற்கு முன்பே தோன்றிய நூலாதல் கூடும் என்று கருதலாம். பாரதி தீபத்தையும் அந்நிகண்டைப் போலவே 15 ஆம் நூற்ருண்டில் தோன்றிய நிகண்டு நூலாகக் கொள்ளலாம்.

பாரதி தீப நிகண்டினைக்குறித்து யாழ்ப்பாணம் மானிப்பாய் சதாசிவம் பிள்ளை என்பார் (1820–1896) 1886-ல் எழுதி வெளியிட்ட 'பாவலர் சரித்திர தீபகம்' என்னும் நூலின் 211 ஆம் பக்கத்தில் பல செய்திகள் காணப்படுகின்றன. இவர் தந்துள்ள வரலாற்றுச் செய்திகள் வருமாறு :

''கடம்பை ஊரில் இருந்த வித்துவ சிரோமணியாகிய இவர் குலத்தாற் பிராமணன், 'மாதவஞ் செய் பாரதி' என்றும், 'கன்னல் குலாவும் வயல் சூழ் கடம்பையான்' என்றும்' 'செழுமுனி பாரதி' என்றும் பற்பல விசேடண மொழிகள் சார்த்தி இவர் பேசப்படுகின்ருர். இம் மாத்திரமன்றி இவரது சரிதம் வேறே ஏதும் சொல்லப்படக் காணும். தச நிகண்டுள் ஒன்றை இவர் பாடியிருக்கின்ருர். அது இவருடைய நாமதேயப்படி 'பாரதி தீபம்' எனப் பெயரியது. 12 தொகுதி கொண்ட அந் நிகண்டிலே கலித்துறைப்பாவில் 737 செய்யுள்கள் அடங்கியிருக்கின்றன. அதன் 12-ம் தொகுதி இறுதிப் பாவாகிய,

'விதிதரு வேதியன் வேங்கட
நாதன் விரகறியும்
அதிகுண வேள்பர மானந்த
பாரதி யாங்கடம்பைப்
பதிநிதி யோதிய பாரதி
தீபத்திற் பன்னிரண்டாம்
முதிரொரு சொற்பல் பொருட்பேர்த்
தொகுதி முடிந்ததுவே'

என்னும் கலித்துறை, அந்நூலுக்கு இவர் ஆக்கியோன் எனத் திருட்டாந்தப்படுத்துகின்றது. இப் புலவரது பாடற்றிறமைக்குச் சாட்சியாக அந்த நிகண்டுக் காப்பை இதன் கீழ்த் தருகின்ரேம் :

'சங்கரி மைந்தன் விநாயகன்
சண்முகன் றன்முன் வந்தோன்
ஐங்கர ஞானை முகத்தோன்
கணபதி யாகுபரிப்
புங்கவன் மான்மரு கனெரு
கொம்பன் பொழிமதத்தோன்
பங்கய மோதக பசாங்
குசம்பயில் பாணியனே.''

இவர் எழுதியது கொண்டே இந் நிகண்டு வரலாற்றைப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேரகராதியின் முன்னுரையில் எழுதியுள்ளார் (பக். xxviii). இந்நூலினை உவின்ஸ்லோ

தம் அகராதியில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் என்னும் விவரத்தையும் அவர்கள் சுட்டியுள்ளார்கள்.* இவற்ருல் இந்நூலின் பிரதிகள் இலங்கையில் கிடைத்தல் கூடும் என்றும் அவர்கள் சொல்வதுண்டு. தமிழகத்தில் இந் நூலின் சுவடிகள் பரவலாக இல்லை. இப் பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடி டாக்டர் உ. வே. சாமிநாதையர் தொகுப்பிலிருந்து கிடைத்த ஒரே சுவடி. இச் சுவடியினின்றும் சற்று மாறுபட்ட நிலையில் இலங்கைச் சுவடிகள் இருத்தல் கூடும் என்பதை மேலே சுட்டிய சதாசிவம் பிள்ளை தரும் குறிப்புக்கொண்டு தெளியலாம். இவர் தம் உரையின் இறுதியில் எடுத்துக்காட்டிய காப்புச் செய்யுள் இப் பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடியில் முதலில் இல்லை. ஆனல் விநாயகன் பெயர் உரைக்கும் 15 ஆம் பாடலாகச் சிறிது பாடம் வேறுபட்டுக் காணப்படுகிறது. அன்றியும் பன்னிரண்டாம் தொகுதியின் ஈற்றுச் செய்யுள் என இவர் எடுத்துக் காட்டியதும் முற்றும் மாறுபட்டுள்ளது. இப்பொழுது கிட்டியுள்ள பாரதி தீப நிகண்டின் செய்யுள் தொகை 665. சதாசிவம்பிள்ளை 737 என்று குறிப்பிடுகின்ருர். இவற்றையெல்லாம் பார்க்கும் போது தமிழகத்தில் தோன்றிய இந் நிகண்டு நூல் ஈழநாட்டில் சிற்சில சேர்க்கைகள் மாற்றங்கள் பெற்றுக் காலஅடைவில் சற்று வேறுபட்டிருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது. அங்குள்ள சுவடிகள் கிட்டினலன்றி வரையறுத்து உரைத்தல் இயலாததொன்ருகும்.

இனி, பாரதி தீபத்துள் நூல், நூலாசிரியர் பற்றிய வரலாறு தரும் தொகுதியிறுதிப் பாடல்களில் காணும் குறிப்புகளின்வழி நூலாசிரியா திருவேங்கட பாரதியின் வரலாற்றைக் காண்போம். இவருடைய ஊராகக் குறிக்கப்பட்டுள்ள கடம்பை என்பது திருக்கடம்பூர் என்னும் சிவதலமாகும். கடம்பை என்பது கடம்பூர் என்பதன் மரூஉ. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தென்கடம்பைத் திருக்கரக்கோயிலில் விளங்கும் சிவபெருமானைப் போற்றிப் பதிகம் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் பாடியது இரண்டாம் திருமுறையில் 68ஆம் பதிகமாய் உள்ளது. திருநாவுக்கரசர் பாடியவை ஐந்தாம் திருமுறையில் 19, 20ஆம் பதிகங்களாக உள்ளன. கடம்பூரில் உள்ள திருக்கோயில் 'கரக்கோயில்' என்னும் அமைப்புடையது. ரதம், சக்கரம், குதிரை அமைந்துள்ள சிற்பமுறையில் கருப்பக்கிரகம் காணப்படுகிறது. இவ்வூர் சிதம்பரத்திலிருந்து 15 கல் தொலைவிலும் காட்டுமன்னர்குடியிலிருந்து 3 கல் தொலைவிலும் உள்ளது. 'கடம்பூர்க் கரக்கோயிலே' எனப்போற்றும் திருநாவுக்கரசர்,

'நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

---

*உவின்ஸ்லோ அகராதியில் மேற்கோள் காட்டிய இடங்கள்: அருப்பம் (பக். 38), உசு (122), உண்டி (127), உருப்பு (142), உழிதரல் (152), உளைக்கிறேன் (154), ஒப்பம் (200), ஒப்பு (201), ஒருக்கு (204); கணிச்சி (231), கத்தியம் (239), குதலை (321).

என்னும் திருப்பாடலில், 'தென்கடம்பை' என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, 'தென்கடம்பை' என்றும் இவ்வூர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வூரைச் சார்ந்தவராகிய திருவேங்கட பாரதியாரும் இந் நிகண்டில்

'திதமா வுறைநளி னத்தடஞ் சூழ் தென்கடம்பை (74)

'மீன்ருவு வாவிக் கடம்பை' (200)

என்று தென்கடம்பை, கடம்பை என்று தம் ஊரினைக் குறிப்பிட்டுள்ளார். 'கடம்பாடவி' என்றும் (590, 665) இரண்டிடங்களில் சுட்டியுள்ளார். கடம்பூர் என்பதுவே கடம்பை, தென்கடம்பை, கடம்பாடவி என வழங்கப்பட்டுவருதல் தெளிவாம். இவர் வாழ்ந்த இவ்வூர் தேவாரம் பெற்ற பெருமையுடையது என்பதும் கண்டோம்.

தென்கடம்பையில் திருவேங்கட பாரதி சிறந்த புலவராயும் பெரும்புகழ் வாய்ந்த தலைவராயும் திகழ்ந்தவர்.

'கடம்பைய ராதி' (473)

'கடம்பைமன் கஞ்சமலர்
மின்னுள வாகும்புய பாரதி திருவேங்கடவன்' (506)

'கடம்பா டவிவாழ் இந்திரன்' (665)

'செழியன் புகழண்ணல்' (423)

எனவரும் தொடர்கள் இவர் அரசறிய வீற்றிருந்த பெருவாழ்வுடையவர் என்பதனைத் தெளிவிக்கும்.

இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர் என்பதனைப் பின்வரும் வாக்குகளால் அறியலாம்.

'விழியருள் பூண்ட நவதாரணை முகில் வேங்கடவன்
வழியினுள் வாழ்திரு வேங்கடவன்.' (243)

'மெய்ப்பூ சுரர்தம் விழிநெஞ்ச மென்ன
வரும் பாரதி.' (423)

'வெருவா துயரந் தமுமெய்
வீடுகண்டருள் வேங்கடவன்.' (590)

இவர் கொடையில் சிறந்த ஒருவள்ளலாயும் திகழ்ந்தவர்.

'மின்செயற் காரிற் றருபாரதி' (365)

'பொழிகொண்ட லென்ன
கரப்புண்டரிகன்' (423)

'பங்கயஞ்சே ரிருகைப் புயல்' (590)

'கந்தர மென்னக் கொடையுடையான்' (665)

மேகத்தைப்போலக் கைம்மாறு கருதாது பிறருக்குக் கொடுப்பவர் என்று இவர் போற்றப்படுகிருர்.

இவர் இந் நிகண்டு நூலைச் செய்கின்ற காலத்துத் தவத்தினை மேற்கொண்ட ஒரு துறவியராயும் திகழ்ந்தார் என்பது,

'சேருரளகப் புயன்செயங் கொண்டவன் சிந்தையன்பு
மாருது மாதவஞ் செய்தருள் பாரதி' (319)

என்பதனுல் தெரியவரும்.

திருவேங்கட பாரதியின் செந்தமிழ்ப் புலமைபற்றியும் புகழ்ச்சியான சில தொடர்கள் நிகண்டுப் பாடல்களில் உள்ளன.

'தொகு புலமை மிக்கவன் பாரதி' (146)
'ஏன்ருசு கூறுங் கவிவேந்தன்' (200)
'முந்துதமிழ்ப் பன்னிய பாரதி' (293)
'வாதுகவிக் கேருனவன்' (319)
'கைக்கார் நிகரு மியறங்கு செந்தமிழ்ப்பாரதி' (473)
'மேன்மலை வாழ்முனி போல விலக்கணத்தான்
செந்தமிழ் நூல்தெரி பாரதி.' (665)

இவற்ருல், செந்தமிழ் நூல் பல ஆராய்ந்து இலக்கிய இலக்கணப் புலமை மிக்காராய்ப் பொதியமலை அகத்திய முனிவனைப்போல இவர் சிறந்து விளங்கினுர் என்பது தெரியவரும்.

இத்தகைய பெரும்புலமையாளர் இயற்றிய நிகண்டும் புலவர் போற்றும் பெருமை வாய்ந்தது என்பது சொல்லவும் வேண்டுமோ ?

'வண்டமிழின் செழுமைய தாகு
மிலக்கிய பாரதி தீபம்' (243)
'இயல் தெரிந்தோன் தென்சிலைச் செந்தமிழ்ப்
பாரதி தீபம்' (365)
'பாவலர் ஏற்றரி தாமுயர்
செஞ்சொலாற் சொன்ன பாரதி தீபம்' (473)

என வருவனவற்ருல் பாவலர் புகழ் பெருமை வாய்ந்த சிறப்புடைய நிகண்டு இலக்கியமாக இவருடைய நூல் திகழ்கின்றது என்பது விளக்கமாம்.

இவர் பெரும்பான்மையும் அடைமொழி அதிகமின்றிப் பெயர்களைத் தொகுத்து அமைத்துச் செய்யுள்களை இயற்றியுள்ளார். சிற்சில இடங்களில் மகடூஉ முன்னிலைகளையும் தந்துள்ளார். நூலுள் இருபத்துமூன்று இடங்களில், 'ஆரணங்கே' என்பது முதல் 'விளங்

கிழையே' என்பது ஈருகப் பதினேழு வகையான முன்னிலைகளைப் பயன்படுத்தியுள்ளார்.*

நூற் பொருளை எடுத்துரைக்குமிடத்து முந்தையோர் கருத்தாகப்—பழைய மரபுகளாகப்—பலவற்றையும் சுட்டி உரைப்பது திவாகரம், பிங்கலம் முதலிய நிகண்டு நூலார் மேற்கொண்டுள்ள முறையாகும். பாரதிதீபம் இயற்றிய திருவேங்கட பாரதியார் முந்தையோர் கருத்தாக ஏறத்தாழ 470 இடங்களில் குறிப்பிடுகிருர். என்ப, என்பர், என்பர்களே, என்பரே என்பனவற்றைக் கிட்டத்தட்ட 350 இடங்களில் குறிப்பிட்டுள்ளார். 'நன்னூனெறி கற்றவரே' (84), 'நன்னூனெறி கற்றுயர்ந்தவரே' (498) 'பாடல் பயிலும் பனுவற்றமிழ் தெரி பார்த்திபரே' (472), 'செந்தமிழ் நூல் கற்றுயர்ந்தவரே' (491), 'இயற்றகு நாவலர்' (438) எனக் கற்ற புலவோர் போற்றிய மரபுகள் எனச் சுட்டிக்காட்டுவதும் கருதற்பாலது. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றபடி இவரும், 'உலகே' (338, 530) 'எழுபுவியே' (212), 'நானிலமே' (507, 533, 541), 'பூதலமே' (224), 'மகிதலமே' (600), 'உலகோர்' (363) என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

பாரதி தீபத்தில் காணும் சிற்சில தனி ஆட்சிகளும் குறிப்பிடத் தக்கன. ரகரத்தை அடுத்து வல்லினம்வரும் வட சொற்களை எடுத்தாளும்போது வல்லினத்திற்கியைய றகரம் கொடுத்தே ஆளுகின்றனர். இரணியகெற்பன் (10), சற்பம் (180), கற்கடகம் (198). வட சொற்களிலுள்ள ரகரத்தைத் தமிழில் வல்லின றகரமாக வழங்குவதனைப் பசுந்தமிழ் என்பர் (தக்கயாகப். 35 உரை). எனவே, இவ்வாறு எழுதுதல் முற்காலத்து மரபு என்றே கொள்ளுதல்வேண்டும்.

சில சொற்களில் ககர தகரம் முதலிய வல்லினம் றகரமாக மாறி வழங்குதலும் காணலாம். தற்கோலம் (227), பற்பம் (237), பற்பநிதி (297), பற்பநாபன் (6) என வருவனபோல்வன மேலே சுட்டிய வகையினவாம்.

வடமொழி ஒலிப்புமுறையில் பகரமிட்டுச் சில சொற்கள் எழுதப் பட்டுள்ளன. இரேபதி (63), வேட்கோபர் (92), தாபரம் (214) முதலியன காண்க.

சில சொற்களின் உண்மை வடிவம் எது என்பதை அறியவும் இந் நிகண்டு உதவுகிறது. நண்டின் பெயர்களுள் ஒன்று 'களவன்'

---

*1. ஆரணங்கே 103; 2. ஏந்திழையே 64, 420, 422, 529; 3. ஒளிவளையே 63; 4. கோமளமே 89, 626; 5. சிறுகொடிப் பூவையரே 363; 6. திருந்திழையே 32; 7. துடியிடையே 67; 8. தெரியிழையே 175; 9. தோகையரே 172; 10. நன்னுதலே 638; 11. நிரைவளையே 98: 12. நேரிழையே 23, 380; 13. பைந்தொடியே 526; 14. மதர்விழியே 545; 15. மொய்குழலே 207, 376; 16. வாணுதலே 100; 17. விளங்கிழையே 531.

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS. LIBRARY. Date

என்பது. இச் சொல்லே எதுகையில் அமைத்துக் காட்டுதலால் (198) தெளிவாகும். முன்பு சிலர் இச் சொல்லைக் 'கள்வன்' என்று கொண்டது சரியன்று என்பதனை இது காட்டும். இது போன்றே கொளற்பொருட்டு என்பதனைத் தெரிவிக்கும் உரிச்சொல் தேவுதான்; தெவு (தெவ்வு) அன்று என்பதனைத் தெரிவிக்கும் வகையில், 'தேவு கொளற்பொருட்டே'(443) என மோனைத் தொடையில் இவர் அமைத் துள்ளமையால் தெளிவுபெறும்.

ஒருசில தமிழ்ச் சொற்கள் தமக்குரிய நேரிய வடிவத்திலன்றிச் சிறிது உருவம் பிறழ்ந்து காணப்படுகின்றன. மாதிரு (277), வல்லுழியே (159), சிகாவலம் (153), திமிங்கிலகீலம் (195), கந்திருவர் (35), மாபெலன் (38), அணிகம் (130), துடை (133) மிதலை (134), குருக்கண் (135), இலோதம் (144) மேழகம் (157), இலாங்குலம் (175), இத்தீ (202), செண்பகம் (202, 214), மாரோட்டம் (207) ஆம்பிலம் (207), வில்லுவம் (208), கரிக்காடு (216), எலவு (218).

அகரம் ஐகாரமாகப் போலி வடிவுடன் வழங்குதலும் சிலவிடத் துக் காணலாம். பிரளையம் (44), சதையம் (62), சமையத்தவர் (77), அபையன் (86), சையிந்தவம் (152). ஒருசில இடங்களில் சில எழுத்துப் பேதமும் இடம்பெறக் காணலாம். திருவிக்கிரமன் (8), விரிச்சிகம் (52), உத்திரம் (58), ஒந்திய (165).

சிற்சில புதுவடிவ அமைப்புக்களும் காணப்படுகின்றன. தானவர் கோபன் (11), குணதிசைக் காவன் (11) போல்வன கருதற் பாலன. இதளியங்கன் (4), நீலகன் (83), விலவங்கம் (163) என்பன போல ஒருசில இடங்களில் பொருள் விளங்காத சொல்வடிவங்களும் தென்படுகின்றன.

'குலீனர் என்ப குல முள்ளோரே' என்னும் திவாகரத்திற்கு (மக்கட் பெயர்) நேர்மாறாகக் 'குலீனர் குலமில்லவர்' எனப் பாரதி தீபமுடையார் (105) கூறுகிறார். இச் சொல்லைக் 'குல ஈனர்' என்று பிரித்துக்கொண்டு அதன் பொருளை இவர் பிறழ உணர்ந்தார்போலும். கயாதரரும் இவரைப் போன்றே 'குலீனன் குலமில்லவன்' (113) என்று உரைப்பர். இதனாலும் இவ்விரு நிகண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கருதலாம்.

இதுவரையிலும் அச்சிடப் பெறாமல் மிகவும் அருகியுள்ள இந் நூலின் சுவடி ஒன்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத் தில் உள்ளமை தெரியவந்தது. இதற்கு மாற்றுச் சுவடி வேறு எதுவும் இங்குள்ள சுவடி நிலையங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. இலங் கையில் இந்நூலின் பிரதிகள் கிட்டுமா என்பது இந்நூல் வெளி வந்து உலாவுகின்ற காலத்து ஒருகால் தெரியவரலாம். இலங்கையில் வழங்கிய சுவடி இச் சுவடிக்குச் சற்று மாறுபட்டது என்பதனைச் சதாசிவம் பிள்ளை எழுதிய குறிப்பிலிருந்து மேலே கண்டோம். இதற்கு இன்னும் சுவடிகள் இனிக் கிட்டுமானால் இந்நூல் மேலும் செப்பமுற அமைதல்கூடும்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தைச் சார்ந்த உதவியாளர் திரு. சாயிராம் மூலப்பிரதியை எடுத்து எழுதத் தொடங்கிய நேரம் நல்ல நேரம். அச்சுருவம் பெறும் வாய்ப்பை இந்நூல் பெற்றது. இப்பொழுது நூல் நிலையக் காப்பாளராயிருக்கும் பாலகவி மு. கோ. இராமன் அவர்கள், நூற் சுவடிகள் கெட்டுப்போவதன் முன் விரைந்து அச்சிடப் பெற வேண்டும் என்பதில் பெரு விருப்பமுடையவர். அச்சேருத நூல்களை அறிமுகம் செய்து வைக்கும் பணியைத் திங்கள்தோறும் விடாது நூல் நிலையத்தில் நடத்திவருவது ஒன்றே அவருடைய ஆர்வத்திற்குத் தக்க சான்றும். அவர்கள் திரு. சாயிராம் பெயர்த்து எழுதிய பிரதியை நிலையப் பண்டிதருடன் கூடி ஒப்பு நோக்கிப் பிரதிசெய்து தந்து, சென்ற ஆண்டு நவம்பர்த் திங்களில் (25—11—'79) இதனை நூல் நிலையத்துக்காக அறிமுகம் செய்து வைக்கவும் வழிவகுத்துத் தந்தார்கள். அவர்கள் தந்த ஊக்கத்தால்தான் இந்நூலை அச்சிடும் பணியில் முனையலானேன். இதற்குக் காரணகர்த்தர்களான திரு. மு. கோ. இராமன் அவர்களுக்கும் முதலில் பிரதிசெய்த திரு. சாயிராம் அவர்களுக்கும், மற்றும் நூல் நிலைய அன்பர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த ஏடு டாக்டர் உ. வே. சாமிநாதையர் தேடித் தொகுத்த எண்ணற்ற தமிழ்க் கருவூலங்களுள் ஒன்று. இதனைத் தேடி வைத்த ஐயர் அவர்களுக்கு முதல் வணக்கமும் நன்றியும் உரியவாம். அவர்கள் அந்நாளில் சுவடிகளைத் தொகுத்து வைக்காமல் போனால் இந்த ஓரேடு கூட இல்லாமல் போயிருக்குமே. இந் நிகண்டு நூல் வரலாற்றுக் கேள்வியளவில் நின்று விடாமல் முழுமையாய் வாசித்து அறியும் வாய்ப்பு ஐயர் அவர்களின் திருத்தொண்டினுல் நேர்ந்துள்ளது. தமிழ்த் தாத்தாவாய் இருந்து பெருந்தொண்டு செய்து மறைந்த தமிழ்த் தெய்வமாகிய ஐயர் அவர்கள் இப் பதிப்பினை வாழ்த்தி நல்லாசி வழங்குவார்கள் என்பது திண்ணம்.

இந் நிகண்டினைச் செப்பஞ் செய்வதற்கு நான் ஏற்கெனவே ஆராய்ந்து கொண்டிருந்த திவாகரமும் கைகொடுத்து உதவியது; கயாதர நிகண்டும் பயன்பட்டது. ஏடுகளில் சிற்சில இடங்களில் பூச்சிகளால் துளைபட்டும் பொடிந்தும் போயுள்ள பகுதிகளை ஊகித் துணர அவை துணைநின்றன. ஊகமாகத் தீர்மானித்தவற்றை எல்லாம் பிறைவளைவுக்குள் அமைத்துள்ளேன். முற்றும் சிதைந்த பகுதிகளில் புள்ளிகள் அமைத்துக் காட்டியுள்ளேன்.

பாரதி தீபத்தின் மூலச்சுவடி 37 செ. மீ. நீளமும் 2½ செ. மீ. அகலமும் உள்ளது; 70 இதழ்கள் கொண்டது. இருபுறமும் எழுதப்பட்டுள்ளது. பக்கத்திற்கு 6 அல்லது 7 வரிகள் எழுதப் பட்டுள்ளன. 70ஆம் ஏட்டின் முதற்பகுதியோடு நூல் முடிகிறது; கடைசி இதழின் பின்பக்கம் வெற்றிடம். நூற் பெயர் 'பாரதி தீபம்' என்பது தொடக்கத்தில் தனிப்பட தலைப்போரத்தில் எழுதப் பட்டுள்ளது. தொகுதிப் பெயர்களும் அவ்வாறே தலைப்பகுதியில்

தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் அமைந்த கலித்துறைகளுக்குத் தனித்தனித் தொடர் எண் தரப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் பின்வரும் குறிப்புக் காணப்படுகிறது.

> "ஆகத் தொகுதி பன்னிரண்டிற்குக் கலித்துறை
> 663 சிவமயம் பிரமாதூத ஞூ பங்குனி மீ 11 உ
> செவ்வாய்க்கிழமை திரிதிகை சித்திரை நட்சத்திரம்
> பெற்ற தினத்தில் பாரதிதீபம் எழுதி முற்றின.
> சிவமயம்."

நூல் முழுமையுமாக 665 பாடல்கள் உள. அங்ஙனமாகவும் இறுதிக் குறிப்பில் 663 என்பது பிழையாகும். பன்னிரண்டாம் தொகுதியில் 18, 19, 20 ஆம் பாடல்கள் எழுதப் படவில்லை; மூன்று பாடல்கள் எழுதத்தக்க அளவு ஏட்டில் வெற்றிடம் விடப் பட்டுள்ளது. இந்த ஏட்டிற்கு மூலமான ஏடும் இவ்வாறிருந்ததோ, அன்றி அவை எழுத இயலாத வகையில் பழுது பட்டிருந்ததோ — ஒன்றும் சொல்லக் கூடவில்லை. இந் நிகண்டிற்கு இன்னும் வேறு சுவடிகள் கிட்டினுல்தான் இத்தகைய பகுதிகளில் தெளிவு பிறக்கும்.

பாடல்களில் அமைந்துள்ள பொருள்கள் விளங்கும் வகையில் உரிய தலைப்புகள் தந்துள்ளேன். இவற்றின் துணையால் பாடலில் இடம் பெற்றுள்ள பொருளுக்குரிய பெயர்கள், பொருள்கள் முதலியன எளிதில் விளக்கமாகும். மூல ஏட்டில் கண்டவாறே சந்திகள் பிரிக்கப்படாமலேயே மூல பாடம் அமைக்கப்பட்டுள்ளது. உரிய பொருள் பெயர்களின் மூலங்களை சொற்பொருளாய்வாளர் பிரித்துக் காணுதல் வேண்டும். உரிய சொற்கோவையைப் பிரித்துத் தனியாக உரைபாடம் அமைத்தால்தான் எல்லாரும் எளிதில் அறிதல் கூடும். அதற்குரிய கால அவகாசம் இன்மையாலும், நூலின் அளவுமிகப் பெருகுமாதலாலும் தலைப்பு மட்டும் தந்து இப் பதிப்பினை அமைத்துள்ளேன். இனி, வருங்காலத்தில் உரை பாடத்துடன் கூடிய பதிப்பும் வெளியிடப்படுதல் வேண்டும்.

நூலின் இறுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதி சேர்த்துள்ளேன். அடுத்து முதற் பத்துத் தொகுதிகளின் பொருளடக்கம் தொடர் எண் குறிப்புடன் அகராதியாக அமைத்துத் தரப்பட்டுள்ளது. இறுதியில் பதினொராந்தொகுதியில் அமைந்த பல பொருள் ஒருசொல், பன்னிரண்டாம் தொகுதியில் இடம்பெற்ற பல்பொருட்கூட்டத்து ஒருபெயராகிய தொகைப் பெயர் முதலியனவும் கொண்ட தனி அகராதியும் தரப்பட்டுள்ளது. சொற்பொருள் விளக்கம் காண இந்த அகராதி பெரிதும் துணைசெய்வதாகும்.

ஓர் ஏட்டின் துணைகொண்டு ஒரு நூலினைப் பதிப்பிடுதல் எத்துணை இடர்ப்பாடுடையது என்பதனை இத்துறையில் வல்ல அறிஞர் நன்கு உணர்வர். வாசிப்பதில் ஒன்றிரண்டு பிழைகள் எங்கானும் நேர்ந்திருத்தல் கூடும். அவற்றை அறிஞர் பெருமக்கள் எடுத்துக் காட்டுவார்களானல், இனிவரும் பதிப்பு நன்கு அமைய வழி

பிறக்கும்; அவர்கள் பெயர்களையும் நன்றியறிதலுடன் குறிப் பிடுவேன் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதனைத் தமிழாய்வு இதழில் வெளியிட ஊக்கம் தந்த தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர் களுக்கு நன்றி. இதனைத் தனி நூலாகவும் வெளியிட அனுமதி வழங்கிய துணை வேந்தர் பெருந்தகை திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும் மிக்க நன்றி.

இதனைச் சீரிய முறையில் அமைத்து அச்சிட்டு உதவிய அவ்வை அச்சுக்கூட உரிமையாளர் திரு. வே. சேஷாசலம் அவர் களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் என் நன்றி என்றும் உரிய தாகும்.

தமிழகராதி திருத்தமுற அமைவதற்குத் தமிழில் உள்ள நிகண்டு நூல்கள் எல்லாம் வழிகாட்டி உதவுவனவாம். எனவே, தமிழில் தோன்றியுள்ள எல்லா நிகண்டுகளும் திருத்தமுறப் பதிப்பிக்கப் பெறுதல் மிகமிக இன்றியமையாதது. இதனைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியராகிய பேரா சிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் தாம் அப்பணியை ஏற்றுக் கொண்டதுமே உணர்ந்தார். அதனால் முக்கியமாக நிகண்டுச் சுவடிகளைத் தொகுப்பதிலும் அவற்றை அச்சிடுவதிலும் அவர் முனையலானார், 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி' என்னும் பொது மகுடத்துடன் அவர்கள் பதிப்பித்த முதல் நிகண்டு 'நாம தீப நிகண்டு'. இதன் முன்னுரையில்,

> "சூடாமணி நிகண்டொன்று தவிர அச்சில் வந்துள்ள மற்றைய நிகண்டுகட்கு இதுவரை நல்ல பதிப்புக்களே கிடையா. பல நிகண்டுகள் அச்சியற்றப் பெறவே யில்லை. நிகண்டுகள் செவ்வையாய் அச்சிடப்பெரு விடின் தற்காலத்தே அத்தியாவசியமாக வேண்டப் படும் தமிழகராதி திருத்தமெய்திப் பெருநலம் பயப்ப தாகாது. வடமொழி நிகண்டுகள் பல 'Sources of Sanskrit Lexicography' என்ற கிரந்த மாலையில் ஐரோப்பிய அறிஞரால் வெளியிடப்பட்டுள்ளமை இங்கே நினைப்பூட்டத் தக்கது, யான் பதிப்பிக்கும் தமிழ் நிகண்டுகளும் 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி' என்ற மகுடத்துடன் வெளிவரும். இத் தொகுதியில் நாமதீப நிகண்டு முதலாவதாகும்." *

என்று எழுதியுள்ள செய்திகள் சிந்தித்ததற்குரியன. இதனைத் தொடர்ந்து அரும்பொருள் விளக்க நிகண்டு, கயாதர நிகண்டு

---

* நாமதீப நிகண்டுப் பதிப்பு, 1930; முன்னுரை பக். viii.

என்பவற்றையும் செப்பமுறச் சீரிய முறையில் பதிப்பித்து அவர்கள் வெளியிட்டனர்.

பேராசிரியர் அவர்களுடனிருந்து பணியாற்றியபோது அவர்களுடைய விருப்பத்தினை நன்கு அறிய இயன்றது. அவர்கள் சென்ற வழியைப் பின்பற்றி நிகண்டு நூல் வெளியீட்டில் ஈடுபட வேண்டும் என்னும் அவா எனக்கு இயல்பாகவே ஏற்பட்டிருந்தது. தமிழ்க் கலைக்களஞ்சியம் ஆறுவது தொகுதியில் தமிழ் நிகண்டுகளின் வரலாற்றை விளக்கமுற எழுதும் வாய்ப்பும் (பக்கம் 437-440) எனக்குக் கிட்டியது. பேராசிரியரின் கொள்கை உந்துதலால் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியுடன் திவாகரத்திற்கு ஓர் ஆராய்ச்சிப் பதிப்புக்கான அடிப்படைப் பணி செய்ய இயன்றது.

திவாகரத்திற்குப் பின்னர் அதனை அடியொற்றிவந்த அது போன்ற தனிச் சிறப்புடைய நிகண்டு பாரதிதீபம் ஆகும் என்பதனை அவர்கள் சொல்ல அடிக்கடி கேட்டிருக்கிறேன். டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய அன்பர்களின் தூண்டுதலும் ஒத்துழைப்பும் இப் பாரதிதீப நிகண்டினை முற்படப் பதிப்பிக்கும் பேற்றினை நல்கியுள்ளன. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தொடங்கி வைத்த நிகண்டுப் பதிப்புப் பணி இன்றும் தொடர்கிறது. பக்கத்திலிருந்து அவர்கள் வழிகாட்டி உதவுவது போன்ற உணர்ச்சியுடன் இப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வந்துள்ளேன். என்றும் அவருடைய ஆசி இருந்து கொண்டிருக்கும் என்னும் துணிவுடையேன், அவருடைய திருவடிகளை வணங்கி வாழ்த்தி, இம் முகவுரையைத் தலைக்கட்டுகிறேன். இறைவன் திருவருளை எண்ணியெண்ணி மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகிறேன்.

சென்னை
30—6—80

மு. சண்முகம் பிள்ளை

பொருளடக்கம்

		பாடல்	பக்கம்
1.	தெய்வப் பெயர்த் தொகுதி	74	1
2.	மக்கட் பெயர்த் தொகுதி	72	12
3.	விலங்கின் பெயர்த் தொகுதி	54	23
4.	மரப்பெயர்த் தொகுதி	43	31
5.	இடப்பெயர்த் தொகுதி	50	38
6.	பல்பொருட் பெயர்த் தொகுதி	26	46
7.	செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி	46	50
8.	பண்பு பற்றிய பெயர்த் தொகுதி	58	57
9.	செயல் பற்றிய பெயர்த் தொகுதி	50	66
10.	ஒலி பற்றிய பெயர்த் தொகுதி	33	74
11.	ஒரு சொற் பலபொருட் பெயர்த் தொகுதி	84	79
12.	பல பெயர்க் கூட்டத்தியற் பெயர்த் தொகுதி	75	92
	செய்யுள் முதற் குறிப்பு அகராதி		103
	முதற் பத்துத் தொகுதிகளின் பொருளகராதி		110
	11, 12 ஆம் தொகுதிகளில் விளக்கம் பெற்ற சொற் பொருள்கள்		126

பாரதிதீபம்

முதலாவது

தெய்வப் பெயர்த் தொகுதி

சிவன் பெயர்*

1. அரனிறை வன்சிவன் சங்கரன் நித்தனம லன்கங்கா
தரனுமை பங்கன் மலைவில்லி தற்பரன் ருணுச்சம்பு
புரதக னன்புனி தன்பிறை சூடி புலியதளோன்
பரசு தரன்கயி லாயன் கபாலி பசுபதியே. 1

2. மழுவாளி யானையுரித் தோன்முக் கண்ணவன் மானிடத்தோன்
றழலார் கரன்பித்தன் பிஞ்ஞகன் சூலதரன் பெருமான்
கழையான் முத்தன் றிரியம்பகன் காளகண் டன்பணிலக்
குழையான் பிநாகியை யானன னுதிசெங் கோலத்தனே. 2

3. விடையவன் காம தகனன்கங் காளன் விமலன்சித்தன்
சுடலையி லாடி கறைக்கண்டன் கூற்றுதைத் தோன்சடையோ
னடநவில் பாத னன்னுரி பாகத்த னுதன்விடைக்
கொடிய னுருத்திர னீறணிந் தோன்முடிக் கொன்றையனே. 3

---

* 1. இத்தலைப்பினைப் போலவே பின்வரும் தலைப்புகளிலும் திருமால் பெயர், பிரமன் பெயர் என்றாற்போலப் 'பெயர்' என்பதனைச் சேர்த்துப் படித்துக்கொள்க.

2. ஒரு பொருளுக்கு உரிய பெயர்கள் பல பாடல்களில் தொடர்ந்து அமைவதும் உண்டு.

3. சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களும் ஒரு பாடலில் இடம் பெறுதல் காணலாம்.

4. இன்னும் சில இடங்களில் குறித்த ஒரு பொருளின் பெயர் அடுத்து வரும் பாடலின் முதற் பகுதியில் தொடர்ந்து வருதலும் உண்டு. அவ்வாறு பாடலின் பகுதி அளவில் தொடரும் இடங்களில் தொடர்ச்சிநிலை காட்ட அப் பொருள்-தலைப்பு மீண்டும் தரப்பட்டுள்ளது.

5. தொடர் எண்களும் பொருள்-தலைப்புகளும் பதிப்பாசிரியரால் சேர்க்கப்பட்டன ஆகும்.

4. பிறப்பிலி கண்ணுத லீசன்பெம் மான்பெண் ணிடத்தனத்தன்
மறைத்தவன் யோகி மதிசூடி யோனந்தி வண்ணனம்ப
னிறைப்பணி யாபர ணன்பாண் டரங்க னிதளியங்கன்
கறைக்கடு வுண்டவன் காமாரி காலனைக் காய்ந்தவனே. 4

திருமால்

5. மாதவ னச்சுதன் வாமனன் கோவிந்தன் மாயன்மது
சூதனன் கண்ணன் முராரி முகுந்தன் றுளவணிந்தோன்
சீதரன் கேசவன் ருனுந்தி பூத்தோன் றிருவின்பிரான்
பீதக வாடையன் சங்காழி யேந்தி பெரியவனே. 5

6. அரிநெடு மாலவன் ருமோ தரனர விற்றுயில்வோன்
கருட பதாகையன் காகுத்த னத்தன் கமலக்கண்ணன்
பரியுரு வானவன் பாற்கட லோன்பற்ப நாபன்பச்சை
மரகத மேனியன் பஞ்சா யுதன்கடல் வண்ணத்தனே. 6

7. விண்டு நராந்தகன் சாரங்க பாணியன் வெற்பெடுத்தோன்
கொண்ட னிறத்த னுலகளந் தோன்குஞ் சரமுதைத்தோன்
வண்டுரு வத்தன் கருணு கரனர வாளரிபா
ருண்டவன் கோவல னுரா யணன்புரு டோத்தமனே. 7

8. கடற்றுயில் வண்ணன் றிருவிக் கிரமன் கவிப்பின் சென்ருேன்
படப்பணி யாடி பரந்தாம னித்தன் படியிடந்தோ
னிடைக்குல நாத னுபேந்திர மூர்த்தி யிறையவனேழ்
விடைக்கெதி ராமவன் காயா மலர்வண்ணன் விண்ணவனே. 8

பிரமன்

9. போதக னுந்தியில் வந்தோன் படைத்தவன் பூமிசையோ
னேதிம வாகனன் வேதா விரிஞ்ச னுபநிடத்து
நாதன் பிதாமக னுன்முகன் மான்மக னுண்மலரோன்
வேதன் புனிதன் விதாதா முதுவன் விதியயனே. 9

10. இரணிய கெற்பன் பரமேட்டி மண்பொதுத் தந்தையிறை
குரவனெண் கண்ணினன் ருதா வெகினக் கொடியுடையோன்
பிரமன் வரன்புவி தந்தோன் மறையவன் பீதகஞ்சே
ருருவன் புராதன னம்போ ருகத்தி லுறைபவனே. 10

இந்திரன்

11. வானவன் வேள்விப் பிரான்பாக சாதனன் மஞ்ஞையுரு
வானவன் கோகில வண்ணன் வலாரி யரியமரர்
கோனச லத்தின் சிறகரிந் தோன்குலி சப்படையோன்
ருனவர் கோபன் குணதிசைக் காவன் சசிபதியே. 11

12. புரந்தரன் வாசவன் விண்ணோ ரிறையவன் பொன்னகரிந்
திரன்புனி தன்வெள்ளை வாரணத் தோன்வச் சிரகரத்தோன்
றருந்தரு வாளி சதக்கிரு தாகண் டலன்மகவான்
கரும்புய லூர்தி சுரர்பதி யாயிரக் கண்ணினனே. 12

முருகன்

13. முருகன் கடம்பன் குமரன் சுவாமி முதலவன்சேய்
குருகின் பெயரிய குன்றெறிந் தோன்கொடிச் சேவலன்வேற்
கரன்கந்த னாறுமு கன்வள்ளி நாயகன் கார்த்திகையன்
சுரர்தம் பதியளித் தோன்செட்டி வேலன் றெழுபவனே. 13

14. சூத குலாரி நகாரி சரவணத் தோனறுமீன்
காதலன் சூர்ப்பகை சேந்தன்செவ் வேள்பொழி கார்க்குறிஞ்சி
நாதன் சிகாவள வாகனன் சேய்வெட்சி நாண்மலரோன்
ருதவிழ் காந்தளந் தாரோன் விசாகன்சொற் சண்முகனே. 14

விநாயகன்

15. சங்கரன் மைந்தன் விநாயகன் சண்முகன் றன்முன்வந்தோ
னோங்கர னானை முகத்தோன் கணபதி யாகுபரிப்
புங்கவன் மால்மரு கன்றெற்றைக் கொம்பன் பொழி
[மதத்தோன்
பங்கய மோதகம் பாசாங் குசம்பயில் பாணியனே. 15

மன்மதன்

16. மார னனங்கன் மதன்சம்ப ராரி மதிக்குடையோன்
காரிருள் வாரணன் பூவாளி மன்மதன் கந்தர்ப் பன்வே
ளாரவில் லாளி குயிற்கா களத்தனைந் தம்புடைய
வீரன் வசந்தன் ரதிபதி மீனவன் வில்லவனே. 16

மன்மதன், வயிரவன்

17. காமன் மனோபவன் சித்தச னன்கரும் பாளிகடல்
மாமுர சன்றென்றற் றேரோன் மகரக் கொடியவனுஞ்
சாமளன் காரி வடுகன் வயிரவன் சாத்தனையன்
றீமையில் காரியன் சாத வாகனன் சிவன்மகனே. 17

குபேரன்

18. இருநிதி யாளி குபேரன் றனத னெரிவிழிசே
ரரனுயிர் நண்ப னிதிக்கோ னியக்க னளகைப்பிரான்
பொருளிறை பிங்கல னுத்தர திக்கனன் புட்பகன்மந்
திரிகன செல்வ னரவா கனன்வச் சிரவணனே. 18

அருகன்

19. அருக னசல னறவாழி யந்தண ஞதியண்ணல்
வரதன் சினவரன் பொன்னெயில் நாதன் மலரின்வந்தோன்
பரமன் புனித னதிகுண னெண்குணத் தோன்பகவன்
விரதன் சினேந்திரன் புண்ணிய மூர்த்தி விளங்கொளியே. 19

20. பூரணன் பண்ணவன் வேஷீவென் ரேன்முக் குடைப்புங்கவன்
வீரன் றிகம்பரன் விண்ணவன் றேவன் விறன்முனிவன்
காரணன் சாந்த னருளாளி வேந்தன் கலையுணர்ந்தோன்
பேரரி யாசன ஞசா னசோகின் பெருந்தகையே. 20

புத்தன்

21. அண்ண லருங்கலை நாயகன் போதிய வன்பகவன்
புண்ணிய ஞதி முதல்வன் புனிதன்சொற் புங்கவன்மெய்த்
தண்ணளி யாளன் சிவன்வரன் புத்தன் றருமவருள்
நண்ணிய செல்வ னகளங்கன் பூவி னடந்தவனே. 21

22. சாந்தன்முக் குற்றங் கடிந்த பிரான் பஞ்ச தாரைவிட்டோன்
மாந்தர்க் கருளிடு வோனேக தேவன் மறைவயிரி
காந்த னனந்த விலோசன ஞதி கடவுளரி
யேந்திய நீழலன் வாமன்சிங் காதன மேற்றவனே. 22

யமன், யமபடர்

23. சமனன் செங்கோ லிறைசண்டன் மறலி தருமன்றென்ன
னமனந் தகன்யமன் வெங்காலன் கூற்று நடுவனென்பர்
அமர்வெஞ் சமன்சண்டன் வெங்கூற்றுக் கால னடன்மறலி
நிமிர்தண் டதரன் யமன்படர் பேரென்பர் நேரிழையே. 23

பார்வதி

24. ஆரியை சத்தி யயிராணி யம்பிகை யாளகண்ட
பூரணி வல்லி யுமைசங் கரிமுப் புவியளித்த
காரணி முக்க ணிமைய மடந்தை கவுரியரன்
பாரி புராதனி யெண்ஞன் கறஞ்செய்த பார்வதியே. 24

கங்கை

25. சீநதி சிந்து நதிசுர ராறு திரிபதகை
வானதி யாபகை மந்தா கினிவி மலைதவள
மான பகீரதி யாகாச காமி யமரர்நதி
தீநெறி மேவிய பாவங்க டீர்க்குஞ் சிவகங்கையே. 25

திருமகள்

26. பானிற வாரி யமுதத்துள் வந்தவள் பைந்துளவோன்
மேனியில் வாழும் விபுத புராதனி வேண்டுமின்ப
மானவை நல்கு மபிராமி மாப்பொறி யாக்கஞ் செல்வி
பூநல னுற்றவள் செய்யவ ளிந்திரை பொன்றிருவே. 26

காளி

27. சண்டிமுக் கண்ணி பயிரவி தாருகற் காய்ந்தவள்சா
முண்டியெண் டோள்வல்லி யாமளி காளி முடிக்கவுரி
மண்டிய பேய்க்கொடி மாகாளி யோகினி மாரிவடக்
கொண்டொடி மாதிரு வேதாளி யாளியை யூர்பவளே. 27

காளி, மூதேவி

28. காரியைப் பெற்ற கொடிக்காடு காள்கொற்றி கார்வடுகி
சூரிசொன் மாரி சுடர்மூ தணங்கென்பர் தொன்முகடி
காரிருட் காக்கைக் கொடிச்சி கலதிதவ் வைகழுதை
யூரிதிரைச் சேட்டையள் மூதேவி கேட்டையென் றேதுவரே. 28

கலைமகள்

29. நாமகள் பாரதி கீர்வாணி வெள்ளை நளினவல்லி
பாமகள் சொல்லின் கிழத்தி கலைமகள் பானிறத்தி
தாமரை யாசன நாரி பனுவற் றமிழ்மடந்தை
தேமல்கு சாவித் திரிவாணி காயத்திரி யென்பரே. 29

கொற்றவை

30. மாலுக் கிளையவள் நாரா யணிகு மரிகவுரி
பாலைக் கிழத்தி பகவதி பண்ணம் பணத்தியையை
நீலிச் சயத்தி மயிடனைக் காய்ந்தா ணெறிவிசையை
யோலப் பணிலத்தி கார்த்திகை கேசரி யூர்திருவே. 30

கொற்றவை, இந்திரன் தேவி

31. மேதித் தலையவ ளெண்டோளி விந்தை விறற்கொற்றவை
காதிப் பொருகன்னி யந்தரி பேரென்பர் கற்பகத்தின்
போதுற்ற வல்லி சசியயி ராணி புலோமிசைமெய்த்
தீதற்ற சுந்தரி யிந்திரன் றேவி செறிபெயரே. 31

யோகினி, வானவர் மாதர், தெய்வப்பெண் பொது

32. மாய மடந்தை வலவை யிடாகினி வஞ்சனிசூ
ராயவள் சண்பனி யோகினி தானென்ப ராலரம்பை
தூயர மாதென்பர் வானவர் மாதரைச் சூரணங்கு
சேயதெய் வப்பொதுப் பெண்பெய ராகுந் திருந்திழையே. 32

தேவர்

33. வானவர் தேவரிமை யோர்புத் தேளிர் வரர்விபுதர்
தானவர் மாற்றல ரண்டர்விண் ணோரமு தாசனர்மெய்ஞ்
ஞான விலேகர் புலவோ ரமரர் நலக்கடவு
ளானவ ராதித்த ரும்பர்பொன் னூட்டி லமர்ந்தவரே. 33

கடவுட் பொது, அசுரர், இராக்கதர்

34. பகவர்பட் டாரகர் புங்கவர் பண்ணவர் தீர்த்தரென்றே
புகலுங் கடவுட் பொதுப்பே ரவுணர் பொருமசுரர்
தகுவர் தயித்தியர் தானவர் நான்கும்நி சாசரரு
மிகலு மரக்கர் நிசிசர் நிசாச ரிராக்கதரே. 34

அரக்கரினத்தவர், விஞ்சையர், கந்திருவர்

35. கரையாது தானர் நிருதர்வெஞ் சால கடங்கடரு
முரைசா ரரக்க ரினத்தவர் விஞ்சைய ரோங்குவித்தியா
தரர்கே சரரென்பர் கின்னரர் வீணைத் தனுவினர்தந்
திரர்யா முடையவ ரென்னலு மாங்கந் திருவரையே. 35

பசாசு

36. கழுது பசாசு பிரேதகஞ் சோகு கடிகண் மண்ணே
யழலுமிழ் கூளியின் வேதாளஞ் சாவோ டணங்கலகை
பழிதரு கூளி கிருத்திமஞ் சாதகம் பாரிடமா
மொழிதரு பூதங் கணங்குற ளாக மொழிகுவரே. 36

ஆகாயம், காற்று

37. அம்பர மாசினி யாகாய மந்தர மண்டமங்குல்
உம்ப ரிடங்குடில் விண்வெளி மாக முயர்ககன
மம்பரம் வானம் விசும்பென்பர் வந்துப் பரிசனன்வா
தம்பவ னங்கொண்டல் கோடை சமீரணன் சதாகதியே. 37

காற்று, தென்றல்

38 ஊதை மருத்துவங் கூழ்கா லனில முலவைவளி
கூதை யுயிர்ப்பரி மாருத மாபெலன் கோதையொலி
சீதளவாடை வெங் காற்றென்பர் தென்றறென் காலிரத
வாதம் வசந்த மலையா னிலமந்த மாருதமே. 38

மேல்காற்று, குளிர்காற்று, வடகாற்று, கீழ்காற்று, சுழல்காற்று, அங்காரகன்

39. குடகாற்றுக் கோடை குளிர்காற்றுக் கூதையு மூதையுமாம்
வடகாற்று வாடை வடந்தை குணதிசை வந்துகொண்ட
லடர்காற்றுச் சூறை வளியே சுழலு மனிலமென்பர்
சுடர்தீக் கனலன லோன்சுசி யாரழல் தூமத்தனே. 39

அங்காரகன், நெருப்பு

40. அரிதக னன்றழல் பாவகன் வன்னியங் காரகன்பே
ரெரிபுவ மானன் ஞெகிழி யுதாசன னேகனலி
திரிகுணன் வாயு சகன்சித் திரபானுச் சிகிசுவலன்
நிரையெழு நாவன் றனஞ்செய னங்கி நெருப்பென்பரே. 40

ஊழித்தீ, தீக்கடைகோல், விளக்கு, தீக்கடவுள்

41. தாழும் வடவை கடையிற் கனலுத் தரமடங்கல்
ஊழியி னங்கி ஞெலிகோல்செந் தீக்கடை யுங்கொழுங்கோல்
சூழுஞ் சுடர்விளக் குந்தீப மென்பர் சுடர்க்கனலில்
வாழு மணங்குவெம் பாவக னுக வகுத்தனரே. 41

நீர்

42. வாரி சலஞ்சலி லந்தோய மம்பு வனம்புவன
நீருத கம்பயம் வார்பாணி யங்குசம் நீரமப்பு
நார மயஞ்சம் பாங்கங் கமலம்பு னல்லறலாஞ்
சேரம் புதமலர் கீலாலங் கோவுறை சீவனமே. 42

மேகம்

43. மேகம் வருணம் முகில்சீமூ தம்விரி புட்கரமே
யாகுங் கவந்தங் கனரதஞ் சீவனி யாமமுதம்
பாகங்கொள் பரண்டம்நற் பானீய மாமள கம்பரதம்
போகங்கொள் காண்ட மும‌ப்பெய ராகப் புகன்றனரே. 43

பெருவெள்ளம், நீர்க்கடவுள், சூரியன்

44. வாரி பிரளயம் நீத்தம் பெருவெள்ள மாம்வருணன்
நீரிறை பாச தரன்பாசி யென்று நிறைகிரணன்
சூரிய னுதவ னென்றூழ் கலைி சுடர்க்கதிரோன்
மேரு வலஞ்செய் யரியினன் பானு விருச்சிகனே. 44

சூரியன்

45. தரணி தினகரன் வெய்யோன் றபனன் சலசபதி
யிரவி திவாகரன் ஞாயிறு பாற்கர னெல்லைகதிர்
பருதி பகலவன் சான்றோ னருக்கன் பதங்கனொளி
யருண னிருள்வலி மார்த்தாண்டன் காலைய னுதித்தனே. 45

சந்திரன்

46. மதியம் புலிதிங்கள் மானிடத் தோன்மறு மண்டலத்தோன்
விதுவிந்து வேளின் குடையா முடுபதி வெண்பிறைய
முதகதி ரல்லவன் சோமன் சசிகு முதமலர்த்தும்
பதிசந் திரனிர வாளி குபேரன் பனிக்கதிரே. 46

செவ்வாய், புதன்

47. சேயரி வன்குசன் வக்கிரன் பூமகன் றீயுருவம்
ஆயவங் காரகன் செவ்வாய் நிலமக ஞரலென்பர்
தூய மதிமகன் பாக னருணன் மெய்த் தூதுவன்மால்
மேய கணக்க னணுவளி பண்டிதன் மேதையனே. 47

புதன், வியாழன்

48. புந்திதன் சாமன் றனவன் புலவன் புதன்றெளியுஞ்
சிந்தைய னென்பர் குருவிதி யந்தணன் றேவர்குரு
மந்திரி பீதக ஞண்டளப் பான்பொன் மதிமறையோன்
பைந்தரு வாளிதன் ஞசான் வியாழம் பகற்பதியே. 48

வெள்ளி, சனி

49. திங்கள் பிரசுரன் சல்லியன் வெள்ளி சிதன்பளிங்கே
சுங்கவன் மந்திரி மாமழைக் கோள்புகர் சுக்கிரன்பேர்
பங்கு சவுரி முடவன் க(ரியவன்) ....
(த)ங்கிய கீழ்மகன் மந்தன் சனிசந்திர சாவகனே. 49

அனந்தன், இராகு, கேது, மேடராசி, இடபராசி

50. சேட னனந்தன் கரியோ னிராகுச்சிவந்தவண் ணன்
கூடிய கேது (க் கொறி மையுதள) ... வருடை
மேட விராசி பசுமுரி யேறுவெம் பாறல்புல்ல
மாடர் பாண்டி லிடப விராசிக்கு வாய்த்ததுவே. 50

மிதுனம், கர்க்கடகம், சிங்கம்

51. இவரு மியாழ் மறிதண்டு பாடவை உவ ளெயிரமடை
சவைமக ளாகு மிதுன விராசி தயங்குகுளிர்
கவையடி ஞெண்ட லவன்கள வன்கற் கடகமென்பர்
திவளரி மாப்புலி யாளியை யானனஞ் சிங்கத்ததே. 51

கன்னி, துலாம், விருச்சிகம், தனு

52. நிலமிகு பெண்பெயர் கன்னி யிராசி நிறைக்கட்டளை
துலைகுல வாணிகன் கோனிறுப் பானுந் துலாத்ததென்பர்
நலமிகு தேள்தெறுக் கால்பறப் பானென நாட்டியபேர்
தலைமை விரிச்சிகங் காண்டீபஞ் சாபந் தனுவென்பரே. 52

மகரம், கும்பம், மீனம், அசுபதி, பரணி

53. குலமீன் சுறவு கலைமக ரங்குயஞ் சாடிகும்ப
மலைமீன் பலபெயர் மீனமென் ரேதுவ ரைப்பசியே
தலைநா ளிரலை பரியே யசுபதி தாசிசுல்லி
பலகான மீன்தரு மன்னு ளடுப்புப் பரணியதே. 53

கார்த்திகை, உரோகணி

54. வானன எக்க ரிருலாரல் நாவிதன் மன்னுமறு
மீனழ லங்கியென் றேதுவர் கார்த்திகை வெல்சகட
மூனமில் வையம்வெஞ் சாகாடு பண்டி யுருள்பெருந்தே
ரானவை தன்னை யுரோகணி யாக வறைவர்களே. 54

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம்

55. மதிநாள் நரிப்புற மான்றலை மார்கழி மாழ்கிந்திரன்
முதுபாலை வெய்யவன் மும்மீன் மகசிர முதுரையே
யதிசா தனங்கை யரன்றின மாதிரை யாமதிதி
புதுநாள் புணர்தங் கரும்பா வணம்புனர் பூசத்ததே. 55

புனர்பூசம், ஆயிலியம்

56. புனிதமும் பாலையு மூங்கிலு முன்னைப் புணர்தமென்பர்
வனவண் டுடன்கொடி றேகுளந் தேவர் வரகுருநா
ளனையன பூசம் பெறும்பெய ராமென்ப ராயிலியந்
தனையர வின்றினங் கவ்வையென் றேமறை சாற்றியதே. 56

மகம், பூரம்

57. கொடுநுகம் வேட்டுவன் வாய்க்கா லெழுஞ்சனி கூறெழுவாய்
வடிவுறு மாசி பிதிர்தின மாமகம் வன்கணையே
யிடைய தெழுஞ்சனி நாவிதன் றுர்க்கை யெலிபகவ
னுடைய தினந்தனை யேபூர மாகவுரை செய்வரே. 57

உத்திரம், அத்தம், சித்திரை

58. பன்னு கடைய தெழுஞ்சனி பாற்குனி பங்குனிவா
னுன்னிய மாலி தினமுத் திரங்களி றேங்குநவ்வி
கன்னி கைம்மீ னைவிரல் காமரங் கௌத்துவ மூமத்தந்
தென்னெறி நெய்வான் மீன்றுவட் டாத்தினஞ் சித்திரையே. 58

சோதி, விசாகம், அனுசம்

59. வெறுநுகம் வீழ்க்கை வளிநாள் விளக்கு மிகுமரக்கால்
பெறுவது சோதி சுளகுவை காசி பெரிதனனுண்
முறமுற்றி லென்பர் விசாகம்புற் றுளி முடப்பனைதே
ளறிதரு போந்தை யதுவே யனுசத் தடைத்ததுவே. 59

கேட்டை, மூலம், பூராடம்

60. எரியழல் வேதிவல் லாரை விளங்கொளி யிந்திரைநாட்
டருவது கேட்டை யசுரர்தினங் கொக்குத் தாவிலன்றில்
குருகுசெந் தேட்கடை யாமானி மூலங் குறிமுற்குளம்
பொருவி லுடைகுளம் பூராடம் நீர்த்தினம் பொற்றுனமே. 60

உத்திராடம், திருவோணம், அவிட்டம்

61. ஆனி கடைக்குள மாடியுத் திராடம் விச்சுவநாள்
தானுறை நாளென்ப தாகுஞ் சிரவணஞ் தாவுலக்கை
சோணை வயிர மரிதின மோணஞ் சுடரவிட்ட
மீனது காக்கை வசுநாட்புள் ளாவணி மேவியதே. 61

சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி

62. வருணன் றினங்குன்று போர்சுண்டன் செக்கு வருசதையங்
குரைபுரட் டாதியு நாழியு முற்கொழுங் கோலுமென்ன
வருபெய ராகி யதுபூரட் டாதி யறிவனன்று
ளுறைமுர சங்கொழுங் கோல் முற்றிலுத்திரட் டாதியதே. 62

இரேவதி, அருந்ததி, நட்சத்திரம், காலநுட்பம்

63. சுடரார் புருடன் றினந்தோணி சூலந் தொடர்ந்ததொழுக்
கடைநாள் பஃறிசொன் னுவா யிரேபதி சாலிகற்பின்
வடமீ னருந்ததி யாந்தாரை தாரகை வாள்கணம்நா
ளுடுமீன் கலைதுடி யோர்கால நுட்ப மொளிவளையே. 63

நாழிகை, பொழுது, பின்னை, உச்சி, காலை, சந்தி

64. கடிகை யிருத்தை விகலைபதங் கன்னல் நாழிகையாம்
படர்தரு காலம மையம்வெங் காலை பதம்பொழுதா
முடனுறை பிற்றையும் பின்றையும் பின்னை நலுச்சிபக
லடர்தரு காலை விடியலுட னந்தி சந்தியதே. 64

பகல், யாமம், வெயில், இரவு

65. எல்லை நெடும்பகல் யாமமுஞ் சாம மிலகுவெயில்
சொல்லிய வாதப மென்றூ மிரசுனி சூழுமிரு
ளல்லு நிசாநிசி யாமினி யாமமடர் திமிரம்
புல்லிய கங்குல் தமம்நத்தம் நீலம் பொருமிரவே. 65

தினம், முனநாள், பக்கம், மதிமுதற் பக்கம், இரண்டாம் பக்கம்

66. தினமா னியம்பகல் வைகல் திவசந் திவாவெனலாம்
முனநாள் நெருனலு நென்னலும் பக்கம் மொழிதிதியாம்
வனமேவு திங்கள் மதிமுதற் பக்கம் வகுத்தநந்தை
யினமேவு பத்திரை யாமிரண் டாம்பக்க மேந்திழையே. 66

திரிதி, சதுர்த்தி, பூரணம், பானுள், கணம், ஊழி, வெப்பம், முதுவேனில்

67. சயைபக்க மாகுந் திரிதி யிருத்தை சதுர்த்தியஞ்சா
கியபக்கம் பூரணம் பானு ளரையிருள் கேடில்கண
முயர்வுற்ற மாத்திரை யாமூழி கால முருப்பம்வெப்பந்
துயருற்ற கோடை முதுவேனி லென்பர் துடியிடையே. 67

சிறுபொழுது

68. சிறுவரை யொல்லை சிறுபொழு தாமும்பர் சேர்வலன்மேக்
கறிபவர் மேசென்பர் கார்கூதிர் முன்பனி யப்பின்பனி
விறலிள வேனில் முதுவேனி லாறு மிகுபருவ
முறையி லிரண்டிரண் டாந்திங்க ளாவணி முன்னெண்ணலே. 68

மழைபெய்காலம், பனிப்பருவம், பருவம், காலம், யுகம், நான்முகன் வாழ்நாள்

69. மழைபொழி நாட்சரங் கூதிர் பனிப்பரு வஞ்சிரனுள்
பழைய பளங்கா னியமே யிருதுப் பருவமியாண்
டொழுகிய கால மடங்கலு மூழியு மோருகமாங்
கழிதரு நான்முகன் வாணுள் சொலிற்கற்ப மாமென்பரே. 69

வாழ்நாள், வருடம், காலம்

70. தெளியாயு ளாயுகம் வாணு ளுதகஞ் சிதறியுறை
துளியாலி சீகரந் தூவல் பெயல்மாரி தூறலுடன்
வளியார் பெயலை துவலையு மாசில் வருடமதாங்
களியாரு மூழியு முழ்முறையுஞ் சொல்லிற் காலமதே. 70

மேகம், இடி

71. மஞ்சே மழைமுகில் மால்கொண்டல் செல்கனம் வான்மைமே
கஞ்சீத மம்புதங் கார்குயிற் கந்தரம் விண்டுகொண்மூ
வுஞ்சீமூ தம்விண் ணெழிலி புயலென வோதுமுரு
முஞ்செல் லசனி யுருமே றிடியாய் மொழிகுவரே. 71

துவலை, மழைவிடல், விடாமழை, துளி, பெருமழை, ஆலங்கட்டி

72. சிகரஞ் சிதர்சொரி தூவல் பிதிர்சீ கரந்துவலை
பகருந் தலையல் மழைவிடல் சோனை பனித்தல்விடா
துகவிண் சொரிதல் பெயல்துளி யாலி யுறைதுளியா
மகலிலா சாரம் பெருமழை யாலி யாலங்கட்டியே. 72

மின்னல், இடி, பனி, பரிவேடம், கரும்புவில், வானவில்

73. மிளிர் தடித்துச் சம்பை வித்துருச் சஞ்சலை மின்னுமிடி
யொளிபேரி குழ்மநீர்து கினம்பனி யூர்கோள்வட்டம்
களிபரி வேடம் தரங்கரங் காண்டங் கருப்புவில்லா
மெளில்வான வில்லிந் திரவில்ல தென்ப ரிரட்டைவில்லே. 73

பாரதிதீப வரலாறு

74. திதமா வுறைநளி னத்தடஞ் சூழ்தென் கடம்பையின்சொல்
விதமா னதுசெறி பாரதி யேத்தியென் னேதவிருள்
விதமே வருந்தல வேவைத்த பாரதி தீபந்தன்னில்
முதலாவது தெய்வப் பேராந் தொகுதி முடிந்ததுவே. 74

இரண்டாவது

மக்கட் பெயர்த் தொகுதி

பற்றற்ருேர்

75. மாதவ ரையர் துறவோர் முனிவர் வரரவர்த-
போதனர் மெய்ய ரடிக ளிலிங்கிகள் பொய்யிகழ்ந்த
நாத ரியோகிகள் ஞான திகரைம் புலன்வெல்லுஞ்
சாதகர் பண்ணவர் மிக்கோ ரறிவர் தவத்தவரே. 1

76. அறவ ரருந்தவர் குற்றங் கடியு மவர்பெரியோ
ருறுவர் கனிகிழங் குண்பவர் கோப மொழித்தவர்பூ
விறைவர் புலவ ரிருளற்ற சிந்தைய ரேற்றவருட்
செறிபவர் மோனிகள் பற்றற்ருேர் பேரெனச் செப்பினரே. 2

சைவத்தவப்பாலினேர், நாராயணன் சமயத்தவர், சமணர்

77. பாலாய காளா முகர்மா விரதியர் பாசுபதர்
மேலாய சைவத் தவப்பாலி னேர்மிகு பாகவதர்
மாலாய நாரா யணன்சமை யத்தர்வண் சாவகரோ
டாலா வருக ரெனுஞ்சம ணுசீ வகத்தவரே. 3

புத்தர், சமண்முனிவர், சடைமுடியோர், பார்ப்பார்

78. சீவகர் சாக்கியர் புத்தர் பவுத்தருந் தேரருமென்
ருவது'மத்தவத்தோ ரமண் சாரணர்ச் சமண்முனிவ
ரோவறு தாபத ராகுஞ் சடைமுடி யோர்வேதியர்
வீவறு முப்புரி நூலர்பார்ப் பாரென்ப வேதியரே. 4

பார்ப்பார், ஓத்துரைப்போர், கலைவல்லவர், மிக்கவர்

79. அறுதொழி லாளர் மறையவர் பூசுரையர் மிக்கோ
ருறவுறு வேள்வியர் முற்குலத் தோரென்ப ரோத்துரைப்போ
ரறிகணக் காயர் கவிஞர் கலைவல் லவருயர்ந்தோர்
விறலறி வுற்றவர் சான்ருே ருலகுடன் மிக்கவரே. 5

புலவர், மிகக்கற்றவர்

80. கவிஞர் கலைஞ ரறிவோர் முதுவர்கற் ருேர்புதரே
யவையவர் மூத்தவ ரான்றவ ராய்ந்தவ ரானசங்கஞ்
சவைபுல வோரென்ப தாத்ம விபுதர் தனிநிபுணர்
கவலையில் லாத குசலரென் போர்மிகக் கற்றவரே. 6

மூத்தவர், பெருமையின் மிக்கவர்

81. குரவோன் சுவாமிமன் கோமான் பதியத்தன் கோவையனும்
பெருமானு நாதனு மீசனு மூத்தவர் பேரதென்ப
ரருளாளர் குரிசிலு மேந்தலுஞ் செம்மலு மண்ணலுமாய்
வருபேர் பெருமையின் மிக்கவர் பேரென வாய்த்ததுவே. 7

எப்பொருட்கும் இறைவன், உயர்ந்தோர்

82. ஆதிபிரான் செம்மல் கேள்வனிறை வனர சன்மன்ன
ஞதன் றலைவன் கொழுந னதிபன்மன் ஞயகன்சேர்க்
காதல னீசன் பதிகாந்தன் காவலன் கோவெனலா
மோதெப் பொருட்கு மிறையுயர்ந் தோரை யுலகென்பரே. 8

கோட்டி, அரசன்

83. தொழுதி திரள்சங்கங் கூட்டங் குவிதல் தொகுதிகணங்
குழுநீல கஞ்சம வாயஞ் சவையவை கோட்டியென்பர்
மொழியு நிருப னரபதி வேந்தன் முதல்வன்கோ
வழுவில் புரவல னேந்தல்மண் காவலன் மன்னவனே. 9

அரசன், குருகுலமன்னன்

84. அரச னிறையவன் பூபாலன் பார்த்திப னண்ணல்பிரான்
குருசில் தலைவன் பதிபெரு மானென்பர் கொற்றவர்பேர்
பரவுங் குருகுல மன்னவர் நாமம் பரதவர்பார்
கருதுங் கவுரவ ரென்பர்நன் னூனெறி கற்றவரே. 10

சேரன்

85. வில்லவன் கேரளன் வானவன் வஞ்சிக்கு வேந்தன்குடக்
கொல்லியன் குன்றன் குடநாடன் குட்டுவன் கோதைகொங்கன்
மல்லுதியன் பொறை யன்போந்தின் மாலையன் வானவரம்
பெல்லையன் சேரலன் சேரன் பொருனைக் கிறையவனே. 11

சோழன்

86. பொன்னிநன் ஞடன் புகாரிறை கிள்ளி புலியுயர்த்த
மன்னவ னேரியன் வீர னிரவி குலன்வளவன்
சென்னி யிமையவன் செம்பியன் கண்டன் றிறலபையன்
நன்னெறி யாரத்தன் சோழ னுறந்தைக் குரியவனே. 12

பாண்டியன்

87. வழுதி கவுரியன் பஞ்சவன் மீனவன் மாறன்கொற்கைச்
செழியன் மதுரைமன் பூழியன் கைதவன் றென்னவன்சே
லெழுது புரவலன் வைகைத் துறையவ னிந்துகுலம்
பழகு மிறையவ னிம்பத் தொடையினன் பாண்டியனே. 13

குறுநில மன்னவர், சளுக்கியரசன், மந்திரி

88. வேளிர் புரோசர் குறுநில மன்னவர் வேள்புலக்கோ
வாளுஞ் சளுக்கி யரசன் குரவ ரமைச்சர் முன்னோர்
நாளுநுண் டேர்ச்சியர் மூத்தோ ருழையர்ந னூலிறைவர்
கேள்வியிற் சூழ்பவர் மந்திரி யானவர் கேளினமே. 14

மந்திரிதந்திரி, அரசற்குளாங்கருமத்தர், போர்த்தலைவன்

89. ஏனாதி காவிதி யின்சொ லமாத்திய னென்னுமவன்
றுனுகு மந்திரி தந்திரி வள்ளுவன் சாக்கையென
லானு வரசற் குளாங்கரு மத்த ரரும்பெரும்போர்க்
கோனு மவனைப் பொருநரென் றேதுவர் கோமளமே. 15

வணிகர்

90. எட்டி கவிப்பர் வயிச்சிய ரேயிளங் கோக்களிப்பர்
செட்டி சிலேட்டி யறுதொழில் நாயகர் திறல்வினைஞர்
மட்டவிழ் சீரகக் தாரார் பரதர் வணிகரயன்
கிட்டிய வூருவில் வந்தோ ரிறையவன் கீழினரே. 16

காராளர்

91. வேளிர் களமர் சதுர்த்த ருழவர் விளைப்பவர்வே
ளாளர் கொடையின (ரேர்வாழ்நர்) வார்த்தையா டலில் வல்
காள நெடுங்கடற் பார்மைந்தர் கங்கை குலத்தரயன் [லோர்
ருளினில் வந்தவர் காராளர் பேரெனச் சாற்றுவரே. 17

மிலேச்சர், சோனகர், மருத்துவர், குயவர்

92. ஆதி மிலேச்சரு மாரியர் சோனக ராம்யவனர்
வாதனை யாயுள் மருத்துவ நூலர்மா மாத்திரரே
கோதில் பிடகர் மருத்துவ ராகுங் குலாலர் மண்மேற்
காதுங் குயவரும் வேட்கோப ருங்கும்ப காரருமே. 18

உப்பமைப்பவர், சித்திரகாரர், கண்ணுளர்

93. அயரு மும்மண ரமைப்பா ளருமுப் பமைப்பவரோ
வியர்சித் திரகாரர் தபதியர் சிற்பியர் வித்தகர்கள
ஊயரக்க சாலையர் கம்மியர் கொல்லர் நலனறிவர்
மயனுற்ற நூலர் யவனர்கண் ணுளர்க்கு மன்பெயரே. 19

தச்சர், கன்னூர், வண்ணூர், உறைகாரர், ஊன்விலைஞர், தோல்விலைஞர்

94. கருது மரவினைத் தச்சர் தபதியர் கன்னுவரே
யருள்கஞ்ச காரர்கன் னுரவர் காழிய ராவர்வண்ணு
ருரவுறை காரருங் காரோடர் சூனரு மூன்விலைஞர்
பரவு பறம்பருந் தோல்விலை வாணர் பயில்பெயரே. 20

நாவிதர், கள்விற்போர், சண்டாளர்

95. நாமப் பெருமஞ் சிகரே மயிர்வினை நாவிதர்பே
ராமப் பழையர் படுவர் துவசரவர் கள்விற்போர்
காமக் குஞுங்க ரிழிஞர் கொலைஞர் கவுண்டர்வங்கர்
தாமப் புலைஞர் கனகத ராவர்சண் டாளர்களே. 21

பாணர், இயவர், பாடலில்தாழுமவர், நரம்புக்கருவி கொள்மாந்தர்

96. சென்னியர் மாகதர் சூதர் வயிரியர் சேர்மதங்க
ரின்னிசைப் பாண ரியவர் கருவி யிசைக்குமவர்
பன்னிய வோவரும் பண்டரும் பாடலிற் ருழுமவர்
கொன்னி நரப்புக் கருவிகொண் மாந்தர் குயிலுவரே. 22

தமிழ்க்கூத்தர், கழாய்க்கூத்தர், தொழில்காரர், புதியவர், அயலோர்

97. குலவாயி லோர்தமிழ்க் கூத்தர் கழாயுற்ற கூத்தினரே
கலைமேவு வேழம்பர் கம்மியர் செய்தொழில் காரரென்பர்
புலமா ரதிதியர் வம்பல ரென்னிற் புதியவரா
முலகார் நொதுமலர் வம்பலர் தாமய லோரென்பரே. 23

ஆகாவழிச்செல்வோன், அடிமை, மடையர், மீகாமன்

98. ஆகாவழிச்செல் பவன்பதி தன்ருெழும் பாளடிமை
சேகார் சிலதர் சிலதியர் சேடியர் சேடரென்பார்
மாகாய வாலுவர் கூவிய ராவார் மடையர்மற்று
நீகான் மரக்கலன் மீகாம னென்பர் நிரைவளையே. 24

தூதர், ஏவல் வினைஞர், ஒற்று, தேவராளன், செவிடர் ,முடவர்

99. வினையாறு பண்புரைப் போர்தூத ரேவல் வினைஞர்பரி
சனமா குலரென்பர் சார்வேயொற் ருமென்பர் சாரணனுஞ்
சினதேவ ராளன் வெறியாடும் வேலன் செவிடர்பெய
ரெனிலோ வெதிரா முடவர்பங் கென்ன வியம்புவரே. 25

அலி, ஊமை, குறள், வறியோர்

100. பேடியர் பெண்டக ரேபேடர் பெண்டலிப் பேரதென்பர்
கூடிய முகையு முங்கையு மூமையாங் கோணல்சிந்து
நீடிய குஞ்சங் குறளென்ப ராதுலர் நேர்வறியோர்
வாடிய வாரத் துயருறு வோரென்பர் வாணுதலே. 26

கீழ்மக்கள்

101. நெறியிலர் பேதையர் நீசர் சுமடர்க னிட்டர் புல்லர்
பொறியர் முசுடர் முசுண்டர்பொல் லாதவர் பூரியரே
சிறுமைய ராற்றலர் தேரலர் தீயவர் தீம்பர்கல
ரறிவிலர் மூர்க்க ரசடர்பொய்க் கீழ்மக்க ளானவரே. 27

அறிவிலார், கள்வர், காதலித்தோர்

102. முழுமக னஞ்ஞை மடம்பேதை சேடஞர் மூடனண்ணை
யிழுதை குதலை யறிவிலர் சோர ரிகற்பகைவர்
கழிவில் கரவடர் கள்வர்தம் பேரென்பர் காதலித்தோர்
விளைவு நயத்த லார்வம்வேட்டல் வேட்கை விருப்பென்பரே.
[28

முதறிந்தோர், வல்லளான், விறலோன், பதிவாழ்சதுரர், தூர்த்தர்

103. முதுவர் கிழவ ருரியவர் முதறிந் தோர்வயவன்
விதமான மீளிவல் லாளன் பெயர்விற லோன்விடலை
பதிவாழ் சதுர ரெனுநா கரிகர் படிற்றொழுக்க
ரதிகாம மிக்கவர் தூர்த்தரென் றோதுவ ராரணங்கே. 29

இளமையர், ஏவுவான், புகழ்விளைவீணன், கரியன், கணவற்பிழைத்தோள்மகன்

104. வளமுரு கன்கும ரன்காளை சேடன் மழவனென்போ
ரிளமைய ரேவு மவனே வியவ னியவுள்புகழ்
விளைவீண ஞகுங் கரியனென் சோரன் மிகவுரைக்கிற்
களவன் கணவற் பிழைத்தோன் மகன்குண் டகனென்பரே. 30

கன்னிமகன், கைம்மையள்மகன், குலமில்லவர், வல்லோர், வல்லவரல்லாதார், கூவல்நூலோர்

105. கலனுறு கன்னி மகன்கா னீனன்கைம் மையின்புதல்வன்
குலவிய கோளக ஞகுங் குலீனர் குலமில்லவர்
வலவைவல் லோரென்பர் வல்லுனர் மாட்டாரவ
[லோரென்பரே
தலமிசை வல்லவர் சல்லியர் கூவல்சொல் சாற்றினரே. 31

பாவலர், மங்கலப்பாடகர், நாடகர், கூத்தர்

106. பரவிய நாவலர் கற்றோர் கவிஞர்சொற் பாவலராங்
கருதிய மங்கலப் பாடக ரெட்டர் கடிகைகளாம்
பொருநர் நிருத்தர் வயிரியர் கண்ணுளர் போற்றுநடர்
குருவரு ஞடகர் கோடியர் தாமென்பர் கூத்தரையே. 32

சூதர், பூகதர், தேர்ப்பாகர், யானைப்பாகர்

107. மாகதர் வந்திகர் வேதாளி யரவர் சூதர்மன்னும்
பூகத ராவார் புகழ்பவர் சூதர் புனைவலவ
ராகிய பேரெனிற் றேர்ப்பாக ராவா ரவருமன்றிப்
பாக பல்வா துவராதோ ரணர்கரிப் பாகருமே. 33

பரிமாவடிப்போர், இரவலர், வரையாமலீபவர், அரசர்பரிவாரம்

108. பரிமா வடிப்பவர் வாதுவர் யாசக ரேபரிசிற்
குரியா ரிரப்பவ ரிரவலர் பேரென்ப ருற்றபொருள்
வரையாம லீபவ ரேவள்ளி யோரென்பர் மற்றரச
ரருகா தரித்த பரியாள மும்பரி யாரத்ததே. 34

படையாளர், அடுத்தோர்

109. கூளியர் மானவர் வீரர் பொருநர் கொலைமறவர்
வாளுழவர் மண்டர் மள்ளர் விறலர் வயவர்படை
யாளர் துடர்ந்தவ ரொன்றுநர் துன்னின ரேயடுத்தோர்
நாளு மணுகுந ரொல்லுநர் நள்ளுநர் நண்ணுநரே. 35

பகைவர்

110. தரியலர் தெவ்வர் செருநரொன் னுரெதிர்ந் தாரரிகள்
கருதலர் செற்றவ ரொல்லார் நிகரலர் கண்டலரே
பரவல ரொட்டலர் போற்றலர் மாற்றலர் பற்றலர்போர்ச்
செருவினர் நேரலர் விண்டார் பகையவர் சேரலரே. 36

மித்திரர்

111. சுற்ற முறவு கிளைகேள் கடும்பொக்கல் சூழுநட்போ
டுற்றவர் சார்ந்தவர் பந்தங் குடும்புநட் டோர்சிறந்தோர்
துற்ற பரிசனங் கூளி செறிவு துணைதமரே
பற்றினர் மேவினர் மித்திர ராகப் பகர்ந்தனரே. 37

ஆண் பெயர், ஏழு பருவப் பெண்பால்

112. ஆடவர் காளைய ராடூஉ மகன்மைந்த னுளன்பூம
னீடு குமரனு மாண்பெயர் பேதை நிகர்பெதும்பை
தேடிய மங்கை மடந்தை யரிவை தெரிவையுடன்
கூடிய பேரிளம் பெண்ணேழ் பருவஞ்செய் கோதையரே. 38

மடவார்

113. அங்கனை பேதை வனிதை யிளம்பிடி யாயிழைபெண்
மங்கை மடந்தை தெரிவை பிணைமகள் மாதரிவை
பைங்கொடி வஞ்சனி காரிகை மானினி பாவைதைய
லிங்கிதை நாரி மடவலர் பேரென் றிசைத்தனரே. 39

தலைவி, கலன்கழி மகளிர், மலடி

114. அடிகள் குரத்தி பெருமாட்டி கோமகளையை யத்தை
தடமலர் மாதிறை மையாட்டி சாமி தலைவியென்பர்
கடலுல கெண்ணிய கைம்மை (கயினி) கலன்கழிமான்
வடிவுறு வந்தியு மைம்மையு மாகு மலடிகளே. 40

வரத்தெழு மகளிர், பொதுமகள், பாண்மகள்

115. வரத்தெழு பைம்மை கவுந்தி கணிகைவண் தூளையுடன்
பரத்தை பொதுமகள் பாடினி பாட்டி பயில்மதங்கி
திருத்தகு பாடல் மகடூஉ நடத்திறற் கூத்தியிசை
விரித்தரு ணுடக வாணுதல் பாண்மகள் மேல்வருமே. 41

குறிஞ்சிக்கதிபர், குறிஞ்சி நிலப்பெண் குறிஞ்சித்திணை மகன்

116. குறவர் புனவ ரிறவுளர் கானவர் குன்றவரென்
றறைவர் குறிஞ்சிக் கதிபர் குறத்தி யடர்கொடிச்சி
மறுவி லுழத்தியர் வெற்பன் பொருநன் மலையனண்பன்
றிறல்புனை கானக நாடன் சிலம்பன் றிணைமகனே. 42

பாலை நிலமக்கள், பாலைநிலப்பெண், பாலைத்திணை மக்கள்

117. மறவ ரெயினர் வெம்பாலைக் கிழவர் மறத்தியரே
பிறைநுதன் மேவு மெயிற்றிய ரந்நிலப் பெண்பெயராம்
விறல்புனை காளையு மீளியும் வெய்ய விடலையுமென்
றுறைபவர் பாலைத்திணை மக்க ளாக வுரைசெய்வரே. 43

பாலை நிலமக்கள் பொதுப்பெயர், முல்லைநிலமக்கள்

118. கானவர் வேடர் மறவர் புளிஞர் கலைக்கொலைஞ
ரீனர் வனசரர் சிலவர் கிராத ரெயினரென்ன
லானவ ரப்பொதுப் பேரண்டர் கோபால ராயர்முல்லைத்
தானவர் விந்தர் பொதுவ ரிடையவர் தம்பெயரே. 44

முல்லைநிலமக்கள், முல்லைநிலப்பெண், முல்லைத்தலைமக்கள்

119. தொறுவர் குடவருங் கோவிந்த ராய்ச்சி தொறுத்தியுடன்
முறைசெய் குடத்தி பொதுவி யிடைச்சிமென் முல்லைமகள்
குறைவறு கானக நாடன் குறும்பொறை நாடனண்ணல்
நிறைபயில் தோன்ற லவராவர் முல்லை நிலமக்களே. 45

நெய்தல் நிலமக்கள், நெய்தல் நிலப்பெண், நெய்தல் தலைமகன்

120. கலவர் பரதர் நுளையர் திமிலர் கருங்கடலர்
வலையரந் நெய்தல் கிழவர் நுளைச்சி வளர்பரத்தி
தொலைவில் கடற்பிண வென்னிற் கிழத்தி துறைவன்
[கொண்கன்
சிலைபயில் மெல்லம் புலம்பன்றண் சேர்ப்பன் றிணைமகனே. 46

மருதநிலமக்கள், மருதநிலப்பெண், மருதநிலத் தலைவர், மருதத் தலைமகள்

121. தொழுவர் கடைய ருழவினர் கம்பளர் சூழ்களமர்
கழனியின் மள்ளர் கடைச்சி யுழத்தி கழனிமகள்
கிழவனு மூரனுங் கேடின் மகிணனுங் கேள்மருதந்
தழுவு தலைவர் மனைவி கிழத்தி தலைமகளே. 47

முல்லைத்தலைவி, தம்குடித்தமர், முறைப்பெயர், மூதாதை

122. ஆய மருதத் தலைவியம் முல்லை யணங்கிற்குமாந்
தாயமுஞ் சாதியுந் தங்குடி யிற்றமர் தந்தைதந்தை
தூய பிதாவைய னப்பனம் மானத்தன் றென்முறைப்பே
ரேய பிதாதந்தை மூதாதை யாமென் றிசைத்தனரே. 48

தகுவர், மாதுலர், பெற்றதாய், செவிலி

123. தாதையுந் தம்முனுந் தன்னையொத் தந்தத் தகுவரம்மான்
மாதுலன் பேரென்பர் மாதாப் பயந்தவள் வாய்த்ததவ்வை
யேதமி லீன்றவள் தாயன்னை யாய்பெற் றவளெனப்பே
ரோதிய தாதிகோ டாயே செவிலியென் றேதினரே. 49

முன்பிறந்தாள், மணவாளன், மனைவி

124. அன்னையு முன்பிறந் தாளுஞ் செவிலியு மாகுந்தவ்வை
மன்னிய கேள்வன் கணவன் கொழுனன் மணமகனே
சொன்னவில் காந்தன் மணவாள னென்பர் துணைவியில்லாள்
பன்னி யுரிமை மனைவி மணமகள் பாரியுமே. 50

புதல்வன், மகள்

125. புதல்வன் பிறங்கடை சேய்தோன்ற லெச்சம்புனை சிறுவன்
மதலை தனயன் மருமான் மருவு மகன்மைந்தனே
விதமிகு சந்ததி புத்திரன் செம்மல் மிகுபுதல்வி
யுதவி சிறுவி தனையை மகட்பெய ரோதினரே. 51

மகன் மகள் பொது, முன்தோன்றல், பின்தோன்றல், வழித்தோன்றல், பிள்ளைப்பன்மை

126. முறைமையி னெச்ச மிருபாற் குரியது முன்னை முன்னே
யறிவின்முன் றோன்ற லிளவலும் பின்னையு மாவர்பின்னோ
ருறுவழித் தோன்றல் மருமான் பிறங்கடை யும்பலென்பர்
செறியு மகார்செஞ் சிறார்பன்மை நாமஞ் சிறந்தவரே. 52

இளமை, நண்பன், தோழன் முன்னிலை

127. மழவுங் குழவியும் பிள்ளையுங் குட்டனு மாமகவும்
விழைகின்ற சேயு மிளமைப் பெயர்நண்பன் மெய்த்துணைவன்
கெழுதகு கேளெலு வன்பாங்கன் றோழன் கிளைஞனென்பர்
மொழிதரு தோழனை யேடாவென் றேதுவர் முன்னிலையே. 53

பாங்கி, தோழியர் முன்னிலை, கணவன்

128. அயரோரை பொய்த விகுளை மெய்யாய மணுக்கிணங்கொ
டியல்சேடி தோழிமெய்ப் பாங்கியெல் லாவுட னேடியென்ப
பயினுமந் தோழியர் முன்னிலை நாமம் பதிகணவன்
மயல்தீர் தலைவ னிறைதோழன் காதலன் மன்பெயரே. 54

காதலி, துணைவன், படைத்திரள்

129. தோழி மனைவி புதல்வியுங் காதலி சொற்றுணைவன்
வாழிய தோழன் கணவன் வருதினி மன்பகுதி
தாழு நிதன மநிகம்ப தாதிமெய்த் தார்தண்டமே
பாழிய தானை பதாகினி சேனை படைத்திரளே. 55

படைத்திரள், கொடிப்படை, படை வகுப்பு, மானிடர்

130. ஆசி லணிகமும் யூபமு மப்படை யாம்நிரைதார்
தூசி கொடிப்படை யாக்கமு மாமென்பர் சூழ்ந்தவணி
காசறு யூப முடனுண்டை யோடிவை கைவகுத்தல்
மாசின் மனிதர் நரர்மக்கள் மானிடர் மண்ணவரே. 56

மக்கள் பொது, மக்கள் கூட்டம், உடற்குறை

131. மக்கள் பொதுப்பெயர் மாந்தர்கள் பைஞ்ஞீல் மன்பதையுந்
தொக்க நரர்திர ளோரையு மாயமுஞ் சூழ்குழுவுந்
தக்கதோர் பண்ணையு மக்களின் கூட்டந் தனையுரைப்பர்
மிக்க கவந்தமு மட்டையும் யூபமு மெய்க்குறையே. 57

உறுப்பு, உடம்பு, பிணம்

132. புரமுறுப் பங்கந் தனுவாக்கை காத்திரம் பூட்சிமெய்விக்
கிரகங் களேபரந் தேகம் படிவங் குகைகுடில
முருவ முடம்பு கனங்காய மென்ப ருயர்குணபங்
கருது மழன்பிண மேசவ மாகுங் களேபரமே. 58

பாதம், காலடி, துடை, அல்குல்

133. பாதஞ் சரணங் கழல்கா லடிபதந் தாள்பரடு
மோதுங் கரடு மிசைத்திரள் காலடி யூருக்கவான்
றீதொன் றிலவாங் குறங்கே துடையென்ப சேர்நிதம்பங்
காதுங் கடிதட மல்குலென் றேதுவர் கற்றவரே. 59

இடை, மருங்குல், வயிறு, கொப்பூழ்

134. மருங்குல் நுசுப்பு நடுவிடை யொக்கலை யாமருங்குல்
வரும் புறங் குக்கி சடர முதரம் வயினகடாந்
திருந்துவயி றுந்தி நாபி மிதலை திகழிலஞ்சி
தரும்பெய ரேயெனி லானகொப் பூழென்று சாதிப்பரே. 60

ஆண்குறி, மாதர்குறி, மார்பு, முலை

135. ஓது மிலிங்கமுங் கோசமு மாண்குறி யோனிபகம்
மாதர் பெருங்குறி மார்ப மகல மருமமுரந்
தாதவி ழாகங் குயஞ் சொர்க்கங் கொங்கை தனநகிலே
மீது குருக்க ணம்மம் பயோதர மென்முலையே. 61

சுணங்கு, கைத்தலம், அகங்கை, விரல், நகம், புயம்

136. துத்தி திதலை பொறிவந் திகையுத்தி தூழ்சுணங்கா
மத்த முடன்கரந் தோள்பாணி கைத்தலம் அங்கையென்னி
லொத்த குடங்கை யகங்கை விரலங் குலியுகிராம்
பத்திநகம் புயந் தோள்வாகு மொய்ம்பெனப் பாவிப்பரே. 62

முதுகு, தோள்மேல், கழுத்து, பிடரி

137. நிகரில் வெரிந் புறம் வெந்முது கென்பர் நிகலமுடன்
செகிலஞ் சுவலெனிற் றேண்மேல் கழுத்துச் சிறந்தகண்டம்
புகலுங் கிரீப மிடறு களங்கந் தரம்பொருந்து
மகலுங் கயிலெருத் தஞ்சுவ லேபிட ரானதுவே. 63

பிறக்கு, முகம், உதடு, பல், சிரிப்பு

138. பிறக்கும் பிறக பரம்முக மானனம் பேர்வதனஞ்
சிறக்கின்ற வோட்ட முதடே யதரந் திகழிதழாம்
நிறக்கின்ற தட்ட மெயிறுபற் றந்தம் நிலாமுறுவல்
முறைத்தங்கு மூரல் நகைசிரிப் பாக மொழிகுவரே. 64

மேல்வாய், கீழ்வாய், உள்நா, நா, மூக்கு, கவுள்

139. அணரியு மண்ணமு மேல்வாய்கீழ் வாயண ராமதன்பேர்
தணிவரு மண்ணமுண் ணுவாகுந் தாலமுந் தாலுவுநாத்
துணைபெறு நாசியுந் துண்டமு மூக்கென்பர் தொல்வுகளே
நணுகு கபோலங் கொடிறென்று கூறுவர் நற்றவரே. 65

கண், நெற்றி, புருவம்

140. பழுதறு நாட்டம் நயனம் விலோசனம் பார்வை கண்கோ
விழிதிருக் கம்மக்கம் நேத்திரம் நோக்கமம் புகம்வின்னுதல்
எழின்மத் தகங்குளம் முண்டக நெற்றி யிலாடமென்பு
ரழிவில் புரூரம் புருவம் பிருகுடி யாமென்பரே. 66

காது, தலை, முடி, மயிர்ப்பரப்பு

141. கன்ன முடன்செவி காதாஞ் சிரமுச்சி கந்தலையே
சென்னி யுவ்வி நவிர்சேக ரந்தரஞ் சீரிபமா
முன்னிய சேகரஞ் சென்னி சிரமுச்சி யேமுடியே
மன்னு சிரோம முரோமஞ் செறிந்த மயிர்ப்பரப்பே. 67

ஆண்மயிர், பெண்மயிர்

142. தொங்க னவிர்குஞ்சி யோரி குடுமி சுருளுழையே
பங்கி சிகைபித்தை யாண்மயிர் கூழையைம் பால்சுரிய
லங்குழல் கேசங் கதுப்பு மராட்ட மளகங்குரல்
தங்கிய வோதி சுருள்கூந்தல் கோதைபெண் தன்மயிரே. 68

ஆண்மயிர், பிறமயிர், சடை

143. கேசஞ் சுரியல் கதுப்பாண் மயிர்க்குக் கிளக்கும்பங்கி
வாசஞ் செறியுளை யோரி யுரோம மராட்டமிவை
பேசும் பிறமயிர் கோடீரம் பின்னல் பின்னுஞ் சடிலந்
தேசொன்றும் வேணிச் சடைசூட மென்னச் சிறந்ததுவே. 69

குழன்றமயிர், மயிர்முடி, அவயவம்

144. கொந்தள மாலை யளக மிலோதங் குழன்ற மயிர்
பந்தமுடிபின் னகங் கொண்டை முச்சி பயில்சுடிகை
யுந்துஞ் சிகழிகை யாகு மயிர்முடி யோருறுப்புச்
சந்த மவையவ மேசினை காத்திரந் தானங்கமே. 70

உடல் தழும்பு, கழலை, நரம்பு, தலையோடு, எலும்பு, கழியெலும்பு

145. பிறங்கங் சிதஞ்செது கைமெய்த் தழும்பு பெருங்கழலை
செறிந்த வரலை நரம்புட னுடி சிரையெனலா
மிறஞ்சிய வெண்டலை யோடே கபால மெலும்பென்பதாங்
குறைந்து கழியென்பு கங்காள மாகமுற் கூறினரே. 71

குடுமி, உச்சி, பாரதிதீப வரலாறு

146. சிக்கங் குடுமி சிமையஞ் சிகையுச்சி சேர்நவிரந்
தொக்கசெஞ் சூடி சுடிகையுஞ் சூளி தொகுபுலமை
மிக்கவன் பாரதி பாரதி தீபத்தின் மெய்தெரிந்த
மக்கட் டொகுதி யிரண்டா வதுமுற்றி வந்ததுவே. 72

மூன்றாவது

விலங்கின் பெயர்த் தொகுதி

சிங்கம்

147\. அரியாளி சீயம் வயப்போத்துச் சிங்கம்பஞ் சானனங்கே
சரியா மடங்கல் முடங்குளை கோளரி தாம்வயமா
மிருகா பதியரி மாவே வயப்புலி வேங்கையிபம்
பொருகா னகாயுதங் கண்டீ ரவமெனப் போற்றினமே. 1

புலி

148\. குயவரி வல்லியஞ் சித்திர காயங் கொலைவயமா
வயவரி வேங்கை தரக்கு வியாக்கிரம் வல்லுழுவை
சயமிகு தீவியஞ் சார்த்தூலம் புண்டரி கஞ்சமரம்
பயில்மிரு காதிபுல் லெனப்பேர் புலிக்குப் பகர்ந்ததுவே. 2

யானையாளி, யானை

149\. அறுகு புழைக்கை யடல்யானை யாளிகை யத்தியுவா
மற (மலி) தும்பி புகர்முகந் தோலிபம் வாரணமாக்
கறையடி போதகம் மாதங்க நாகங் கரிகளிறு
திறல்மிகு நால்வா யொருத்தல் மதகயஞ் சிந்துரமே. 3

150\. கயமே கருணி கடுவை பகடு களபந்தந்தி
வயமா வழுவை யிருண்மா வெறும்பி மதவனமே
சயவேழந் தூங்கல்கைம் மாவும்பல் கும்பிதந் தாவளமே
குயமேவு மாதிரம் வல்விலங் காமென்பர் குஞ்சரமே. 4

யானைக்கன்று, கிளர்ச்சியானை, யானை பிறந்த நிலப்பெயர்

151\. களபந் துடியடி போதகம் வெய்ய கயமுனியே
தளருங் கரிக்கன்று தந்தி மதகரி தானுரைக்கிற்
கிளர்வன் கையானை வனசர மோங்கு கிரிசரமே
தெளியு நதிசரம் யானை பிறந்த திணைப்பெயரே. 5

குதிரை

152\. துரகங் குதிரை யரிவாசி கிள்ளை துரங்கங்கற்கி
குரகத மண்டில மத்திரி மாப்பரி கொக்கிவுளி
புரவிகுந் தங்கொய் யுளைகோணங் கோடகம் போற்றியகந்
திருவஞ்சை யிந்தவ மச்சுவ மாமெனச் செப்பினரே. 6

குதிரைப் பண்பு, குதிரை மார்க்கம், குதிரைக் குளம்பு, பசுப் பொது

153. பாடலங் கந்துகங் கோரங் கனவட்டம் பண்பெனலாங்
கூடிய மாதிக மார்க்கங் குரங்குளம் பாகும்பெற்ற
மாடு குடஞ்சுட்டுக் கோவான் பசுவினம் வாலியவா
னீடிய சாதிப் பொதுப்பெய ராக நிலைபெறுமே. 7

பசுப்பெண்பால், ஏறு

154. தேனுச் சுரபி சுரையே கபிலை செழுங்குரமே
கோனுற்ற கோமளஞ் சேதாப்பெண் பாலென்பர் கோவிடப
மானுற்ற பாறலி ருஷ்மரி பாண்டி லடல்விடைசே
வானத் தெருதுபெற் றம்புல்ல மேறதற் பேரென்பரே. 8

எருமைச்சாதி, எருமை, எருமையாண், மலட்டெருமை

155. எருமையின் சாதி யிருபாற் குரிய திகன்மயிடங்
கருதிய காரசங் காரான்மை மேதி கவரியென்பர்
பொருளில் பகடுங் கடாவு மவற்றினிற் போத்துமைமை
தெரியி னவற்றின் மலட்டின் பெயரெனச் செப்பினரே. 9

காட்டு ஆ, ஆடு

156. அறிவில் கவையமு மாமாவுங் காட்டினி லாவெனலா
மறியுதள் மேழக மோத்தை கிடாய்தகர் மைவருடை
கொறிதுரு வைசெம் மறிபள்ளை வெள்ளைகொச் சைபுருவை
செறிதரு மேடம்வற் காலியு மாடெனச் செப்பினரே. 10

துருவாடு, வெள்ளாடு, துருவாட்டேறு

157. துள்ளு துருவை கொறிமை யிவைதுரு வாடதென்பர்
வெள்ளைவற் காலிவெங் கொச்சைவெள் ளாடுமிகுதகரே
தெள்ளிய மேழக மோங்குங் கிடாய்திண் ணகமுடனே
யெள்ளிய செய்ய துருவாட்டி னேறென் றிசைத்தனரே. 11

வெள்ளாட்டேறு, ஆட்டுக்குட்டி, வரையாடு, கவரிமா

158. உதள்கொச்சை மோத்தைவெள் ளாட்டினி லேறென்ப [ரோங்குமணங்
கெதிர்குட்ட மென்பறழ் சேர்மறியே குட்டி யேர்வருடை
மதுகைச் சரபம் வரையா டெகினம் வளர்சவரங்
கதமுற்ற மான மிருகங் கவரிக்குக் கற்பித்ததே. 12

கழுதை, பன்றி

159. கத்தபம் வேசரி வாலேயங் கோகு கரங்கழுதை
யத்திரி யென்ப கருமா விருளி யருங்கனலி
குத்திரஞ் சூகரங் கேழல் வராகங் குரோட்டம்பன்றி
மைத்திக ழேன மரிகோலம் போத்திரி வல்லுழியே. 13

முட்பன்றி, மான், புல்வாய், கரடி

160. எழில்புனை சல்லிய முள்ளார் மிருகமெய் யேபன்றியா
முழைமறி நவ்வி யருணமா னம்பிணை யோங்கிரலை
விழைகலை யென்ப ரிரலைபுல் வாயென்பர் வெல்லுளியங்
கழிதரு பல்லங் கரடியெண் காமென்பர் கற்றவரே. 14

நரி, ஓரி, பூனை, ஆண் பூனை

161. இகல னரிசம்புக் கோமாயு வென்க விகலனெனப்
பகர்வது மோரி விலாளம் விடருகம் பாக்கன்வெ
ருகப்பவ ணந்திறற் பூசையும் பூனையதாங் கடுவன்
மிகைசெய் விராளம் வெருகென வாண்பெயர் மேவியதே. 15

கீரி, முயல், கத்தூரி, நாய்

162. கீரி நகுலஞ் சசமுயல் நாவி கிளர்மறிகத்
தூரிமை மான்மதம் நான மறிவன் றுருக்கமென்பர்
மூரி யெகினஞ் சுணகன் ஞமலி முடுவல்சுவாக்
கூரிய நாய்சுணங் கன்ஞாளி சூரன்வெங் குத்திரனே. 16

பெண் நாய், குரங்கு

163. முடுவல்பெண் ணுயென்பர் கானவன் மற்கட மூரியரி
கடுவன் வலிமுகஞ் சாகா மிருகங் கவிகுரங்கு
திடகோ குலம்ப விலவங்கம் வானரஞ் சீறுமந்தி
யுடலிய கோடர மேயூக மாமென் றுரைத்தனரே. 17

கருங்குரங்கு, பெண்குரங்கு, முசு, உடும்பு, கோம்பி

164. கானவல் யூகங் கருங்குரங் கூகங் கருதுமந்தி
யானது பெண்பெய ரோரியக் கள்வ னடந்ததலை
தானு முசுவென்பர் கோதா முசலி தருமுடும்பு
கூனு மெழில்திண் டுடன்காம ரூபியுங் கோம்பியதே. 18

மூஞ்சூறு, எலி, அணில், விலங்கினில் ஏற்றை

165. சுந்தரி யேசுண்டன் மூஞ்சுறு சூர னெனச்சொல்லுவர்
முந்து சிகரி கருப்பை யிரும்பன் மொழியிலெலி
வந்த வணில்வெளில் போத்தே யொருத்தல் வயக்களிறே
டொந்திய வும்பல் விலங்கினி லேற்றைக் குரியனவே. 19

களிறு, ஒருத்தல், ஏறு

166. கரிகேழ லென்னிற் களிருங் கவரி கரடி பன்றி
மரையானை மான்புலி புல்வா யெருமை வருமொருத்த
லிருளார் கவரி மரைமா னெறுளிபுல் வாயெருமை
நிரையாரும் பெற்றஞ் சுருவிவை யேறென நேர்படுமே. 20

போத்து, பகடு, தகர்

167. பெற்ற மெருமை மரையேபுல் வாய்புலி யேற்றமரி
யுற்ற பயத்தி லுறைவன போத்தென்ப ரோங்கெருமை
மற்றிபம் பெற்றம் பகடாஞ் சுறவு வயக்களிறு
தற்றிற லாளி துருவாட்டி னேற்றைத் தகரென்பரே. 21

உம்பல், சேவல், கடுவன், பெண்பெயர்

168. உழையே முசுக்கலை யாட்டினி லேற்றே யுலாவுமும்ப
லெழிலார் மயூரமுங் கோழியுஞ் சேவ லிகற்குரங்கு
விழைவார் கடுவ னெனப்பெறும் பாட்டி மிகுபிணவுங்
கொழுநாகு பெட்டை பிணையென்று பெண்பெயர் கூறினரே. 22

பெட்டை, பிணை, நாகு

169. ஒட்டகம் வாசி கழுதை மரையென வோங்கியபேர்
பெட்டை புலியுழை புல்வாய் கவரி பிணையெனலாம்
வட்டிய பன்றிபுல் வாய்நாய் பிணையென்பர் வாமரையுங்
கிட்டிய வாவு மெருமையு நாகெனுங் கேண்மையதே. 23

நாகு, பாட்டி, மந்தி, பிணா, ஆண், பெண்

170. பசுவே யெருமை மரைநாகு நாய்பன்றி பாட்டிகலி
முசுவே யெனின்மந்தி யொட்டகம் வாசி முழங்குகரி
திசையார் கழுதை பிணாநரி பாட்டி யெனத்திகழு
மிசைவான வாண்பெண் ணவையவை யாக விளம்பினரே. 24

பிணவு, போதகம், பார்ப்பினம், குருளை, பறழ்

171. புனைபெண் பிணவு புலியரி மாக்கரி போதகமாம்
வனவெங் குருளை பறழே குழவி மறிகன்றுபார்ப்
பினமேவு குட்டி விலங்கின் பறளை யிகல்முயல்நாய்
பனியார் நரிபுலி யேனங் குருளை பறழென்பரே. 25

பிள்ளை, பிணை, மறி, ஊகம், குட்டி

172. பிள்ளை யெனும்பெயர் நாயன்றி யெய்தும் பிணையழுங்கு
வள்ளிய வாடு மறியென்பர் கோடுற வாழ்விலங்கு
முள்ளெயி றுற்ற குரங்கென்ப ரூக முசுவெருகு
துள்ளு மணிபறழ் குட்டியின் பேர்பெறுந் தோகையரே. 26

குழவி, பார்ப்பு

173. வாசி கடமை மரையானை யொட்டகம் மான்கவரி
காசறு மோட்டு கழுதை கராங்கன்று கார்க்கடமை
யோசை யிபமரை மான்மேதி யொட்டக மாங்குழவி
பேசிய பார்ப்புத் தவழ்சாதி யெய்தப் பெறுமென்பரே. 27

குருளை, கன்று, விலங்கு, தொறு, வாற்கீழிடம்

174. குருளைகன் றென்ப ருழையை முசுவைக் குருளையென்பர்
சுரிமுக நந்தினி னேறுடன் மாவுஞ் சொலிற்குருளை
மருவுறு மானுடன் மாவும் விலங்கென்பர் வற்காலியி
னிரைதொறு வென்பர் வெருகமும் வாற்கீழ் நிலையிடமே. 28

விலங்கின் கூட்டம், வாலுறுப்பு, முதுகு

175. சாலவ நீலங் கணப்பூகங் கூட்டந் தருவிருந்த
மேலவை யென்னிற் பிறற்பாற்கு மெய்துமென் றேகையுடன்
வாலதி கூல மிலாங்குல மாமென்பர் வாலுறுப்பே
சீலமுடன் மஞ்சு நீண்முது கென்பர் தெரியிழையே. 29

யானைச் செவி, மதம், மதம்பாய் சுவடு, கால், விலாழி, வால்

176. கரிச்செவி யாங்கன்னந் தாலமதங் கடந்தானங் கடா
மருக் கடம்பாயுஞ் சுவடாங் கரடமங் காத்திரமே
வெருச்செயு மங்கிதங் காலாம் விலாழியும் வேட்கையுறு
தரத்தகு நீரதின் வால்தால வட்டந் தகுமென்பரே. 30

காளை முரிப்பு, கொம்பு, தோல்

177. விடைபயின் முரிமுரிப்பே யிமிலென்பர் வெண்மருப்பும்
வடிவுறு கோடு முலவையுங் கொம்பு வடகம் பச்சை
யுடலு கிருத்திமம் தொக்குச் சரும முரிவையதள்
துடரும் புறணி துருத்தி துவக்கிவை தோலென்பரே. 31

ஊன், பெற்றத்தின் ஊன், இரத்தம்

178. தசைதடி தூவு புலாலே புறணி சடம்விடக்குப்
பிசிதம் வள்ளூரம் புலவேமெய் யூனென்ப பெற்றத்திலூன்
றசையும்வள் ளூரம் பெருகுசெந் நீரிரத் தங்குருதி
கசிதரு சோரி யுதிரநெய்த் தோர்செங் கறையென்பரே. 32

நிணம், முடை, சூல், பாம்பின் படம்

179. இழுது விழுக்கு நிணமேநெய் யாகு மெனவுரைப்பர்
புழுவே ரமுகுந் தசைபூழ்தியொ டூழ்த்தல் புலவுமுடை
தொழில்புனை பீள்வெஞ் சினையே கருவிவை சூலதென்பர்
பழகிய பையும் பணமும்வெம் பாம்பின் படமென்பரே. 33

பாம்பு, பெரும்பாம்பு

180. அரவு புயங்கம் பணிமா சுணஞ்சற்ப மங்கதமே
யுரகம் வியாள மகிபாந்தள் நாக முரவரியே
கரள தரம்பன் னகந்தந்த சூகம்வெங் கட்செவியாம்
பரவிய மாசுணம் பாந்தளெல் லாம்பெரும் பாம்பென்பரே. 34

பாம்பின் படப்பொறி, கருடன், கழுகு

181. உரகன் படப்பொறி யுத்தியுந் துத்தியு மோங்குவணன்
கருடன் கலுழ னரவா சனத்தன் ககபதிபுள்
ளரசன் திறல்வயிந தேயன்விந தாசுத னுகுமென்ப
ரிரையுங் கழுகென்ப தாமுவ ணப்புள் ளெருவையுமே. 35

வன்சிறைப்புள், பருந்து, சாதகம், குயில்

182. மாறெதிர் சிம்புள்ளு வாருண் டகமுயர் வன்சிறைப்புட்
பாறுடன் சேனமுங் கங்கமு மாகும் பருந்தகல்வான்
கூறுபுட் சாதகங் கூட்டிசைப் பிள்ளை குணங்குயிற்கு
வேறுள கோகில மேகாள கண்டம் விதித்ததுவே. 36

செம்போத்து, கோழி, கூகை, மயில்

183. குக்கில்செம் போத்துச் சகோரமு மாங்குக் குடங்கொடுமை
மிக்க பதாயுதம் வாரணங் கோழி விறற்குடிஞை
மைக்கட் குராலுடன் கோட்டானுங் கூகை மயூரமஞ்ஞை
தொக்க சிகண்டி சிகாவலங் கேகயந் தோகையதே. 37

மயில், மயிற்பீலி, சிறகின் முதல் முள், காக்கை

184. சிகியே பிணிமுக மும்மயி லாந்தொங்கல் திண்கலப
மிகல் பீலி கூழை யிறகென் றுரைப்ப ரெழுமுருந்து
தகுமே யிறகின் முதன்முளென் றேதுந் தயங்குகொடி
ககமேவு காரியல் வாயசங் காக்கை கரும்பிள்ளையே. 38

வலியான், கருங்குருவி, கிளி, கவுதாரி

185. வயவன் வயானன் வலியான் பெயர்பெறு மாவலியன்
கயவா யிரண்டும் கருங்குரு விப்பெயர் காமர்கிள்ளை
நயவன்னி தத்தை சுகங்கிளி யாமென்பர் நாடுமிகற்
சயமேவு பூழ்சிதல் தான்கவு தாரிக்குத் தக்கதுவே. 39

புரு, அன்றில், ஊர்க்குருவி, பகண்டை

186. கணம்பயில் மென்பறைப் பாரா வதமுங் கபோதமுந்தூ
துணும்புற வும்புரு வாகுந் தரிஞ்சமுஞ் சொல்லிலன்றில்
குணங்கொள் சகட மெனிலூர்க் குருவி குலப்பகண்டை
யிணங்குமிதலி குறும்பூழ் சிவலென் றியம்புவரே. 40

நாகணவாய், குறும்பூழ், மீனெறியும் சிறுபறவை, பறவைப் பொது, கொக்கு

187. பூவைமென் சாரிகை நாகண வாய்குறும் பூழுரைக்கிற்
சேவலங் காடை சிரல்மீ னெறியுஞ் சிறுபறவை
போவிச் சகுனம் போகிலே பிணிமுகம் புட்பறவைக்
காவும் பொதுப்பெயர் கொக்குக் குரண்ட மடற்பகமே. 41

ககம், அன்னம், அன்னத்திறகு, சகோரம்

188. ககமேவி கங்கம் பதங்கமு மாகுஞ்செங் காலெகினம்
வகைமேவு மன்னம் பிணிமுக மோதிம மஞ்சமதி
நிகர்தூவி யன்னத் திறகே சகோரநன் னேமிப்புள்ளுப்
புகழ்மேவு சக்கர வாகப்புள் ளென்னப் புகன்றனரே. 42

பெருங்குருகு, நாரை, குருகு, சம்பங்கோழி, நீர்க்காக்கை

189. பேரானை யுண்குரு கென்னிற் பெருங்குரு கென்னப்பெறும்
போரார் பிதாவுமப் போதாவும் நாரை புனைகுருகு
சீரார்வண் டானந் திகழ்சம்பங் கோழி சிறந்தகம்புள்
காராருங் காரண்டம் நீர்க்காக்கை யாமென்பர் கற்றவரே. 43

வண்டு

190. அரிசஞ்ச ரீகம் ஞிமிறு மதுக மறுபதமாம்
வரியளி தும்பி சுரும்பு கழுது மதுகரமே
பிரமரந் தேன்வண்டு சாரங்கங் கோரமிசை பிரசம்
விரைமலர்த் தாழுய ராற்பத மாக விளம்பினரே. 44

ஆண் வண்டு, இந்திரகோபம், விட்டில், சிள்வீடு, நுளம்பு

191. தூய சுரும்பவற் றுணே மதுகரந் தும்பியென்ப
ரீய லியங்கிய மூதாய்செங் கோப மிகற்பதங்க
மேய கலப மெனில்விட்டில் சில்லி விறற்சிகடி
யாயசிள் வீடு நுளம்பாகு நுள்ளல் நுளுவலுமே. 45

கொசு, சேவல், எழால், பறவைப்பெண், அளகு

192. கொசுகேம சகமுங் கோமயி லன்றில் குலப்பறவைக்
கிசைவாகுஞ் சேவ லிகற்போத்து மஞ்ஞை யெழாலென்னலாந்
திசைமேவு பேடையும் பெட்டையும் புள்ளிற் றிகழ்
[பெண்ணென்ப
ரசைகோழி கூகைபெண் பேரா மவற்றை யளகென்பரே. 46

பறவையின் இளமை, முட்டை, வாயலகு, இறகு

193. பறவை யவற்றி னிளமையும் பிள்ளையும் பார்ப்புமென்பர்
முறைசினை யண்டங் குடம்பையு முட்டைமெய் மூக்குத்துண்ட
மறைகுவர் வாயல காகப் பறையோ டரந்தபிச்சஞ்
சிறுதூவி கூழை சிறையிற கென்னவுஞ் செப்பினரே. 47

தொழுதி, முதலை, ஆண்முதலை, சுருமீன், கெளிறு

194. துடர்ந்தெழு புள்ளொலிக் கூட்டந் தொழுதி துயர்வெங்கரா
விடங்கர்கிஞ் சும்மாரம் வன்மீன் முதலை யிகலுங்கரா
மடங்கவற் றுணென்ப ராடன் மகர மடற்சுறவாங்
கிடங்கினி லாலிற லாகுங் கெளிறு கெடிற்றென்பரே. 48

மீன், திமிங்கிலம், திமிங்கிலகீலம், மலங்கு

195. மச்சஞ் சலசர மீனதை நுங்கிய மச்சமெனின்
மெச்சுந் திமிங்கில மாமந்த மீனை விழுங்கியமீ
னிச்சிய மான திமிங்கில கீல நெடுமலங்கு
நச்சிய நூறையெனவே யுரைக்குமிந் நானிலமே. 49

சங்கு, வலம்புரி, சலஞ்சலம், வாரணம்

196. நந்து பணிலஞ் சுரிமுகங் கோடே நாகுநத்து
வந்தெழு கம்பு வளைசங்க மாகும் வலம்புரியின்
சந்த முரைத்திடின் மிக்க கதிலுஞ் சலஞ்சலமே
சுந்தர மிக்கதச் சங்குக்கு வாரணஞ் சொல்லுவரே. 50

நத்தை, இருல், தவளை, ஆமை

197. நாகு சுரிமுக மேகரு நந்தெனி னத்தையிற
வாகு மிருலெதி ருந்தோல தேரை யரிமரையே
நீகமண் டுகந் தவளை கமடநன் னீர்க்கச்சப
மோகர கூரும மாமையி னுமெ மொழிகுவரே. 51

நண்டு, நண்டின் ஆண், தேள், சிலம்பி, எறும்பு

198. அளைபயி னள்ளி குளிர்கற் கடக மலவனண்டு
களவ னவற்றினி லாணென வோதுங் கருந்தெறுக்கால்
தெளியில் விருச்சிகந் தேளாமு லூதை சிலம்பியென்ப
ருளுவு சுவாகு முறவியுந் தானென்ப ரூரெறும்பே. 52

நாகரவண்டு, சிதலை, புழு, தேன்கூடு, கோற்புழு

199. சிறுநாகர வண்டு நொள்ளைசெல் லாழல் சிதலையென்ப
கறையான் கிருமிவெங் கீடம் புழுவென்ப கற்பிரசங்
குறையாத தென்றுந்தேன் கூடிரு லென்பர் கோற்புழுவு
முறையான கீட முடனே வுலண்டென வோதுவரே. 53

பாரதிதீப வரலாறு

200. மீன்ருவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன்
ஏன்ருசு கூறுங் கவிவேந்தன் பாரதி யேற்றமலர்த்
தேன்ரும் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபந்தன்னில்
மூன்ருவது விலங் கின்பேர்த் தொகுதி முடிந்ததுவே. 54

நாலாவது

மரப்பெயர்த் தொகுதி

தருவின் வகை, சந்தனம், அகில்

201. சந்தானந் தேவ தருப்பாரி சாதந் தடக்கற்பக
மந்தார மென்பர் சந்திர திலக மலையசமே
கொந்தாரஞ் சந்திவை சந்தன மாமென்பர் கூரகரு
நந்தாத காகதுண் டம்பூழி லேயகி ளுமங்களே. 1

ஆச்சா, இத்தி, மகிழ்மரம், தேக்கு, சண்பகம், அசோகு

202. ஆவென வோதுவ ராச்சா மராமர மானமர
மேவிய சால மிறலியித் தீயென்பர் மெய்வகுளந்
தாவி லிலஞ்சி மகிழ்சாதி தேக்கென்பர் சண்பகமே
தூவலர்ச் செண்பகம் பிண்டி செயலைய சோகென்பரே. 2

ஆல், அரசு, மருதம், கொன்றை

203. குலவு வடந்தொன் மரமாம் பழுமரங் கோழியுமா
விலையில் கணவம் பணையே மராமர மச்சுவத்த
மலிதரு போதி யரசா மருச்சுன மாமருத
மிலகு மிதழி கடுக்கை மதலை யெனுங் கொன்றையே. 3

குடவு, நாவல், வேம்பு, காஞ்சிரை, அத்தி, கோங்கு

204. கொட்டங் குடிலங் குடவென் றுரைப்பர் குலவுசம்பு
மட்டவிழ் நாவல் மலிநிம்பம் வேம்புவன் காஞ்சிரையா
மெட்டி யதவு முதும்பர மும்மத்தி யென்பர்கயா
கட்டவிழ் தூட்டிணர் மென்கோங்க தாங்கன்னி காரமுமே. 4

புளிமா, மாமரம், செருந்தி, புன்னாகம், மஞ்சாடி

205. போதவி ழாம்பிர மேசூத மாழை புகழ்புளிமாச்
சூதமென் சேகர மாமர மேகொக்குத் தூயநன்மாச்
சீதள பஞ்சரஞ் செங்கோ டுரைக்கிற் செருந்திபுன்னை
யோதுபுன் னாகந் திலகமஞ் சாடியென் றோதுவரே. 5

வன்னி, கடுக்காய், பச்சிலைமரம், கருங்காலி, ஆத்தி, குருந்தம், நெல்லி

206. சமியே கலீகமும் வன்னி யரிதகி தான்கடுக்காய்
கமழுந் தமாலம் பசும்பிடி பச்சிலை காறகத்திர
மமர்கருங் காலியார் தாதகி யாரமு மாத்திகுந்தம்
நிமிர்குருந் தென்பர் நிரையா மலகமும் நெல்லியுமே. 6

செங்கருங்காலி, புளி, இல்லம், வெட்பாலை, விளா

207. கந்த மிகுஞ்சிறு மாரோட்டஞ் செங்கருங் காலிசிந்த ஞ்
சிந்துர மாம்பில மேயெகி னஞ்திந் துருணிபுளி
கொந்தில்லம் பொங்கா லம்வெட் பாலை (வற்சம்) குடசமென்பர்
முந்திய வெள்ளில் விளாவில்வ மாமென்பர் மொய்குழலே. 7

குமிழ், முருக்கு, குடைவேல், பாதிரி, சேமரம், ஈரப்பலா, வில்லுவம்

208. கடம்பல்மென் கூம்பல் குமிழ்கிஞ் சுகங்கவி ரேமுருக்காம்
உடைகுடை வேலென்பர் பாடலம் பாதிரி யோங்கழிஞ்சி
லடர்தருஞ் சேமர மங்கோல மாசினி யீரப்பலா
மிடைதரு கூவிள மாலூரங் கூவிளை வில்லுவமே. 8

கடம்பு, வேங்கை, வருக்கைப்பலா, தாதுமாதுளை, மாதுளை, எலுமிச்சை

209. கடம்பு விசால முடனீப மேகதம் பந்திமிசு
படுந்தி மிலேகணி வேங்கை வருக்கைப் பலாப்பனசம்
மடங்கிய தாதிம முந்தாது மாதளை மாதுளங்க
மிடந்தெழு மாதுளை சம்பு முருக்கெலு மிச்சமுமே. 9

குருக்கத்தி, நாரத்தம், அகத்தி, களா, காயா, இலந்தை, நறவம், ஞாழல் மரம்

210. குருகு குருக்கத்தி மாதவி யாகுங் குலநரந்தை
கருதிய நாரத்த மச்ச மகத்தி களங்களாவா
மிருள்காசை பூவைமென் காயா விரத்தி யிலந்தைதள்ளி
மருவு நறவ மதுநாகம் ஞாழல் மரமென்பரே. 10

குஞ்குமம், உலவை, ஒடு, உன்னம், கமுகு, தணக்கு

211. மலிமா தவந்துருக் கங்குங் குமமா மரமுழுஞ்சி
லுலவை யொடுவை யொடுப்பையோ டாண்மர முன்னமென்பர்
கலிகெழு பூகமும் பூக்கமுங் கந்தி கமுகதென்பர்
தலமிசை மேவு நுணவை தணக்கெனச் சாற்றுவரே. 11

பனை, இளம்பனை, வாழை, தெங்கு, கரும்பு

212. புனைதாலம் நீலம் பொருபெண்ணை போந்தைபுற்
[ருளியென்னிற்
பனையாகும் போந்தை யிளம்பனை வாழை பயிலரம்பை
கனிநாளி கேரமுந் தாழையுந் தெங்கென்ப கன்னல்கழை
யினவேழ மிக்குக் கரும்பென வோது மெழுபுவியே. 12

மூங்கில்

213. வரைவேழங் காம்பு திகிரிமுந் தூழ்தட்டை வாங்கியபா
திரிகீ சகம்வெதி ரேபணை வேணுச் சிறந்தகழை
நிரைவேரல் விண்டுவேய் கண்பாண்டி லோங்கல் நெடுங்
[கிளையே
யரிமேவு தூம்புடன் சந்திவை மூங்கி லமையென்பரே. 13

தாழை, பூவாது காய்க்குமரம், வண்டுணுமலர்மரம், மரப்பொது

214. கேதகை தாழை முடங்கல் மடிகைதை கேள்கண்டலாம்
போதணு காத குணமரங் கோளி புனைசெண்பகந்
தாதவிழ் வேங்கை யளிபயி லாமரந் தாபரமே
பாதவந் தாருத் தருமரப் பேர்பொதுப் பாசென்பரே. 14

மரச்செறிவு, பொதும்பு, நந்தவனம்

215. கோல மரச்செறி வாகும் பொதும்பருங் கோடரமுஞ்
சாலும் பொதும்புத்தி யானமுய் யானமென் றண்டலையே
சோலைதண் காவல் பொழில்நந்த வானமந் துடவைநருக்
காலு முபவனந் தோட்ட மிளமரக் காவென்பரே. 15

இலையுதிர்காடு, கரிகாடு, காவற்காடு, தூறு, இண்டை, முள், முள்ளுடை மூலம்

216. இலையுதிர் காடு முதைசுரம் பொச்சை யெனிற்கரிக்கா
டலகி லரண்மிளை காவற்கா டென்ப ரரளிறும்பு
கலிகெழு தூறிண்டை யீங்கை கடுக்கண்டகமும் முள்ளும்
மலிதரு முண்டக முள்ளுடை மூல வகைபெறுமே. 16

காடு, பிரம்பு

217. அடவி முளரி வனங்கான மாரணி யங்களரி
கடறு குறும்பொறை காந்தாரம் கட்சிவெங் காண்டமத்தம்
படர்தரஞ் சீரணி பொச்சை கவனம் பழுவந்தில்லம்
விடரிவை காடென்பர் வேத்திரஞ் சாதி விறற்பிரம்பே. 17

மரக்காழ், வெளிற்றுமரம், புறக்காழ்மரம்

218. அரிகலை யாசினி சேகே வயிர மவைமரக்கா
ழுரலன மாமர மகக்கா ழெலவே யுயர்முருக்கு
மருவிய பான்மர மெல்லாம் வெளிற்று மரமதென்பர்
கருதிய நற்புறக் காழ்பனை யேதெங்கு காற்கமுகே. 18

சிறுதூறு, மருந்து, சல்லியகரணி

219. திரண்ட பதுக்கை யரில்சிறு தூறு செழும்புதலே
பொருந்திய வல்லி மரம்பூடு புல்லுப் புகழ்ந்துரைக்கில்
மருந்தென லாஞ்சத் திரமே யுருவகை மாற்றுவதே
யிருந்திறற் சல்லிய கரணி யாக வறைந்தனரே. 19

சந்தானகரணி, சமனகரணி, உயிர் தரு மருந்து

220. சிந்து முடற்றுணி யெல்லா மொருவகை சேரும்வண்ணஞ்
சந்துசெய் விப்பது சந்தா னகரணி சார்தழும்பு
வந்த விரணமும் போக்கி விடுஞ்ச மனகரணி
யுந்திய மாமிருதஞ்சீ வனியு முயிர்தருமே. 20

மரத்தின் இளமை, இளமைப்பெயர் பெருதவை, மரக்கொம்பு

221. குழவிகன் றேபிள்ளை போத்தென் கிளவியுங் கூறினமாத்
தெழிலிள மைப்பெயர் நெல்லுடன் புல்லெனி லெய்தலுரு
வொழுகிய பொங்கர் சினைபணை சாய்கை யுறுப்புலவை
கொழுவிய கோடரங் கோடு பிறக்கமென் கொம்பென்பரே. 21

தழை, இளங்கொம்பு, இலை, தளிர்

222. தழையே யுலவை வளரிளங் கொம்பென்பர் தண்ணடையே
யெழிலோலை பாசடை பத்திரஞ் சாய்கை யிலகு பன்னம்
விழைவார் தமால மிலைவல் லரிமுரி மென்கிளையே
குழைவார் கிசலைய மஞ்சரி பல்லவங் கொய்தளிரே. 22

தளிர்த்தல், குருந்து, இணர், பழம், பரலினுட்படு குருத்து

223. குழைத்த லிலிர்த்தல் தளிர்த்தல் முருந்து குருந்தெனலா
மெழிற்றகை மஞ்சரி கொத்துத் துணருடன் றெுத்திணராம்
பழப்பெய ரென்னிற் பசுங்கனி யாம்பலம் பரலினுட்பட்
டொழுக்கிய மென்குருத் துப் பயி ஞக வுரைத்தனரே. 23

நந்தியாவத்தம், கஞ்சா, நொச்சி, கார்த்திகை நாண்மலர், காந்தள்

224. மல்லல் வலம்புரி தானந்தி யாவத்த மன்னுகஞ்சங்
குல்லைகஞ் சாநொச்சி யேசிந்து வாரமென் கோடலுடன்
நல்லசெங் காந்தளுஞ் தோன்றியுங் கார்த்திகை நாண்மலராம்
புல்லும்வெங் காந்தளுங் கோடலென் றேசொல்லும்
[பூதலமே. 24

ஊமத்தை, ஆமணக்கு, குறிஞ்சி, அலரி, வெட்சி

225. இலகிய பூமத் தகமெனி லூமத்தை யேரண்டமே
குலவிய வாமணக் காகுங் குறிஞ்சியுங் கோரண்டமா
மலரி கணவரி மென்கர வீர மணுகுஞ் செச்சை
யுலைவில்செந் தூர மவைவெட்சி யாக வுரைசெய்வரே. 25

சிறுமூலகம், பருத்தி, துழாய், மிளகு, கடுகு

226. திப்பிலி காமஞ் சிறுமூ லகஞ்சிறு பூளை செப்பில்
ஒப்பி லுழிஞைவெங் காற்பாசம் பன்ன லொளிர்பருத்தி
கப்படர் குல்லை துளபந் துழாய்மரி சங்கறியாய்
வைப்பர் மிளகு கடிப்பகை யையவி வணகடுகே. 26

மஞ்சள், கருணை, வாசப்பண்டம்

227. அரிசனம் பொன்மை யரித்திர மஞ்சளென் ருகுங்கந்தங்
கருணைதற் கோல மிலவங்க மேநற் றகரங்கோட்ட
மருவிய வேலம் வளர்சாதிக் காயுடன் மாஞ்சிமற்றும்
பரவுகைச் சோல மிவைவாச மேவிய பண்டங்களே. 27

கொத்தமூரி, கழங்கு, கழல், கிலுகிலுப்பை, சேம்பு, சிறுகீரை, கற்ருழை

228. உலகினு ளஞ்சிப் பெயர்கொத்த மூரிக் குரைப்பர்மண்மேற்
குலவிய மூழல் கழங்கோ கொடிக்கழல் கொய்பகன்றை
கிலுகிலுப் பைசகு டஞ்சேம்பு கேள்சிறுக் கீரையென்னிற்
குலைபெறு சாகினி சில்லி குமரிகற் ருழையதே. 28

வழுதுணை, சாரல்விளையும் நெல், செந்நெல், குளநெல், தோரை, இறுங்கு

229. ஆரும் பிரகதிர் வங்கம் வழுதுணை யைவனமே
சாரம் விளையுநெற் சாலியுஞ் செந்நெற் றயங்கியநீர்
வாரங் குளநெல்லி யவையுந் தோரை மலியுணவாம்
ஏருறு சொன்னலுஞ் சோளமுங் கூறி லிறுங்கென்பரே. 29

கருந்தினை, செந்தினை, முதிரை, எள், எள்ளிளங்காய், கதிர், தினைத்தாள்

230. இறடி கருந்தினை செந்தினை யேன லெழுமுதிரை
செறியு மவரை துவரைக ளென்னுந் திலமுமெள்ளுக்
கறைபயி லெள்ளிளங் காயென்பர் கௌவை கதிர்குரலாந்
திறியு மருவி யிருவியெல் லாந்தினைத் தாளென்பரே. 30

பதர், வைக்கோல், போற்ருப்பொலி, பயிர், புல்பிறப்பு

231. பதடி யெனிற்பத ராகும்வைக் கோல்வை பலாலமென்ப
ரதுவு முரைக்கி லழியென்ன லாம்பொங் கழியுரைக்கிற்
புதிய களந்தனிற் போற்ருப் பொலிபயிர் போற்றுபைங்கூ
முதவி பசும்புற்கு மாம்புதற் புல்லென் ருருபிறப்பே. 31

கோற்கொடி, கற்பகம்சேர்கொடி, கொடி, மென்கொடி, நாரரி

232. இலதை யெனும்பெயர் கோற்கொடி கற்பக மெய்துகொடிக்
குலம துரைத்திடில் மென்காமர் வல்லிவெங் கோற்கொடியாம்
நலமிகு மென்கொடிச் சாதிப் பிறப்புக்கள் நாரரியே
நிலைபெறு நெய்யரி தெங்குநார்ப் பாளைக்கு நேர்ந்ததுவே. 32

வன்கொடி, கிழங்கு, இருவாச்சி, மல்லிகை, முல்லை

233. வந்தெழு வல்லியும் வள்ளிலும் நூழிலும் வன்கொடியாங்
கந்தமு மூலமு மாகுங் கிழங்கு கமழ்மயிலை
முந்திரு வாச்சி முழுமௌவல் மல்லிகை மொய்த்தளவு
கொந்தணி மௌவலு முல்லையின் பேரென்று கூறுவரே. 33

சிறுசண்பகம், பிச்சி, கொவ்வை, அடம்பு, சிறுதூறு, பீர்க்கு

234. கருமுகை பித்தி சிறுசெண் பகங்கமழ் சாதியென்பர்
விரைமௌவல் மாலதி யேபிச்சி தொண்டையும் விம்பமுமே
யருகடர் கொவ்வை யடம்புசேர் பாலிகை யாமதிரல்
பிதிர்சிறு தூறென்பர் பீரமும் பீர்க்கென்று பேசினரே. 34

கூதாளி, சிவதை, சீந்தில், காஞ்சொறி, ஏதாளி, தருப்பை

235. கூதாள மேதுடி கூதாளி யென்பர் கொடிச்சிவதை
தீதார் பகன்றை யமுதவல் லிப்பெயர் சீந்திலென்பர்
மீதாரங் கண்டுரங் காஞ்சொறி பஞ்சிக மேயுரைக்கி
லேதாளி யாகுங் குசையே தருப்பை யிசைவுறுமே. 35

நாணல், பஞ்சாய்க்கோரை, வாட்கோரை, முள்ளி, பாசி, குளிரி

236. காசையு நாணல் எருவைபஞ் சாய்கழிக் கோரையகம்
வீசு செருந்தியும் வாட்கோரை முண்டக மேவுமுள்ளி
மூசிய சைவலஞ் சேயீர நார முழுப்பதியம்
பாசி குளிரி யெனிற்கல்ல காரம் பயின்றிடுமே. 36

தாமரை

237. வாரிசம் பங்கய முண்டகங் கோகன கம்வனசம்
வேரிய கஞ்ச முளரி சரோருகம் மென்மலரம்
போருகம் பற்ப மரவிந்தம் புண்டரி கங்கதிரோன்
ருரகம் போதம் புயஞ்சத பத்திரந் தாமரையே. 37

கருங்குவளை, செங்குவளை

238. சலசம் பதுமங் குசேசயம் என்பர்தண் காவிதடங்
குலவுமிந் தீவர நீலோற் பலமென் குவலையமே
யலர்தரு பானல் கருங்குவ ளைப்பெய ராமரத்தம்
பலசெங் குவளை கழுநீரும் பன்னுற் பலமென்பரே. 38

நெய்தல், செவ்வாம்பல், வெள்ளாம்பல், அகவிதழ், புறவிதழ், பூவினுட்கொட்டை

239. கருகிய நெய்தல் குவலைய மாகுங் கயிரவமே
யரிபயி லல்லி குமுதம்வெள் ளாம்ப லகவிதழே
பொருவரு மல்லி புறவிதழ் புல்லித ழாம்பொகுட்டுக்
குருகெழு பூவினுட் கொட்டையின் பேரென்று கூறினரே. 39

நால்வகைப் பூ, மொட்டு, மலர்

240. நீர்கொடி கோடு நிலமெனும் நால்வகை நீடியபூச்
சேர்கலி கைமுகி ழேநனை கோரகஞ் செவ்வரும்பு
வார்கணி கைநகை யேமுகி ழுஞ்சினை மாமலர்மொட்
டேர்கமழ் போது துணர்வீ யலரி யிணர்மலரே. 40

வாகை, பழம்பூ, பூந்தாது, இதழ், மாலை

241. வென்று புனைதரு பூவாகை செம்மல் மிகுபழம்பூ
மன்றலந் தாதென்னிற் கேசரங் கொங்கு மகரந்தமாந்
துன்றிய ஏடுடன் றேடு மலரிதழ் தொங்கல்கண்ணி
யொன்றிய கோதை தெரியல் அலங்க லொலியலுமே. 41

மாலை, பிணையல், நுதல்மேலணி, வாசிகை

242. தொடலை யிலம்பகந் தார்மாலை தாமஞ்செஞ் சூட்டணிபல்
படலை சிகழிகை வாசிகை கத்திகை பைம்பிணையல்
மிடல்தருஞ் சூட்டு மிலம்பக மும்நுதல் மேலணியாம்
அடர்முடி வாசச் சிகழிகை வாசிகை யாமென்பரே. 42

பாரதி தீப வரலாறு

243. விழியருள் பூண்ட நவதா ரணைமுகில் வேங்கடவன்
வழியினுள் வாழ்திரு வேங்கட பாரதி வண்டமிழின்
செழுமைய தாகு மிலக்கிய பாரதி தீபந்தன்னின்
மொழியொரு நான்கில் மரப்பேர்த்தொகுதி முடிந்ததுவே. 43

ஐந்தாவது

இடப்பெயர்த் தொகுதி

துறக்கத்தின்பெயர்

244. வானகம் நாகம் பவன முயர்நிலை மாசுவர்க்கம்
தானம ராபதி யும் பரிடமைந் தருவுலக
மேனிலை பொன்னுல கம்விண் ணுலகம் விசும்பிடமே
கோனக ரிந்திர பதியே துறக்கங் குலவியதே. 1

விஞ்சையர் சேர்விடம், வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு

245. தீதகல் சேணியுஞ் சேடியும் விஞ்சையர் சேர்விடமா
மாதுறு போக நிலம துவாகும் வடக்குத்தரங்
கோதறு தென்றிசை தெக்கணம் பச்சிம மேகுடக்குப்
போதுறு மேக்குக் கிழக்குக் குணதிசை பூருவமே. 2

தேவகுருவம், உத்தரகுருவம், திக்கு

246. தாதுறு தேவ குருவ முடனுத் தரகுருவ
மீதது வெள்ளி மலைபொன் மலைப்புற மேலரிதம்
மாதிரங் காட்டைக் ககுப மிசைபுல வம்பல்திசை
தீதக லாசை யுடன்கோ வெனலிவை திக்கென்பரே. 3

பூமி

247. அசலை யளக்கர் தரையே குவலைய மம்புவன
வசுமதி தாத்திரி சாந்தை விபுலை வசுந்தரைகூத்
திசைபயில் பூதலம் வேலா வலையஞ் செகம் பொறைமண்
இசைதரு பூமி மகிதலம் மேதினி யென்பர்களே. 4

248. தாரணி காசினி தாலந் தரணி தலம்புடவி
பாரக நேமி தராதலம் ஞாலம் படியவனி
பேருல கம்புவி பூதலம் வையம் பிருதுவிபூ
வாரி நிலம்பொழி லேகோ வகலிட மண்டிலமே. 5

நரகம்

249. இருநிலம் பாவம் விளைநில மள்ள லிருஞ்சிறையே
துரகதி கொல்கதி பாதகங் கும்பி சுடரெரியே
யருவினை சூழ்மடல் பாதாளம் பாதலத்(துடன) ளறு
நிரைய நிகோதம் நரகமென் றேசொல்லு நீணிலமே. 6

உலகின் பொதுபெயர், நாடு

250. நாகதலமுட னூடும் பவனநன் னூடுபொழில்
போக புடவி நிலமே யுலகின் பொதுப்பெயரே
யாகிய பைதிர மண்டிலம் பாண்டி லகலுள்கண்ட
மோகமென் றண்ணடை தெய்வநன் னூடென் றுரைசெய்வரே. 7

மலை

251. வரைகுன்று நாகந் திகிரி யடுக்கல் மலைபொச்சைபூ
தரம்விண்டு சாரல்கல் வெற்புப் பிறங்கல் சயிலநகங்
கிரிதண் சிலம்பு குறும்பொறை வேதண்டங் கேள்பெருஞ்சி
கரிவெஞ் சிலைபறம் போங்கல் பொருப்பகங் கல்லகமே. 8

மலை, மேருமலை, பொதியமலை

252. இரவி குவடு நவிரம் பருப்பத மேயிறும்பத்
திரியச லங்குத் திரங்கோடு பொற்றை சிலோச்சயமே
தரமா திரமென்பர் பொன்மலை மேருத் தயங்குவட
வரையாகு மென்பர் பொதியல்தென் குன்ற மலையமதே. 9

குன்று, மலையுச்சி, மலைப்பக்கம்

253. குவடு பிறங்கல் பதலை குறும்பொறை குன்றிறும்பு
நவிலுவர் பொற்றை கொடுமுடி கோடு நலக்குவடு
தவசிக ரங்கிரி மேலுச்சி வாரம் தடஞ்சாரல்கான்
கவர்கட மென்னில் மலைப்பக்க மாகக் கருதுவரே. 10

பாறை, துறுகல், மலைமுழை, பிலம், மலைப்பிளப்பு, கற்புழை, சிறுதிட்டை

254. புலமிகு பாறை யறையே துறுகல் பொறைமுடுக்கர்
மலைமுழை கந்தர மாம்பிலங் கீழறை மன்றிரலுல
மலையின் பிளப் பேவிட ராகு முயர்கற்றிரட்
சிலைகற் புழையுங் கரணம் பதுக்கை சிறுதிட்டையே. 11

விடர், திட்டை, உயர்நிலம், பரலடுத்துயர்நிலம், பாதலம்

255. விடருங் கமருமவிப் பும்விட ரென்பர்கள் மேடுதிட்டை
திடவசு வல்வன் பால்கங்கர் குவால்குப்பை சேர்ந்தகுவை
யுடனுரை செய்யி லுயர்நில மாம்பர லுற்றுயர்ந்த
படர்நில மாகு முரம்பே யரம்பிலம் பாதலமே. 12

கடல்

256. பரவை யளக்கர் மகரா லையமத்தி பௌவமுந்நீர்
நரலை சமுத்திரம் வேலா வலையம் நதிபதியே
திரையிற வாலையங் கார்கோள் சவருப்புச் சிந்தலையு
வரிகூல ராசி கடல்வேலை யார்கலி வாருதியே. 13

கடல், கடற்றிரை

257. மாவாரி வீரை யுததி சலதி மகோததிபா
ராவார நேமி பெருநீர் புணரிமை யம்பரமே
பூவாடை சாகரஞ் சக்கர மாழி புணரியுட
னேவாத வோதங் கடற்றிரை யாக வுரைசெய்வரே. 14

நீர்த்திரை, கடற்கரை, நீர்க்கரை

258. தரங்கங்கல் லோலம் விசிகர மேயறல் தத்துமலை
விரிந்தநன் னீத்திரை யாமென்பர் பாரமல் வேலையுட
னருங்கரை கோடணை கூலமந் தீர மடர்வரைபார்
பொருந்திய வாசப் புனலின் கரைக்குப் பொதுப்பெயரே. 15

செய்கரை, மலைச்சாரல் வரும் ஆறு, முல்லைநிலக் கான்யாறு, ஆறு

259. செங்குலை சேதுக் குரம்பிவை செய்கரை தெள்ளருவி
யங்கிரிச் சாரல் வருமா றுயவை யருங்கலுழி
தங்கிய முல்லை நிலக்கானி யாறுந்தி தன்குடிஞை
பொங்கிய சிந்து நதியா றெனவும் புகன்றனரே. 16

கழிமுகம், உப்பளம், காவிரி, பொருனை, ஆன்பொருனை

260. புகல்புகா ரோடை யதோமுக மென்னிற் பொருந்துகழி
முகமது வாகு முகங்காய லாங்கழி மொய்யுப்பளந்
தகுகானல் காவிரி பொன்னி பொருனையந் தண்பொருந்த
மகவானி யானி யிவையான் பொருனைக் கடைத்ததுவே. 17

வாவி

261. அலந்தை கிடங்கு சுனையோடை கோட்டக மாவிமடு
விலஞ்சி படுக்கயங் கேணியுவளக மேரிபொய்கை
சலந்தரம் பட்டங் குளமே தடாகந் தடம்வலைய
மலங்கல்குட் டங்குண்ட மேவாவி சூழி யகண்டனையே. 18

ஆற்றிடைக்குறை, கிணறு, ஊறல், நீர்க்குமிழி, ஆழம்

262. அறியி லிலங்கை துருத்திய ரங்கமவ் வாற்றிடையிற்
குறை கிணறு மென்பர்கூவ லசும்புடன் கூபமிவை
யுறவியு மூறல் குமிழியும் புற்புத மோங்குபௌவம்
நிறைநுரை யாழ மழுந்தயங் குண்டு நெடுங்கயமே. 19

நிறைபுனல், சேறு

263. வாரி நிறையும் புனலே பிராறு வழாறு மென்பர்
நீருறு பள்ளம்வெங் காலாழந் தொள்ளி நிலையளக்கர்
காரகற் பூமிகுழை சேத கம்பங் கமானதொய்யல்
சீரில் செறும்புடன் செய்யலென் றோதுவர் சேற்றினையே. 20

பொல்லாநிலம், வெள்ளை மணல், மணற்குன்று, நுண்மணல், புழுதி

264. சாலு மசுத்தம்பொல் லாத்தல மேயங் கணஞ்சகதி
வாலுகம் வெள்ளை மணலே புளின மணற்குன்றென்பர்
மேலற லாகுங் கருமணல் நுண்மணல் மேவியதாம்
பாலயிர் பூழி புழுதி பொடிக்குப் பகர்ந்ததுவே. 21

குறிஞ்சி, நெய்தல், முல்லை, பாலை, மருதம்

265. குலமலைச் சார்பிட மாகுங் குறிஞ்சி மகோததிசூழ்
நிலமெனில் நெய்தல் வனஞ்சார் நிலமுல்லை நீரின்றியே
யுலர்நிலம் பாலை பணையே கழனி யுயர்பழன
மலிதரு பானல் வயல்சூழ் நிலமு மருதமதே. 22

முல்லை, குறிஞ்சி, பாலை, வன்பால், மென்பால், சமப்பால், கருநிலம்

266. பேராப் புறவம் பணைமுல்லை யாகும் பெயர்குறிஞ்சி
பாராரும் பாலை குறிஞ்சிவன் பாலை பகுத்தமென்பாலை
நீரார் மருதஞ் சமபடர் முல்லையு நெய்தல்வனங்
காரார் மலைப்புனல் தன்னில் மிகுஞ்சொற் கருநிலமே. 23

ஊர்

267. சிறுகுடி பாக்கம் பதிநக ரேநொச்சி சேரிபுரங்
குறிபயில் பாடி யகலுழ் குறும்பு குறிச்சிமுட்ட
மிறையக ரம்பட்டி னம்பாழி பூக்க மிருக்கைகுப்ப
முறையுளங் கோசர மேபூண்டி வேலிதொல் லூரென்பரே. 24

குறிஞ்சி நிலத்தூர், முல்லை நிலத்தூர், நெய்தல் நிலத்தூர், பாலை நிலத்தூர், மருதநிலத்தூர்

268. குறிஞ்சி நிலத்த சீறூர் குறிச்சி குலவுமுல்லை
செறிந்தது பாடியும் பட்டின நெய்தலைச் சேர்ந்ததென்பர்
மறந்தரு பாலை குறும்பு முனையிடம் வாட்கையுட
னுறைந்தது தண்ணடை யாகு மருதத்தி லூர்ப்பெயரே. 25

பதி, நகரப்பதி, பகைநிலத்துறைபதி, சூழ்கழி

269. பூரியம் பூக்கங் குடிக்கா டுறையுள் புனையருப்பம்
பாருறை செய்(யினி) லுழர்பதி யென்பர் பாடிபதி
சேரி புரநக ரப்பதி பாசறை தெ(ம்)முனைசேர்
சூரிடந் தோணு முகமே யிருக்கைமுன் சூழ்கழியே. 26

மலை ஆறு சார்ந்த ஊர், ஊர்சூழ் பதி, அரணிருக்கை, புகார், கருவூர், மதுரை

270. கிரியா றிரண்டு மகலாத வூரெனிற் கேடகமா
மருகூ ருறைபதி கூறில் மடப்ப மரணிருக்கை
பொருகோ டெனிற்குறும் பாமென்பர் காகந்தி போற்றும்புகார்
கருவூரணி வஞ்சி கூடல் மதுரைக்குக் கற்பித்ததே. 27

உறையூர், பாடி, தெரு, அங்காடி

271. பயில்தரு கோழி யுறையூரச் சேரியும் பாடியென்பர்
நியமமன் ஞவண மேவீதி கோசுடன் ஞெள்ளல்மறு
குயர்தெரு மார்க்க மெனலா நியமமொண் கூலமுடன்
வியலுறு மாவண மங்காடி யாக விளம்புவரே. 28

கோயில், மாதவர் வாழிடம்

272. குலவு சினகரஞ் சேதியந் தேவர்தங் கோயிலென்ப
நிலைய நிகேதன மாதிர மாலைய நீடுபள்ளி
மலிதரு கோட்டங் குலமே யுறையுள்வன் பாழிமன்னும்
நலமிகு மாதவர் வாழிட மாக நவிலுவரே. 29

விடு, இல், சிற்றில்

273. மாடம் வசதி பதிபாத்தில் சேர்வு வயினுறையுள்
வீடகம் புக்கில் லிடமே யிடவகை மேவுநகர்
கூடு மனைபவ னங்குல மாளிகை கூறிலில்லா
நீடிய சிற்றில் குரம்பையுங் கூரையு நேர்படுமே. 30

இறப்பு, முகடு, தாழ்வாரம், அடுக்களை, சாளரம்

274. மூரி யிறையிறப் பாகும் விடங்க முகடென்பதாழ்
வார மெனத்தகுஞ் சோபான மட்டில் மடப்பளியுஞ்
சாரு மடுக்களை சாலேகஞ் சாலகஞ் சாளரமே
சீரிய நூழைதொல் வாதா யனமெனச் செப்பினரே. 31

கல்லூரி, வேயுள், பீடம், சுவர்த்தலை, திண்ணை

275. மிகுகல்வி யூவியுங் கல்லூரி வேயுளும் வேய்தலென்ருகும்
சொகுதகு பீடமும் பீடிகை யாகுஞ் சுவர்த்தலையும்
புகலுவர் வித்தகர் பித்திகை யாகப் புனையுந்தெற்றி
திகழ்தரு வேதிகை திட்டை மண்ணீ டென்பர் திண்ணையையே. [32

நிலாமுன்றில், சித்திரகூடம், மன்றம், கழகம்

276. நிலமுன்றி லங்கண முற்ற மரமிய நீடுநிலாக்
குலாமுன்றி லாந்தெற்றி யம்பலஞ் சித்திர கூடமென்பர்
மலியும் பொதுவில் பொதுவம் பலமிவை மன்றமென்பர்
கலைதரு கல்வி பயில்கள மாகுஞ் கழகமுமே. 33

கழகம், அரசர்கள் இருக்கை, அரங்கு

277. வல்லும் படையுநற் சூதுடன் மாறு மகிழ்ந்த கல்வி
சொல்லுங் களமுங் கழக மரசர்கள் சூழ்ந்திருக்கை
புல்லும் பெயரி னிலத்தாணி யாடிடம் போரிடமே
வெல்லும்வட் டாடிட மேயரங் காக விதித்தனரே. 34

ஒருசிறை, அணியவிடம், உறைவிடம், மக்கள் உறங்கிடம்

278. அறியி லொருசிறை யேதுச்சில் கொட்டி லணியவிட
முறைவிட மேபிறப் பாகரம் பாழி யுறையுள் பள்ளி
செறிசய னங்கட்சி பாய லமளிமெய் சேர்விடமே
யுறைவரு சட்டகஞ் சேக்கையு மக்க ளுறங்கிடமே. 35

குதிரைப் பந்தி, யானை மேவிடம், யானை செல்வழி, கூடு, வேள்விக் குண்டம்

279. செயமாவின் பந்தி பணைமந் திரந்தண்டஞ் சேவகமே
கயமே விடங்கயஞ் செல்வழி தண்டங் கருதுங்கட்சி
வியலார் குடம்பைவெம் பஞ்சரங் கூடென்பர் வேள்விக்குண்ட
முயர்வான தீத்தமும் வேதியு மாக வுரைசெய்வரே. 36

மட்கலம் வேமிடம், சுடுகாடு, தொழு

280. மருவிய மண்கலம் வேமிடஞ் சூளை மயானமுடன்
கரிபுறங் காடு சுடுநில மீமம்வெங் காளவனம்
பெரும்பிணக் காடு சுடுகாடு வெய்ய பிதிர்வனமாம்
நிரைதொழுத் தோழ மான்வேலி தொறுவா னிலையென்பரே. 37

போர்க்களம்

281. செருநில மாகவ பூமி யமர்க்களஞ் செம்புலமே
பொருகள மேயுத்த பூமிசங்கி ராமமண் போர்க்களமே
வெருவு பறந்தலை யாயோ தனதலம் வெங்களமே
பரிய பிணக்களம் வெஞ்சம தேசம் படுகளமே. 38

வழுக்குநிலம், மதில், சிறை

282. ஆரிடை தீய வருட மருப்ப மவைவழுக்குப்
பாரி கலிஞ்சி யெயில் சுற்றுக் காவல் பயில்வரைப்புப்
பேரரண் காப்புப் புரிசை புகன்மதிற் பேரெனலாம்
சேருமு வளகம் வன்சிறை யாகவுஞ் செப்பினரே. 39

மதிற்சுற்று, மதிலுறுப்பு, அகழி

283. வாரி தகைப்புத் தொடையெனிற் சுற்று மதிலுறுப்புச்
சேரும் விதப்புப் பதப்பாடு ஞாயில் திறவெந்திரம்
போருறு நாஞ்சி லுடன்ரேணி கோசம் பொருந்துமென்ப
ராரகழ் கூறி லகப்பாப் பவிக மகன்கிடங்கே. 40

வாய்தல், பெருவாயில், பெருவாயிலில் புகும் பூழை, வயல்

284. வரவியல் தோட்டி துவாரமும் வாரியும் வாய்தல் வண்கோ
புரமது சொல்லிற் பெருவாயி லென்பர் புதவுரைக்கிற்
பெருகிய வாயிலிற் போம்பெரும் பூழை பெருவிளையுள்
கருதிய செய்யும் வயலே விளையுங் கழனியுமே. 41

குறிஞ்சி சாருநிலம், பழங்கொல்லை, புதுக்கொல்லை, தினைப்புனம்

285. சேரும் வரவை தடிபாத்தியோடு செறிகுறிஞ்சி
சாரு நிலங்கொல்லை தண்புன மாம்பழை தானகொல்லைப்
பேரு முதைப்புன மாம்புதுக் கொல்லையின் பேரிதையாம்
காருறு மேனல் தினைப்புன மாகக் கருதுவரே. 42

தோட்டம், உழவு, உழவோர் வளைப்பு, புதுவரம்பு, வரம்பருகு, புற்று

286. துடவை படப்பை யெனுமிவை தோட்டந் துடவைதொய்ய
லுடனுழ வின்பெய ரோதுந் தொடுப்புழ வோர்வளைப்பு
வடிவமில் மாசி முதுவரம் பாகும் வரம்பருகா
மடர்தரு கங்குவன் மீகமும் புற்றென் றறைகுவரே. 43

சூழ்வழி, அருநெறி, கவர்த்த நெறி, இழிவேற்ற வழி

287. நடவை செலவு சுரஞ்செப்ப மாரிடை நாடுமத்தந்
தொடரு மொழுக்குச் சிறுபத மேயிவை சூழ்வழியாங்
கடறு சுரமத்தந் தூம்பா மருநெறி கார்க்கவலை
படருங் கவர்த்த நெறியிழி வேற்ற படுகருமே. 44

புற்றம்பழஞ்சோறு, முதுநிலம், வழி

288. குளிர்தரு புற்றம் பழஞ்சோ றுரைக்கிற் குரும்பியென்பர்
களரி கரம்பை பெரும்பாழ் முதுநிலங் கான்கடறு
வளர்நெறி யாறு பதமார்க்கந் தாரி வழிவருந்து
தளர்தரும் வட்டை பதவை யிகவு சரியென்பரே. 45

இடம், பள்ளம்

289. புலங்களம் பாங்கர் வயின்வாய் வழியுழி போற்றுதிணை
நிலந்தலம் வைப்பு மருங்கு வளாகம் நிகிலம்பட்டி
யிலங்கிய தான முடன்சூழல் பாலிட மென்பர்பள்ள
முலர்ந்த கிழக்கவல் கீழே படுக ருவளகமே. 46

பக்கம், நடு, மேல்

290. பக்கம் மருங்குமுன் பால்பாங்க ரேபுழை பாடுசிறை
மிக்க புடையிடம் ஞாங்கரென் றேதுவர் மேவுமிடை
யொக்கு நனந்தலை மத்திமம் நாப்ப ணுடனெத்தல்நள்
மிக்க நடுவும்பர் மீமிசை தானிவை மேலென்பரே. 47

உயர்ச்சி, முன்னே, வந்துறல், முன்னர்

291. உந்தி நிவப்பு வணந்துங்க மோக்க முடன்வலனே
முந்திய மோடிவை யாக்கு முயர்ச்சி மொழியின்முன்னே
வந்துறல் மேல்மருங் கர்ஞாங்க ரென்பர் மலிதலைத்தாள்
நந்துமுதன் முன்னர்த் தானுகுமென்று நவிலுவரே. 48

இம்பர், உம்பர், ஈண்டு, ஆண்டு, கூப்பிடுதூரம், கோழிப்பறவை, காதம்

292. இலகிய விம்ப ரிவணே யவணும்ப ரீண்டிவ்விட
மலைவறு மவ்விட மேயெனி லாண்டென்ப ரானவெல்லை
குலவு குரோசமுன் கூப்பிடுங் கோழிப் பறவையென்னிற்
கலிகிர வுஞ்சமக் காவதந் தானென்பர் காதமுமே. 49

இடவகை, பாரதிதீப வரலாறு

293. பின்னுழை கால்புறங் கீழ்மேல் கடைதலை பேணியசார்
முன்னிடந் தேவகை பால்வல மாமிட முந்துதமிழ்ப்
பண்ணிய பாரதி பாரதி தீபம் பயில்தொகுதி
யன்ன விடப்பெய ரஞ்சா வதுமுடி வானதுவே. 50

ஆறுவது

பல்பொருட் பெயர்த் தொகுதி

பொன்

294. கனக மிரணிய மாடக மாழை கருந்தனங்காஞ்
சனநிதி பீதகஞ் சாமீ கரம்பூரி சந்திரந்த
மனியம் வெறுக்கை நிதானம்பு வஞ்சுவனந் தொடுக்கம்
புனைதன மேயரி சாம்பு னதஞ்சொன்னம் பொன்னென்பரே. 1

பொன், ஐந்துலோகம், உலோகப்பொது, நவமணி, கடவுள்மணி

295. இரணிய மீழம் பொருள்காண மீகையே மம்மிரும்போ
டுரைதரும் வெள்ளிபோன் னீயஞ்செம் பாமைந் துலோகமெல்
[லாங்
கருதுபொன் னென்பர் நவமணி மற்றக் கடவுள்மணிக்
கருள்பெய ரேதொன் னிதியே நிதான மணுகியதே. 2

மாணிக்கம், மணிப் பொதுப்பெயர், கனமணி, முத்து

296. மாமணி யும்பற்ம ராகமு மாணிக்க மாமனவுந்
தேமணி காசு மணிபேர்ப் பொதுப்பேர்ச் சிலாகையென்னு
நாம மரதன மாகுங் கனமணி நற்றரளங்
கோமலி நித்தில முத்தார மாகவுங் கூறினரே. 3

பவளம், சங்கநிதி, பற்மநிதி, பண்டாரம், வெண்கலம்

297. துகிர்வித் துரும மரத்தந் துவர்பிர வாளந்துப்புத்
தகுசொற் பவளஞ்சங் கின்வடி வாமென்பர் சங்கநிதி
பகர்பற்ம மேய்தரும் பற்ம நிதியும்பண் டாரமென்பர்
மிகைவுற்ற கோசந்தண் டங்கஞ்ச மாமென்பர் வெண்கலமே. 4

வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம், இரும்பு

298. இரசதந் தாரங் களதபு தம்வெள்ளி யென்பர்சுற்பம்
பெருகிய சீருணந் தாம்பிரஞ் செம்பென்பர் பித்தளையாய்
வருமார கூடமு மாயா புரியுமன சீருள்வங்கங்
கருதிய வீயங் கருந்தா தயமென்பர் காரிரும்பே. 5

காந்தமணி, சந்திரனொளியில் புனல் காலு மணி, சூரியனொளியில் கனல் காலுமணி, படிகம்

299. இரும்பை வலிப்பது காந்த மணியிந் திரேகை கண்டால்
தரும்புனல் கால்வது சந்திர காந்தந் தரணியொளி
கருங்கனல் கால்வது சூரிய காந்த மணிபளிங்கு
திருந்து பருக்கைவெண் காழே படிகஞ் சிறந்ததுவே. 6

சங்குமணி, பலகறை, பலபண்டம், அரும்பண்டம்

300. கண்ணிய சங்கு மணியக்கு வட்டி கவடியல
கெண்ணிய சோகி பலகறை வெள்வா கெழில்வளமே
பண்ணிய கூல முடன்பண் ணிகாரம் பலபண்டமாம்
நண்ணிய தார மரும்பண்ட மென்று நவிலுவரே. 7

கருப்பூரம், கத்தூரி, மெய்ப்பூசு சாந்து, சாந்தின் பொதுப்பெயர்

301. மலிகருப் பூரம் பளிதங்கத் தூரியும் மான்மதமாம்
புலியொடு வட்டிகை காலேகம் பீதமெய்ப் பூசியசாந்
திலகிய பேர்த கரங்கல வைச்சே றினியதளம்
புலர்விரை காலேக வண்ணமச் சாந்தின் பொதுப்பெயரே. 8

பூசுவன, செந்தாது, மயிர்ச்சாந்து, செறிகுழம்பு, அப்பல், பூசுதல்

302. குளிரங் கராகமும் பூசு வனகுங் குமமுஞ்செந்தா
திளகுந் தகர முடனேலங் காசறை யேமயிர்ச்சாந்
தளவில் செறிகுழம் பாஞ்செச்சை தேய்வைகொட் டலப்பலாம்
புளக மிகுக்க வரித்தல் புலர்த்தல்மெய் பூசுதலே. 9

தொய்யில், திலகம், நுதல் எழுதுகுறி, அரத்தம், குங்கிலியம்

303. மானுர் முலையிற் றெழிலுற் றெழுதி வரித்தல் தொய்யில்
தானுந் திலகஞ் சுடிகைபொற் சுட்டி தயங்குநுத
லானு தெழுது குறிப்புண் டரந்துப் பரத்தமாகக்
கேனுடுங் குங்குலுக்குற் குலுக்குங் கிலியமென்பரே. 10

பெருங்காயம், சாதிலிங்கம், சாமரம், அச்சுதம்

304. இங்கென லாகும் பெருங்கா யமுமிங் குலிகமுடன்
றங்குசிந் தூர மிவைசாதி லிங்கஞ் சவரியுடன்
றுங்கவெண் சாய்மரஞ் சாமர மென்பர் துணர்க்கவரி
யங்க வரிசி யறுகைமெய் கூட்டி யதச்சுதமே. 11

அதிமதுரம், பிரப்பு, ஓம விறகு, நெருப்புமலி விறகு

305. கூறுமதிங்க மென்னட்டி மதுரமுங் கொள்கலமென்
றேறிய பல்லுண வெல்லாங் குறுணிகொண் டேயளந்து
வேறுறப் பாலிப் பதுபிரப் போமவிற கென்னலா
மாறில் சமிதை ஞெகிழி நெருப்பு மலிவிறகே. 12

கடைக்கொள்ளி, கரி, சாம்பல், சாந்து, புகை

306. எரிகடைக் கொள்ளி முளரி யலாத மிராதமென்பர்
கரிகந் துளேயிருந் தாமென்பர் வெண்பலி சாரடலே
சொரிகின்ற சாம்பல் சுதைகள பஞ்சுடு சுண்ணமுஞ்சாந்
தரிபுகை தூபமுடன் றூம மாமென் றறைகுவரே. 13

நறைப்புகை, பொடி, இலவம்பஞ்சு

307. புதிய நறைப்புகை யென்னிற் குருப்புகைப் பொற்பிதிரே
சிதர்ப் பராகந்ததர் சின்ன பின்னந் திகழ்துகள்நீ
றுதவிய சுண்ண முடன்ருதுப் பூதி யொருபொடியா
முதிரில வம்பஞ்சு பூளையென் றேசொல்லு மூவுலகே. 14

பருத்தி, பஞ்சுநுனி, சோறு

308. பரிபன்னல் பஞ்சுகாற் பாசம் பருத்திதுய் பஞ்சினுனி
மிரலன்ன மோதனம் போனகம் பொம்மல் மிசைப்புத்துப்பு
வருகவ ளஞ்சொன்றி கூழ்முரல் புன்க மடைமிதவை
சொரியுண வேபதம் பாளித மேவல்சி சோறென்பரே. 15

உண்டி, உணவு நுகர்தல்

309. அயினி யசன மமலே புழுக்க லடிசில்புகாப்
பயில்தரு முண்டி மிசைத லயிறல் பரிகரித்தல்
மயமோ டருந்த லுணவார்த லேநுங்கல் மாந்தல்துய்த்த
லியல்போடு மேவல் பொசித்த னுகருதற் கேற்றனவே. 16

அடிசில், புழுக்கல், தேவருணவு, பொரிக்குங்கறி, பிட்டு

310. அடுப வடிசில் புழுக்கல் புழுக்குவ வாமமுதே
யிடுபலி யேசரு வேயவி தேவ ரெழிலுணவா
முடலுப தானமைத் துப்பொரிக் குங்கறி யுங்கருனை
யிடிதரு வோதையு மாவியு மாகும்பிட் டென்பதுவே. 17

அடை, அப்பம், பிண்டி, புளிங்கறி, குழம்பு

311. அடைமோ தகமயில் சஷ்குல்லி பூரிகை யானகஞ்ச
முடனெலே யல்தோசை தானப்ப மாகு மொருநுவணை
யிடியாகு நுண்பிண்டி கூட்டமைத் தேயினி தேற்றதுவை
படுமே புளிங்கறி பாகே குழம்பு பயின்றதுவே. 18

கஞ்சி, தயிர், பால், நெய், மோர்

312. வடிகஞ்சி காடி மலிகாடி மேமை மருவுததி
யுடனளே யேதயிர் கீர மமுத முதவுபயந்
தொடர்வுறு பாலிழு தேகிரு தாச்சியந் துப்புநெய்யா
முடைமு சரேதக் கிரம்பிரை மச்சிகை மோரென்பரே. 19

தேன், சர்க்கரை, கண்டுசர்க்கரை

313. குலவு பிரச மதுத்தேன் விசையங் குளங்கன்னலே
யிலகிய பாகுடன் கட்டியக் கார மிவைசர்க்கரை
தலமிகு கண்ட முடன்பாளி தங்கண்டு சர்க்கரையே
நலமிகு புல்லகண் டம்மதிற் பேதம் நணுகியதே. 20

கள், பருகுமவையின் பொதுப்பெயர்

314. சுரைநனை யிக்கு நறவு வடிமட்டுத் தோப்பிதொண்டி
பிரசம் வழிமதுச் சாறே தணியல் பிழிபடுதேன்
முருகுபைந் தேறலுடன் பானஞ் சாதி மொழியிற் கள்ளாம்
புரைதபு பானம் பருகு மவையின் பொதுப்பெயரே. 21

கள்ளின் பேதம்

315. பாலி சுமாலி மதுகரஞ் சூழிகை பாடலியே
மாலி சுலோகி யுடனும்பல் மாதுவ மேமருட்டஞ்
சாலி விசுணி யுணுமுண்ட கந்தமஞ் சக்கரமே
வேலிவெங் கஞ்சாவு நள்ளிகட் பேத மிகுபெயரே. 22

அமுது, நஞ்சு, உண்பன, தின்பன, விலங்கினுணவு

316. வாரி யமுதின் பெயர்மருந் தாகும் வளர்கரளங்
காரி கடுவிட மேயாலம் நீலம்வெங் காளநஞ்சாம்
சீருறு துற்றியு முண்பன திற்றியுந் தின்பனவாங்
கூரிலை தின்னும் விலங்கி னுணவு குளகென்பரே. 23

விலங்கு பறவை உணவு, ஒழிபொருள், பேய்த்தேர்

317. விலங்கு பறவையெனு மிரண் டிற்கு மிகுமுணவை
யிலங்கு மிரையுண்டி யாமென்பர் மிச்சிலு மெச்சிலுமே
துலங்கு மொழிபொரு ளெச்சிலு முச்சிட்டஞ் சொல்லுபவை
மலிந்த வுகளம் வெண்டேர்கானல் பேய்த்தேர் மசரதமே. 24

உபகரணம், நிரை, அலகு

318. துப்பே சாதனந் துணைக்கா ரணத்தைத் தொடர்ந்துரைக்கு
மொப்பி லுபகரணப்பெய ராமென்ப ரோளிபந்தி
தப்பி லொழுங்கு நிரைமகி ழின்பரற் றன்னுடனே
செப்பு மணியிவை யெல்லா மலகெனச் சேர்ந்ததுவே. 25

பாரதிதீப வரலாறு

319. சேருரகளப் புயன்செயங் கொண்டவன் சிந்தையன்பு
மாருது மாதவஞ் செய்தருள் பாரதி வாதுகவிக்
கேருன வன்சொன்ன பாரதி தீபத்தி லெண்ணுகின்ற
வாரு வதுபல் பொருட்பேர்த் தொகுதிமுற் றுனதுவே. 26

ஏழாவது

செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி

செயற்கையது, சூலப்படை

320. தோலினில் மண்ணி லெழுவகை லோகத்திற் றென்மரத்தில்
நூலினிற் செய்தல் செயற்கை யதாங்கண் ணுதல்படைக்கு
மூல மெனிற்கழு முள்முத் தலைக்கழு மூவிலைய
வேலிவை சூலப் படைவடி வாக விளம்புவரே. 1

மழு, சக்கிரம், அரியின் வில், அரன்வில்

321. பரசு கணிச்சி நவியமு மேமழு வாம்படைதி
கிரிவளை யெஃகஞ் சுதரி சனஞ்சக் கிரம்பருதி
தருகதிர் நேமி யழலாழி யாமென்பர் சாரங்கவில்
லரிதன தாகும் பிநாகவில் லான தரன்றனதே. 2

வில், வேல்

322. குனிதரு சாபஞ் சராசனங் கார்முகங் கோதண்டமே
தனுக்கொடு மரஞ்சா ரங்கம்பிநா கந்தவர் வில்லென்பர்
நனிதரு குந்தமுடம்பிடி யெஃகமும் ஞாங்கரரண்
வினைதரு சத்திவிட் டேறு டயிலிவை வேலென்பரே. 3

அம்பு

323. வரி வாளி வண்டு பகழிபல் லம்புங்கம் வன்கணைகோல்
தெரிபாண மாற்கணந் தொடை விசிகஞ் சிலீமுகங்கோச்
சரமா சுகம்பத் திரங்கொத்தி ரங்கங்கந் தாரையம்போ
டரிகாண்ட மத்திர மொட்டு தண்டமு மம்பென்பரே. 4

கைவேல், வச்சிரப்படை, வாள்

324. மெச்சிய கப்பணந் தோமரங் கைவேல் விகற்பமென்பர்
வச்சிர மென்னிற் குலிச மசனி வயிரப்படை
நச்சு கட்கம் வசிகண்ட மெந்திர நாந்தகங்(கைவ)ா
ளச்சுறு மேதி கரவாளங் கோண மவையென்பரே. 5

ஈர்வாள், உடைவாள், கழுக்கடை, பிண்டிபாலம், கொடுவாள்

325. வரைவேதி னங்கர பத்திர மீர்தரு வாளதென்பர்
சுரிகை கழுமு ளுடைவாள் கழுக்கடையா (கச் சொல்லும்)
பரவிய பீலித்தண் டெஃக மெனிற்பிண்டி பாலமென்ப
ரரிதரு புள்ளங் குயங்கொடு வாளென் றறைகுவரே. 6

அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை, பி.ஏ., பி.டி.
GIFTED BY
R. TIRUMALAI, B.A., B.T.

தண்டாயுதம், இரும்புலக்கை, உளிக்கருவி இலைமுக்கரிகத்தி, நாராசம், இருப்புமுள்

326. தடிதண்டா முசல மிருப்புலக் கையதென்பர்
விதியி லுளிக்கரு விப்போ தரிவிக் கருவியென்பர்
முதுதழல் தண் ணங் குளிரிலை முக்கரி கத்தியென்பர்
எதிர்பொரு சலாகையு நாராசந் தாறென் றிருப்புமுள்ளே. 7

ஆயுதப்பொது, ஆயுதக்கூர்மை, கவண்

327. படையே திதுப்புக் கழுமுட் கடுமுட் படைக்கலமே
யடர்சா தனம்பொது வாயுதப் பேர்வள் ளயிலிங்கிதம்
வடிவார் நுதிநுனை வையே பூவசி வயிர்மழுவாங்
கடைசாமை கல்லெறி யுங்கவ ணுகுங் கவணையதே. 8

நுனை, படையுறை, அம்புபெய்கூடு, மெய்யுறை

328. தடநுதி நுங்கி நுனைக்கரு விப்புட்டில தானதென்ப
படையுறை யாவமுந் தூணியு மம்புபெய் பாத்திரமா
மடரிர ணங்கவ சங்கண்ட மெய்புக வாங்கருவி
தொடர்தரு பாலிகை மெய்யுறை யாகவுஞ் சொல்லுவரே. 9

தலைக்கீடு, பரிசை, பலகை, தோற்பலகை

329. கீசகஞ் சிக்கந் தலைக்கீடு சேடகங் கேடகந்தோல்
வீசுற்ற வீதிகைப் பட்டம் பரிசை மிகுபெயரா
மாசுற்ற கட்டினந் தட்டு மாவட் டணம்பலகை
சோதித்த தோற்பல கைப்பெயர் தோற்பரந் தோலென்பரே. 10

கைக்கட்டி, குதிரைக்கலணை, குதிரைவாய்புகுகருவி, குசைக்கயிறு, குதிரைச்சம்மட்டி

330. அருள்கைப் படையுடன் கோதையுங் கைக்கட்டி [யாகுமென்பர்
பருமம் படை பல்லணம் பண்கல ணைபரி பகுவாய்க்
கருவியின் பேருங் கரிளே கலினம்வற் கங்குசையாந்
தரிவெறு மத்திகை கோலெனிறி சம்மட்டி தானென்பரே. 11

யானைக் கழுத்திடு கயிறு, தளை, பற்றிரும்பு, பாடகம்

331. கலந்தபு ரோசை கவடுங் கரிக்கழுத் திற்கயிறும்
விலங்கு நிகளந் தொடர்தளை வல்லி மிகுபறளை
பலங்கொள் பறலிகை யள்ளு வலியெனிற் பற்றிரும்பா
மலங்கிய பாத கடகமும் பாடக மாமென்பரே. 12

பதகிண்கிணி, அரக்குடைச்சிலம்பு, காலிலங்கு மணிவடம்

332. பதகிண் கிணிமணி யாகும் பரிபுர நூபுரத்தோ
டுதவும் பரியக மென்ப ரிரத முடன்ஞெகிழி
யதுவு மரக்குடைச் சூலச் சிலம்பணி யாகுமக்கா
லிலகு மணிவடம் பாதசா லம்மென் றியம்புவரே. 13

காலணிவடம், மேகலை, அரைப்பட்டிகை, சதங்கை

333. விதமார் கொடையினில் வீரத்தில் வீக்கிய மெய்க்கழலே
யதுகான் மிசையி லணிவடங் காஞ்சி கலாபமனு
வெதிர்மே கலைகலை (யென்னி) லரைப் பட்டி கையின்பெயர்
பதமார் சதங்கையுங் கிண்கிணி யாகப் பகருவரே. 14

பதக்கம், மாதர்முலையணிவடம், பூணின் புணர்வு

334. அருள்பதக் கங்கண்டி கையார மாரம் பதக்க(மதா)ங்
கருதுமக் கோவையுங் காசுட ஞரமுங் கண்டிகையு
மருவிய மாலையு மானுர் முலையின் மணிவடமாம்
பொருவில் கயிலுங் கடையுமெய்ப் பூணின் புணர்வென்பரே. 15

தொங்கல், துடக்குவடிவு, தோளணி, கங்கணம், கைவளை

335. தொங்கல் நிதிவடந் தூக மதிலிகைத் தூக்கந்துடக்
கங்கதந் தோளணி கேயூர மாகு மணிகடகந்
தங்கிய கங்கண மும்மாகுஞ் சூடகஞ் சங்குதொடி
பைங்குரு கேவண் டுசரிகன்று கைவளைப் பாற்படுமே. 16

குண்டலம், காதணி நுதற்சுடிகை, பட்டம், சிரமாலை

336. கோடு மிருசிகைக் காதணி செம்பொற் குழைகுண்டலம்
வேடகம் புல்லிகை மேவுங் கடிப்பிணை வீசியபொற்
றோடவை காதுக் கணிப்பெயர் சுட்டி நுதற்சுடிகை
யோடைபொற் பட்டமன் காரோடி தான்சிரத் தோடொடையே. [17

நுதலணிபூண், கிரீடம், ஆபரணப்பொது, பேரணிகலம்

337. (வடிநுதற்) பூணும் இலம்பகம் புல்லக மாஞ்சுடிகை
முடியே மௌலி மகுடங் கிரீடமொய் சேகரமாம்
படரிழை நாண்கலம் பூணணி தானு பரணமதாம்
அடருரு பூணு மதாணியு மாம்பே ரணிகலமே. 18

வட்டில், நாழிகை வட்டில், சட்டுவம், கண்ணுடி

338. தட்டகை யுண்கலந் தாலங்கிண் ணங்கோரந் தாரைவள்ளம்
வட்டில தாங்கன்ன ஞழி கைவட் டில்சிர கந்தவ்வி
சட்டுவ மாடி படிமக் கலந்தர்ப் பணங்கஞ்சனை
யிட்டிய வாதரி சனங்கண் ணுடி யெனுமுலகே. 19

கண்டைமணி, எறிமணி, சிறுசின்னம், காளம், குறிஞ்சிப்பறை

339. எண்டிசை யேண மிபமணி கண்டை யெறிமணிசே
கண்டிபொற் பீலி சிறுசின்னங் காகளங் காளமதாம்
தொண்டக மோடு துடியே முருகியந் துங்கவென்றி
கொண்ட குறிஞ்சிப் பறையென யாவருங் கூறுவரே. 20

வேடர் பறை, முல்லையார் பறை, மருதப் பறை, ஒருகண் பறை, உடுக்கை

340. விறல்பயி லுந்துடி வேடர்தந் தொல்பறை மென்முல்லையார்
பறையே கோட்பறை பம்பையு மாகும் பணைகிணையே
நிறைமரு தப்பறை சாப்பறை நெய்தற் பறையொருகண்
ணுறுபறை மொந்தை யுடுக்கை யொடுந்தண் ணுமை
[யென்பரே. 21

இடைசுருங்கு பறை, சிறியபறை, பரந்தபறை, முழவம், குடமுழவம், படகம்

341. துடியே யிடைசுருங் குஞ்சிறு தொல்பறை யாகுளியே
படைசேர் சிறிய பறைவாய் பரந்த பறைபதலை
முடஞ்சேர் முரவங் குளிரே முழாமண் சினைமுழவங்
குடமா முழவம் படகமு மானகங் கூறுவரே. 22

பணைப்பொது, பேரிகை

342. புணர்தரு பீலி முருடு முரசு பொருமுழவு
பணைதரு கோடணை தூரிய மாகும் பணைப்பொதுப்பேர்
துணைதரு சண்டை முரசம்ப ணைதுந் துமிசகடை
தணிதரு பேரிகைக் கூட்டமென் றேதமிழ் சாற்றியதே. 23

பல்வகைப் பறை, கொம்பு, யாழ் நரம்பு

343. அம்பணந் திண்டிகை யான கஞ்சல் லரியாம்படகம்
பம்பை தடாரி தக்கையே பல்வகைப் பறைப்பேர்
கொம்பெனி லாம்ப விரலை வயிரொடு கோடெனலாம்
நம்பிய கோல்தந் திரிகுரல் யாழி னரம்பெனரே. 24

யாழ், வார்க்கட்டு, முறுக்காணி, நால்வகையாழ்

344. தந்திரி கின்னரம் வீணை விபஞ்சிதந் தாழ்கருவி
யுந்திய வல்லதி பேரிகை நல்லியாழ்ப் பெயரேர்திவவு
முந்திய வார்க்கட்டு மாடக மும்முறுக் காணியென்ப
கொந்தி பேரியாழ் மகரஞ் சகோடஞ்செங் கோடென்பரே. 25

தேர், தேர்க்கால், உருளியகக்கதிர்

345. இரதந் திகிரி சயந்தன மெந்திர மேகவரி
யுரவங் கொடுஞ்சிவை யந்தேர் திகிரி யுருளியுந்தி
தெரியும் பருதி யுடனேமி யாழிபொற் சில்லியத்தே
ரருகொன்று காலென்ப ராரே யுருளி யகக்கதிரே. 26

பாண்டில் பூண்ட ஊர்தி, பண்டி, தேர்மேலிடு பரம்பு

346. உகையுஞ் சிவிகை யுடன்பாண்டில் பூண்டரு ளூர்தியுடன்
சகடம்பெறும் வையஞ் சாகாடு சாடு சகடொழுகை
பகர்கின்ற வைய முருள்பண்டி யாகும் பலவகையி
லிகல்தட்டுப் பாவென்பர் தேர்மே லடர விடுபரம்பே. 27

திடர், தேர்ப்புடைசூழ் மரச்சுற்று, கலப்பை, பலவுறுப்பாகிய வோருறுப்பு

347. திடரே யெழுவுங் கணையமு மாங்கிடு கேதிகழ்தேர்ப்
புடைசூழ் மரச்சுற்று நாஞ்சி லலம்படை பொறகலனே
யடைவான நான்குங் கலப்பைய தாமக் கலப்பையத
னுடனுர் கலனே பலவுறுப் பாகிய வோருறுப்பே. 28

தேர்மொட்டு, தூண், யானையணைதறி, வேள்வித்தறி

348. சிந்தைசெய் கூவிரங் கூம்பு கொடிஞ்சியுந் தேர்மொட்டதாந்
கந்தெழு வேவெளி லாளனங் கம்பங் கருந்தறியோ
டந்தி மதலையுந் தூணும் வெளிலுட ஞளானமுந்
தந்தி யணைதறி யூபமும் வேள்வித் தறியென்பரே. 29

குறுந்தறி, கதவு, தாழ், உரல், ஊஞ்சல், உறி

349. போதிகை யென்பர் குறுந்தறி வாரி புதவுடனே
தீதில் கபாடங் கதவென்பர் தாழெனிற் சீப்பெனலாம்
மோதுங் கறையு முலூ கமு மாமுர லூசலுமே
மேதகு மூஞ்சல் சிமிலி சிரஞ்சிக்க மேலுறியே. 30

கட்டில், பரண், இறைவை (ஏணி), கண்ணேணி, கிளிகடிகருவி, குறுந்தடி

350. பதியும் பரியங்கம் பாரிமஞ் (சங்) கட்டிலாம்பணவை
யிதணங் கழுது பரணே கடவை யிறைவை யெம்மா
லுதவுங்கண் ணேணி குளிர்தழ லேதட்டை யோதிற்கிள்ளை
யதுகடி யுங்கரு விப்பேர் குறுந்தடி யாங்குணிலே. 31

துடுப்பு, அடைகுறடு, பெருங்குறடு, மரக்கலம்

351. அறில்துடு வைதுடுப் பாகும் பட்டடை யாகுமடை
குறடு முருடு பெருங்குற டாகுங் குலமதலை
துறைதரு வாதைவங் கந்தோணி பாறம்பி தொள்ளு நவ்வே
மறிதரு நாவாய் சதாவே பஃறி மரக்கலமே. 32

மரக்கலப்பாய், ஓடம், தோணி, தெப்பம், கமண்டலம்

352. பாடின் மரக்கலப் பாயிதை யாகும் பகறிபக
டோடம தாகுந் திமில்தோணி யென்ப ருயர்பகடு
தேடரு மம்பி மிதவை புணையெனிற் றெப்பமதாங்
கூடுங் கமண்டல மாகுங் கரண்டகங் குண்டிகையே. 33

பேழை, கெண்டிகை, பீடிகை, கொள்கலம்

353. எண்டரு மிஞ்சிகை மஞ்சகம் பேழை யெனவறைவர்
கண்டங் கரண்டகங் கோடீ ரத்தொடு கடிப்பமதாங்
கெண்டிகை பீடிகை யாகுந் துமானங் கிளரலங்கல்
கொண்டணி சாந்து மடியிவை சேர்கலங் கொள்கலமே. 34

உடை, பொதி, திடமிகு கொள்கலம், கொல்லன் சின்னத்தட்டு, பீலியிற் கட்டும் கவிகை

354. உடைகலை யாகும் பொதிமூடை யாகு முயர்பகுவாய்
திடமிகு கொள்கல மாகும் பிழாக் கொல்லஞ் சின்னந்தட்டா
மடர்தரு கன்னங் கலாபத் தழைதொங்க லானவிவை
தொடைதரு பீலியிற் கட்டுங் கவிகை யெனச்சொல்வரே. 35

வெண்குடை, ஆலவட்டம், சிற்றால வட்டம்

355. தொங்க லுடன்சத் திரமே கவிகை தொடர்ந்த பிச்ச
மிங்கிவை வெண்குடை கால்செய் வட்டமுக மேவிசிறி
யங்கவை வீசத் தகுமால வட்ட மதுவொழிந்து
தங்கிய பீலிசெய் சிற்றால வட்டமுஞ் சாற்றினரே. 36

மயிர்வாரும் சீப்பு, சூதாடுகருவி, பந்து, சும்மாடு, துண்டம்

356. கருதிய சிக்க மயிர்வாருஞ் சீப்பின்பேர் காசும்வல்லும்
பரவிய சூதுட னுடுதல் கந்துகம் பந்தென்பதாம்
மருவு சுமடு சுமையடை யாகுஞ்சும் மாடதென்பர்
முரிசெய் கடிகை யெனிற்றுண்டங் கண்ட மொழிகுவரே. 37

வார், கயிற்றுவலை, கயிறு, செருப்பு, அடிதொடுவது, துருத்தி

357. காசறு வள்வகிர் வாராகுஞ் சாலங் கயிற்றுவலை
பாசமு நாணுங் கயிறது வாகும் பதந்தொடுதோ
லாசில் கழலிவை தோற்செருப் பாகு மடிதொடுவ
தோசமில் பாதுகை நீர்தூஞ் சிவிறி துருத்தியதே. 38

குடம், கரகம், பானை, மிடா, தாழி

358. கடமே யிடங்கர் தசும்பிரும் பைகும்பங் கன்னலிவை
குடமாகுங் கன்னல் சிரகங் கரகங் குழிசிமிடாத்
தடவாகும் பானை யகளமும் வம்புந் தடாவுமிடா
வடர்சாடி தாழி யகளம் பதலை யவையென்பரே. 39

நீர்நிறைசால், அகல், இரப்போர்கலன், குயவன் மண்ணரிநார், நூல், துன்னம்

359. தொகுமிடங் கர்வட்டம் நீர்நிறை சால்சார்வஞ் சுத்தியுமே
யகலிரப் போர்க லனையங் கடிகை யவையென்பர்மட்
பகைகுய வன்மண் ணரிநா ரதென்பர் பனுவல்தந்துப்
புகல்நூல தேயென்பர் துன்னமும் பொல்லம் பொருந்துமதே. 40

கூறை, பட்டாடை

360. மடிதுகில் தானை கலிங்க முடைதூசு வாதனமே
படமாடை காழக மம்பரம் புட்டம்பட் டங்கலையாம்
புடவை யறுவை படாஞ்சம் பஞ்சேலை போற்றிலிவை
யடர்கூறை பாளிதங் கோசிக மாகும்பட் டாடையதே. 41

நல்லாடை, மரவுரி, சம்படாம்

361. திகழே டகம்புகழ் வேதிகை சில்லிகை சித்திலிகை
யகல்தூரி யங்கத்தி யங்கருள் பாரிநல் லாடையென்பர்
மகிழ்சீரை வற்கலை தன்னே டிறைஞ்சி மரவுரியாம்
பகர்வாகுங் கம்பளஞ் சிம்புளி யேசம் படாமென்பரே. 42

கச்சு, அத்தவாளம், மேற்கட்டி, உத்திரிகம், சட்டை

362. வம்புறு வார்கச்சு வடகமு மாமத்த வாளமென்பர்
கம்பல மோடு விதானமேற் கட்டி யேகாசமெனி
னம்புத் திரிக மெனலாகு மங்கி நயந்த மெய்ப்பை
தம்பமெய்க் கஞ்சுகங் குப்பாயம் வாரணஞ் சட்டையதே. 43

இடுதிரை, கொடி, சிறுகொடி

363. இகலி னெழினி படங்கண்ட மாகு மிடுதிரையே
துகிலிகை கேதனம் வானி பதாகை துவசமுட
னிகரில் படாகை விலோதன மேகொடி நீளுலகோர்
புகலுங் கதலிகை யாகுஞ் சிறுகொடிப் பூவையரே. 44

சீரை, மெத்தை, சித்திரப்படம், தீட்டுதல்

364. அத்தகு சீரை சிதவல் சிதாரென் னணைதளிமம்
மெத்தை யெனச்சித் திரபடம் பொத்தக மேவியபேர்
சுத்தத் துகிலிகை வட்டிகை யோவியஞ் சொல்லிலிவை
சித்திரம் ரேகை யெழுதல் பொறிவரி தீட்டுதலே. 45

பாரதிதீப வரலாறு

365. மின்செயற் காரிற் றருபா ரதிதிரு வேங்கடவ
னின்செயற் சீருற்ற வேழாவ தென்ன வியல்தெரிந்தோன்
றென்சிலைச் செந்தமிழ்ப் பாரதி பாரதி தீபந்தன்னின்
முன்செயற் கைவடி வப்பேர்த் தொகுதி முடிந்ததுவே. 46

எட்டாவது

பண்புபற்றிய பெயர்த் தொகுதி

பண்பின் இயல்பு

366. கருது வடிவி னளவில்வண் ணத்தினிற் காண்டலுற்ற
பொருளி னுணர்விற் புலப்படு முண்மைப் பொருவுதனப்
பரவு குணத்தொடு பண்ணவை பண்பெண லாமவற்றைத்
தெரிய வுரைக்கி னவைபல வாகுந் திறத்தனவே. 1

வட்டம், வளைவு

367. பருதி விருத்த முடன்கோ ளகைதட்டுப் பாலிகைசக்
கரம்வலை யங்கொம்மை மண்டல மாழி கடகஞ்சில்லி
தருபாண் டிலேதி கிரிநேமி வட்டந் தரங்குடிலம்
வரவாங்கல் கோட்டம் வணரே குலாவல் வளைவென்பரே. 2

திரள் வடிவு, குவிதல் வடிவு

368. செற்றிய பந்தங் குலம்புஞ் சயங்கொம்மை சேடுகணை
துற்றே செறியுந் துறுமல் குவிதல் தொகுதியுண்டை
மற்றுரை மாழைபிண் டந்திரள் வாகும் வடிவுகுவால்
குற்ற விராசி குவைகுப்பை யாகுங் குவிதலுமே. 3

தொகுதி, ஐம்மை வடிவு, பரந்த வடிவு, குமிழ்ப்பு வடிவு, மொக்குள் வடிவு

369. தொடருமொய் தோடு குழுமல் திரளுந் தொகுதியென்ப
ரடர்தொறு துற்றுத் துறுகு வரிமுத லைம்மையதாம்
படலை படர்ச்சி பரந்த வடிவினம் பைங்குமிழ்ப்பு
வடிவு புளகமக் கொப்புள மொக்குள் வடிவென்பரே. 4

உட்டுளை வடிவு, உண்டை, துளைப்பொருள், கற்றை, சற்சரை வடிவு

370. புழையுட் டுளையது தூம்புட னுழி சுரைபூண்டுளை
குழியந் திரளுண்டை யாகுங் குழியம் புழல்குழலுங்
கழல்துளை கற்றை மயிரின் றெகுதி கதிர்த்தொகுதி
விழைபிண ரேசற் சரைவடி வாக விளம்புவரே. 5

பெருமை

371. பாடு தடவு தடம்விபு லம்வியல் பாழிகண் மால்
மோடு பிறங்கல் நளியே யியக்க முடலைபணை
யீடு கயவு பரிமுரீ நன்று வியத்தகைமாப்
பீடோ டகலுள்முன் பின் செம்ம லண்ணல் பெருமையதே. 6

மிகுதி, சிறுமை

372. உறுதவ மாற்ற லறிவே விதப்பிறப் போடுறுப்புச்
செறிநளி யேநனி யான்றல் பிறங்கல் சிறப்படலை
யறிகய வேபொம்மல் பொக்கம் அதிக மதுமிகுதி
சிறுமை யணுவஞ்சந் தன்றுசின் னம்வறி தாசென்பரே. 7

உயர்ச்சி, தூரம், சிறிது, விரிவாமிடம்

373. உரைநிவப் பேந்தல் பிறங்கல் நிமிர்த லுகப்புன்னதம்
புரைதுங்க மோங்க லுடன்சே ணுயர்ச்சி யெனப்புகல்வர்
(தெரி) சேணு நீளிடை யுஞ்சேயுந் தூரந் திலஞ்சிறிதாம்
விரிவா மிடம்பரப் பாகும் விசாலம் விபுலமுமே. 8

பரவுதல், நீளம், கூடுவது

374. பரவை ஞெமிர்தல் பரப்புடன் பாய்தல் (பரவு)தலாம்
விரிவாதல் போக லொழுக நெடுமை வடிதனெடில்
நிரைசே ணுடனீக்கல் தீர்தல்நேர் பாடிவை நீளமதாங்
குரையார் குவிதல் பயனியுங் கூடலுங் கூடுவதே. 9

நுண்மை, அகலம்

375. நுணுகு நுணுக்கு நுணுக்கம் நிழற்றல் நுவணைநொசி
வணுவு நுழைநுனை சாய்வோய்த லாய்தலவை நுண்மையா
முணரி லகறல் வியலிடம் பாழி யுடனகலுள்
நணுகு நளிகண் ணறையே யகலத்தி ஞமங்களே. 10

குன்றல், உள்ள நெறியில் சிறத்தல், பருமை, முழுவது

376. அறவு மருகுதல் வீய்தல் சுருங்குத லஃகுதலே
குறைதல் சிறுகுதல் குன்றல் கழிவுடன் கூர்ப்புமுள்ள
நெறியிற் சிறக்கும் பரூஉம்பீன மென்னவென் னிற்பருமை
முறையி லகில முழுவது மாமென்பர் மொய்குழலே. 11

மென்மை, செறிவு, மிடைதல்

377. தாங்கு கயவுமொய் மேம்பாடு சால்புடன் சாயல்மென்மை
வீங்கல் பொதுளல் விறைப்போ டுறைப்பு வெறுப்புநளி
தீங்கல துற்றுடன் றேற்றுக் குடிலஞ் செறிவதென்பர்
ஓங்கு ததைதல் துதைதல் மிடைதலென் றேதுவரே. 12

நிறைவு, அளவின்மை, வண்ணம்

378. மலிர்தல் மலிதல் நெகிழ்தல் தெவிழ்தல்மல் கல்துவன்றல்
நிலைபெற வார்தல் கழிதல் நிறைவென்பர் நீடனந்த
மலைவி லபார மபருமித மும்மவ் வளவின்மையாம்
பொலிவெண்மை செம்மை கருமை பசுமைசெம் பொன்
[வண்ணமே. 13

சிவப்பு, பொன்னிறம்

379. தொக்க வரத்தந் துவரரக்குச் செம்மை சோணந்துப்புச்
செக்க ருடன்பாட லங்குலி கமத்துச் சிந்துரமே
தக்க விராகமருணஞ் சிவப்பென்பர் பீதகமே
புற்கலம் பிங்கல மாகிய மூன்றுறும் பொன்னிறமே. 14

குரானிறம், புன்மை, வெண்மை, பச்சை நிறம்

380. போற்றுங் கபிலம் குரானிற மாகும் புகர்புன்மைவால்
தோற்றுஞ் சுவேத முடன்பால் தவளந் துலங்குவெண்மை
சாற்றிய பாசும் பசுமையும் பைத்துடன் சாமளமும்
நேற்றிசெய் பச்சை நிறமென வேசொல்வர் நேரிழையே. 15

கருமை நிறம், நிறப்பொது, மலினம்

381. கருமை களங்கங் கறைநீலங் காளகங் காளிமமாம்
பொருவரு மஞ்சனங் காரென்பர் மாமை புகர்கெழுவே
யுருவொடு கேழ்சந்தம் வண்ணங் குருவு மொளிநிறமா
(ம)ருகறை (மா)சு கசடு களிங்க மலினமதே. 16

ஒளி, ஒளிவிடல்

382. விரிய லிலக்கஞ் சுடர்கதிர் வாள்வில் வெயில்நிலவு
கிரணமெல் லேதெளிர் தேசு துலக்கங் கெழுதகையே
மருவொளி யாகு மிலங்கல் சுடர்தல் வயங்கலவிர்
உருவு தயங்க லொளிர்தல் நகுத லொளிவிடலே. 17

கட்டழகு, அழகு, பேரழகு

383. ஏரணி யாணர்க் கவினே விடங்க மெழில்வனப்புக்
காரிகை வாம முடன்பொற்புக் காமருங் கட்டழகாம்
ஆரழ கென்பர் பொலஞ் செவ்வி மாண்புபை யையணிசேர்
சீரழ கென்சித் திரம்பே ரழகுவி சித்திரமே. 18

வலி, வடிவு, வண்ணம்

384. உரமிட லாற்றன் முடலை மதுகை யுடன்மல்லலே
முரணெறுழ் கொற்றம் வயம்பாழி மூரிமுடுகல்மைந்து
வரு (மாண்மை) திண்மைதுப் பூக்கமுன் பேவல மானம்வலி
தருமோர் வடிவெனிற் செண்ணம்வண் ணஞ்சந்தந் தானதுவே.
19

மதர்த்தல், நொய்தாதல், எளிமை, தண்மை, அழல், மானம்

385. ஒண்மை மதர்வு மதர்த்தனெய் தாத லுரைக்கினெய்வா
மெண்மையுந் தண்மையுந் தஞ்சமு மாகு மெளிமை யென்பர்
வெண்மை வெளிறிவை தண்மை யழலுருப் பம்வெப்பமாம்
மண்மிகு மானம் பெரிதன்மை குற்றமு மன்னுமதே. 20

இழித்தகுவு, சீதளம், வீரம், வரையறை, எல்லை, அளவை

386. இளிவே பரிபவ மென்னி விழித்தகு வாகுமென்பர்
நளிசீதஞ் சீதளம் வீரம் விறல்வெற்றி நல்குமென்ப
ரளவே நிரையெண் வரையறை யேணி யதுவரைப்போ
டுளவாம் வரம்பெல்லை கச்ச மளவை யுறுகடனே. 21

அளவு, விசையம், வெற்றி, கூறுபாடு

387. காறு துணைவரை நேர்பிர மாணமக் காலமுடன்
தாறே யவதி யளவாம் வலங்கொற்றந் தான்விசையங்
கூறிய வாகை யுடனுட லாடிவை கூடும்வெற்றி
வேறு வகையுந் திறங்கூறு பாடதன் மேல்வருமே. 22

அறிவு, தொலைவு, கருத்து

388. உணர்வே புலனெண்மை காட்சிமெஞ் ஞான முரனறிவாந்
துணையி னிலைகெடல் தோற்றல் தொலைவென்பர் சூழல்செத்துப்
புணர்குறிப பிங்கிதஞ் சிந்தை நினைவுன்னல் போதமுள்ளல்
கணமொடு கண்ணல் விரும்பல் கவைஞர் கருத்தென்பரே. 23

விருப்பு, உள்ளுணர்வு

389. மாதர் விழைவுபற் றேவெம்மை காமமெய் வாஞ்சைநசை
யாதர வார்வ முடன் பெட்டல் வெஃக லவாவிராவே
காத லிவர லுடன்வீழ்தல் தாழ்தல்வெங் காமர்பெட்பும்
ஓதில் விருப்பென்பர் ஞானமுஞ் சீலமு முள்ளுணர்வே. 24

அன்பு, அருள், கைக்கிளை, பெருந்திணை, காமக்கவலை

390. பரிவீர மார்வ மளிநார் புரியுடன் பற்றுமன்பே
யருளே கருணை யிரக்கம தாங்கைக் கிளையதுவே
யொருதலை மால்பொருந் தாமற் பெருந்திணை யோரமதன்
விரகவெங் காமக் கவலையென் றேசொல்லு மேதினியே. 25

வேட்கைப் பெருக்கம், மாட்சி, செற்றம்

391. மிகுவே ணவாவென்னில் வேட்கைப் பெருக்க மிகுந்தகுதி
தகவொடு தக்கது மாண்மாண்டல் மாட்சிய தாமுனிவு
வெகுளி செயிர்கறு வுஞ்சீற்ற மேகத மேகறுப்பொ
டகலா வயிர முடன்கோர மேசெற்ற மாமென்பரே. 26

சினக்குறிப்பு, அதிசயம்

392. கறுப்புச் சிவப்பு வியர்ப்புப் புழுங்கல் கனலல்கன்றல்
செறுத்தல் புகைத லுடன்வெய் துறலுஞ் சினக்குறிப்பாம்
விறற்றகு விம்மித மேயிறும் பூது வியப்புமிலேச்
சறத்தவர் யாரு மதிசய மாக வறைவர்களே. 27

அதிசயத்தோடு இரக்கம், உள்ளக்களிப்பு, கண்ணோட்டம்

393. அவையவ ரோவென வையோவந் தோவென வன்னேவெனு
மிவையு மதிசயந் தன்னே டிரக்க மெழுசெருக்குக்
கவலு மதர்ப்புப் பெருமித மத்தங் களிப்புளமா
முவமையில் கேண்மை நயநாக ரிகங்கண் ணோட்டமதே. 28

அழுக்காறு, மனக்கோட்டம், மறத்தல், இறுமாப்பு, மலர்ச்சி, உள்ளந்துணிந்தெழல்

394. மிஞ்சா மனச்சமுக் கம்மழுக் காறவ் வியன்மனக்கோட்
டஞ்சோர் பிகட்சி பொய்ச்சாப்பே மறவி யறமறத்த
லெஞ்சாத வேக்கழுத் தம்மிறு மாப்புச்செம் மாப்பதென்னிற்
றுஞ்சா மலர்ச்சி யுரனூக்க முள்ளந் துணிந்தெழலே. 29

கொடுமை, நிலையுடைமை, கோரம், நாணம், பேரறிவு

395. நிகரில் கொடுமையுங் கோணென்ப வேணு நிலேயுடைமை
தகுதியில் கோரங் கொடுமை கடுமையுஞ் சண்டமுமாம்
நகைதரு மானமும் வெள்கலும் வட்கலும் நாணம்நல்கு
முகரிமை யும்பேரறி வென்பதாகு முதுக்குறையே. 30

கருதுதல், மதித்தல், இன்பம், தளர்வு, குறிப்பு

396. கதித்தல் குறித்த லுணருதல் சுட்டல் கருதுதலா
மதித்த லதாகுங் கருதுதல் பேணல் மகிழ்நயமு
மெதிர்த்த மகிழ்வு நகையாகு நல்லின்பங் கேட்டைதளர்
வுதித்த சொன் னுட்டியந் தானே குறிப்பென் றுரைத்தனரே. 31

சுழற்சி, ஐயம், பொல்லாங்கு

397. கூறு மலம்வரல் கொட்புச் சுழல்வுகொ ளிற்கறங்கன்
மாறுந் தெருமர லாகுஞ் சுழற்சிகொல் மானுதலே
வேறனு மானமு மாசங்கை யும்மைய மேவுமென்ப
ரூறெடு கோளிவை பொல்லாங் கெனவு முரைத்தனரே. 32

நன்மை, இரக்கம், அகமகிழ்ச்சி

398. மன்னிய வண்ண மணிமா சறலுடன் மானுறுதி
நன்னர் நறுமை நயஞ்சீ ரிவையென்னி னன்மையதா
மின்ன லிணைவெற் றிரக்கம தானந்த மின்பமென்னி
லன்ன வகமகிழ் வார்ந்தொய்யல் கட்டியு மப்பெயரே. 33

அறிமடம், அறியாமை, அறிவின் திறம், மெய்யுவகை, கொண்டது மறவாமை

399. அறிமட மாகு மறிந்தறி யாமையெய் யாமையென்னுந்
திறனறி யாமையுந் துயவே யறிவின் றிறமதென்பர்
தறவுசெய் யோகையு மாரா யமுமெய் யுவகையென்பர்
கறுவுத லேகொண் டதுமற வாமை கடைப்பிடியே. 34

நோய், உன்மத்தம், வறுமை

400. மழுக லழுங்கல் மடங்களுர் பையுண் மடிபிணிசூ
ழழிவுறு நோயென்பர் மாழாத்தல் மால்மற லாகுமிருள்
கழுமல் மருண்மைந் துணராமை மாழ்தல் களிமயக்க
மொழிவறு மைய லுடன் மான்றன் மாலுத லுன்மத்தமே. 35

பொருமை, பொறை, அகல்வின்மை, வறுமை, மிகத்தெளிவு

401. நோனுமை யென்னிற் பொருமைய தாநுண்மை நோன்றல்
யானுமை யோடுதண் டாமை யிரண்டு மகல்வின்மையே
தானுகு மின்மை யிலம்பா டடனெற்கந் தான்வறுமை
மேனு ளுணர்வுடன் றேற்றந் துணிவு மிகத்தெளிவே. 36

தனிமை, பொலிவு, வருத்தம்

402. புலம்பு தனிமை துவன்றல் கலித்தல்பொற் புப்பம்பலே
மலிந்த கஞற லுடன்றுப் புவப்பு மலிபொலிவாங்
கலங்க லுலங்க லயர்வே யணுக் கங்கவாவணங்கு
மலங்கல் கசிவு வயாவா குலமும் வருத்தமதே. 37

சோம்பு, பொலிவழிதல், ஒண்மை

403. தீங்குசெ யஞ்ச லழுங்க லலிசுதல் சிந்தித்தலே
தூங்க லசைதல் மடியிவை சோம்பென்பர் சொன்மழுங்கல்
போங்கலி னெய்திய புல்லென லாகும் பொலிவழித
லோங்கிய நன்மை மிகுதி யறிவொழுங் கொண்மையதே. 38

அச்சம்

404. அதிர்ப்பு வெருவளுர் கம்பலை வெம்மை யழற்றிவெறி
பொதிர்ப்புத் துணுக்க முடன்பீதி கூசல் புரனடுக்கல்
விதிர்ப்புத் துளக்கம் புலம்பல் தெருமரல் மெய்யழிதல்
கொதித்துப் பனித்த லுலைதல் கவலைக் குணமச்சமே. 39

அன்பின் நடையது, மெலிவு, செயலறவு, அடைக்கலம்

405. நயனள வின்பம் பயனிவை யன்பின் நடையதென்பர்
அயரு மொடுக்கமச் சாம்புதல் கூம்புத லாகுஞொள்கல்
வியனுறு சிக்க முனிவே மெலிவென்பர் கையறவே
செயலற வென்ப ரடைக்கலங் கையடை சேருமதே, 40

துன்பம்

406. படர்துனி துக்கம் புலம்பெல்லங் கம்பலை பையுள்செல்லல்
நடலை யிடுக்க ணஞரல்லல் பீழை நழுங்கரந்தை
கடிய கவலை வறுமை பருவரல் கவ்வைபனி
தொடரு மறுகல் பனிபுன்கண் சூரிவை துன்பங்களே. 41

துன்பம், பகை, மெலிவு

407. விழும மழுங்கல் சிறுமை யுடன்வெய் துறலிரக்க
மழூதுய ரேயின்னல் பீடையு மத்துன்ப மாகுமென்பர்
எழுமுரண் டெவ்வு முனையுறழ் தூவோ டிகல்பகையாங்
கழிதரு புன்கண் பழங்கண் மெலிவென்பர் கற்றவரே. 42

குற்றம்

408. காசு கசடு நவையே மறுக்கங் கவடுபழி
மாசு தவறு களங்கம் வசைபுரை மானம்வடு
வாசு செயிர்புகர் பொக்குப் பழுதோ டஞர் கோதுதோந்
தோசம்பொல் லாப்புத் துராலிவை குற்ற மெனச்சொல்வரே. 43

வஞ்சனை, நட்பு, கையொழியாமை, ஒழுகலாறு, ஒழுக்கம்

409. கொடுமைசெய் குத்திரங் கைதவம் புள்ளுவங் கூடமுடன்
கெடவரு பட்டிமை மாயமும் வஞ்சனை கேண்மைநற்கோள்
தொடர்பது நட்புக்கை தூவாமை கையொழி யாமைசொல்லுங்
கடிய கையா றொழுகல்லா றொழுக்கமுங் கையதுவே. 44

பழமை, இன்பம், மேற்கோள்

410. தொன்மை தொடர்புடன் றொத்தொடு பூருவந் தொன்று
[தொல்லை
முன்னை புராணம் புராதனந் தொண்டு முதுமைமுந்தை
யின்னவை யாகும் பழமை நயனேம மின்பமென்பர்
மன்னிய பூட்கையும் மேற்கொ ளெனவும் வகுத்தனரே. 45

புதுமை, ஈன்றணுமை, பிறப்பு

411. யாணர் விருந்துக் கடிநவம் வம்புபுத் தேளிவையே
பூணும் புதுமை புனிறெனி லீன்றணு மைப்பொழுதாம்
பேணிய தோற்றஞ் சனனஞ் சனிப்புந் பிறந்தைபவங்
காணிய சூதகம் யோனி பிறப்பென்பர் கற்றவரே. 46

கழிபிறப்பு, இப்பிறப்பு, வருபிறப்பு, காரணம், முறைமை

412. உம்மை கழிபிறப் பிம்மையு மிப்பிறப் போர்மறுமை
யம்மை வருப்பிறப் பாகும் நிபம்பொருட் டன்னிமித்தம்
செம்மையில் வாயில் திறன்கா ரணத்திற் றெரியுஞ் சொல்லா
மெய்ம்மை முறைமை மரபே பரம்பர மேமொழியே. 47

இளமை, இளமைச்செவ்வி, பற்றுக்கோடு

413. குருளை மழவு கயமிளை சேய்நவ்வி கொம்மை மஞ்சு
புருவை குழவி யுடன்சேடு போதகம் பொற்றருண
முருகு பருவ மிளமையக் கோமள மும்மிளமை
யருளிய செவ்விபற் றுக்கோடு கந்தோட லாம்பனமே. 48

உரிமை, இலாபம், தருமம், அழுக்கின்மை

414. பொருவரு பாங்குங் கிழமையுந் தாயமும் பூட்சியுமே
யுரிமைய தாக்கம் பலித்தல் பயன்பசை யூதியமே
கருதி லிலாபஞ் சரதஞ் சுபமங் கலஞ்சீலத்தோ
டருளுந் தரும மமலம் விமல மழுக்கின்மையே. 49

மாதர் நண்ணுநெறி, தூய்தன்மை, தூய்மை, அறிவுள்ளது, அறி வில்லாதது, மேல்

415. மாதர்நண் ணுநெறி பூப்பென்பர் தூய்தன்மை வாலாமையே
சூதக மென்பர் புனிதம் பவித்திரந் தூய்மையென்பர்
சேதன மென்ப தறிவுள தாகு மசேதனமே
போதமி லாதவை மேலாந் தலைதலை மைப்பொருட்டே. 50

கணிதம், கன்னி, நானுவிதம், முதல்

416. கரண மலகெண் கணிதங் குமரியுங் கன்னியென்பர்
பரவிய பன்முறை யேபரி யாயம் பலவிதமே
யுரைசெயு நானு விதமென்பர் மோனை யுடன்றொடர்ந்து
தெரித்கு மாதி யிவைமுத லேயெனச் செப்பினரே. 51

முடிவு, அனுபவம், வளமை, கொழுப்பு

417. மொழிதரு மந்தமுந் தீர்தலு மீறு முடிவதென்ப
ரழிவில தாந்துப் புரவே யனுபவ மாகுமென்பர்
செழுமை யுடன்மல்ல லேயாணர் வாய்ப்புத் திகழும்வண்மை
கொழுமை வளமைய தாகுங் கொழுமை கொழுப்பென்பரே. 52

சிறப்பிலதாம் குணம், செல்வம், வேறுபடல், உறவு, துறப்பது

418. சிறப்பில தாங்குணஞ் சீத்தை சிகம்பதென்பர்
வெறுக்கை விபவம் நிதானம் பொறிசெல்வம் வேறுபட
லுறத்தகு மேவி கிர்தம் விகடச்சொல் லுறவுறவித்
துறப்பது வென்னிற் றுறவிய தாகவுஞ் சொல்லுவரே. 53

நாறுதல், இனிமையது

419. விரைமண மன்றல் கடிவாசங் கொங்கு வெறிநறையே
முருகு பரிமள மாமோக்கங் கானகந்த முன்கமழ
லருகுடன் கந்தித்த னுறுத லாகு மமுதுசுவை
யுருதரு சார மிவையினி மையதென் றோதுவரே. 54

தித்தித்தல், கைத்தல், புளித்தல், ஒருபலம்

420. தீயமுந் தீரமுந் தெங்குடன் றேமுந்தித் தித்தலென்பர்
காயமுங் காழ்த்தல் கடுத்தல் கரிலிவை கைத்தலென்ப
ராய புளித்தலே யாகும் பிராந்தித்த லானதொடி
யேய தொருபல மென்றே யுரைசெய்வ ரேந்திழையே. 55

நீர்மை, எழுபொருள், முழுது

421. மாலை யுழுவல் தகவியல் பேமுறை மாமரபு
பாலதி காரம் விதியே கிழமை பரிசுபண்பு
மேலுரை பான்மை குணநீர்மை யூழ்தண்மை யேயுரிமை
யேலு மெழுபொரு ளேயாகு மென்ப ரிவைமுழுதே. 56

பண்பு, கொள்கை, உவமை

422. குணம்நிற மும்பண்பு மாமறி வோடுகுணங் கொள்கையாம்
புணருற ழோடொப்பு நேரே நிகர்புரை போல்பொருவு
துணையொரு வீடு தகவே கடுப்புடன் றூக்குவிக
லிணையென வேயுரை செய்வா ருவமையை யேந்தியைழே. 57

பாரதிதீப வரலாறு

423. பொழிகொண்ட லென்ன கரப்புண் டரிகன்மெய்ப் பூசுரர்தம்
விழிநெஞ்ச மென்ன வரும்பா ரதிதிரு வேங்கடவன்
செழியன் புகழண்ணல் செப்பிய பாரதி தீபத்தெட்டாய்
மொழிபண்பு பற்றிய பேரி னியலு முடிந்ததுவே. 58

ஒன்பதாவது

செயல்பற்றிய பெயர்த் தொகுதி

தொழில், தொழிற்பயில்வு, செயல்

424. செயல்வினை யேதரு மங்கரு மந்தொழிற் செப்பிலிவை
யியலும் விதியுட ஞேர்பொரு ளாந்தொழி லென்பர்தொழிற்
பயிலது வாகு மயர்த லுஞற்ற லிழைத்தல் பண்ணல்
துயரில் வனைத லிவைசெய லாகவுஞ் சொல்லினரே. 1

மகள்விளையாட்டு, பாராட்டு, பொழுதுகழித்தல் விளையாட்டு

425. கெடலை யுடன்பண்ணை யோரையுண் டாட்டுக் கிரீடை
[பொய்தல்
கெடவரல் வண்டல் மகள்விளை யாட்டென்பர் கேள்மகிழ்வும்
படிமை திரிந்துகொண் டாடலும் பாராட் டெனப்பகர்வர்
விடலை விஞேதம் பொழுது கழித்தல் விளையாட்டதே. 2

புதுமணம், விழவு, ஒப்பினை

426. புரையில் வதுவை கடிமன் றன் மூன்றும் புதுமணமா
முருகுடன் சாறுமச் சேறும் விழவென்பர் முன்புனைத
லரிதி லமைத்த லணிதகை செய்த லலங்கரித்த
லுருவுமண் ணல்பொற்பு வேய்தல் வனைதல்சொல் லொப்
[பினையே. 3

உண்ணும் பண்பின் தொழில், அடிசிலூண் தொழில்

427. வைத்த தயிற லருந்துத லாருதல் மாந்தல்துற்றல்
மெத்த நுகர்த லுடனுண்டல் தின்றல் மிகப்பொசித்தல்
துய்த்தல் பருகுதல் துவ்வுடன் பண்பிற் றொழிலைச் சொல்வ
ருய்த்து மிசைத லயிற வடிசில தூண்டொழிலே. 4

சூடுதல், துஞ்சல் (உறங்கல்), நுகர்தல்

428. துனிவற வேய்தல் மலைதல் மிலைதலுஞ் சூடுதலாங்
கனவோ டனந்த லுறங்க றுயிலுதல் கண்வளர்த
லினிதுடன் பள்ளிகொள் ளல்துஞ்ச லாகு மெடுத்துநுங்கல்
தனவிழுங் கன்ஞெண்ட ருனிவை யாநுகர் தற்றொழிலே. 5

களவு, வளைத்தல், எறுதல்

429. கரவு கயவு வடம்பட் டினங்கட்டல் கள்ளலுட
னுரைசெய் களவென்பர் கோடல் ஞெமிர்த லொடித்தலுடன்
மருவி யிறுத்த லொசித்தல்மெய் தாழ்த்தல் வளைத்தலென்பர்
விரைவுட னெக்கலி வர்கலு மேறுதன் மேற்படுமே. 6

முரிதல், துவளல், தாழ்தல் அழுதல்

430. எலியோ டொசித்தலு மோய்தல் முரிதலே யேயுரைக்குந்
தொலைவி றிவளல் திவண்ட லுவளல் துவளலென்பர்
மெலிவோ டிறைஞ்சல் குரங்கலுந் தாழ்தலை மேவுமென்பர்
கலுழ்தல் கலக்கங் கசித லழுதலைக் கற்பிக்குமே. 7

கோபம்

431. முனிவே கறுப்புக் குரோதங் குரூர முளவுகதஞ்
சினமே வெகுளி கலாம்பகை செற்றஞ் சிவப்புருத்தல்
வினைவேக மேசற வேவொத்தல் காய்தல் விளிவுசெறல்
துனி கோரங் கோபத் தொழிலது வாகமுன் சொல்லினரே. 8

புலவி, புலவிவேகம், கடத்தல்

432. பொருந்தலி லூடல் முதிர்வெம் புலவி புலவியதில்
வருந்திய வேகந் துனியென்பர் தாவுதல் வாவுதலே
யுரங்கொடி கத்தல் குதித்த லகற லுகழ்தலுடன்
கரைந்தெதிர் நீட்டல் நடத்தலுந் தாண்டல் கடத்தலதே. 9

போகல், நெருங்குதல்

433. படர்தல் பரிதல் வழங்க லிகத்தல் பதிபெயர்தல்
விடுதல் தணத்த லுடன்றீர்தல் தீர்த்தல் மிகவொதுங்கல்
தொடர்தல் நடாத்த லுடன்சேறல் போகல ரெழிலுக்குஞ்
மிடைதல் கஞர லிமிர்தல் நெருங்குதன் மேல்வருமே. 10

விரைவு, கடுப்பு

434. கடுகல் நொறிறுனே வல்லையே யொல்லை கதழ்வுடனே
முடுகல் விரைவென்ப தாஞெள்ளல் பொள்ளல் மொழியுடனே
விடலில் கதுமென நொய்தென வெய்தென வும்விரைவா
மடரு கதனந் துரித மிவைகடுப் பாமென்பரே. 11

திரிதல், நீர்ச்சுழலல், சுழலல், மீளுதல், ஆற்றுப்படை

435. உழிதரல் கொட்புத் திரிதல் சுரிதலு முந்தியுநீர்ச்
சுழலல் சுரிய லதுதான் மொழியிற் சுழலலுமா
மழிவின் முரிதல் மறிதரல் மீளுத லாற்றுப்படை
வழியுட் படுவித்த லாற்றுய்த்த லவ்வழி மாற்றுதலே. 12

பாய்தல், மண்டலம், ஊருதல், நேர்செலல்

436. பாத முகள்தல் குதித்தலக் குப்புறல் பாய்தலென்பர்
மாதியும் வாளியுஞ் சாரிகை யுஞ்சொல்லில் மண்டலமா
மோதி லுகைத்த லுடன்றூண்ட லூருத லோர்பொருளாம்
வீதியி னேர்செலல் வாலாதி யென்று விளம்புவரே. 13

நிலைபெறல், சுமத்தல்

437. அசைத றெவிட்ட லறுத்தல் விதித்தலோ டல்கறங்க
லிசைதரு மல்கல் பரித னிலைத்த லினியதுஞ்சல்
பசையொடு மன்ன னிலைபெற லாகும் பரித்தலுடன்
மிசைமெய்ப் பொறுத்தல் சுமத்தலென் றேசொல்லும்
[மெய்த்தமிழே. 14

முயற்சி, மிக்குச் செயற்றெழில், செய்தற்கரிய செயல்

438. இயற்ற லுஞற்றுழப் பாள்வினை யூக்க மிவையுடனே
முயற்ற லுடன்றரு தாளாண்மை யென்னின் முயற்சிமிக்குச்
செயற்றெழி லேயென்ப தூராண்மை செய்தற் கரியசெயல்
இயற்றகு நாவலர் பேராண்மை யாக விளம்புவரே. 15

எண்ணல், ஆராய்தல், தேடல்

439. ஒளிதரு சூட்சி யுசாத் தேர்ச்சி யெண்ணெண்ண லோர்தலுமத்
தெளிதலுந் தூக்கலுந் தேர்தல் தெரிதலுஞ் சேரவிவை
யளவறு கேள்விய தாராய்த லுங்கை யரிக்கொள்ளுக
வெளியுற நாடலு நேடலுந் தேடலின் மேல்வருமே. 16

ஒற்றுமை, ஒற்றல், வரையறுப்பு, விலைகூறல்

440. கருதொற் றுமைக்கொள லேயொற்றல் வேய்குனித்
[தல்கணித்தல்
வரையறுப் பாநொடை விற்றல் பகர்தல் வரின்விலையாந்
துருமம் வெறிப்பு வெதிர்ப்புப் புலம்பொடு சொன்முதிர்ப்பு
வெருவல் கலங்கல் கலக்கமென் றேதுவர் மெல்லியலே. 17

நடுக்குதல், தியாகம்

441. விதிர்ப்புப் பனிப்பு விதலைகம் பம்முடன் மெய்ப்பொதிர்ப்போ
டதிர்ப்பு நடுக்குதல் வேள்வி யுதவிவே ளாண்மைகொடை
மதித்துப் பகரல் பொழித லிடுதல் வழங்கல்நல்கல்
திதத்தி லளித்த லருளுத லீதல் தியாகமதே. 18

வரையாது கொடுத்தல், வேள்வி, வேள்வித்தறி, பாதுகாத்தல்

442. ஏற்ற கொடைமட மேவரை யாது கொடுத்தலென்ப
மாற்றரு மோமங் கிருதுட னேயெச்சம் யாகமகம்
மேற்றி கழிட்டி யிவைவேள்வி யூபமும் வேள்வித்தறி
போற்றலு மோம்பலு மேபாது காத்தற் பொருட்டென்பரே. 19

கொளற்பொருட்டு, அகத்தீடு, தலைக்காவல், பிச்சை, கரத்தல், இரத்தல், பூசனை

443. தேவு கொளற்பொருட் டாகுங் கவவகத் தீடுதலைக்
காவ லிளையென் பரையம் பலிபிட்சை யாங்கரத்தல்
வாவு கரவ திரவே யிரத்தல் வழிபாடுடன்
ருவி லருச்சனை யாராத னைபூசை தானென்பரே. 20

தொழுதல், காமவினைத் தொடர்பு, உண்டாதல்

444. வணங்கல் பராதல் பரவுத லஞ்சலி வந்தனையே
தணிந்து பணித லிறைஞ்சலுந் தாழ்தலுந் தான்றொழுத
லிணைந்தவெங் காம வினைத்தொடர் பென்ப ரிணைவிழைச்சுப்
புணைந்துசொல் பூத்தல் பயத்தலுண் டாதற் பொருட்டதுவே. 21

மெய்க்கூட்டம், வெட்டல், களைதல்

445. குறித்த புணர்ச்சி கலவி யிரண்டுமெய்க் கூட்டமதா
மொறுத்தல் தடிதல் துணித்தல் துமித்த லுடனறுத்த
லெரித்தல் பிளத்தல் வகிர்ந்திட லீர்த்தலி தாகும்வெட்டல்
பறித்த லுடன்கட்டல் குற்றல் களைதற் பயன்படுமே. 22

நெரித்தல், ஞெமுங்கல், கொல்லுதல், அழித்தல்

446. நெரித்தல் வெறுத்தல் ஞெமுங்க லமுங்கலை நேருரைக்கு
மெருக்குதல் காதுத லெற்றுதல் கோற லெழிறுலைத்தல்
முருக்குத லெண்ணி லொருபொரு ளாமென்பர் முன்செகுத்த
லரித்தல் சவட்ட லுதைத்தல் தெறுத்த லழித்தலதே. 23

துளைத்தல், கொழித்தல், வாய்மைச் செயல், கடைதல்

447. தொட்ட லகழுதல் தோண்டல் குயில்தொள் கலுந்துளைத்தல்
மட்டின் வறண்டல் வரன்றல் கொழித்த லென்றூதலதே
யுட்டெரி வாகு முவனித்தல் வாய்மைச் செயலுரைக்குங்
கட்டல் ஞெலிதல் கவர்தல் குடைதல் கடைதலதே. 24

சிந்துதல், வடுப்படுதல், தினவு, கூடிடல், ஆறலைத்தல், மீதூர்தல்

448. அடர்த்திற் றவற்றல் சிதர்த்தலுஞ் சிந்துத லாங்கதுவாய்
வடுப்பட லாகுங் கண்டூர்த் தினவா மென்பர் மாறின்றியே
யடுத்தலுங் கூடிட லான வழிபறி யாறலைத்த
தணிகை மயிலோனைக் கொண்டுவருக என மயிலை வேண்டிப் பத்துப் பாடல்களில் பாடப்பெற்றது *மயில் பத்து*; சேவற்கொடியோன் வரக் கூவுக எனச் சேவலை வேண்டிப் பத்துப் பாடல்களில் பாடல்பெற்றது *சேவல் பத்து*; வேலவனின் கை மருவும் வேலின் சிறப்பைப் பத்துப் பாடல்களில் எடுத்துரைப்பது *வேல் பத்து*; தணிகைக் குமரனின் அடிச்சிறப்பைப் பத்துப் பாடல்களில் விளக்குவது *சீர்பாதப்பத்து*; 'கைலை நேர் தணிகை மால் வரை'யின் பெருமையைப் பத்துப் பாடல்களில் புலப்படுத்துவது *தணிகைமலைப்பத்து*; காப்புச் செய்யுள் நீங்கலாக, அந்தாதித் தொடையில் அமைந்த நூறு செய்யுள்களைக் கொண்டது *திருத் தணிகை அந்தாதி*; காப்புப் பருவம் முதலாகச் சிறுதேர்ப்பருவம் ஈறுகப் பருவம் ஒன்றிற்குப் பத்துச் செய்யுள்கள் என்னும் முறையில் பத்துப் பருவங்களுக்கும் மொத்தம் நூறு செய்யுள்களைக் கொண்டதும் இவையன்றியும் நூல் தொடக்கத்தில் விநாயகர் துதிச் செய்யுள் ஒன்றைக் கொண்டதுமான *திருத்தணிகைப் பிள்ளைத் தமிழ்*; காப்பு வெண்பாக்கள் இரண்டோடு நூல், புராண வரலாறு, குழாங்கள்; பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை,

தெரிவை, பேரிளம்பெண் ஆகிய பருவங்கள் முதலியவற்றை உள்ளடக்கி 646 கண்ணிகளால் ஆன *திருத்தணிகை உலா*; நூறு செய்யுள்களைக் கொண்ட *திருத்தணிகைக் கலம்பகம்* முதலாய யாப்பினுல் அமைந்த பலவகை இலக்கியங்களின் பல்சுவைப் பேழையாகத் *திருத்தணிகைச் சந்நிதி முறை* அமைந்துள்ளது.

இச் சந்நிதி முறை நூல்களில் பாடல் முதல் குறிப்பு அகராதியும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. பின் இணைப்புகளாகக் கந்த புராணம், திருப்புகழ், திருத்தணிகைத் திருவிருத்தம், க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட சில செய்யுள் மணிகளும், திருத்தணிகைத் திருவிழாக்கள் பற்றிய விரிவான விளக்கமும், தணிகைத் தீர்த்தங்கள், தணிகைத் தல விளக்கம், தணிகை மலைக்கோயில் அமைதி—வரைபடம், தணிகைக் கோயில்களின் கல்வெட்டுகள், கல்வெட்டு தரும் சிறப்புச் செய்திகள், வேலஞ்சேரிச் செப்பேடுகள், கந்தப்ப அய்யரின் குடும்ப வரலாறு, தணிகை பற்றிய பிற நூல்கள் இன்னோரன்ன தொடர்புடைய செய்திகள் பயனுள்ள முறையில் அளிக்கப்பட்டுள்ளன. அரும்பத விளக்க அகராதியும் இணைக்கப் பட்டுள்ளது.

'1865க்கு முன்பே அச்சானதாக அறியப்படும் ***தணிகாசல அநுபூதி*** முழுமையாகக் கிட்டவில்லை; 1867இல் அச்சான ***சிலேடை வெண்பா மாலை*** நூலின் விளம்பரத்தில் குறிக்கப்பட்ட ***மலைவெண்பா, யமக அந்தாதி, முருகக் கடவுளுக்கும், திருமாலுக்கும் சிலேடை யந்தாதி*** என்னும் மூன்று நூல்கள் பற்றிய விவரமும் தெரியவில்லை; 1865க்கு முன்னரே வெளிவந்ததாகக் குறிக்கப்பெறும் ***முருகர் தாலாட்டு*** பற்றியும் அறிய இயலவில்லை' (பக். 142) என்னும் குறிப்பு இத்துறை ஆர்வலர்களுக்கு அரிய விருந்தாகும். ஆராய்ச்சியாளர் களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் விரிவான முகவுரையைப் பதிப்பாளர் தந்துள்ளது பாராட்டுக்குரியது. எம். பில்., பிஎச். டி., போன்ற பட்டப்பேற்றிற்காக ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் திருத்தணிகைச் சந்நிதி முறையுள் அமைந்த நூல்கள் இடமளிக்கும் பாங்கின. இன்றைய கல்விநிலையைக் கருத்திற்கொண்டும், பெரிதும் பரவ வேண்டும் என்னும் பெருநோக்கோடும், பாடல்களை எளிதில் படித்துணர்ந்து பொருள் அறிந்து கொள்வதற்கு உதவும் வகை யிலும், சொற்களைப் பிரித்தும் தக்க நிறுத்தக்குறிகளைப் பெய்தும் பதிப்பித்துள்ளமை வரவேற்கத் தக்கதாகும். தணிகைக் களஞ்சிய மாகத் திகழும் இந்நூலைத் தமிழகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என நம்பலாம்.

—**டாக்டர் வ. ஜெயதேவன்**

தமிழர் நாட்டு விளையாட்டுகள், இரா. பாலசுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 020, பக். xvi+*312*, ரூ. *14*, *1980*.

நெடுங்காலமாகத் தமிழ் ஆய்வாளர்களின் 'தீண்டாமை'க்கு உள்ளாகியிருந்த பல்வேறு துறைகள், இம்மறுமலர்ச்சி ஊழியில் அண்மைக் காலத்தில் பல்வகை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் பெறுவது பாராட்டுக்குரியது. இவ்வகைத் துறைகளுள் ஒன்றாக நாட்டுப்புறவியலைக் கருதலாம். இந்த நாட்டுப் புறவியலிலும் பாடல்கள், கலைகள் போன்றவையே பேரளவில் ஆராயப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறச் சமுதாயப் பண்பாட்டினை ஒட்டிய ஆராய்ச்சி அரும்பு நிலையிலேயே உள்ளது. இந்நிலையில் நாட்டுப் புறச் சமுதாயப் பண்பாட்டினை விளக்கும் பல கூறுகளுள் ஒன்றாகிய நாட்டுப்புற விளையாட்டினை அறிமுகப்படுத்தும் நோக்கில், மதுரை மாவட்டத்துக் கள ஆய்வின் அடிப்படையில் (iv) எழுந்ததே இரா. பாலசுப்பிரமணியன் அவர்களின் ***தமிழர் நாட்டு விளையாட்டு***கள் என்னும் நூலாகும்.

'சல்லிக்கட்டு' முதலாகச் 'சீப்பு விக்கிது' ஈறாக *126* விளையாட்டு களை. *1*) ஆடவர் விளையாட்டு. *2*) மகளிர் விளையாட்டு, 3) சிறுவர் சிறுமியர் விளையாட்டு, 4) சிறுவர் விளையாட்டு, 5) சிறுமியர் விளையாட்டு, *6*) குழந்தை விளையாட்டு என்னும் அறுவகைப் பாகு பாட்டுள் அடக்கி, அவற்றை ஆய்வு நெறியில் இந்நூல் விளக்கு கிறது. இந்நூல் நுவல்பொருளின் பிழிவாக ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை (vii-xvi) சேர்க்கப்பட்டுள்ளது. இம்முன்னுரை தமிழறி யாதோர்க்கும் பயன்படும். நூலின் பொது முன்னுரைப் பகுதியில் (*1-35*), நாட்டுப்புறவியல், நாட்டுப்புற வாழ்வியல், நாட்டுப்புற விளையாட்டுகள், விளையாட்டு வளர்ச்சி முறைமை, விளையாட்டு களின் பொதுவகைப்பாடுகள்; பால், வயது அடிப்படைகளில் விளையாட்டுப் பகுப்பு, உடல்திறன், அறிவுத்திறன், வாய்ப்புநிலை, மனமகிழ்ச்சிநிலை முதலிய தன்மை அடிப்படையில் விளையாட்டுப் பகுப்பு, விளையாட்டுகளின் நுண்வகைப்பாடுகள், சிறுவர், சிறுமியர் விளையாட்டுகள் பற்றிய அட்டவணை, அட்டவணை வாயிலாக அறியப்படும் செய்திகள், விளையாட்டுப் பாடல், இப்பாடல் பயன் படும் முறை, பாடல் உணர்த்தும் செய்திகள், விளையாட்டுகளின் தோற்றம், விளையாட்டின் பயன், விளையாட்டில் இடம் பெறும் பொதுக்கூறுகள் போன்றவை ஆழமாகவும் விரிவாகவும் ஆராயப் பட்டுள்ளன.

'சல்லிக்கட்டு' தொடங்கி, 'உறிப்பானை விளையாட்டு' முடிய *18* வகை ஆடவர் விளையாட்டுகளை முதல் இயல் விளக்குகிறது. முல்லைக்கலி காட்டும் ஏறு தழுவுதல், மேனாட்டுக் காளைப்போர் ஆகியவற்றோடு சல்லிக்கட்டு விளையாட்டை ஒப்பு, உறழ்வு நெறி களில் ஆசிரியர் விளக்கியுள்ளார். இது அவரது ஆராய்ச்சி ஈடு பாட்டையும் முயற்சியையும் புலமையையும் புலப்படுத்துகிறது.

'சடுகுடு' விளையாட்டிற்குப் போர் காரணமாயிருந்திருக்கக்கூடும் என்ற கருத்தில் பதினெரு காரணங்களை அட்டவணைப்படுத்தி ஆசிரியர் அளித்திருப்பது (51-52) சிந்தனைக்கு விருந்தாகும். 'பதினைந்தாம் புலி' அல்லது 'ஆடு புலி ஆட்டம்' எனப்பெறும் விளையாட்டின் தோற்றத்திற்கு 'இயற்கை வேட்டு வினை' அடிப்படையாக இருக்கக்கூடும் என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணம் (63-64) அவரது சிந்தனைத் திறனுக்கோர் எடுத்துக்காட்டாகும்.

தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், மஞ்சள் நீர் தெளித்தல் ஆகிய நான்கு வகை மகளிர் விளையாட்டுகளையும் இரண்டாவது இயல் விளக்குகிறது. தாயம் — பொருள் விளக்கம்; இலக்கியங்களில் குறிப்பிடப் பெறும் வல்லாட்டம், வட்டாட்டம் அல்லது உண்டை உருட்டுதல், கவறு ஆடுதல், 'பேக்கம்மன்' என்னும் மேனட்டு விளையாட்டு ஆகியவற்றோடு தாயவிளையாட்டை இயைபுப் படுத்திய விளக்கம்; ஐவகைத் தாயவிளையாட்டுகள், தாய விளையாட்டின் தோற்றம், தாயத்திலிருந்து 'செஸ்' வளர்ந்திருக்கக்கூடும் என்னும் கருத்து; பல்லாங்குழி — பெயர்க்காரணம், எழுவகைப் பல்லாங்குழி ஆட்டம்; கழங்காடுதல், அம்மானை ஆட்டம் ஆகியவற்றோடு தட்டாங்கல் ஆட்டம் தொடர்புடையது என்னும் கருத்து; நால்வகைத் தட்டாங்கல் ஆட்டம்; பரிபாடல் காட்டும் நீர் விளையாட்டுடன் தொடர்புடையதாக அமையும் மஞ்சள் நீர் தெளித்தல் இன்னோரன்ன செய்திகளை இவ்வியல் விளக்குகிறது.

'தொட்டு விளையாட்டு' முதல் 'ஈசல் பிடித்தல்' முடிய 21 வகை சிறுவர் — சிறுமியர் விளையாட்டுகளை மூன்றாவது இயலும், 'மரங்கொத்தி' முதல் 'பட்டம்' ஈறாக 52 வகை சிறுவர் விளையாட்டுகளை நான்காவது இயலும், 'ஒண்ணாங்கிளி இரண்டாங்கிளி' முதல் 'மலையிலே தீப்பிடிக்குது' முடிய 22 வகை சிறுமியர் விளையாட்டுகளை ஐந்தாவது இயலும், 'தென்னை மரத்து விளையாட்டு' முதல் 'சீப்பு விக்கிது' வரை 9 வகைக் குழந்தை விளையாட்டுகளை இறுதி இயலும் விளக்குகின்றன. குத்து விளையாட்டு, வேட்டு வினை இவற்றின் இயைபு (153), கால்தாண்டி, உயரத் தாண்டுதல் ஒப்பீடு (163), கிட்டிப்புள், டிப்கேட்டு ஒப்பீடு (164), குண்டு விளையாட்டு, கிழித்தட்டு, சில்லி விளையாட்டு பற்றிய விரிவான செய்திகள் போன்றவை ஆசிரியரின் பரந்த அறிவைப் புலப்படுத்துவன.

நூலின் பின்னிணைப்புகளாக விளையாட்டுக் கலைச்சொற்கள் பட்டியலும் (254-304), சொல்லகராதியும் (305-312) சேர்க்கப்பட்டுள்ளன. அன்றியும் நூலில் ஆங்காங்கே அட்டவணைகளும், விளையாட்டுகளை விளக்கும் படங்களும் இடம் பெற்றுள்ளன. இவை ஆய்வாளர்களுக்கும் ஏனையோருக்கும் நன்கு பயன்படும். இந்த ஆய்வு நூலுக்குப் பயன்பட்ட நூல்களின் அடைவு ஒன்று இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கலாம். விளையாட்டுக் கலைச் சொற்கள் சொற்களஞ்சியத்திலிருந்து தொகுக்கப்பட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார் (254). எந்தக் களஞ்சியத்திலிருந்து தொகுக்கப்பட்டது என்று குறிப்

பிட்டிருந்தால் பயன் கூடியிருக்கும். குழந்தைகளின் விளையாட்டுகளை வண்ணப்படங்களுடன் விளக்கும் கலைமகள் வெளியீடான பாலகுருநாதனின் 'ஓடி விளையாடு பாப்பா' என்னும் நூல் இந்நூலில் குறிக்கப்பெறவில்லை. விளையாட்டுகள் பற்றி முன்னரே வெளிவந்துள்ள நூல்களைப் பற்றி முன்னுரையிலேனும் ஆசிரியர் சிறிது எழுதியிருந்தால் மேலும் பயனுடையதாக இருந்திருக்கும்.

ஆராய்ச்சியுலகில் கருத்துக் களவு (plagiarism) பரவி வரும் இந்நாளில் கலந்துரையாடல் வாயிலாகப் பெற்ற செய்திக்கும் அடிக் குறிப்பிட்டு மூல ஆதாரத்தைக் காட்டியிருக்கும் ஆசிரியரின் ஆராய்ச்சி நாகரிகம் (பக். 4, அ. கு. *11*; பக். 7, அ. கு. *13*; பக். 45, அ. கு. *3*; பக். 92, அ. கு. *10*; பக். 93, அ. கு. *11*; பக். 205, அ. கு. *1*) போற்றுதற்குரியது. ஆசிரியரின் உழைப்பு, ஆய்வு நாட்டம், புலமை, நேர்மை ஆகியன இந்நூல் வாயிலாக வெளிப்பட்டுள்ளன. பலவகையிலும் பயனுள்ள இந்த முயற்சி பாராட்டத்தக்கது. தமிழர் விளையாட்டுகள் பற்றிய ஒரு கலைக்களஞ்சியம் தோன்றுவதற்குத் தூண்டுகோலாக அமையவல்ல இரா. பாலசுப்பிரமணியத்தின் தமிழர் நாட்டு விளையாட்டுகள் வரவேற்கத்தக்க நல்ல நூல் ஆகும்.

டாக்டர் வ. ஜெயதேவன்

Heritage of the Tamils: Language and Grammar, ed. by S. V. Subramanian and K.M. Irulappan, International Institute of Tamil Studies, Madras 600 020, pp. xvi + 660, Rs. 22/-, 1980.

The bulky volume, *Language and Grammar* under review is an anthology of 44 papers throwing light on the heritage of the Tamils. Prof. S. Agasthialingom's *Keynote Address* is thought-provoking. He observes that Tolkāppiyam is a first rate work wherein the author displays his brilliant, linguistic acumen which never fails to impress even the 20th c. linguists (p. 1). He also points out certain unhealthy trends witnessed inthe later grammatical treatises. He stresses that Tamil must be modernized in various fields like lexicon, style etc. Prof. S.V. Subramanian explains the word *Tamiḻ* as the compound of *tam* and *iḻ*. N. Gnanasambandham views that Brahmiscripts are originally evolved for Tamil with a great amount of genius, with a view to propagate the concept: *The body is the Temple of God* (p. 20). Dr. K. Murugaiyan's profound study proclaims that nine classes have to be set up as natural classes in Tamil and all these nine can be represented by seven features viz., syllabic, consonantal, obstruent, nasal, lateral, distributed, back.

Dr. S. Subramaniyam's paper based mainly on Tolkāppiyam and dealing with the language of competence only emphasises that *eḻuttu* and *col* divisions of the Tamil grammatical treatises concern

with various aspects of linkage of words in sentences or the syntactical constituents and sandhi or *puṇarcci* is an aspect of syntax. It also elaborates the seven types of sandhi classification of Heffner to 18 types. Prof. P. S. Subramaniyam's deep study and reinterpretation of case relation sandhi in Old Tamil reveals that certain increments that are said to come in case relation sandhi are really either case suffixes or oblique suffixes. Dr. Kumaraswami Raja's excellent study based on the data drawn mainly from Kuṟuntokai that serves as the representative of Old Tamil presents the purely phonlogical sandhi processes involved in Old Tamil in the form of 12 ordered rules. Dr. Manian deeply analyses the sandhi trends in Tamil dailies and points out that 'it is better to modify certain traditional Sandhi rules, according to modern usages' (p. 90) which is also one among the various areas where Tamil must be modernized.

Prof. Israel clearly describes the morphemic structure in Tamil on the basis of the standard literary Tamil. Each of the structural classes viz., nouns, adjectives, verbs, adverbs, particles has been described properly along with their characterizing morphemic structure. The natural or notional concept of 'time' is lexically significant in the noun. The study on the time nouns in old Tamil has been properly and profoundly carried out by Prof. S.V. Shanmugam. Dr. P Murugarathnam has listed six points emerged from his deep study of the nouns ending in *am* in Old Tamil. Dr. K. Paramasivam rightly classifies a major part of Tamil verbs into affective and effective on the basis of their semantic and syntactic behaviour. Dr. R. Balakrishnan's elaborate discussions on Tamil verbs help to classify them into two major groups, viz., a) + tense verbs or pure verbs, b) — tense verbs or defective verbs.

The structural homonymy in Tamil has been deeply dealt with and also its diachronic differentiation has been brought out well by Prof. E. Annamalai. Dr. P. Kothandaraman's syntactic study of the particle *tāṉ* presents six generalisations. He also points out that the particle *tāṉ* reminds us of the large amount of work to be carried out in the field of Tamil linguistics (p. 177). M. Sadasivam describes vividly the Tamil Semantics and its various aspects. He observes that the hidden treasure of Tamil Semantics is an inexhaustible mine of information and much work is yet to be done in this field (p. 195). K. Balasubramanian with a view to describe the language as revealed in the text of Tolkāppiyam discusses certain significant aspects of its phonology. Dr. S. Singarvelan presents a vivid description of the language of the Bhakti Literature wherein he points out that the authors of this literature who are mystic poets follow the old rule of the language and wherever they felt necessary they simply modified

the old linguistic rules. John Samuel analyses the various aspects of the language of modern Tamil narrative poetry.

Dr. K. M. Irulappan's elaborate paper points out all theoretical complexities and presents based on purely Ferguson the Diglossic Reflection in Tamil. Dr. Srinivasa Varma studies Tamil dialects from the points of view of Grammar, Inscriptions and Modern spoken Tamil. He emphasises that the survey of Tamil dialects should be carried out soon to know and reserve in record some of the vanishing speech patterns of the older, tribal, illiterate composite population (p. 286). Dr. Ghadigachalam presents briefly the main characteristic features of the Vellore Tamil Dialect. Vishvanatha Khaire explores the similarities of Marathi words with words in *uri-y-iyal* of Tolkāppiyam and he also draws attention to various exciting facets of the study of *Sammata* languages in new light. Gnanagiri Nadar's brief note presents that in thousand of technical terms, the root-words of Tamil have through the Hellenic, Italo-Celtic and Teutonic, passed into the Vocabulary of the modern world and that there is no culture today which does not to some extent express itself with root-words of Tamil. Dr. Sourirajan furnishes some methods to collect the loan words in Tamil apart from a survey of the work already done in the field and the scope in future. Dr. T.S. Manickam based on Tamil Lexicon presents a vivid study of Urdu Loan words in Tamil.

Dr. S. Gnanamuthu's historical analysis of place-name suffixes of Tamilnadu is interesting. He lists 239 suffixes based on frequency. R. Madhivanan cites several instances where the grammatical tradition of Tamil agrees with that of the other Dravidian languages. Prof. K.M.P. Variar dispels some false notions about the evolution of Malayalam language held by some scholars. He also points out that Tolkāppiyam can be considered to represent a stage of evolutionary process when the West Coast dialect was rapidly moving away from its counterpart in the East.

Dr. Sarma stresses that Tamil and Telugu are not only close to each other but also belong to one and the same family of languages namely Dravidian. Prof. Gowda surveys the linguistic aspects of Tamil and Kannada and examines the interesting points pertaining to politico-cultural contacts and conflicts.

Dr. Gnanapragasam's study of comparison between Clavis and Toṉṉūl Viḷakkam comes to the conclusion that Clavis may be said to be a small mirror of Beschi's life and work (p. 420). Dr. Neethivanan's study of content selection and poetic style brings out

the fact that an author has more liberty to choose from and it is this 'liberty to choose' which provides more stylistic devices in a literary work (p. 427). Dr. Karunakaran's study rightly focuses on some of the pioneering attempts made in the planning and development of Tamil from time to time. It also points out to a certain extent the success and failure as well in some of such attempts. It also makes some suggestions to identify certain research strategies which could make the process of language planning and development more realistic and useful. Thillainayagam deals with the dictionaries in Tamil from the point of view of Library Science. He stresses that to make the library entries purposeful to the users and the library personnel, each book should be evaluated scientifically on modern lines.

Kodumudi Shanmugam introduces Tamil paleography and also draws a few conclusions about the writing materials prevalent about 1500 years ago based on the mechanics of paleography. Subramaniyan Malayandi points out by describing the X Language of Indus Script a/or/Ancient Tamil/and the same/tol tamiḻ has cherished the Pre—Tolkāppiyam grammatical heritage and provides a sound literary foundation identical with the language of inspiration to Tolkāppiyar (p. 471). Dr. Rathinasabhapathy viewing Tolkāppiyam from the point of view of Philosophy, states that it is the ancient treatise that sustains the grammatical heritage of the Tamils--the heritage that governs the many sided personalities of the individuals and hence it is a comprehensive one which embrace the different faculties of the world and those of the individual souls (p. 485).

Dr. Innasi analyses the aspects of Eḻuttu in Tamil grammatical treatises. He observes that the concept, regarding the aspects of Eḻuttu has been the same in the minds of Tamil Grammarians. R. Srinivasan explains the concept of Col as conceived by the traditional Tamil Grammarians. Dr. Gloria Sundaramathy surveys the treatises on Poruḷ Grammar and analyses its various aspects in depth. Dr. Annie Mrithulakumari Thomas explains not only the form, content and expression of poetic literature but many other connected factors which are given importance in the Tamil Prosodical treatises. R. Shanmugam presents one aspect of the Mathematical principle that is followed in the formation of Tamil prosody with special reference to Kuṟaḷ veṇpā. He also stresses the importance of mathematical knowledge for the better understanding of Tamil prosody. Indra Manuel has made an elaborate survey of the treatises on Alaṅkāra Sastra in Tamil. She has taken much pains to present the facts and generalisations in different charts and formulae.

The editors have included an index of technical terms used in this volume which will facilitate easy reference.

Thus this volume being a collection of 44 papers written by different scholars in different angles on Tamil Language and Grammar, throw considerable amount of light on the grand heritage of the Tamils. It is a pity to note that the reader has to overcome the embarrassment caused by the printing errors.

—Dr. V. JAYADEVAN

4, *அச்சும் பதிப்பும்:* மா. சு. சம்பந்தன், தமிழ்ப் பதிப்பகம், *243*, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-*1*; முதற் பதிப்பு: *1980*; பக்கம் XXIV+612 விலை ரூ. *30*/-.

கல்வித்துறை, மற்றும் எத்துறைகளுக்குமே அச்சும் பதிப்பும் மிகமிக இன்றியமையாதனவாயுள்ளன. இந்நாளில் அச்சகங்களும் நூல் விற்பனை நிலையங்களும் மிகவும் பெருகி வளர்ந்து காணப்படு கின்றன. இந்த வளர்ச்சிநிலை திடீரென ஏற்பட்டதன்று; பல கால மாகப் பலருடைய அறிவுத்திறன், உழைப்பு ஆகியவற்றல் வந்த விளைவு. மனிதன் பேசக் கற்றுக் கொண்டதிலிருந்து நவீன முறை யில் அச்சிடுங்கலை வளம்பெற்று வருவதுவரை நீண்டதொரு வர லாற்றை உள்ளடக்கிய பெருநூல்தான் அச்சும் பதிப்பும்.

இந்நூலின் ஆசிரியர் திருவாளர் மா. சு. சம்பந்தன் பல ஆண்டு களுக்கு முன்பே 'அச்சுக்கலை' பற்றி ஓர் அருமையான நூலைத் தமிழுலகிற்குத் தந்தவர். அதன் தொடர்ச்சியாகப் பதிப்புக் கலை யிலும் அவருடைய நாட்டம் சென்றது பொருத்தமே. இதன் பொருட்டு ஆசிரியர் பழைய அச்சு நூல்கள் முதல் நாளதுவரை வந்த நூல்களை எல்லாம் பார்வையிட்டிருக்கிறார். அச்சும் பதிப்பும் குறித்துப் பலர் எழுதிய தனித்தனிச் செய்திகளையும் திரட்டியிருக் கிறார். தமிழ் மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, சமய வரலாறு முதலியவற்றை எல்லாம் துருவித்துருவி ஆராய்ந்திருக்கிறார். ஆறு பக்கங்களில் இவர் தந்துள்ள மேற்கோள் பட்டியலைக் காண்பார்க்கு இவருடைய உழைப்பு நன்கு விளங்கும். பல காலமாகத் தாம் தேடித் தொகுத்த குறிப்புகளை வகுத்தும் விரித்தும் இந்நூலை ஆசிரியர் ஆக்கியுள்ளார். ஆசிரியரின் பேருழைப்பு இந்நூலை மேற்போக் காகப் புரட்டிப் பார்ப்பார்க்குங்கூட நன்கு புலப்படும். இவருடைய நூலின் சிறப்பிற்குக் கட்டியங் கூறுவதுபோல் முகப்பில் முப்பத் தாறு பக்கங்களில் சேர்க்கப்பட்டுள்ள படங்கள் அமைந்துள்ளன.

இந்நூலுள் இடம்பெற்றுள்ள 12 இயல்களில் முதல் மூன்றும் மொழி பிறந்து வளர்ந்த கதையையும் அச்சுக்கலை வரலாற்றையும் விவரிப்பன. 'அச்சகத் தோற்றம்', 'முற்கால அச்சகங்கள்'

என்னும் இரண்டு இயல்களும் (6, 7,) நம் பாரத நாட்டிலும், சிறப்பாகத் தமிழ்நாட்டிலும் அச்சக வளர்ச்சி பற்றி அறிவிப்பனவாம். 'பழம் பதிப்பாளர்கள்' (9) 'முற்கால அச்சடிப்புகள்' (10) பற்றிய இயல்களில் 19ஆம் நூற்றுண்டுவரை வந்த பதிப்பாசிரியர் வரலாறு, பதிப்பு நூல்களின் வரலாறு ஆகியவை அடங்கியுள்ளன. இவற்றின் தொடர்பாக நாளது வரை வளர்ந்த பதிப்புத்துறை வரலாறு, 'சிறந்த அச்சகத்தினரும் பதிப்பகத்தினரும்' என 11ஆம் இயலாய் அமைந்துள்ளது.

'கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டு' (4), 'தமிழுக்கு ஏற்றம் தந்த ஐரோப்பியர்' (8) எனவரும் இயல்கள் இரண்டும் ஒருதன்மையன. முன்னதில் கூறியவற்றிலுள்ள பல செய்திகளும் பின்னதிலும் மாற்றுருப் பெறுகின்றன. இங்கு மட்டுமா? சமயங்களின் தமிழ்த் தொண்டுகளை விவரிக்கும் இறுதி இயலிலும் கிறிஸ்தவத் தமிழ் தொண்டுகள் (பக். 515—519) மீண்டும் பிறிதொரு வடிவு கொள்கின்றன. தமிழ் வளர்ச்சியில் சமயங்கள் பின்னிப் பிணைந்துள்ளன. சமணர், பௌத்தர், சைவர், வைணவர், வீரசைவர், வேதாந்திகள், இசுலாமியர், கிறித்தவர் ஆகியோர் ஆக்கிய நூல்கள் மிகப் பல. இவற்றையெல்லாம் ஆசிரியர் இறுதி இயலில் நன்கு விளக்கியுள்ளார்.

'பழங்காலக் கல்விமுறையும் ஓலைச்சுவடியும்' என்னும் இயலில் நம் முன்னோர் கல்விகற்ற முறையும் நூல்களை ஓலைச் சுவடிகளில் எழுதிப்போற்றிய வகையும் தெளிவாய்த் தரப்பட்டுள்ளன. இந்த இயல் அச்சுக்கலையின் துவக்கம் பற்றிய இயலுக்கு முன்பு அமைந்திருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

நூலுள் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு கருத்துக்களை ஏற்ற முறையில் அமைத்துத்தர ஆசிரியர் பெரிதும் முயன்றுள்ளார். அங்கங்கே தாம் எடுத்த செய்திகளுக்கு ஆதாரம் சுட்டியுள்ளார். எனினும் அவர் ஆதாரம் சுட்டாது செய்திகளைச் சொல்லிப் போகிற இடங்களும் பலவாயுள்ளன. நூலாசிரியர், பதிப்பாசிரியர் பரம்பரைகளைச் சுட்டும்போது சில செய்திகள் மீண்டும் இடம் பெறுதல் இயல்பே. என்றாலும், இந் நூலுள் சில பெருஞ்செய்திகள் மீண்டும் வருதலை முன்னர்வந்த இடம்சுட்டித் தவிர்த்திருக்கலாம்.

ஆசிரியர் பல நூல்களையும் நம்பிச் செய்திகளை எடுத்தாளுகின்றார். மூலநூலில் உள்ள தவறான செய்திகள் இதிலும் புக இடமாய் விடுகிறது. பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை பல இடங்களில் சு. வையாபுரிப் பிள்ளை ஆகிறார். பேராசிரியர் கெ. என். சிவராச பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்தபோது வெளியிட்ட நூல்களை அவர் ஓய்வுபெற்று ஊருக்குத் திரும்பிய பின் எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். இதுபோன்று மாறுபட்ட இடங்களும் பலவாகும். ஆசிரியர் தாம் எடுத்தாண்டுள்ள செய்திகள் ஒவ்வொன்றையும் நன்கு தெளிந்தறிதலும் வேண்டும். இனிவரும் பதிப்பில் இவை

போல்வன எல்லாம் திருத்தம் பெற வேண்டும் என்னும் நல்லெண்ணத்தாலேயே இங்குச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

பதிப்புத்துறையில் பல்லாண்டு அனுபவமுடையவரும் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரியவரும் மகாவித்துவானும் ஆகிய மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் அணிந்துரை இந் நூலுக்குச் சிறப்பளிக்கிறது. 'பாம்பின்கால் பாம்பறியும்' என்றபடி அச்சும் பதிப்பும் பற்றிய நூலின் அருமை அறிந்து பாராட்டுவார் யாருளர்? அணிந்துரையில் மகாவித்துவான் அவர்கள் தெரிவித்த சில கருத்துரைகளுக்கு மறுப்புரைகளை ஆசிரியர் தம்முடைய முன்னுரையில் தெரிவித்திருப்பது பொருத்தமாயில்லை. நம்மிடையே வாழும் பெரியார் அவர்களிடம் சென்று உண்மையைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கலாமே?

தமிழ்ப் பதிப்புக் கலைக்களஞ்சியம் என்று சொல்லத்தக்க அளவுக்குப் பல செய்திகளையும் உள்ளடக்கிய இந்தப் பெரு நூலுக்குப் பொருட் குறிப்பகராதி, பதிப்புகள், பதிப்பாசிரியர் பற்றிய சிறப்பு அகராதிகள், சிறப்புப் பெயர் அகராதி முதலியவை இல்லாதது ஒரு பெருங்குறையே. பக்கத்தலைப்புத் தருதலும் பயனுடையதாகும். விரைவு உலகில் நூலைப் பயன்படுத்துவாருக்கு இவையெல்லாம் மிகமிக இன்றியமையாதன. இனிவரும் பதிப்பில் ஆசிரியர் இதனினும் மேம்பட இந் நூலை அமைத்திடுவார் என்று நம்புவோமாக.

—மு. சண்முகம் பிள்ளை

5. *தமிழர் ஆடைகள்*, டாக்டர் கே. பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600020, X+422, ரூ. 16.

தமிழரின் பண்பாட்டு வரலாற்றினை அறியப் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் வெளிநாட்டார் குறிப்புகள், நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகிய மூலங்கள் மிகுதியும் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழரின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை ஆராய்ந்து தமிழரின் பண்பாட்டை முழுமையாக அறியும்வண்ணம் எடுத்தியம்பும் நூல்கள் இக்காலத்தின் தேவை எனலாம். இத்தகைய நூல்கள் நம் முன்னோரைப் பற்றி நாம் முறையாக அறிந்து கொள்ளவும் பிற மொழியினருக்கும் நாட்டவருக்கும் எடுத்துக்காட்டவும் பயன்படும். அவ்வகையில் தமிழரின் பழமரபுச் செல்வங்களை வெளிக்கொணரும் முறையிலும் பண்பாட்டை விளக்கும் நோக்கிலும் ஆய்வு முயற்சிகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. தமிழர் பண்பாட்டின் ஒருகூறாகிய ஆடைகளைப் பற்றி ஆய்ந்து கூறும் நூலே டாக்டர் கே. பகவதி அவர்களின் *தமிழர் ஆடைகள்* என்னும் இந் நூலாகும். இது

சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்துக்கு அளிக்கப் பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவாகும்.

தொல்காப்பியம் முதல் கி. பி. 12ஆம் நூற்றுண்டு வரையிலான இலக்கியங்களை மூலங்களாகக் கொண்டு இவ்வாய்வு நிகழ்ந்துள்ளது. இரண்டு பகுதிகளைக் கொண்ட இது முதல் பகுதியில் ஆய்வுக் கருத் துக்களையும் இரண்டாம் பகுதியில் ஆய்வு தொடர்பான தொகுப்புச் செய்திகளையும் கொண்டுள்ளது. பண்பாட்டுக் கூறுகளுள் ஆடை யின் முக்கியத்துவம் பற்றியும் ஆடைகள் பற்றிய ஆய்வின் பயனை யும் விளக்குவதாக ஆங்கில முன்னுரை அமைந்துள்ளது. இலக் கியத்தில் ஆடைபற்றிய செய்திகள் பயிலும் இடங்கள் தொகுத்துப் பின்னிணைப்பாக அளிக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்குத் துணைபுரிந்த நூல்களின் அட்டவணையும், சொல்லகராதியும் நூலின் பயன்பாட்டுத் தன்மையை மிகுவிக்குமாறு அமைந்துள்ளன.

ஆய்வின் முன்னுரைப் பகுதி ஆடையின் தோற்றம், ஆடையும் சூழலும், மூலப் பொருள்களும் ஆடையும், ஆடை பற்றிய ஆய்வு மூலங்கள், ஆடை வரலாறு ஆகியவற்றை விரிவாக ஆராய்கிறது. ஆடை வரலாற்று நூல்களை எடுத்துக்காட்டி ஆய்வின் நோக்கமும் பயனும் தெளிவுறுத்துவதாக முன்னுரை அமைந்துள்ளது. ஆடைத் தோற்றம் பற்றிய ஆய்வறிஞர்களின் கருத்துகளை எடுத்துக்கூறித் தான் மேற்கொள்ளும் கருத்தினையும் அதற்கான காரணத்தையும் கூறிச் செல்வது ஆய்வாளரின் துணிவையும் முயற்சியையும் புலப் படுத்துகிறது.

முதலாம் இயலான ‘ஆடை பற்றிய சொற்கள்—ஓர் ஆய்வு’ ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்ட நூல்களில் பயிலும் நூற்றுக்கு மேற் பட்ட சொற்களை எடுத்துக்காட்டி அவை பயிலும் பொருள்நோக்கி ஆடையின் ஆக்கம், சொல்லின் மூலம் போன்றவற்றை ஆராய்கிறது. ஆடையின் பெயராக்கத்துக்கு அதனோடு தொடர்புடைய பன்னி ரண்டு கூறுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று கூறுவது நூலா சிரியரின் நுண்மையான ஆய்வுத்திறனைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வியலின் பின்பகுதியில் ஆடை பற்றிய சொற்கள் வரலாற்று நோக்கில் அவை இடம்பெறும் இலக்கியங்கள் பற்றிய குறிப்புடன் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

‘தமிழர் உடைகள் உடுத்தும் முறைகள்’ என்னும் இரண்டாம் இயலில் குழந்தைகள், ஆடவர், அரசர், போர்வீரர், துறவியர், பொதுமக்கள், உயர்நிலை மாந்தர், தாழ்நிலை மாந்தர், புலவர், அரசியர், மகளிர் ஆகிய சமுதாயத்தின் பலவகை உறுப்பினர்களின் உடை களும், உடுத்தும் முறைகளும் ஆராயப்படுகின்றன. இப்பகுதி ஆடை பற்றிய அறிவோடு சமுதாய வரலாற்றினை அறியவும் துணை செய்யும்.

மூன்றும் இயலான ‘பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள்’ எனும் பகுதியில் பருவகாலத்துக்கேற்ற ஆடை அணிதல், சிறப்பு நிகழ்ச்சி

களில் அணியும் ஆடைகள், ஆடையும் தகுதியும், மதத்தால் ஆடை வேறுபாடு, தொழிலுக்குரிய ஆடைகள், ஆடை தொடர்பான நம்பிக்கைகள் ஆகிய செய்திகள் வகைப்படுத்தி ஆராயப்படு கின்றன. 'மீவியல்புக் கூறுகள்' என்னும் பகுதியில் சிவபெருமான், திருமால், முருகன், விநாயகன், உமை ஆகிய கடவுளர்களுக்குச் சுட்டப்படும் உடைகளும் அவை தொடர்பான தமிழரின் எண்ணங் களும் வெளிப்படுத்தப்படுகின்றன.

'ஆடையும் தொழிலும்' என்ற நான்காம் இயல் இவ்வாய் வாளரின் ஆய்வார்வத்தினையும் கிடைக்கும் ஆய்வு மூலங்களைச் சிறந்த முறையில் பயன்கொண்டு விளக்கங்களை வெளிக்கொணர்ந் துள்ளதையும் தெளிவுபடுத்துகின்றது. ஆடைத் தொழிலில் மேற் கொள்ளப்படும் பல்வகை நிலைகளையும் ஆடைத்தொழிலாளர்களின் சமுதாய நிலையினையும் புலப்படுத்தியுள்ள முறை சிறப்பாக அமைந் துள்ளது. ஆடையைத் தூய்மை செய்யும் தொழிலாளர் பற்றிய செய்திகளும் உடன்தரப்பட்டுள்ளன. கல்வெட்டுச் சான்றுகள், சிற்பம், சித்திரம் போன்றவற்றையும் உடன்கொண்டு ஆடைகள் பற்றிய ஆராய்ச்சி தொடரின் மேலும் பல விளக்கங்களும், தெளிவும் பிறக்கும் என்று மேலாய்வுக்கு வழிகாட்டி நிறைவுறுகிறது.

ஆடை பற்றிய கலைச்சொல் அகராதி 1750க்கு மேற்பட்ட சொற் களைக் கொண்டுள்ளது. இத்தொகுப்புக்குத் துணைபுரிந்த நூல் பற்றிய குறிப்பினைத் தந்திருக்கலாம். ஆடை பற்றிய பழமொழி களும் நம்பிக்கைகளும் அங்ஙனமே தொகுத்தளிக்கப்பட்டிருக் கின்றன. தமிழர் ஆடைகள் பற்றிய முழுமையான முறையான ஆய்வுக்கு வழிவகுத்து அதற்குத் தொடக்கமாக அமையும் இந்நூல் வரவேற்கத்தக்கது.

—**கோ. கிருட்டிணமூர்த்தி**

6. *பிரபந்த தீபம்*: ச. வே. சுப்பிரமணியன் (பதிப்பு), தமிழ்ப் பதிப்பகம், 33, திருமலைநகர் அனெக்ஸ், பெருங்குடி, சென்னை 600 096, 1980, பக். XIX + 91, ரூ. 5. 00.

இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறும் இந்நூல் மிகவும் இளையதாயினும் மரபுப்படி வழங்கப்பெறும் எல்லா இலக்கிய வகை கட்கும் வரையறை தந்துள்ளது. எனினும் பிரபந்த வகைகளுள் சிறப்புடையனவாகக் கருதப்பெறும் 'பரணி', 'அந்தாதி' ஆகிய இலக்கிய வகைகட்கு இலக்கணம் இந்நூலுட் காணப்படாமை எண்ணத்தக்கது. இதனை முற்றுப்பெறாத நூல் என்பதற்கும் இவ்விடு பாடு ஒரு சான்றாகக் கருதப்படுகிறது. இந்நூலாசிரியர் புதியன புகு தலை ஏற்றுக்கொள்ளும் கருத்துடையவர் என்பது *சீட்டுக்கவி*, *சமுத்தி* என்னும் இலக்கிய வகைகளைச் சேர்த்துக் கொண்டுள்ளமை யால் விளங்குகிறது. இலக்கிய வகைகட்கு விளக்கம் தருங்கால், பொருளுரைத்தல், யாப்புச் சுட்டல், பாடல்தொகை தருதல் போன்ற

மரபுகளைப் புதியனவாக இந்நூலாசிரியர் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கிய வகை வளர்ச்சியும், பாட்டியல் மரபு வளர்ச்சியும் இடையறுது தொடர்வதைத் தமிழிலக்கிய வரலாற்றின் வளமையைச் சுட்டுவதாகக் கருதலாம்.

சுவடி வடிவில் இருந்த இதனைப் பதிப்பு செய்து அச்சேற்றிய டாக்டர் ச. வே சுப்பிரமணியன் அவர்கள் இந்நூலின் ஒவ்வொரு நூற்பாவிற்கும் வேண்டிய அளவிற்கு விளக்கம் தந்துள்ளார். மேலும் பிற பாட்டியல் நூல்களினின்றும் இது எவ்வகையில் வேறுபடுகிறது அல்லது மாறுபடுகிறது என்ற விளக்கத்தையும், என்னென்ன நூல்கள் ஒவ்வொரு வகையிலும் எழுந்துள்ளன என்ற குறிப்பினையும், ஒவ்வொரு நூற்பாவின் கீழும் தந்துள்ளது இப்பதிப்பின் பயன்பாட்டை மிகுவிக்கிறது. நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள முகவுரை பாட்டியல் நூல்களின் வளர்ச்சி வரலாற்றினைக் குறிப்பிட்டு இப்பிரபந்த தீபம் அதில்பெறும் சிறப்பான இடத்தினை ஆய்வுக் கண்ணேட்டத்தில் கணித்திருப்பது பயனுள்ள பணியாகும்.

பாட்டியல் நூல்களின் வரிசையில் தோன்றிய இந்நூல் பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டது (ப. X). இதன் ஆசிரியர் பெயர், வரலாறு, போன்ற செய்திகள் கிடைக்கவில்லை. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூலகத்தில் கிடைக்கப்பெறும் இச்சுவடிநூல் முற்றுப்பெருததாகத் தோன்றுகிறது. பெருங்கதை போன்ற ஆதியும் அந்தமும் இல்லாத பனுவலாகக் கிடைத்துள்ளது. சென்ற நூற்ருண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட இந்த நூலுக்குக் கூட ஆசிரியர் பெயர் வரலாறு, காலம் முதலிய குறிப்புகள் கிடைக்கவில்லை; நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதை நோக்குமிடத்துச் சிலப்பதிகாரம் கம்பராமாயணம் முதலான காப்பியங்களின் கால வரையறையில் கருத்துவேறுபாடுகள் மல்கியிருப்பதில் வியப்பொன்றுமில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. நம்முடைய இலக்கியப் பரம்பரை மீது நமக்கிருக்கும் பெருமிதம் அல்லது செருக்கு அதனைப் போற்றிக் காப்பாற்றப் பயன்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

— அ. அ. மணவாளன்

7. **பொருள்கோள்**, மருதூர் ச. அரங்கராசன், பாலமுருகன் பதிப்பகம், மருதூர் அஞ்சல், உடையார்பாளையம் வட்டம், திருச்சி மாவட்டம், பக். XVI + 230, 1979, விலை ரூ. 16.

மொழியின் இயல்பை நன்குணர்ந்த பண்டைய தமிழறிஞர்கள் தம்முடைய இலக்கண நூல்களுள்ளே அவற்றின் கூறுகளைப் பல வாறாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்கள். மொழியின் நெறிகளைத் தொகுத்தும் நெறிப்படுத்தியும் வகைப்படுத்திய முன்னையோர் அவற்றை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனப் பாகுபடுத்தி ஆராய்ந்து வரையறை செய்தனர். வளர்ந்து வரும் மொழியியல் சிந்தனைகளும் முன்னைத் தமிழறிஞரின் சிந்தனைகளோடு இணைந்து செல்வதை அறியும்போது அவர்தம் மொழித்திறனையும், அறிவையும் வியந்து பாராட்டுகின்றோம், அவற்றிற்குச் சான்றாக விளங்குவன அவர்களுடைய இலக்கண நூல்களேயாகும்.

'தொல்காப்பியம்' தொடங்கி இன்று எழுந்த 'தமிழ் நூல்' வரையிலும் எடுத்துரைக்கப்படுகின்ற 'பொருள்கோள்' நெறியினை நூலாசிரியர் மருதூர் ச. அரங்கராசன் மிக நுண்ணிதின் ஆராய்ந்து தமிழுக்கு ஓர் அரிய இலக்கண ஆய்வு நூலைப் படைத்துத் தந்துள்ளார். 'பொருள்கோள்' என்னும் இவ் அரிய நூல் நூலாசிரியரால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். பில். பட்டத்திற்கு என ஆராயப்பட்டுப் பின்னர் மேலும் சில விளக்கங்களுடன் வெளியிடப்படுவதாகும்.

நல்ல முறையான ஆய்வு நெறிமுறைகளைப் பகுத்துக் கொண்டு நூலினை ஆராய்வதால் நூலாசிரியரின் நுண்மாண் புலமையும், செறிவும் நன்கு தெளிவாகின்றன. முன்னுரை, வரையறையும் விளக்கமும், பொருள்கோளின் வகைகள், உரை நூல்களும் பொருள்கோள்களும், வளர்ச்சி, பொருள்கோள்—ஒரு செய்யுளிலக்கணக் கூறு, இலக்கணத்திற் பொருள்கோளின் இடம், சொன் முறை மாற்றமுந் தேவையும், முடிவுரை என ஒன்பது நிலைகளில் நூலினைப் பகுத்துக் கொண்ட முறையே இவற்றிற்குத் தக்க சான்றாகும்.

செய்யுளின் பொருளுணர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத இலக்கணக் கோட்பாடு (பக். 3) எனப் பொருள்கோள் நெறியினை ஆசிரியர் சுட்டுவார். இப்பொருள்கோள் குறித்துத் 'தொல்காப்பியம்' (கி. மு. 5ஆம் நூற்றாண்டு) தொடங்கித் 'தமிழ் நூல்' (20ஆம் நூற்றாண்டு) முடிய மொத்தம் 24 நூல்கள் கூறுவனவற்றையும், உரை நூல்கள் கூறுவனவற்றையும், இப் பொருள்கோள் பற்றித் தோன்றிய பிற ஆய்வுகளையும் நூலாசிரியர் தொகுத்தும், பட்டியலிட்டும், காட்டுவது (பக். 1-20) அவர்தம் முறையான ஆய்வுநெறியினையும், கடும் உழைப்பினையும் காட்டும்.

'வரையறையும் விளக்கமும்' என்னும் தலைப்பில் செய்யுட்குப் பொருள் கொள்ளும் முறைகளை எவ்வாறு புலவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குறியீடுகளால் குறித்துள்ளனர் என்பதையும், அவற்றுள்

மிகுதியும் வழக்கில் உள்ளவற்றையும் குறித்து நூலாசிரியர் ஆராய் கின்ருர். பொருள்கோள் - பெயர் விகற்ப அட்டவணை (பக். 25), பொருள்கோள் - பொருள் விகற்ப அட்டவணை (பக். 27-28) ஆகிய இரண்டும் ஆய்வினை எளிதில் புரிந்து கொள்ளத் துணையாக அமை கின்றன.

தொல்காப்பியர் பொருள்கோள் வகைகளை நான்கு என்றும், பவணந்தியார் எட்டென்றும், நேமிநாதர் ஒன்பதென்றும் கூறுவதால் பொருள்கோள் வகைகளின் வளர்ச்சியை ஆராய்வதும் இன்றியமை யாததாக அமைகின்றது. இவ்வாறு காலந்தோறும் ஏற்பட்ட மாற் றத்தினையும், வளர்ச்சியையும் 'வகைகள்' என்னும் மூன்ரும் இயல் (பக். 31-84) ஆராய்கின்றது. இலக்கண மூலநூல்களேயன்றி அவற் றிற்குத் தோன்றிய உரை நூல்களும் பொருள்கோள்களைப் பற்றி எடுத்துரைக்கின்றன. இறையனுரகப் பொருள் உரை, யாப்பருங்கல விருத்தியுரை, காரிகையுரை, வீரசோழியவுரை, நம்பியகப் பொரு ளுரை முதலாய உரை நூல்கள் எடுத்துரைக்கும் பொருள்கோள் வகைகளை அடுத்த இயல் (பக். 85-117) ஆராய்கின்றது.

பொருள்கோளின் வளர்ச்சி நிலையை நூலாசிரியர் பகுத் தாராய்ந்து நான்கு படிநிலைகளில் அதன் வளர்ச்சியைச் சுட்டுவார். பழங்காலம், உரை காலம், இலக்கண காலம், இக்காலம் எனப் பகுத்துக் கொண்டு, இக் கால அளவில் தோன்றிய பொருள்கோள் வகைகளை மையமாக அமைத்து அதன் வளர்ச்சிநிலையை இளகிய நிலை, இறுகிய நிலை, புதுநிலை எனச் சுட்டுவது மிகவும் நுட்பமான தாகும். அடுத்த இயலில் இப் பொருள்கோள் செய்யுட்கு மட்டும் உரியதா? அன்றி உரைநடைக்கும் பொருந்தியதா? என ஆராய் கின்ருர். இலக்கணப் புலவர்கள் பொருள்கோளின் இலக்கணத்தைச் செய்யுட்காகவே அமைத்தனர் என்பதைப் பல சான்றுகளால் எடுத்துரைப்பர். இலக்கணத்திற் பொருள்கோள் பெற்றுள்ள இடத்தை (பக். 155-176) விரிவாக ஆராய்ந்துள்ளார் ஆசிரியர். சொல்லிலக்கணமே பொருள்கோளைப் பேச மிகுதியும் பொருத்த மான இடம் என்பது (பக். 173) ஆசிரியரின் கருத்தாகும். சொன் முறை மாற்றியமைப்பதின் தேவையையும் அதன் பயனையும் மிகவும் நயமுற விளக்குவது குறிப்பிடத்தக்கது. பா, தொடை, சுருக்கம் முதலான காரணங்கட்காகச் சொற்களை மாற்றியமைக்கும் முறை யைத் தக்க சான்றுகளோடு எடுத்து விளக்குகின்ருர் ஆசிரியர். இறுதியில் முடிவுரையாகப் பண்டைய புலவர்கள் சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய அனைத்திலும் பொருள்கோளின் இன்றியமை யாமையை உணர்ந்து எடுத்துரைத்துள்ளதைச் சுட்டிப் பொருள் கோளின் உயர்நிலையைத் தெளிவுறுத்துவார்.

நூற்பொருளை விளக்குவதற்காக அவர்தரும் அட்டவணைகள் (8), வரிமரம் (7), வரைகட்டப்படம் (1), விளக்கப்படம் (2) பொருள் கோள் பற்றிய நூற்பாக்கள், மேற்கோட் பாடல் அகரநிரல், மேற் கோள் நூற்பா அகர நிரல், சிறப்புப் பெயர் அகரநிரல், பொருட் குறிப்பு அகரநிரல், உசாத் துணைக் குறிப்புகள் முதலாயின ஆய்வுப்

பயனை மிகுவிப்பன. இவற்றால் அவர்தம் உழைப்பும் ஆய்வு முறையும் இனிது துலங்கும்.

மொத்தத்தில் நூலாசிரியரின் உழைப்பும், நூற்பொருளைத் தொகுத்து ஆராயும் வகைதொகைச் சிறப்பும், நூற்பொருளை ஆயும் ஆய்வு நெறிமுறைகளும் பெரிதும் பாராட்டடத்தக்கன. அரிய இலக் கணப் பொருளை எடுத்து ஆராய்ந்த நூலாசிரியர் மருதூர் ச. அரங்க ராசன் தமிழாய்வுலகத்தின் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்.

—**இ. சுந்தரமூர்த்தி**

8. ***தமிழக ஆட்சி முறை — சங்க காலம்***, ந. க. மங்கள முருகேசன், கூடல் பப்ளிஷர்ஸ், *121*, மேலமாசி வீதி, மதுரை *625 001*, பக். *108+8 ; 1979*, விலை ரூ. *7. 00.*

பண்டைய தமிழரின் வரலாற்றை அறியப் பெரிதும் இலக்கியங் கள்தாம் இன்று துணைநிற்கின்றன. அவ்விலக்கியங்களிலும் வரலாறு இலைமறை காயாகவே மறைந்துள்ளது. பண்பாட்டு நோக்கிலும், முறையான வரலாற்று நோக்கிலும் தமிழர்தம் வரலாற்றுச் சிறப்பினை அறிவியல் நெறிநின்று ஆராய வேண்டிய கடமை இலக்கிய அறிஞர் கட்கும், வரலாற்று அறிஞர்கட்கும் உரியதாகும். சங்க காலத் தமிழரின் வரலாறும் பண்பாடும் குறித்துப் பல நூல்கள் ஆங்காங்கே எடுத்துரைக்கின்றன.

'***தமிழக ஆட்சி முறை – சங்க காலம்***' என்னும் இந் நூல் தமிழக ஆட்சி முறையினை மட்டும் சிறப்பித்து ஆராய்வது குறிப்பிடத்தக்க தாகும். இதனைத் தொடர்ந்து பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர் கால ஆட்சிமுறைகளையும் ஆராய்ந்து வெளியிடுவதாக ஆசிரியர் தம்முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது, வரலாற்றுப் போக்கில் இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் தமிழர்தம் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பும், ஆட்சிச் சிறப்பும் உலகுக்கு நன்கு புலனாகும்.

இந் நூலினை ஆசிரியர் திரு. மங்கள முருகேசன் இருபெரும் பிரிவாகக் கொண்டு ஆராய்ந்துள்ளார். முதற் பகுதியில் நுழைவாயி லாகச் சங்கம், அதனுடைய காலம், நிலவியல் அடிப்படையில் அதனுடைய எல்லைகள். புதிய கற்காலம், பெருங்கல் காலம், வர லாற்றுக் காலம் ஆகிய காலங்களில் தமிழகத்தின் நிலை ஆகியன பற்றி ஆராய்கின்றார். சங்க கால அரசியலில் (பக். *10-18*) மூவேந்தர் களாகிய சேரர், பாண்டியர், சோழர் பெருமிடங்களைச் சுருக்கமாகக் குறித்துள்ளார். குறுநில மன்னர்களைப் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. அரச பதவி தோன்றிய வரலாற்றை எடுத்துரைக்கும் போது எல்லா இடங்களிலும் அரச பதவி ஒரே மாதிரியான அடிப் படையில் தோன்றியிருக்க முடியாது என்றும் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் அடிப்படையில் தோன்றியிருக்க வேண்டும் என்றும் கூறுவார். (பக். *19*). சங்க காலத்தில் அரசோச்சிய பெண்டிர்

பற்றிய செய்தி ஏதும் கிடைக்கவில்லை என்று குறிப்பிடுவார் (பக். 23). அரசர்குல முறை, தேர்வு முறை, வயது வரம்பு, அரசு கட்டில் ஏறுதல், அரசனின் அவை, அலுவல்கள், கொடைத்திறன், வேள்விகள், ஆட்சித்துறப்பு முதலான பல தலைப்புகளில் நூலாசிரியர் நுட்பமாக ஆராய்வது குறிப்பிடத்தக்கது. 'கட்டில் நீத்தபால்', 'வடக்கிருத்தல்' முதலான இலக்கிய ஆட்சிகளைச் சுட்டி ஆட்சித்துறப்போடு இணைத்து ஆராய்வது சிறப்பாக அமைந்துள்ளது.

அரசியலில் அரசியின் பங்கும், அரச குடும்ப மண உறவுகளும், எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அரசு உரிமைச் சின்னங்களான படை, கொடி, முரசு, குதிரை, யானை, தேர், மாலை, கட்டில் பற்றிய விரிவான செய்திகள் படிப்போர்க்கு இன்பம் பயப்பன. அரசு கட்டில், முரசு கட்டில், தூங்கு கட்டில் எனவும், காவல் முரசு, ஓம முரசு, காலை முரசு எனவும் பிரித்தும் தொகுத்தும் ஆராய்வது நூலாசிரியரின் முறை யான ஆய்வுநெறியைக் காட்டும்.

ஐம்பெருங்குழு, எண்பேராயம், அமைச்சர்கள், தூதர்கள், ஒற்றர்கள், புரோகிதர், நாழிகைக் கணக்கர், தனி உதவியாளர்கள், கோமாளிகள், மன்னர் பரிவாரத்தினர் முதலானோர் பலரும் அரச னுக்கு எங்ஙனம் உதவியாய் இருந்தனர் என்பதைத் தக்க சான்று களோடு எடுத்துக்காட்டுகின்றார். கிராம நகர அரசுகள், படை நிர்வாகம், போர்முறை, சட்டமும் நீதியும், வருவாய் வரிக் கொள்கை, எடையும் அளவும் முதலாய பழந்தமிழரின் கருத்துகளும் இந் நூலால் இனிது புலனாகும். இச் செய்திகள் அனைத்திற்கும் நூலாசிரியர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களையே கருவி நூல்களாகக் கொண்டு ஆராய்ந்துள்ளார்.

இந்நூலின் இரண்டாம் பகுதியில் 'சிலம்பும் மேகலையும் காட்டும் ஆட்சிமுறை' என்னும் பெருந்தலைப்பின் கீழ்ச் சங்கம் மருவிய காலத்தில் விளங்கிய ஆட்சிமுறையினை எடுத்துரைக்கின்றார். இக் காலத்தில் ஆரிய நெறிமுறைகள் மிகுந்துள்ளதாக ஆசிரியர் கருதுவது எண்ணுதற்குரியது.

நூலின் இறுதியில் பொருளடைவும், நூலடைவும் சேர்த்திருந் தால் ஆய்வாளருக்கு இன்னும் பயன் மிகுதியாகக் கிடைத்திருக்கும்.

பொதுவாகச் சங்க நூல்களும், சங்க மருவிய நூல்களும் கொண்டு சங்ககாலத் தமிழகத்தின் ஆட்சிமுறையை ஆசிரியர் திறம்பட எடுத்துரைப்பது பாராட்டற்குரியது. இலக்கியங்களில் விரவிக் கிடக்கும் இச் செய்திகளை நிரல்படுத்தி வரலாற்று முறையில் படிப்போர்க்கு எளிமையாகத் தொகுத்துத் தருவது அத்துணை எளிதன்று. நூலாசிரியர் இம்முயற்சியில் பெரிதும் வெற்றி கண்டுள் ளார். இனிய நடையில் ஆற்றொழுக்காகப் பண்டைத் தமிழக ஆட்சி வரலாற்றைத் தந்துள்ள ஆசிரியரின் தொண்டினைத் தமிழ்கூறு நல்லுலகம் பெரிதும் பாராட்டும்.

— **இ. சுந்தரமூர்த்தி**

5

தமிழ்த்துறைச் செய்திகள்

1. ஆசிரியர் மாணவர் கருத்தரங்கு

2. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

1. ஆசிரியர் மாணவர் கருத்தரங்கு

நாள்	கட்டுரையாளர்	பொருள்
25—1—80	சே. இராசேந்திரன்	தன்மானத் தமிழர் இயக்கம்
	மி.கு. சீனிவாசன்	பாரதியாரின் 'அக்கினிக் குஞ்சு' ஒரு விளக்கம்.
23—2—80	சு. தில்லைவனம்	பாரதியாரின் புதுச்சேரி வாழ்க்கை ஒரு கண்ணோட்டம்.
	சே. இராசேந்திரன்	திராவிட முன்னேற்றக் கழக எழுச்சியும் மறுமலர்ச்சியும்
26—4—80	கு. மங்கையர்க்கரசி	தொல்காப்பியனாரின் திணை மயக்கக் கொள்கை

அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை. இ.ஆ.ப.
GIFTED BY
R. THIRUMALAI I.A.S. (Late)

2. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

அறக்கட்டளை நாள்	சொற்பொழிவாளர்	தலைப்பு
ரா.பி. சேதுப்பிள்ளை நினைவு அறக்கட்டளை 5, 6 மார்ச்சு 1980	பேராசிரியர் ப.சு. மணியம்	திருவாசகத்தில் திருக்குறள் திருக்கோவையில் திருக்குறள்
அன்னை சொர்ணம்பாள் நினைவு அறக்கட்டளை 10, 11, 12 மார்ச்சு 1980	பேராசிரியர் க. வெள்ளை வாரணன்	திருச்சிற்றம்பலக் கோவையார் அல்லது கோவைத் திருவாசகம்

சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ்த்துறை வெளியீடுகள்

அமரர். ஆர்.
GIFTED BY

திருவாய்மொழி (பகுதி 1 முதல் 10 வரை)
—ஆசிரியர்: திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு

ஆசார்ய ஹ்ருதய மூலம்
—ஆசிரியர்: திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு

பத்துப்பாட்டு ஆராய்ச்சி
—டாக்டர் மா. இராசமாணிக்கனார்

திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்
—திரு. மு. சண்முகம் பிள்ளை

திருக்குறள் நீதி இலக்கியம்
—திரு. க. த. திருநாவுக்கரசு

திருக்குறள் அணிநலம்
—திரு. இ. சுந்தரமூர்த்தி

திருக்குறள் அமைப்பும் முறையும்
—திரு. மு. சண்முகம் பிள்ளை

சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்
—டாக்டர் ந. சஞ்சீவி

திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்
—திரு. க. த. திருநாவுக்கரசு

பல்கலைப் பழந்தமிழ்
—(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி

நாக குமார காவியம்
—(ப. ஆ.) திரு. மு. சண்முகம் பிள்ளை

இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்
—(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி

திருவிசைப்பா—திருப்பல்லாண்டு
திரு. மு. அருணாசலம்

தமிழாய்வு (நான்கு தொகுதிகள்—1, 2, 3, 4)
—(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி

அப்பாண்டைநாதர் உலா
—(ப. ஆ.) திரு. மு. சண்முகம் பிள்ளை

தெய்வத் தமிழ்
—(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி

பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்
—(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி

தமிழாய்வு (5, 6, 7, 8, 9, 10, 11 தொகுதிகள்)
—(ப. ஆ.) டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) — தொகுதி I

அகப்பொருள் மரபும் திருக்குறளும்
—திரு. மு. சண்முகம் பிள்ளை

A Study of the Literature of the Cēra country
—Dr. C. Balasubramanian

கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள்
—திரு. மு. சண்முகம் பிள்ளை, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி